வெளியீடு 19-3-99 Issued 19-3-99

15 செப
8.84

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPOR

செவ்வாய்க்கிழமை மே 12, 1998 - தொகுதி 52 - எண் 1
Tuesday, the 12th May, 1998—Volume 52 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

V24, 31 N98
N98.52.1
219097

[Price Rs. 3.00

12-05-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-35 |
| 2. **தகவல் கோரல்--** | |
| (அ) 30-04-1998 அன்று பேரவையில் வைக்கப்பட்ட திரு. ஆர். பாலசுப்பிரமணியன் விசாரணை ஆணையத்தின் அறிக்கைமீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விளக்கம் கோரல் | 36-46 |
| (ஆ) அனுமதி அளிக்காத பிரச்சினையை அவையில் எழுப்புதல் | 46 |
| . **கவன ஈர்ப்பு--** | |
| (அ) நாகை தொகுதி, வேட்டைக்காரன் இருப்பு ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்தல் | 46-48 |
| (ஆ) மன்னார்குடி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல் | 48-51 |

பக்கங்கள்

4. அறிவிப்புகள்--

(அ) மாநில நூலகக் குழுவிற்குத் தேர்தல்
(ஆ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்குத் தேர்தல் — 51
(இ) பெரியார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்தல்

5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி — 52-152

கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம்
கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள்

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 52,56,60,91-93, 97,102,103, 122-148 |
| திரு. சி. ஞானசேகரன் | 52,56,60-71, 148,151 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 66-67,128,137 |
| திரு. சி.டி. தண்டபாணி | 71-78 |
| *திரு. கே. சுப்பராயன் | 52-53,57, 78-86,148 |
| *திரு. ரா. சேதுநாதன் | 86-91 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 91-104,105, 123,127,128, 129,134,135-137,143-145, |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 54,57-58,104-105,107-111, 149,151 |
| திரு. இ. புகழேந்தி | 112-118 |
| திரு. மு. அப்பாவு | 118-122 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- — 153


2/9097

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

**2. கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

**3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

**4. வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

**5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. Minister for Education.. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. Minister for Health and Electricity .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. Minister for Revenue .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. Minister for Rural Development and Local Administration .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

**Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi :**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Printing** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | |
|---|---|
| **20. Minister for Information and Publicity** .. | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |
| **21. Minister for Animal Husbandry** .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries**.. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்
திரு. கு. மனோகரன்
திரு. வ. வேலுசாமி
திரு. சி. ஞானசேகரன்
திரு. நா. பெரியசாமி
திரு. முகம்மது கோதர் மைதீன்

செயலாளர்
திரு. டி.. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. [illegible]கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு

22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்

25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)

30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

32. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை

33. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்

34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்

35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

39. இராமஜெயம், திரு. ந. பூ. .. மயிலாப்பூர்

40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்

58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

63. கோபால், திரு. பா. .. மேட்டூர்

64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

| | | |
|---|---|---|
| 67. கோவிந்தன், திரு. வெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 68. சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 69. சண்முகம், திரு. கோ. | .. | திருப்பத்தூர் |
| 70. ச்ண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 71. சண்முகம், திரு. ம. | .. | கிணத்துக்கடவு |
| 72. சந்தானம், திரு. லா. | .. | சோழவந்தான் |
| 73. சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 74. சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 76. சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 77. சரஸ்வதி, திருமதி ஆர். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 78. சற்குணபாண்டியன்,<br>திருமதி எஸ். பி. | .. | டாக்டர்<br>இராதாகிருஷ்ணன் நகர் |
| 79. சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளக்கோவில் |
| 80. சிங்காரவேலு, திரு. வி.பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 81. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 82. சிவராமன், திரு. ஆர். | .. | திருப்பத்தூர் |
| 83. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனமரத்துப்பட்டி |
| 85. சிவானந்தம், திரு. ஆர். | .. | ஆரணி |
| 86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. | திருத்தணி |
| 87. சின்னய்யா, திரு. வெ. | .. | திருமயம் |
| 88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. | விருதுநகர் |



| | | |
|---|---|---|
| 89. சுகவனம், திரு. இ.ஜி. | .. | பர்கூர் |
| 90. சுடலைமுத்து. திரு. அ. | .. | போடிநாயக்கனூர் |
| 91. சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 92. சுந்தரம். திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 93. சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 94. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 95. சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 96. சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 97. சுப்பிரமணி என்கிற<br>சி.சு.மணி, திரு. சி. | .. | திருவள்ளூர் |
| 98. சுப்பிரமணி, திரு. பி.என். | .. | ஆற்காடு |
| 99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. | திருநெல்வேலி |
| 100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. | மொடக்குறிச்சி |
| 101. சுரேஷ் ராஜன், திரு. என். | .. | கன்னியாகுமரி |
| 102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. | மருங்காபுரி |
| 103. செங்கை சிவம், திரு. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 104. செல்லக்குமார், டாக்டர் அ. | .. | தியாகராய நகர் |
| 105. செல்வம், திரு. ரெ. | .. | குளித்தலை |
| 106. செல்வராஜ் என்கிற<br>கவிதைப்பித்தன், திரு. | .. | கொளத்தூர் (செ.வ |
| 107. செல்வராஜ், திரு. து. | .. | உடுமலைப்பேட்டை |
| 108. சேகரன், திரு. ஆர்.ஆர். | .. | ஓமலூர் |
| 109. சேதுநாதன், திரு. ரா. | .. | திண்டிவனம் |
| 110. சைதை கா. கிட்டு, திரு. | .. | சைதாப்பேட்டை |

| | | |
|---|---|---|
| 111. | சொக்கர், திரு. ஆர். | சிவகாசி |
| 112. | சொக்கலிங்கம், திரு. ஜி. | திருப்போரூர் (செ.வ.) |
| 113. | ஞானசேகரன், டாக்டர் ஆ. | மேல்மலையனூர் |
| 114. | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 115. | டேவிட் செல்வின், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 116. | தங்கமணி, திரு. கே. | மானாமதுரை (செ.வ.) |
| 117. | தங்கம் தென்னரசு, திரு. | அருப்புக்கோட்டை |
| 118. | தங்கவேலன், திரு. சுப. | கடலாடி |
| 119. | தங்கவேல், திரு. அ. ல. | சேலம்-2 |
| 120. | தண்டபாணி, திரு. சி. டி. | கோயம்புத்தூர் மேற்கு |
| 121. | தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | இளையான்குடி |
| 122. | தமிழ்ச்செல்வன், திரு. ஆர். | அரக்கோணம் (செ.வ.) |
| 123. | தமிழ்மணி, திரு. வீ. | செங்கல்பட்டு |
| 124. | தளபதி, திரு. கோ. | சேடப்பட்டி |
| 125. | தனபாலன், திரு. கு.ர.கோ. | சேலம்-1 |
| 126. | தனபால், திரு. வி. ஜி. | குடியாத்தம் |
| 127. | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 128. | திசைவீரன், திரு. உ. | பரமக்குடி (செ.வ.) |
| 129. | திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. | பேராவூரணி |
| 130. | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 131. | திருவேங்கடம், திரு. பெ.சு. | கலசப்பாக்கம் |
| 132. | துரைசாமி, திரு. பா. | வரகூர் (செ.வ.) |
| 133. | துரை, திரு. கே. | திருவெறும்பூர் |
| 134. | துரைமுருகன், திரு. | காட்பாடி |



| | | |
|---|---|---|
| 135. | தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி |
| 136. | தேவராஜன், டாக்டர் மு. | பெரம்பலூர் (செ.வ.) |
| 137. | நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 138. | நடராஜன், திரு. த. | செஞ்சி |
| 139. | நயினா முகமது, திரு. கோ. | கடையநல்லூர் |
| 140. | நன்னன், திரு. கொ.வீ. | செங்கம் (செ.வ.) |
| 141. | நாகரத்தினம், திரு. ச. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 142. | நாஞ்சில் கி. மனோகரன், திரு. | திருவல்லிக்கேணி |
| 143. | நிஜாமுதீன், திரு. ஜி. | நாகப்பட்டினம் |
| 144. | நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. | நெல்லிக்குப்பம் |
| 145. | நேரு, திரு. கா.நா. | லால்குடி |
| 146. | பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. | சிவகங்கை |
| 147. | பத்மா, டாக்டர் | நன்னிலம் (செ.வ.) |
| 148. | பரணிகுமார், திரு. பா. | திருச்சிராப்பள்ளி-1 |
| 149. | பரிதி இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| 150. | பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 151. | பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். | மதுரை மேற்கு |
| 152. | பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. | குறிஞ்சிப்பாடி |
| 153. | பன்னீர்செல்வம், திரு. மு. | சீர்காழி (செ.வ.) |
| 154. | பாண்டுரங்கன், திரு. ந. | பெரணமல்லூர் |
| 155. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 156. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். | பவானி |
| 157. | பாலசுப்பிரமணியன், திரு. ப. | பட்டுக்கோட்டை |

| | | |
|---|---|---|
| 158. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 159. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 160. புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 161. பூவேந்தன், திரு. த. | .. | பழனி (செ.வ.) |
| 162. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 163. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 164. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | ஈரோடு |
| 165. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 166. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 167. பொன்னார்டு, திரு. இரா. | .. | குளச்சல் |
| 168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 169. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | பல்லடம் |
| 171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 172. மகேந்திரன், திரு. இரா. | .. | நாட்ராம்பள்ளி |
| 173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. | திருநாவலூர் |
| 174. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 175. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 176. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 177. மணி, திரு. ஜி.கே. | .. | பெண்ணாகரம் |
| 178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 179. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |



| | | |
|---|---|---|
| 180. மணிவர்மா, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 181. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 182. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 183. மனோகரன், திரு. கு. | .. | தர்மபுரி |
| 184. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 185. மாரி அய்யா, திரு. பே. | .. | புதுக்கோட்டை |
| 186. மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 188. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 189. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 190. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |
| 191. முபாரக், திரு. பா.மு. | .. | கூடலூர் |
| 192. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 193. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 194. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 195. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 196. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 197. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 198. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 199. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 200. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 201. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 202. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |

203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
206. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
211. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
212. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)



225. வேணு, திரு. கி. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 29, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு-2029

## 1998 மே 12, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா*
*மானம் உடைய தரசு"*

*அறநெறி தவறாமலும், குற்றமேதும் இழைக்காமலும், வீரத்துடனும், மானத்துடனும், ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்களாவார்கள்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உறுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 461. திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**461—**

### தீயணைப்பு நிலையங்கள் அமைத்தல்

***8021**—திரு. ச. நாகரத்தினம்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட லாலாபேட்டை, தரகம்பட்டி ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நாகரத்தினம் இருக்கையில் இல்லை. வினா எண் 462. திரு. ரா. ஈஸ்வரன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**462—**

## தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்

***8534—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி வட்டம் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதல் கேள்விக்குத் தக்கதான பதில் தயார் செய்து கொண்டு வந்தேன். கேள்வி கேட்டவர் இல்லை (சிரிப்பு)

வாசுதேவநல்லூர் தொகுதியை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் இருக்கையில் இல்லை. திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி காண வேண்டுமென்ற நோக்கத்தோடும், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளை வளர்ச்சி பெறச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடும், இதுபோன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றன. அன்றொரு நாள் நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள்.



இந்தியாவிலே 53 மாவட்டங்கள் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு, மத்திய அரசால் வருமான வரியிலே கூட சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்ற கருத்தைச் சொன்னார்கள். நமது மாநில அரசு, தமிழகத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளுக்கு இதுபோன்ற சலுகைகளை அளிக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை. ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க, என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, நாளை மறுநாள் தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது, ராசிபுரம் பகுதியை பின்தங்கியப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். மாண்புமிகு கேட்டுக்கொள்கிறேன். சென்ற முறையே கேட்டிருந்தேன். ஆகவே, நாளை முதலமைச்சர் அவர்களிடம் மகஜர் கொடுத்திருக்கிறேன். ஆகவே, நாளை மறுநாள் நடக்கவிருக்கின்ற தொழில் துறை மானியக் கோரிக்கையில் ராசிபுரம் பகுதியைப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் துணை வினாதான் கேட்க வேண்டுமேயொழிய, இரண்டு நாட்களுக்குப் பிறகு வருகிற மானியக் கோரிக்கையில், அறிவிப்புகள் வருமா என்று கேட்கக் கூடாது. அது துணை வினா ஆகாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாடகமே உலகம், நாளை நடப்பதை யார் அறிவார்?'. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுவதிலே, திருவாரூர் மாவட்டம் இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புவதோடு, குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, நம்முடைய திருவாரூர் மாவட்டம் தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது, எந்தவிதமான தொழில்களும்

அங்கு வசதியில்லை. ஆகவே, விவசாயத்தை ஆதாரமாகக் கொண்ட தொழிலகமையாவது தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகள் பின்தங்கிய பகுதிகள் என்பது, 1970 ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது, Industrially under-developed என்ற அந்தத் தலைப்பின்கீழ், இந்தப் பகுதிகள் அறிவிக்கப்பட்டன. அப்படி அறிவிக்கப்பட்டவைகள், 1971 ஆம் ஆண்டு 33 வட்டங்களிலே செயல்படுத்தப்பட்டன. அதன்பிறகு, 1979 ஆம் ஆண்டு 24 வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்கள் - வட்டங்களாகவே பிரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டன. பிறகு 1989 ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சியில் 194 மொத்த வட்டங்களில் 105 வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. அதன்பிறகு, 1990 ஆம் ஆண்டில் மேலும் 30 வட்டங்கள் தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டங்கள் என்று பிரிக்கப்பட்டு, மிகவும் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டன. இப்போது 216 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன. திருவாரூர் மாவட்டத்திலும் அத்தகைய வட்டங்கள் நிச்சயமாக இருக்கக்கூடும் என்று எண்ணுகின்றேன். அடுத்து, விவசாயத்தை ஆதாரமாகக் கொண்டு, அந்த வட்டத்திலே தொழில்கள் தொடங்கப்படுமா என்ற கேள்வி, ஆராய்ச்சிக்கு உரிய ஒன்று. அப்படிச் செய்கின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபடும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முதலமைச்சரைப் பார்த்து நம்முடைய மாவட்டம் என்று சொல்வதைக் கடுமையாக நான் கண்டிக்கிறேன். முதலமைச்சருக்கு எல்லா மாவட்டங்களும் சொந்த மாவட்டங்கள்தான். அடுத்து, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காஷ்மீர் மாநிலத்தின் முதலமைச்சர் மாண்புமிகு பரூக் அப்துல்லா அளித்த பேட்டியிலே காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து கொடுத்து உள்ளதுபோல, Free trade zone என்ற, வர்த்தக ரீதியாக சுதந்திரமாகச் செயல்படக்கூடிய அந்தஸ்தும் அந்த மாநிலத்திற்கு அளித்தால், ஹாங்காங்கைப்போல தாங்களும் விளங்க முடியும் என்று



அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்து நம்முடைய மாநிலத்திற்கும் பொருந்தும் என்று நினைக்கின்றேன். எனவே, சுதந்திரமாகச் செயல்படக்கூடிய வர்த்தக மையங்களை தமிழ்நாடு எங்கும்—தமிழ்நாடு முழுவதும் என்றால் நான்கு திசைகளிலேயும் அமைப்பதற்கு மத்திய அரசிடம் எடுத்துச் சொல்ல மாநில அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காஷ்மீர் பிரச்சினை வேறு. இந்தியாவிலே உள்ள தமிழகம் போன்ற மற்ற மாநிலங்களின் பிரச்சினை வேறு. இரண்டையும் ஒன்றாகக் கருதி குழப்பிக்கொள்ளக் கூடாது. இங்கே நாம் கோருவது மாநில சுயாட்சி; காஷ்மீர் கோருவது போன்ற அந்தஸ்து அல்ல. அந்த அந்தஸ்து வேறு. நாம் கேட்கின்ற சுயாட்சி வேறு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பொள்ளாச்சி வட்டம் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டது. அந்தப் பொள்ளாச்சி வட்டத்திலே என்னுடைய கிணத்துக்கடவு ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் என்று 2 ஒன்றியங்கள் இருக்கின்றன. கிணத்துக்கடவு ஒன்றியத்திலே கிட்டத்தட்ட போதுமான தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திலே தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதுபோன்ற ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து மிகவும் பின்தங்கிய குறிப்பிட்ட ஒன்றியங்களாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்படுவதற்கான தகுதிகள் அடிப்படையில், அந்தப் பகுதியிலுள்ள தொழிற்சாலைப் பணியாளர்களுடைய எண்ணிக்கையின் சதவீதம், அந்த வட்டாரத்திலே உள்ள மொத்த மக்கள் தொகையை, கணக்கில் கொள்ளும்போது 0.25 சதவீதம் அல்லது அதைவிடக் குறைவாக இருக்க வேண்டும். அந்தப் பகுதியில் நடுத்தர அல்லது பெருந்தொழில்கள் முதலீடு எதுவும் செய்யப்பட்டு இருக்கக்கூடாது. இவை எல்லாம் Most Backward- மிகவும் பின்தங்கிய பகுதிக்கான தகுதிகள்.

பின்தங்கிய பகுதிக்கான தகுதிகள்: அந்தப் பகுதியிலே உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை சதவீதம், அந்த வட்டாரத்தின் மொத்த மக்கள் தொகையில் மாநில சராசரி சதவீதமாகிய 2 சதவீதத்துக்குக் குறைவாக இருக்க வேண்டும். இப்பகுதியிலே நடுத்தர, பெருந்தொழில்களில் செய்யப்பட்டுள்ள முதலீடு 15 கோடி ரூபாய்க்குக் குறைவாக இருக்க வேண்டும். இந்தத் தகுதிகள் இல்லாத பட்சத்தில் அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாகவோ, மிகவும் பின்தங்கிய பகுதியாகவோ அறிவிக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட நிலை எல்லாம் இப்போது மாறி, பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய ஒன்றியங்களாக மாற்றப்பட்டுவிட்டன; மீண்டும் அதை வட்டங்களாக மாற்ற முடியுமா என்று ஒரு முறை கேள்வி தொடுத்தபோது, அது ஒன்றியங்களாக இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொன்னார்கள். மீண்டும் அதை வட்டங்களாக மாற்றுவதிலே என்ன இடர்ப்பாடு இருக்கிறது? ஏனென்று சொன்னால் ஒரு வட்டத்திலே ஒருசில ஒன்றியங்களை எடுக்கிறபோது சில கிராமங்கள் வருகின்றன; அதே வட்டத்திலே, சில ஒன்றியங்களில் பல கிராமங்கள் விடுபட்டுப்போய் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலை வருகிறபோது ஒரு uniform methodஐ நம்மால் adopt பண்ண முடியவில்லை. ஆகவே, வட்டம் என்று எடுப்பதுதான் சாலப்பொருத்தமாக இருக்கும். ஆகவே, ஒன்றியம் என்று இருப்பதை எல்லாம் மாற்றியமைத்து, மீண்டும் வட்டமாகவே அறிவிக்க இந்த அரசு முன்வருமா என்று கேட்டு, தமிழகம் முழுவதும் பின்தங்கிய வட்டமாக இருப்பது நல்லது; காரணம் தொழில் துறையிலே தமிழகம் பின்தங்கித்தான் இருக்கிறது; ஆகவே எல்லா வட்டங்களையுமே பின்தங்கிய வட்டங்களாக முதல்வர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, தமிழகத்தையே பின்தங்கிய வட்டமாக அறிவித்துவிட்டால், அவர் முதலிலே எழுப்பிய அந்தக் கேள்விக்கெல்லாம் இடம் இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் எடப்பாடி வட்டம் புதிதாகத் தொடங்கப்பட்ட வட்டம். அங்கே எந்தத் தொழிலும் கிடையாது என்பது அரசுக்குத் தெரியுமா? ஆமெனில், எடப்பாடி வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில், பின்தங்கிய பகுதிக்கும் மிகவும் பின்தங்கிய பகுதிக்கும் என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கின்றேன். அத்தகைய தகுதிகள் படைத்ததாக அந்த வட்டம் இருக்குமேயானால் அதைப்பற்றிக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய வட்டம் என்ற கணக்கை எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றிக் கணக்கிடுகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதோடு மதுரை மாவட்டம் தொழிலில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்ற காரணத்தால் அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக ஏதாவது சலுகைகள் வழங்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எத்தனை ஆண்டுக்கு ஒருமுறை என்கின்ற விவரம் என்னிடத்திலே இல்லை. பின்தங்கிய மாவட்டங்களைப் பற்றிக் கணக்கிடும்பொழுது அதற்குள்ள தகுதிகள் படைத்தவையாக அவை இருந்தால் எந்த மாவட்டமும் விடப்படமாட்டாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் முழுமையாக விவசாயம், பீடி சுற்றும் தொழில், பனை ஏறும் தொழில் ஆகிய தொழில்கள்தான் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக தாமிரபரணிக்குத் தென்புறமும் வடபுறமும் எடுத்துக்கொண்டால் தொழில்கள் என்பதே இல்லை. மக்கள் எல்லாம் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டு மிகுந்த கஷ்டமான நிலையில்

இருக்கின்றார்கள். எனவே நெல்லை மாவட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு மாவட்டம் முழுவதையும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க இயலாது. அந்த மாவட்டத்திலே உள்ள வட்டங்களைக் கணக்கில் எடுத்துத்தான் நான் ஏற்கெனவே சொன்ன தகுதிகள் அடிப்படையில் அவற்றைப் பின்தங்கிய பகுதிகளாகவோ அல்லது மிகவும் பின்தங்கிய பகுதிகளாகவோ அறிவிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டமும் பின்தங்கிய மாவட்டமாகக் கருதப்படுகிறது. அங்கே எந்தெந்த வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் என்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றிய அக்கறையோடு தனிக் கேள்வி கேட்டு விவரம் தெரிந்துகொள்ள வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிப்பதற்கு அல்லது மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அறிவிப்பதற்கு, மத்திய அரசு ஏதாவது மானியத் தொகையை மாநில அரசுக்குக் கொடுக்கிறதா? அப்படி மானியம் கொடுக்காவிட்டால், அதற்காக மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதுவரையிலே அப்படிப்பட்ட தகவல் இல்லை. இந்தக் கேள்வியின் அடிப்படையில் வேண்டுமானால் மத்திய அரசோடு தொடர்புகொண்டு இந்தப் பிரச்சினையை எழுப்பலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தங்களுக்கும் உள்ள மாவட்ட உறவைச் சொல்லி திருவாரூருக்குச் சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் கோவை மாவட்டம்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய



பொதுவாழ்வில் அதிகமான சிறப்பான இடத்தைப் பெற்றது என்று அவர்களே தனது வரலாற்றுக் குறிப்பில் எழுதியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதி முழுவதும் விவசாயம் நிறைந்த பகுதி. எனவே முன்னுரிமை அடிப்படையில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அங்கே தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தொழிலைத் தொடங்குவதாக இருந்தால் அதிலே தஞ்சை, கோவை என்ற வேறுபாட்டுக்கே இடம் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் ரீதியாக பின்தங்கிய வட்டாரங்களாக அறிவிக்கப்பட்ட பல வட்டாரங்கள் தொழிலில் முன்னேறிய வட்டாரங்களாக 18-3-1996 அன்று அறிவிக்கப்பட்டுவிட்டன. கழக அரசு பொறுப்பேற்றபிறகு அதற்கான சலுகைகளை 1997 செப்டம்பர் வரைக்கும் நீட்டித்துக் கொடுத்தது. ஆனால் தொழில் முனைவோர்களுக்கு அது போதுமான கால அவகாசமாக இல்லை என்பதைக் கருத்திலே கொண்டு மேலும் மூன்றாண்டுகளுக்கு பின்தங்கிய வட்டாரங்களுக்குரிய சலுகைகள் கிடைக்கும் என்ற அறிவிப்பை முதல்வர் அவர்கள் வெளியிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, உடனடியாக அந்தச் சலுகை அறிவிப்பை அறிவிக்க இயலாது. ஒவ்வொன்றினுடைய தனித்தன்மை பற்றி அறிந்து அதன் பிறகே முடிவெடுக்க இயலும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 463, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**463—**

**உயர்நிலைப் பள்ளி தொடங்குதல்**

***7089—திரு. த. பூவேந்தன்.**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதியில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998-99ஆம் கல்வி ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் பழனி தொகுதியில் எந்த ஒரு நடுநிலைப் பள்ளியையாவது புதிய அரசு உயர்நிலைப் பள்ளியாக துவக்கக் கோரி கருத்துரு பெறப்பட்டால் பள்ளிகளைத் தரம் உயர்த்த உருவாக்கப்பட்ட நெறிமுறைகள் அடிப்படையிலும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 464, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**464—**

## மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

***12791—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் 1998-99ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தை எடுத்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டத்தின் விதிமுறைகளின்படி வாய்ப்பு இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அடிப்படையாகச் சொல்லுகிற காரணம் படித்த பெண்களினுடைய எண்ணிக்கையை எடுப்பதாகச் சொல்கிறார்கள். பொதுவாக நகரப் பகுதியிலேதான் படித்த பெண்கள் அதிகமாக இருக்கக்கூடும். கிராமப் பகுதியிலே அந்த வாய்ப்பு பெண்களுக்குக் கிடைக்காது. எனவே கிராமப் பகுதியிலே இருக்கிற



படித்த அல்லது படிக்காத பெண்களினுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாகை மாவட்டத்தில் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயுள்ள அனைத்து மாவட்டங்களிலேயும் மகளிரினுடைய கல்வி எந்தெந்த மாவட்டங்களில் பின்தங்கியிருக்கிறதோ அந்தந்த மாவட்டங்களை முன் வரிசைப்படுத்தி அவற்றிலே 4 மாவட்டங்கள் இத்திட்டத்தில் தொடக்கக் கட்டத்திலே எடுக்கப்பட்டன. அதற்குப் பின்னர் டி.பி.இ.பி. என்ற இத்திட்டம், மத்திய அரசினுடைய நிதியுதவியுடன், அதுவும் உலக வங்கிக் கடனிலேயிருந்து கிடைக்கிற நிதியுதவியோடு 3 மாவட்டங்களில் நடைபெறுகிறது. எனவே மகளிர் கல்வி விகிதாச்சாரம் குறைவாகவுள்ள மாவட்டம் இருக்கிறபோது, அந்த மகளிர் கல்வி விகிதாச்சாரத்திலே உயர்ந்திருக்கிற மாவட்டம் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனவே அந்த அடிப்படையில் மகளிர் கல்வியில் பின்தங்கியிருக்கிற மாவட்டங்களைத்தான் மத்திய அரசுக்கு நாம் பரிந்துரை செய்து அந்த மாவட்டங்களில் இந்த மாவட்ட தொடக்கக் கல்வி முனைப்புத் திட்டம் நடைபெறக்கூடிய நிலைமை இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 465, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**465—**

## ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் தொடங்குதல்

***6261—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், அன்மருதை கிராமத்தில் புதிதாக ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், அன்மருதை கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் ஒன்று ஏற்கெனவே செயல்படுவதாலும், 5 கி.மீ. தூரத்தில் நாவல்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் இருப்பதாலும் இங்கு புதியதாக ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் அமைக்கத் தேவை இல்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற இந்த அன்மருதை கிராமம் ஆரணியிலிருந்து வந்தவாசி செல்கிற நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பெரணமல்லூர் ஒன்றியம், நாவல்பாக்கம் கிராமம் இந்த நெடுஞ்சாலையில் இருந்து விலகிச் செல்கின்றது. குறிப்பாக இந்த நெடுஞ்சாலைகளில் அடிக்கடி விபத்து ஏற்படுகிற காரணத்தால் இந்த 40 கிலோ மீட்டர் தூர எல்லைக்குள்ளே எந்தவித சுகாதார நிலையமோ, மருத்துவ வசதிகளோ இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள். எனவே சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் இந்தப் பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது துணைச் சுகாதார நிலையமோ ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்மருதை கிராமம் பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். அந்த ஊராட்சியினுடைய மக்கள் தொகை 8,5648. அந்த ஒன்றியத்திலே கொளப்பாலூர், ஆனைபோகி மடம், நாவல்பாக்கம், பெரணமல்லூர் ஆகிய 4 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அன்மருதை கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவிலே நாவல்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்கிறது. எனவே, இப்போதைக்கு அன்மருதை கிராமத்திலே துணைச் சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 466, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



466—

## துணை மின் நிலையம் அமைத்தல்

***8779—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், பழையனூர் பகுதியில் மின் அழுத்தக் குறைவைப் போக்க புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிகள் தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம் பழையனூர் கிராமத்தில் மின் அழுத்தக் குறைவைப் போக்க அங்கு ஒரு தாழ்வழுத்த பகிர்மான மின் மாற்றி 30-9-1997 அன்று நிறுவி மின் அழுத்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியிலுள்ள பழையனூர் பகுதியில் இந்தப் புதிய இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, பல்வேறு கிராமங்களில் இரவு நேரங்களில் மின்சாரம் போதிய அளவு கிடைப்பதில்லை; குழல் விளக்குகளே அந்தக் கிராமங்களில் எரிவதில்லை. எனவே இதுசம்பந்தமாக மானாமதுரையிலே இருக்கக்கூடிய கோட்டப் பொறியாளர் அவர்கள், புதிதாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடத்தை எல்லாம் பார்வையிட்டு, அரசுக்குப் பரிந்துரை செய்ததாக அறிகிறேன். எனவே அந்தப் பணி துவக்கப்படுமா என்பதை மீண்டும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல, பழையனூருக்கு அருகிலுள்ள திருப்பாசேத்தியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கலாமா என்பதற்கான ஆய்வுகள் நடைபெற்று

வருகின்றன. அந்த இடத்திலே 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், அப்படி ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 467, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**467—**

## புன்செய் நிலத்தில் பயிர் வகைகளை வளர்த்தல்

***7389—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புன்செய் நிலத்தில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பயிர் வகைகளை வளர்க்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) புன்செய் நிலத்தின் மண்வளப் பாதுகாப்பிற்கும், மழைநீரைச் சேமிப்பதற்கும், பயிர் செயல் விளக்கங்களுக்காகவும் அந்தந்த நீர்ப்பிடிப்புப் பகுதியிலுள்ள விவசாயக் குடும்பத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புன்செய் நிலங்களில் வறட்சியைத் தாங்கக்கூடிய பணப் பயிராகிய பருத்தியை எங்கள் பகுதியிலே பெரும்பாலும் பயிர் செய்து வந்தார்கள். தற்போது அந்த வகைப் பயிர்களை அரசு அறிமுகப்படுத்துமா? தற்போது அந்தவகையான பயிர்கள் அடியோடு அழிந்து விட்டன. எந்தப் பருத்தியைப் போட்டாலும், புன்செய் நிலங்களில் வறட்சியைத் தாங்கக்கூடியதாக இல்லை. இதை அரசு கவனத்திலே கொண்டு, புன்செய் நிலங்களிலே நல்ல yield தரக்கூடிய பருத்தி விதைகளை அரசு கண்டுபிடித்து விவசாயிகளிடையே அறிமுகப்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பிற்கும், மழைநீரைச் சேமிப்பதற்கும் ஏற்ற பல்வேறு இடங்களை திட்டக் காலம் முழுமைக்கும் செயல்படுத்த, அந்த நீர்ப்பிடிப்புப் பகுதியிலுள்ள விவசாயக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 5,000 மானியம் வழங்கப்படுகிறது. உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் பயிர் செயல் விளக்கங்களுக்காக ரூ.750-ம் மானியம் வழங்கப்படுகிறது. புன்செய் நிலங்களில் நடவு செய்வதற்கு 'மா' மரக் கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. புன்செய் நிலங்களில் வறட்சியைத் தாங்கக்கூடிய பயிர்கள் விஞ்ஞானிகளால் பரிந்துரை செய்யப்படுகின்றன. அதைப்போல செயல் விளக்கங்களுக்காக ரூ. 325-ம், இடுபயிர் செயல் விளக்கங்களுக்காக ரூ. 425-ம், ஊடுபயிர் செயல் விளக்கங்களுக்காக ரூ. 525-ம் தற்போது வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புன்செய் நிலங்களிலே மானாவாரி பருத்தியைப் பயிரிடுவதைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறார். அதைப்பற்றி தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 468, திரு. கி. வேணு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**468—**

## பேருந்துகளை கோயம்பேடு அங்காடி வளாகம் வழியாக இயக்குதல்

***6229—திரு. கி. வேணு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இயங்கி வந்த மலர் மற்றும் கனி அங்காடிகள் புறநகர்ப் பகுதியான கோயம்பேட்டிற்கு மாற்றப்பட்டுள்ளதால் பேருந்தின் மூலம் மலர், கனிகளைக் கொண்டுவரும் வியாபாரிகளும், விவசாயிகளும் மிகுந்த சிரமமடைவதைக் கருத்தில் கொண்டு புறநகர்களிலிருந்து இயக்கப்படும் பேருந்துகளை கோயம்பேடு அங்காடி வளாகம் வழியாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்பேடு கனி மற்றும் மலர் அங்காடிகள் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கேற்ப பெரும்பாலான பேருந்துகள் கோயம்பேடு மொத்த வாணிப வளாகம் வழியாக காலை நேரங்களில் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும் கோயம்பேடு வியாபாரிகளின் கோரிக்கைக்கு ஏற்ப பேருந்து வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அங்கு பேருந்து நிலையம் ஏற்படுத்தும்பொழுது அனைத்துப் பேருந்துகளும் அங்குதான் செல்லும்.

**திரு. கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. எனது பகுதியான ஊத்துக்கோட்டை, பெரியபாளையம், காரனோடை, பொன்னேரி போன்ற இடங்களிலிருந்து வரக்கூடிய பேருந்துகள் எல்லாம் முன்பு மூலக்கொத்தளத்திலே நின்று, அங்கிருந்து வியாபாரிகள் எல்லாம் கொத்தவால்சாவடிக்குச் சென்றார்கள். ஆகவே அப்படிப்பட்ட பேருந்துகளை எல்லாம் நம்முடைய கோயம்பேடு வழியாக விடுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காஞ்சிபுரம் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 125-ஏ ஊத்துக்கோட்டை-சென்னை; 92 ஊத்துக்கோட்டை-சென்னை; 105 கட் சர்வீஸ் திருவள்ளூர்-சென்னை; 111-ஏ திருவள்ளூர்-சென்னை; 91 தக்கோலம்-சென்னை; 138 திருத்தணி-சென்னை; 97 கொளத்தூர்-சென்னை; 131-ஏ, சிறுவாபுரா-சென்னை; 108 கல்பாக்கம்-சென்னை; 82, சிறுகுன்றம்-சென்னை; 110 காஞ்சிபுரம்-சென்னை; 76-டி. கட் காஞ்சிபுரம்-கோயம்பேடு; 73-ஏ மெய்யூர்-சென்னை; 111-டி பினைலூர்பேட்டை-சென்னை; 101-ஏ ஊத்துக்கோட்டை-சென்னை; 58 டி, திருவள்ளூர்-சென்னை; 58 இ ஊத்துக்கோட்டை-சென்னை, ஆகிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தால், அங்கே பேருந்து நிலையம் வருகிறபோது, மற்ற பேருந்துகளுக்கும் நீட்டித்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 469, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



**469—**

**விருத்தாசலம்-பெங்களூர் பேருந்து இயக்குதல்**

***8200—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்திலிருந்து பெங்களூர் சென்று கொண்டிருந்த அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலத்திற்கும் பெங்களூருக்கும் இடையே பேருந்து வசதி 1-6-1997 முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்தில் பேசும்போது ஒரு கோரிக்கை வைத்தவுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெங்களூருக்குப் பேருந்து விட்டிருக்கிறார்கள். அதற்கு நன்றி. அந்தப் பேருந்துகளில் சொகுசு சீட்டுகளை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது விருத்தாசலத்திலிருந்து பெங்களூருக்குச் செல்கிற இந்த வண்டியில் 8 ஆயிரம் ரூபாய் தினந்தோறும் வசூல் ஆகிறது. எனவே, எதிர்திசையில் பெங்களூரிலிருந்து விருத்தாசலத்திற்கு ஒரு பேருந்து விடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ஒன்று விட்டால் போதும் என்றுதான் கேட்டார்கள். இப்போது ஒரு பேருந்து விடப்பட்டிருக்கிறது. இப்போது இரண்டாவது பேருந்து வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். பெங்களூர் மாநிலத்தோடு, Inter State என்ற வகையில், நாளை மறுநாள் அவர்களோடு பேச இருக்கிறேன். அவர்கள் மேலும் Single Point Tax-லே அனுமதிகளை வழங்குவார்கள் என்று சொன்னால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, a lot of inconveniences have been caused in the matter of running of inter-State services. If you accept a route, Karnataka is not agreeing and if they agree we could not accept. This is what I came to know. A lot of reciprocal services between Karnataka and Tamil Nadu are essential. I therefore, request the Hon. Minister to see that this issue is quickly sorted out and more buses are introduced between the two States.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பந்தம் செய்கிறபோது, கிலோ மீட்டர் அடிப்படையிலே இந்த ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அதாவது நம்முடைய பேருந்துகள் கர்நாடக மாநிலத்திலே ஆயிரம் கிலோ மீட்டர் ஓடும் என்று சொன்னால், கர்நாடக மாநிலத்தினுடைய பேருந்துகள் தமிழகத்தினுடைய எல்லையில் ஆயிரம் கிலோ மீட்டர் ஓடும். இது Kilometre parity என்று அழைக்கப்படுகிறது. ஆனால், கடந்த காலத்திலே பேருந்துகளினுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. நம்மிடம் இருந்து 100 பேருந்துகள் ஓடுமென்றால், அங்கேயிருந்து 100 பேருந்துகள் ஓடும். அவர்கள் 100 பேருந்துகளை நம்முடைய மாநிலத்திலே ஓட்டுகிறபோது, அதிக தூரம் ஓட்டுவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் நமக்கு இங்கேயிருந்து பெங்களூர் வரை செல்கிறபோது, நமக்குத் தூரம் குறைவாக இருக்கும். ஆகவேதான், kilometre parity என்று வைத்து, நீங்கள் எத்தனை கிலோமீட்டர் தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே ஓட்டுகிறீர்களோ, அதே கிலோமீட்டர்களை, கர்நாடக மாநிலத்தில் நாங்கள் ஓட்ட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். அதற்கு அந்த மாநில அமைச்சரும் ஒப்புதல் அளித்திருக்கிறார். நாளை மறுநாள் அவர்களோடு பேச இருக்கிறேன். பேசி முடிவு செய்யப்பட்ட பிறகு, உங்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதிகளுக்கு அதிகப் பேருந்துகளை விடுவதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஒரேயொரு பேருந்து தற்போது சென்று கொண்டிருக்கிறது. அதேபோல் கோயம்புத்தூரிலிருந்து புதுக்கோட்டைக்கு கூடுதலாக இன்னொரு பேருந்தை இயக்குவதற்கு



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்குவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலே மட்டும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்பவும்-5 ஆண்டுகளிலே நிறுத்தப்பட்ட பேருந்துகளையும் சேர்த்து-கிட்டத்தட்ட ஆயிரம் புதிய வழித் தடங்களிலே வண்டிகள் இயக்கப்பட்டு இருக்கின்றன. இப்போது அரசுக்கு இருக்கிற நிதி நிலைமையில், போக்குவரத்துக் கழகங்களுக்கு இருக்கிற பொருளாதார நெருக்கடியில், ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளை சரி செய்து இயக்குவதற்கே சரியாக இருக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கழகங்களினுடைய நிதிநிலையைப் பொறுத்து, வருங்காலங்களிலே பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 470, திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்

**470—**

**சாலையைச் செப்பனிடல்**

***599—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கச்சிராயபாளையம்-பொட்டியம் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், கச்சிராயபாளையம்—பொட்டியம் சாலை பழங்குடி மக்கள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் ரூ. 110 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. இப்பணி துவங்கப்பட்டு நல்ல முன்னேற்ற நிலையில் இருக்கிறது.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இந்தச் சாலை வசதியை செய்து கொண்டிருப்பதற்கு நன்றி. ஆனால், 1989-90-ஆம் ஆண்டு கழக

ஆட்சி இருந்தபோது தயாரிக்கப்பட்ட இந்தத் திட்டம், மீண்டும் கழக ஆட்சி வந்த பிறகு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் இப்போது துவங்கப்பட்டது. அதேபோல், மேம்பாலம் கட்டவும் 9 கிலோ மீட்டர் அளவுக்குச் சாலை வசதிசெய்யும் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல் மலைப் பகுதியிலே இருக்கிற, பொட்டியாம், பாங்கிநத்தம், மல்லிகைப்பாடி, ஆகிய ஊர்களையொட்டி சுமார் 11 கிலோ மீட்டர் அளவுக்குச் சாலை வசதியும், ஒரு பெரிய மேம்பாலமும் கட்ட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்தச் சாலைக்கு முதலில் ரூ. 110 லட்சத்திற்குத்தான் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதியும் வழங்கப்பட்டது. இப்போது அதனுடைய மதிப்பீடு அதிகமாகி ஏறத்தாழ ரூ. 189.70 லட்சம் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அதற்காக நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற மற்ற சாலைகள் பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் தெரிவிக்க முடியும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து செல்கின்ற சாலைகள், காலவரம்பு முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் இன்னமும் புதுப்பிக்கப்படாமல், பேருந்துகள் செல்ல இயலாத நிலையில் இருக்கின்றன. இது அரசுக்குத் தெரியுமா? எனது தொகுதியில் சுமார் 25 சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றைச் செப்பனிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டச் சாலைகள், மற்ற மாவட்டச் சாலைகள், இதர சாலைகள் என்ற அடிப்படையில் இருக்கக்கூடிய இந்தச் சாலைகள் எல்லாம் அரசாங்கத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் பிரிவு 2-ன்கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே உடனடியாக அந்தச் சாலைகளை எல்லாம்



செப்பனிடுவதற்கான வாய்ப்புகள் இல்லையென்றாலும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு, நபார்டு திட்டத்தின்கீழ், பல கோடி ரூபாய்களைப் பெற்று, அந்தத் திட்டத்தின் மூலம் ஏராளமான சாலைகள் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 471, திரு. டி. மணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**471—**

### குளச்சல் துறைமுகத்தினைச் செப்பனிடுதல்

***12717—திரு. டி. மணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் துறைமுகத்தினைச் செப்பனிட 1996-97-ஆம் நிதியாண்டிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தினைச் செப்பனிட 1996-97-ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு எதுவும் அரசால் செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகம் சம்பந்தமாக 1977-லிருந்து இந்த மாமன்றத்திலே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இந்தப் பகுதியிலிருந்து தும்பு, மணவாளக்குறிச்சியிலிருந்து மணல் போன்றவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆவதற்கு வாய்ப்பான ஒரு துறைமுகமாகும். அத்தோடு அந்தத் துறைமுகத்து வளாகத்திற்குப் பக்கத்தில் ஒரு சிறிய மீன்பிடி துறைமுகம்

கட்டுகின்ற பணியும் ஏற்கெனவே பரிசீலனையில் இருந்தது. ஆனால் இதுவரையிலும் அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. அப்படியென்றால், இது எந்தக் காலத்தில் ஆரம்பித்து, எந்தக் காலத்தில் முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரையிலே இருக்கக்கூடிய துறைமுகங்களையும், மேற்குக் கடற்கரையிலே இருக்கக்கூடிய துறைமுகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குளச்சல் துறைமுகம் ஒரு நல்ல இயற்கை வளமுள்ள துறைமுகம்தான். அதை அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே ஏற்றுமதிகள் நடந்துகொண்டிருந்த துறைமுகம்தான் அது. இடைக்காலத்தில் அது கவனிப்பாரற்று விடப்பட்டு, அதனுடைய முன்னேற்றம் தடைப்பட்டிருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிந்து, அரசுத் துறையிலே இருந்த துறைமுகத்துறையை மாற்றி, கடல்சார் வாரியம், Maritime Board என்ற ஒன்றை உருவாக்கி அந்த Maritime Board மூலமாக வெளிநாட்டு உதவிகள் அல்லது தனியார் முதலீட்டைப் பெற்று B.O.O.T. என்ற அடிப்படையில் அந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக, டில்லியிலே இருக்கக்கூடிய Consulting Engineering Services என்ற நிறுவனம் ஆய்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே இதற்குக்கூட விரிவான பதிலைச் சொல்லியிருக்கிறேன். இந்த ஆய்வு அறிக்கை இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத இறுதிக்குள்ளாக அரசுக்குக் கிடைத்துவிடும். அதன் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்து கொண்டு அது பற்றிய முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூருக்கு அருகில் ஆலந்துறை கோட்டையில் துறைமுகப் பணியினைத் தொடங்க டில்லியிலிருந்து 15 நாட்களுக்கு முன்பு ஒரு ஆய்வுக்குழு வந்து பார்வையிட்டுச் சென்றது. அந்த ஆய்வுக் குழு அறிக்கை வந்துவிட்டதா? ஆய்வுக் குழுவின் அறிக்கையிலே, துறைமுகத்தைத் தொடங்குவது குறித்து நல்ல பதில் உள்ளதா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் துறைமுகம் ஒரு நல்ல துறைமுகம் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தத் துறைமுகங்களையெல்லாம் விரிவுபடுத்துவதற்கு அல்லது உருவாக்குவதற்கு ரூ.500 கோடி முதல் ரூ.1,000 கோடி வரையில் முதலீடு தேவைப்படுகிறது. அதற்காக, தனிப்பட்ட தொழில் அதிபர்கள் அந்தப் பகுதியில் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அந்தத் துறைமுகம் முழுமையாகப் பயன்படுகிற வகையில், captive ports என்று சொல்லப்படுகிற வகையிலே, அவற்றை அவர்கள் மூலமாகவே உருவாக்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையிலே டெல்லிக்குப் சென்றிருந்தபொழுது National Thermal Corporation மூலமாக 2,000 மெகாவாட் உள்ள ஒரு மின் உற்பத்தி நிலையத்தை National Power Corporation மூலமாக உருவாக்குவதற்கான வாய்ப்புகளுக்கு உடனடியாக பிரதமர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தத் Thermal plant செய்யூருக்கு அருகிலேயே வருமேயானால், இந்தத் துறைமுகத்தை அவர்கள் மூலமாகக்கூட விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தனியார்கள் அந்தப் பகுதியிலே தொழில் தொடங்க முன்வருகிறார்களா என்பதையும் அரசு இன்னும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தில் முதலீடு செய்யத் தேவைப்படுகின்ற பணம் எத்தனை கோடி? அதில் மத்திய அரசு ஏதாவது பங்குத் தொகை தருவதற்கு முன்வந்திருக்கிறதா? இல்லையெனில் நம் அரசு மத்திய அரசை அணுகி ஒரு முக்கியமான துறைமுகம் என்கிற காரணத்தினாலே அதைப் பரிசீலிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு துறைமுகங்களை மேம்படுத்துகிற பொறுப்பு மாநில அரசைச் சார்ந்தது என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நாமும்

மாநில அரசின் சார்பிலே இந்தத் துறைமுகங்களையெல்லாம் மேம்படுத்தலாமா, விரிவுபடுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். யார் முதலீட்டுக்கு வந்தாலும் முதலில் feasibility report என்று சொல்லக்கூடிய அந்த ஆய்வுகள் முடிவு பெற வேண்டும். அந்த ஆய்வு அறிக்கைகள் விரைவிலே கிடைக்க வேண்டுமென்று நாங்கள் அந்த Consulting Engineering Services என்ற நிறுவனத்திடம் கூறியிருக்கின்றோம். அவர்கள் அடுத்த மாதம் இறுதிக்குள்ளாகத் தருவதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அது கிடைத்தவுடன் அதற்கான வாய்ப்புகள் ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 472, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**472—**

## தமிழ் எழுத்துச் சீரமைப்பு

***7997—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் எழுத்துச் சீரமைப்புப் பற்றிய அரசின் நிலை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் எழுத்துச் சீரமைப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வரைத் தலைவராகக் கொண்ட தமிழ் வளர்ச்சி மன்றம் டாக்டர் வி.சி. குழந்தைசாமி தலைமையில் எழுத்து சீர்திருத்தத்திற்காக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தந்த அறிக்கையை அரசுக்கு அளித்திருக்கிறது. இதுவரையில், எனக்குத் தெரிந்த அளவிலே இரண்டு எழுத்துக்கள் குறித்த சீர்திருத்தம் மட்டுமே நடைமுறைக்கு



வந்திருக்கிறது. மேலும் பல எழுத்துக்கள் குறித்து சீர்திருத்தங்களைச் செய்வோம் என்று சொன்னால், பள்ளிகளிலே பயிலும் குழந்தைகள் அதிகமான வரிவடிவங்களை நினைவில் கொள்ளும் சுமை குறைவது மட்டுமல்லாமல், நட்டச்சு செய்வது எளிதாக இருக்கும் என்ற காரணத்தினால், இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை விரைவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-91-வது ஆண்டுகளில் இங்கே சட்டமன்றத்தில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் இது தொடர்பான ஒரு விடையைச் சொல்லி இருக்கிறார்கள், அரசு இதில் எந்த அவசரமும் காட்டி எந்த முடிவும் எடுக்காது என்று. அதற்குக் காரணம் நம்முடைய முனைவர் வ.செ. குழந்தைசாமி கொடுத்த அறிக்கையில் சிறந்த முறையில் அவர் இந்த எழுத்துச் சீர்திருத்தங்களை வலியுறுத்தி, அந்த அறிக்கையைப் படைத்திருக்கிறார். ஒரு கோணத்தில், அறிவியல் அறிஞர்கள் அனைவரும் இப்போது அறிவியலில் அதிக அளவிலே பயன்படுத்தக்கூடிய அளவிற்கு வாழ்வில் ஊடுருவிச் செல்கினற முறை என்ற வகையில் குறிப்பாகத் தட்டச்சுப் பொறிகள், கணினிகள், பிறகு இப்போது வந்திருக்கின்ற இணையம் போன்ற அனைத்திலுமே இந்தச் சீர்திருத்தத்தைக் கையாண்டால் எளிதாக Key Board என்று சொல்லப்படுகின்ற விசைப் பலகையை அமைத்துக் கொள்ள முடியும் என்பது ஒரு பிரிவினரின் கருத்து. மற்றொரு பிரிவில் மிகச் சிறந்த அறிஞர்களான வ.சுப. மாணிக்கம், தேவநேயப் பாவாணர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதன் போன்றவர்கள் இந்த எழுத்துச் சீர்திருத்தங்களே கூடவே கூடாது என்று அடித்துச் சொல்கின்றார்கள். எனவே, அவர்களுடைய கருத்துக்களை நீங்கள் புறந்தள்ளிவிட முடியாது. அதற்குக் காரணம் இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளாக அச்சில் வெளிவந்த ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட தொல்காப்பியத்திலிருந்து தொடங்கி இன்றைக்கு வரை இருக்கிற பண்டைய இலக்கியங்கள் அத்தனையும் ஏற்கெனவே இருக்கிற முறையான எழுத்துக்களில் அமைந்திருக்கின்றன. தந்தை பெரியாருடைய எழுத்துச் சீர்திருத்தத்தை ஓரளவுக்கு நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த எழுத்துச் சீர்திருத்தங்கள் இப்போது நடைமுறையில் இருக்கின்றன. அதற்கு மேலே சீர்திருத்தங்கள் தேவையா என்பது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. ஆனாலும் உறுப்பினருடைய கருத்து மனதில் கொள்ளப்பட்டு அடுத்து வருகிற தமிழ் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அது முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

[1998 மே 12

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறையிலே பழமையைப் பாதுகாக்கவேண்டிய வகையிலேயும் புதுமையை ஏற்கின்ற வகையிலேயும் இரண்டுக்கும் பாலமாக அமைகின்ற வகையிலே உயிர்மெய் எழுத்துக்களோடும், உயிர் எழுத்துக்களோடும், மெய் எழுத்துக்களோடும், உயிர் மெய் எழுத்துக்களைத் தவிர்ப்பதற்காக சில குறியீடுகளையும் கொண்டு புதிய வகையிலே ஒரு எழுத்துச் சீர்திருத்தம் குறித்து மாநிலக் கல்லூரியிலே பேராசிரியராக இருக்கின்ற டாக்டர் ச. பார்த்தசாரதி என்பவர் ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறார். அதுகுறித்து அரசு ஆராயுமா? அந்தப் பரிந்துரையை ஏற்று தமிழ் எழுத்துச் சீர்த்திருத்தத்தைக் கடைபிடிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் இதுபோன்ற சீர்திருத்தத்தில் ஈடுபட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான வடிவத்தைக் கொடுத்திருக்கிறார்கள். முதலில் அவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டும். காரணம் ஒவ்வொரு வகையான வரி வடிவத்தையும், ஒவ்வொரு வகையான முறையையும் கொடுக்கிறார்கள். எனவே அவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து முதலில் இதனுடைய தலையாய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற முனைவர் வ.செ. குழந்தைசாமி அவர்களுடைய அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு அதற்குப் பிறகு எங்களுக்கு வந்திருக்கின்ற பிற பரிந்துரைகள் எல்லாம் இணைக்கப்பட்டு ஒருமுகமாக முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** தலைவர் அவர்களே, இன்றைக்கு எழுத்து உலகிலே கணினி போன்ற நவீன வசதிகள் எல்லாம் வந்துவிட்டன. முனைவர் வ.செ. குழந்தைசாமி அவாகள் அறிவியல் தமிழில் நூலை எழுதி அதன் மூலமாக பல்வேறு கருத்துக்களை வலியுறுத்தி அந்த நூலும் பரிசு பெற்றிருக்கிறது. அவர்கள் விஞ்ஞானத் தமிழ் வளர வேண்டும் என்பதிலே மிகவும் அக்கறை உள்ளவர்கள். அவர்கள் சொல்கின்ற கருத்துக்களை எல்லாம் வ.சுப. மாணிக்கம் போன்ற அறிஞர்கள் எல்லாம் எதிர்க்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.



1998 மே 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவிற்கு வாருங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** தலைவர் அவர்களே, பல்வேறு கருத்துக்கள் பல்வேறு அறிஞர்களிடமிருந்து வந்திருந்தாலும்கூட இதற்கு ஒரு குழு அமைத்து விரைவான, இறுதியான ஒரு முடிவினை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தமிழ் வளர்ச்சி மன்றமே ஏற்கெனவே அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுக் கூட்டம்தான். எனவே அந்தக் குழு அமைப்பில் இந்த அறிக்கை வைக்கப்பட்டு, முறையாக முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, தமிழில் சில தொனிகளை நம்மால் சீராகப் பயன்படுத்த முடிவதில்லை. உதாரணமாக F என்பது அதிலே இல்லை. ஏனைய B-யைப் பயன்படுத்தலாம். திராவிட மொழிகளில் தெலுங்கு, மலையாளத்திலே குறிப்பாக அதை சீர்திருத்தம் செய்து அதற்குரிய எழுத்துக்களையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். எனவே இந்தக் குறையைப் போக்கும் வகையில் புதிய எழுத்துக்களை F-ப (pha) 'ப' (Bha) போன்ற இவற்றிற்கான எழுத்துக்களைக் கண்டுபிடித்து அந்தக் குறையை நீக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் வாயிலாக முயற்சி எடுத்துக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தலைவர் அவர்களே, இந்த F முயற்சியை சில பேர் ஏற்கெனவே கையாண்டு தோல்வியுற்று இருக்கிறார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். தமிழுக்கு இப்பொழுது எந்தக் குறையும் கிடையாது. 2500 ஆண்டுகளாக வழிவழி வருகின்ற, எழுத்து வடிவிலே வருகின்ற மொழி 'முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பிறங்குவதுதான்.' எனவே இது கணிப்பொறியையும், இணையத்தையும் ஏற்கும். அதே நேரத்தில் தொல்காப்பியத்தையும் தாங்கி நிற்கும். எனவே, புதிய எழுத்து வருவதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். எனினும் இதுபற்றி ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 473, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**473—**

## சுவாமிநாதசாமி திருக்கோயிலில் மின்தூக்கி வசதி

***9388—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சுவாமிமலை சுவாமிநாதசாமி திருக்கோயிலில் மின்தூக்கி வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசாமி திருக்கோயிலில் தமிழ் ஆண்டுகளான பிரபவ முதல் அறுபது ஆண்டுகளுக்கான தேவதைகள் படிக்கட்டுகளாக அமைந்து அவற்றின் வழியே ஏறிச்சென்று திருமுருகப் பெருமானை வழிபட்டுப் பேரானந்தம் அடைவதாகப் பெரும்பாலான பக்தர்கள் நம்பிக்கை தெரிவிப்பதாலும், பெரும்பாலான பக்தர்கள் மின்தூக்கி அமைப்பதை விரும்பவில்லை என்பதாலும் மேலும் இத்திருக்கோயிலின் ஆண்டு வருவாய் மற்ற முதுநிலைத் திருக்கோயில்களைவிடக் குறைவாகவே இருப்பதாலும் தற்போது இத்திருக்கோயிலில் மின்தூக்கி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் [illegible] என்று சொல்கின்றார்கள். அது உண்மையில் இருக்கிறது. இருந்தாலும் வயதானவர்கள் உடல்நலம் குறைவாக உள்ளார்கள், கோயிலுக்குச் செல்ல வேண்டியதன் காரணமாக அங்கே மின்தூக்கி தேவைப்படுவதால் அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து அதற்குத் தேவையான நிதியைக் கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டுகள் அமைக்கப்பட்டதன் நோக்கமே இந்தக் கோவிலைப் பொறுத்தவரையில் 60 ஆண்டுகளும் 60 தேவதைகளாக மாறி எங்கள்மீது பக்தர்களுடைய திருவடிகள் பட வேண்டும், அதுதான் எங்களுக்குச் சிறப்பு என்று கருதித்தான் அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எனவே நீங்கள் மின்தூக்கியில் போனால் பாவம் அவர்கள் எல்லாம் மிகவும் வருத்தப்படுவார்கள், அவர்களுக்குச் சாப விமோசனம் கிடைக்காமல் போய்விடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 474, மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 475, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**475—**

## குடிசை வீடுகளை மாற்றி மாடி வீடுகள் கட்டுதல்

***8217—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, கீழ்மதுரை, இரயில் நிலையம் அருகில் சி.எம்.ஆர். சாலையிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசை வீடுகளை மாற்றி மாடி வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 476, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

476—

## மாணவர் விடுதி அமைத்தல்

***10162—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாச்சூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் மாணவர் விடுதி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாச்சூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாச்சூர் உயர்நிலைப்பள்ளி நீண்ட நாட்களாக இயங்கி வருகிற உயர்நிலைப் பள்ளியாகும். சுற்றியிருக்கிற 10, 12 பஞ்சாயத்துகளில் இது ஒன்றுதான் உயர்நிலைப் பள்ளியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் பிற்பட்டோர் நல விடுதி ஒன்று கூட இல்லை. ஆகவே, அதை அரசு பரிசீலிக்க வேண்டும். அதுவன்னியில் தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை பிற்பட்டோர் நல விடுதிகள் இருக்கின்றன, எத்தனை மாணவர்கள் அவற்றில் பயிலுகிறார்கள் என்பதை அரசு தெரிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 40 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் பிற்பட்டோர் மாணவர் விடுதி 25; மிகவும் பிற்பட்டோர் மாணவர் விடுதி 7; சீர்மரபினர் மாணவர் விடுதி 8. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 477, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.



477—

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

***13046—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, தளபதி சமுத்திரம், கீளூர் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்து தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் தளபதி சமுத்திரம் பகுதியில் கால்நடைகள் அதிகமாக வளர்கின்றன. அந்தக் கால்நடைகளை வளர்ப்பவர்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால் வள்ளியூர் அல்லது நாங்குநேரிக்குச் செல்ல வேண்டும். ஆகவே, அங்கே தளபதி சமுத்திரம், கீளூர் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளபதி சமுத்திரம், கீளூர் கிராமம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. இந்தக் கிராமத்தில் பகுதி நேரக் பார்வை கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும் கீளூர் கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் நாங்குநேரி கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. பொதுவாக கால்நடை மருந்தகம் புதிதாகத் திறக்கப்பட வேண்டுமானால் அந்தக் கால்நடை கிளை நிலையத்திற்குத் தினமும் 40 கால்நடைகளுக்கு மேல் சிகிச்சைக்கு வர வேண்டும். கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரும் கிராமத்தின் பெயர், மருந்தகத்திற்கான கட்டடம் கட்ட ஒரு ஏக்கர் நிலம் இனாமாக அளிப்பது, கட்டடம் கட்டி முடிக்கும் வரை மருந்தகம் செயல்பட

வாடகை இல்லாக் கட்டடம் அளிப்பது; ஒன்றியத்தில் எத்தனையாவது கால்நடை மருந்தகம் என குறிப்பிட்டும் அதற்குண்டான ஒன்றியத்தின் பங்குத் தொகை வழங்க சம்மதித்தல் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தீர்மானமாக நிறைவேற்றித் தந்தால் கீளூர் கிராமத்தில் பகுதி நேரக் கால்நடை மருந்தகமாகச் செயல்படுவதை கால்நடை மருந்தகமாக மாற்றி அமைப்பது குறித்து பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதிநிலைமையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அத்தனையையும் தேனி மாவட்டத்தில் இருக்கக்கூடிய கொச்சனூர் பேரூராட்சியில் தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த இடத்திற்கு உரிய கருத்துருக்கள் வந்திருக்குமானால், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 478, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**478—**

### உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***3800—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பாலூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதிநிலைமைக்கு ஏற்ப எதிர் வரும் ஆண்டு கருதப்படும்.



முற்பகல் 10-20

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே பாலூர் கிராமத்திலும், அதனைச் சுற்றியுள்ள 25 கிராமங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பாலூர் பள்ளியில் குறிப்பாக 1200 மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். வரும் ஆண்டிலிருந்து என்று சொன்ன அமைச்சரவர்களுக்கு நான் நன்றியைக் கூறினாலும் துரிதமாக இந்த ஆண்டிலேயே அதை மேல்நிலைப் பள்ளியாக அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் ஆண்டுதான் கருதப்படும் என்று சொல்லியிருக்கின்றேன். சாத்தியக்கூறுகள் இருப்பின் இந்த ஆண்டே பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 479, திரு. சி. சண்முகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**479—**

### பழுதடைந்துள்ள பள்ளியைப் புதுப்பித்தல்

***14884—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நந்தம்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட துளசிங்கபுரம் ஆதிதிராவிடர் நலப்பள்ளி மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பள்ளியைப் பழுதுபார்க்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி நிதிநிலைமைக்கேற்ப விரைவில் முடிக்கப்படும்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பள்ளி பழுதடைந்து விழக்கூடிய நிலையில்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. இந்த நிலையில் நிதிநிலையைப் பொறுத்து என்று அமைச்சரவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இந்த விடுமுறை நாட்களிலே அதைப் பழுது பார்க்காவிட்டால், பிள்ளைகள் அங்கே படிப்பதற்கு வாய்ப்பு இல்லாத நிலைமை ஏற்படும். எனவே, இந்த விடுமுறை நாட்களிலேயே அதைப் பழுதுபார்க்கின்ற நிலைமையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-4-1998 ஆம் நாளன்று இளநிலைப் பொறியாளர் அவர்கள் அந்தப் பள்ளியைப் பார்வையிட்டு, அதற்குரிய மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு ரூ. 70,000 செலவில் அந்தப் பள்ளியைப் பழுது பார்ப்பதற்காகத் திட்டக்கூறுகள் அனுப்பியிருக்கின்றார்கள். மேலும் விடுமுறையிலேயே பழுதுபார்த்து முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இந்தப் பள்ளியை விடுமுறைக்குப் பின்னாலும் ஒரு மாதத்தில் கட்டி முடிப்பதற்கு முடியும் என்று அவர்கள் சொல்லியிருக்கிற காரணத்தினால், விடுமுறைக்குப் பின்னால் ஒரு மாதத்தில் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 480, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**480—**

## தங்கும் விடுதி, உணவகம் அமைத்தல்

***14184—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூரில் உள்ள சின்னாறு நீர்த்தேக்கம் அருகில் ஒரு தங்கும் விடுதி மற்றும் உணவகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூரில் உள்ள சின்னாறு நீர்த்தேக்கம் அருகில் ஒரு தங்கும் விடுதி மற்றும் உணவகம் அமைத்துத் தருவது குறித்து செயற்குறிப்பு தற்பொழுது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சின்னாறு நீர்த்தேக்கம் கடந்த பத்தாண்டுகளாகப் பழுதடைந்துள்ளது. அந்த இடத்திலே ஏற்கெனவே தங்கும் விடுதி இருந்தது. அதுவும் பழுதடைந்து உள்ளது. அந்தச் சின்னாறு நீர்த்தேக்கத்தில் ஏற்கெனவே பூங்கா இருந்து, வழிப்போக்கர்கள் அங்கே தங்கி உணவு அருந்தி, ஓய்வு எடுத்துச் சென்ற நிலை இருந்தது. இப்பொழுது அந்த விடுதி பழுதடைந்துள்ளது. அந்த நீர்த்தேக்கத்தில் நீரும் இல்லை. ஆகவே, ஏரியை ஆழப்படுத்தி, அதில் பூங்கா அமைத்து, ஒரு தங்கும் விடுதி அமைத்துத் தருமா அரசு என அறிய விரும்புகிறேன். அதோடு, பெரம்பலூர் மாவட்டம் மாவட்டத் தலைநகராக ஆக்கப்பட்ட பிறகு அங்கே உள்ள சுற்றுலா விடுதி மாவட்ட ஆட்சித் தலைவர் தங்கும் விடுதியாக மாற்றப்பட்டுள்ளது. ஆக, இந்த இரண்டு பிரச்சினைகள் குறித்தும் அரசு ஆவன செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர்த்தேக்கத்தைப் பொறுத்தமட்டில், பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானது என்ற முறையில் அவர்கள் பராமரித்து வருகிறார்கள். அதைப்போன்று அங்கு உள்ள பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான விடுதி ஒன்று அவர்கள் பராமரிப்பில் இருந்து வருகிற காரணத்தால், சுற்றுலாத் துறை அந்தப் பணியை மேற்கொள்ள முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்

**(அ) 30-4-1996 அன்று பேரவையில் வைக்கப்பட்ட திரு. ஆர். பாலசுப்பிரமணியன் விசாரணை ஆணையத்தின் அறிக்கைமீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விளக்கும் கோரல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 30-4-1998 தேதியிட்டு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட திரு. ஆர். பாலசுப்பிரமணியன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றி அவையில் எழுப்ப மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு அறிவிப்பைக் கொடுத்து உள்ளார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகின்றது, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கடந்த 30-4-1998 அன்று வைக்கப்பட்ட திரு. ஆர். பாலசுப்பிரமணியன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(முற்பகல் 10-25

திரு. ஆர். பாலசுப்பிரமணியன் விசாரணை ஆணையம். 1995 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ஆம் தேதி என்னுடைய தலைமையில் கொடியங்குளத்திலே காவல் துறையினர் செய்த அராஜகத்தைக் கண்டித்தும், அதற்கு C.B.I. விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியும் ஆயிரக்கணக்கான தேவேந்திரகுல மக்கள், தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பின் சார்பாக சென்னையிலே ஊர்வலம் நடத்தினோம். அந்த ஊர்வலத்தினுடைய இறுதியில் சிரணி அரங்கில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தப் பொதுக் கூட்டத்தில் நான் மேடையிலே இருந்தேன். அதுபோன்று, இந்த மாமன்றத்திலே சட்ட மன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய அன்புச் சகோதரர் தீரன் அவர்களும் அந்த மேடையிலே இருந்தார்கள். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் இருந்தார்கள். எங்களுடைய கண் முன்னாலே அமைதியாக நடந்த அந்தக் கூட்டத்தின்மீது காவல் துறையினர் அத்துமீறி இயந்திரத் துப்பாக்கியாலே சுட்டதாலே சிவஞானம், சுப்பிரமணியம் என்ற இரண்டு தேவேந்திரகுல சமுதாயத்தினர் மாண்டு போனார்கள். அன்றைய மறுநாள் அன்றைய முதல்வர் ஜெயலலிதா அவர்களும்



அன்றைய சுகாதாரத் துறை அமைச்சர் முத்துசாமி அவர்களும் துப்பாக்கிச் சூடு நடைபெறவில்லையென்று அறிக்கை கொடுத்தார்கள். அதை எதிர்த்து நான் குரல் கொடுத்து, அவர்கள் இருவரும் துப்பாக்கிச் சூட்டினால்தான் கொல்லப்பட்டனர் என்பதை Post mortem report மூலமாக நிரூபித்தோம். அதே செய்தியை அன்றைய சுகாதாரத் துறை அமைச்சர் முத்துசாமி. சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் அண்ணா தி.மு.க. விலிருந்து விலகி கொஞ்ச நாள் தனிக் கட்சி நடத்தி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்த அரசியலுக்கு எல்லாம் போக வேண்டாம். நீங்கள் நீதிபதி அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள். இது தேவையில்லாதது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அவர்கள்கூட, அந்த அறிக்கை, அது துப்பாக்கி... வற்புறுத்தலினால் கொடுக்கப்பட்டதாகவும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் தேவையில்லை. நீங்கள் அறிக்கை பற்றி என்ன சொல்ல வேண்டுமோ அதை மட்டும் சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த அறிக்கை மீது மிக முக்கியமான கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். நேற்று நான் வெள்ளை அறிக்கைமீது பேசினேன். நேற்று இந்த அவையிலே ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டு, அது பற்றிப் பேசினோம். இந்த அறிக்கை ஒரு கருப்பு அறிக்கை என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தேவேந்திரகுல மக்களோ, பிற ஆதிதிராவிட மக்களோ, அருந்ததிய மக்களோ, சிறுபான்மை மக்களோ, உரிமைக்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சியில் நடந்த அந்தத் தவறைச் சுட்டிக்காட்டியும், நடந்த அந்தத் தவறை இந்த ஆட்சி ஏன் ஏற்றுக்கொண்டது என்பதுதான் எனக்கு வினோதமாக இருக்கிறது. துப்பாக்கியால் சுடப்பட்டது என்பதை நான் வலியுறுத்தி, இந்தக் கொடுமைகளையெல்லாம் இன்றைய முதலமைச்சரிடத்திலே அவருடைய இல்லத்திலே 8-10-1995 அன்று சந்தித்து நான் இந்தச் செய்திகளை எல்லாம் சொல்லியிருக்கிறேன். அது தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரியும். அப்படியெல்லாம் இருக்கின்றபோது சுட்டுக்கொன்ற செய்தியை சுடவில்லையென்று கொடுத்து இருக்கக்கூடிய அறிக்கையை நான் மறுக்கிறேன். இந்த அறிக்கையில் திரு. பாலசுப்பிரமணியன்

சொல்லியிருப்பது உண்மைக்கு விரோதமானது. முழுக்க முழுக்க துப்பாக்கிச் சூட்டினால் சிவஞானம், சுப்பிரமணியம் ஆகியோர் இறந்தார்கள். இதிலே, ballistic report, அதாவது expert report, அதாவது துப்பாக்கி ரவையை ஆய்வு செய்யக்கூடிய அந்த அறிக்கை இதிலே கொடுக்கப்படவில்லை. அதேபோல, Post mortem செய்த அதிகாரிகளுடைய அறிக்கையும் தவறாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு Post mortem report-இல், கடைசியாக சொல்லப்பட்டிருக்கிற வார்த்தை 'He died of penetrating injuries....'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் point-ஐ சீக்கிரம் சொல்லுங்கள். I have understood your point. According to you, இந்தப் பிரேத பரிசோதனையில் துப்பாக்கிச் சூடு என்று வந்திருக்கிறது. அதை மாண்புமிகு நீதிபதி அவர்கள் துப்பாக்கிச் சூடு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்கிறீர்கள். அதுதானே?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Yes.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களோ பதில் சொல்வார்கள். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*முற்பகல் 10-30*

**Dr. K. Krishnasamy:** Died of penetrating injuries - Tissues preserved for fire-arm residues என்று அந்த report-ன் கடைசியில் சொல்லியிருக்கிறார்கள். அந்த report-ஐப் பற்றி அவர் சொல்கிறபோது fire-arm residues கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை மட்டும் சொல்லியிருக்கிறார். Fire-arm residues, அதாவது, துப்பாக்கித் துகள்கள் இல்லை என்பது துப்பாக்கிச் சூட்டை எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுப்பது ஆகாது. துப்பாக்கித் துகள்கள் இருப்பது, தூரத்திலிருந்து சுடப்பட்டிருக்கிறதா அல்லது பக்கத்திலிருந்து சுடப்பட்டிருக்கிறதா என்பதை மட்டும்தான் சுட்டிக்காட்டுமே தவிர, துப்பாக்கித் துகள்கள் இல்லை என்பது துப்பாக்கிச் சூட்டை மறுப்பது ஆகாது. எனவே, கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கை முற்றிலும் உண்மைக்கு மாறானது. இந்த அரசு அந்த அறிக்கையைத் திரும்பப் பெற வேண்டும். அந்தத்



துப்பாக்கிச் சூட்டிலே கொல்லப்பட்ட குடும்பத்தினருக்கு 5 இலட்சம் ரூபாய் இந்த அரசு நிவாரண உதவியாக அறிவிக்க வேண்டும். அந்தத் துப்பாக்கிச் சூட்டிற்கு உண்மையான நீதி கிடைக்க வேண்டும். 1989 ஆம் ஆண்டு கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் பிரிவு, 302-ல் வழக்கு பதிவு செய்து மீண்டும் இதில் ஒரு சரியான புலன் விசாரணையைத் துவக்க வேண்டும் என்று கேட்டு அமாகிறேன். மேலும், நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து ஒரு சரியான நியாயமான நீதியை எதிர்பார்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-10-1995-ல் சென்னை காமராஜர் சாலையில், சீரணி அரங்கிற்கு ஊர்வலமாக வந்த தேவேந்திரகுல வேளாளர் மக்கள் அயோத்தியாக் குப்பத்தைச் சார்ந்த மக்களைத் தாக்கினார்கள். அயோத்திக் குப்பத்தைச் சார்ந்த மக்கள் ஊர்வலத்தில் வந்தவர்களைத் தாக்கினார்கள் என்ற வதந்தியின் அடிப்படையில்தான் இந்தக் கலவரம் நடைபெற்றது. ஊர்வலத்தில் எந்தக் குழப்பமும் கிடையாது; அமைதியாக நடந்தது. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களே சொன்னார்கள், கூட்டம் நடந்து கொண்டிருந்தது என்பதை. எனவே, இந்தக் கலவரம் இரவு 8-30 மணிக்கு மேலேதான் ஏற்பட்டது. கலவரத்தை அடக்குவதற்கு காவல் துறையினர் எல்லா முயற்சிகளையும் செய்தார்கள்; எச்சரித்தார்கள்; எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தார்கள். அவர்களுடைய முயற்சிகள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறாத காரணத்தால் வானத்தைப் பார்த்துத்தான் சுட்டார்கள். யார் மீதும் சுடவில்லை. 3 முறை சுட்டார்கள். அதுவும் வெறுத் தோட்டாக்களால்தான் சுட்டார்கள் என்பதை நீதிபதி தன்னுடைய அறிக்கையிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த காலத்திலேயிருந்த அரசு நீதிபதி பாலசுப்பிரமணியத்தினுடைய விசாரணைக் கமிஷனை அமைத்தது. அப்படி அமைக்கும்போது Six terms of references - 6 அம்சங்களை அது கொடுத்திருக்கிறது. இந்தக் கலவரத்திற்குக் காரணம் என்ன? இதற்கு நிச்சயமாக துப்பாக்கிப் பிரயோகம் அவசியம்தானா? இந்தத் துப்பாக்கிப் பிரயோகம்தான் சிவஞானம், சுப்பிரமணியத்தின் மரணத்திற்குக் காரணமா? இதற்கு என்ன நிவாரணம் அளிக்க வேண்டும்? மற்றும் இதுபோன்ற அம்சங்களையெல்லாம் ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்று நீதிபதிக்குப் பணிக்கப்பட்டிருந்தது. இந்த

அடிப்படையில்தான் அவர் விசாரணையை நடத்தினார். இதற்காக 96 வாக்குமூலங்கள் — (Affidavits) — பெறப்பட்டிருக்கின்றன. 30 பேர் சாட்சியம் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறை சார்பில் 37 பேர் சாட்சியம் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், எனது இனிய நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால்தான் அவர்கள் இறந்தார்கள், அதனால்தான் அவர்கள் மரணமடைந்தார்கள் என்று சொல்கிறார். ஆனால், நீதிபதியினுடைய அறிக்கையில் அப்படியில்லை. அவர்களுடைய மனைவிமார்கள், அதாவது சிவஞானம், சுப்பிரமணியம் ஆகியோருடைய மனைவிகள் கூட, எங்களுடைய கணவர்கள் துப்பாக்கியால்தான் இறந்தார்கள் என்று ஆதாரத்தோடு எதையும் சொல்லவேயில்லை. யாரும் கமிஷன் முன்னாலே எந்த ஆதாரத்தையும் கொடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், அவர் மீது எனக்கு நல்ல மரியாதை உண்டு. ஏனென்றால் நசுக்கப்பட்ட மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பவர், இவர் இரண்டு முறை நீதி விசாரணைக்குச் சென்றிருக்கிறார். இவர் சார்பில் ஒரு மனுகூட தாக்கல் செய்யவில்லை. இப்படித்தான நடந்தது, இந்த மாதிரிதான் நிகழ்ச்சி நேர்ந்தது என்று இவர் ஆதார பூர்வமாக சான்றோடு மனு தாக்கல் — (Affidavits)- செய்திருந்தால்.....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் போடப்பட்ட எந்தக் கமிஷனையும் நான் ஏற்றுக்கொள்வதில்லை என்ற முடிவு எடுத்திருந்ததாலும், கொடியங்குளம் நிகழ்ச்சிக்கும், மெரீனா துப்பாக்கிச் சூட்டிற்கும் C.B.I. விசாரணை வேண்டும் என்று வற்புறுத்திய காரணத்தாலும் நான் அந்த ஆணையத்தில் என்னுடைய மனுவை தாக்கல் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷனில் இரண்டு முறை ஆஜராகி இருக்கிறார். அங்கு போய் நடவடிக்கைகளையெல்லாம் பார்த்து இருக்கிறார். உண்மையை அம்பலப்படுத்த வேண்டுமென்றால், அவர் எதிர்பார்த்த அளவுக்கு சில நியாயங்கள் வெளிவர வேண்டுமென்று எதிர்பார்த்திருப்பாரேயானால், அவர் வாக்குமூலத்தை தாக்கல் செய்து



இருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ, என்ன நெருக்கடி காரணத்தாலோ அல்லது அடிப்படையில் ஏதோ ஒரு நிலையின் காரணத்தாலோ தாக்கல் செய்யவில்லை. என்றாலும், இந்த விசாரணைக் குழு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. துப்பாக்கிச் சூட்டினால் அவர்கள் இறக்கவேயில்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறது. இதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது போதாது, மேலும் அதிகம் கொடுக்க வேண்டும். அதுபோன்று காயம் அடைந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும். லாரி எரிக்கப்பட்டிருக்கிறது. மற்ற கடைகள் தீ வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கும் பணம் கொடுக்க வேண்டுமென்று நீதிபதி தன்னுடைய பரிந்துரையில் கூறியிருக்கிறார். 6-10-1995-ல் நடந்த வன்முறையில் இறந்த சுப்பிரமணியம், சிவஞானம் ஆகியோரின் குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை 50 ஆயிரம் ரூபாய் போதுமானதாக இல்லை என்றும், மேலும் 50 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கலாம் என்றும் கமிஷன் அளித்துள்ள பரிந்துரையை அரசு ஏற்றுக்கொள்கிறது. இச்சமயத்தில் பாதிக்கப்பட்ட திருமதி சந்திரகாந்தா, திரு. சங்கரன், திரு. சால்வாடி மற்றும் எஸ். கலைமணி ஆகியோரைப் பொறுத்தவரையில், தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையைப் பின்பற்றி கருணைத் தொகை வழங்க முடிவு செய்யப்பட்டது. விசாரணை ஆணையத்தினுடைய அறிக்கை 30-4-1998 அன்று சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 739, பொது (சட்டம்-ஒழுங்கு) துறை, நாள் 4-5-1998-ல் இந்நிகழ்வில் பின்வருமாறு நிவாரணம் வழங்கப்பட, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இறந்த சிவஞானத்தின் குடும்பத்திற்கு மேலும் இழப்பீட்டுத் தொகையாக ரூ. 50 ஆயிரம் பிளஸ் ரூ. 50 ஆயிரம், ஒரு இலட்சமும், இறந்த சுப்பிரமணியத்தின் குடும்பத்திற்குக் கூடுதலாக ரூ. 50 ஆயிரமும், வன்முறையில் வலது கையில் காயம் ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட சங்கரனுக்கு இழப்பீட்டுத் தொகை ரூ. 10 ஆயிரமும், வன்முறையால் தாக்கப்பட்டு, இடதுகாலில், தலையில், இடது கன்னத்திலும் ஏற்பட்ட கடுமையான காயத்தால் பாதிக்கப்பட்ட திரு. சால்வாடிக்கு ரூ. 10 ஆயிரமும், வன்முறை மோதல்களின்போது தன்னுடைய வெற்றிலை பாக்கு கடை முற்றிலும் சேதமடைந்து பாதிக்கப்பட்ட திருமதி சந்திரகாந்தாவுக்கு 2500 ரூபாயும்,

வன்முறையின்போது தீ வைத்து சேதமடைந்த லாரி எண் டி.எம்.எஸ்.930 லாரியின் உரிமையாளர் கலைமணிக்கு ரூ. 50 ஆயிரமும், ஆக மொத்தம் இந்த அரசின் சார்பில் 1,24,000 ரூபாய் இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது நீதிபதி எந்தத் தீர்ப்பைச் சொன்னாரோ, எந்தப் பரிந்துரையை செய்திருக்கிறாரோ அதை அரசு ஏற்று செய்திருக்கிறது. இது ஒரு கலவர சம்பந்தமான நிகழ்ச்சி. ஆறிப்போன ஒரு பிரச்சினை, அயோத்திக் குப்பம் மக்களும் மறந்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் ஊர்வலமாக வந்த மக்களும் அதைப்பற்றி மறந்துவிட்டார்கள். ஆறிப்போன புண்ணை குத்தி, கிளறி, மீண்டும் இரத்தம் சிந்த வைக்க வேண்டாம். இது அவருக்கும் நல்லதல்ல, நமக்கும் நல்லதல்ல, நாட்டின் அமைதிக்கும் நல்லதல்ல என்று கூறி அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, இது விவாதத்திற்குரிய பொருள் இல்லையே, நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆறிப்போன விஷயம் என்று சொல்வது சரியானதல்ல. அப்படியென்றால், கடந்த ஆட்சியில் கோடிக்கணக்கான ரூபாய்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இன்னும் ஐந்தாண்டுகள் கழித்து அதுவும் ஆறிப்போன விஷயமாகப் போய்விடும். நீங்கள் தண்டிக்கமாட்டீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எதை ஆதாரமாக வைத்து இப்படிச் சொல்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எல்லா வழக்குகளுக்கும் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழித்துத்தான் நீதியே கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி எதை வேண்டுமானாலும் பேசலாமா? அவர் சொன்னதை எடுத்து விடுங்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் எனக்கு அறிவுரை சொல்ல வேண்டாம். நான் தீர்ப்புச் சொல்லப் போகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நான் சொல்லி முடிக்கிறேன். இதிலே என்ன பிரச்சினை என்பதை டாக்டர் க. கிருஷ்ணசாமி தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தால் ஒரு அதிகாரியை நியமித்து செய்யப்பட்ட ஒரு விசாரணை என்றால், இந்த அரசிடம் அந்த அதிகாரியால் பழைய அரசுக்குக் கொடுக்கப்பட்ட நியாயத்திற்குப் புறம்பான ஒரு தீர்ப்பு என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் சரியோ, தவறோ அது நீதி விசாரணை. நீங்கள் ஏற்கெனவே ஒரு கருத்தைச் சொன்னீர்கள். நீதி விசாரணையில் நீங்கள் கலந்துகொள்ளவில்லை என்று சொன்னீர்கள். என்னுடைய கருத்து என்னவென்றால் எந்த அரசியல் கட்சி ஆட்சியில் இருந்தாலும், நீதிபதிகள், நீதிமன்றங்கள் தனித் தன்மை, சுயாட்சி பெற்றவர்கள் என்பதுதான் அரசியல் சட்டம். ஆகையினால், உங்கள் நியாயங்களை நீதி விசாரணைக்குச் சென்று கட்டாயமாகச் சொல்லியிருக்க வேண்டும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல், நீங்கள் இரண்டு தடவை அந்த விசாரணைக்குப் போயிருந்தும், அங்கே ஆஜராகியிருந்தும், நீங்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்லாமல் இருந்ததால், நீங்கள் உங்கள் பணியைச் சரியாகச் செய்யவில்லை என்ற ஒரு முடிவிற்குத்தான் வரமுடியும். நான் உங்களுக்குச் சொல்வது என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்தால்கூட, அந்த நீதி விசாரணையை மறு நீதி விசாரணை செய்ய முதலமைச்சருக்கு அதிகாரம் கிடையாது. ஆகையினால், உங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு, இந்த நீதி விசாரணைக்கு மேல்முறையீடாக உயர்நீதிமன்றத்திற்குப் போக முடியுமா என்பதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, இந்த மாநில அரசு நடத்திய நீதி விசாரணைக்குப் பதிலாக வேறொரு நீதி விசாரணையை வைக்கலாம் என்கின்ற சூழ்நிலைக்குச் சட்டத்திலே இடம் கிடையாது. அதைத் தெரிந்து கொண்டுதான் நீங்கள் பேசியிருக்க வேண்டும்.

*முற்பகல் 10-40*

மேலும், உறுப்பினர் கிருஷ்ணசாமி ஒரு தனிப்பட்ட வழக்கைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், நான் அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கியிருப்பேன். ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. அவற்றைத்தான் அவர் சொன்னார். ஐந்து வருடங்களாக நடைபெற்றவைக்கு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி:** *நிரூபணமாகியிருக்கிறதா? வழக்குகள் போட்டால் மட்டும் உண்மையாகிவிடுமா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நிரூபணமாகியிருக்கிறது என்று சொல்லவில்லை. வழக்குகள் இருக்கின்றன என்றுதான் சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தீர்ப்பு சொல்கின்றபோது உறுப்பினர்கள் எழுந்திருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர் எந்தவொரு தனிப்பட்ட உறுப்பினரையோ அல்லது தனிப்பட்ட நபரையோ குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், அதிலே நான் உரிய நடவடிக்கை எடுத்திருப்பேன். கடந்த ஆண்டுகளில் வழக்குகள் போடப்பட்டிருப்பது உண்மை. அதை யாரும் மறுக்க முடியாது. வழக்கு போடப்பட்டுள்ள தன்மையைத்தான் அவர் சொன்னார். ஆகையினால், இனிமேல் அந்தப் பிரச்சினையிலே எந்தப் பேச்சுக்கும் இடம் கிடையாது. இத்துடன் இந்தப் பிரச்சினை முடிகின்றது. (குறுக்கீடு) மேற்கொண்டு எதுவும் கிடையாது, நீக்குவதற்கு எதுவும் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த clarification-உம் இப்பொழுது தேவை இல்லை. (குறுக்கீடு) நான் தீர்ப்பு சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) அப்படியென்றால் எந்த subjectக்கு clarification கேட்கிறீர்கள்? அந்த subject இல்லையென்றால் என்ன clarification இருக்கின்றது? (குறுக்கீடு) நான் சொன்ன கருத்தைத் திருப்பிச் சொல்வதுதானா clarification நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உட்காருங்கள் என்று சொன்னால் நீங்கள் உட்காரமாட்டீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிவிசாரணை அறிக்கையை அவர் தவறு என்று சொல்கிறார். அப்படியென்றால், நீதிமன்றத்தையே அவமதிக்கின்ற செயல் அல்லவா? அதை நீங்கள் அனுமதிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது நான் தெளிவாகச் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று சில அதிகாரங்கள்



இருக்கின்றன. அதுதான் Parliamentary Privilege என்பது. ஆனால், அந்த நீதிபதி, கையூட்டு பெற்றுக்கொண்டு இந்த மாதிரியான ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நிச்சயமாக நான் நடவடிக்கை எடுத்திருப்பேன். நீதிமன்றத் தீர்ப்பு சரியில்லை என்று சொல்வதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தினுடைய நான்கு சுவர்களுக்குள் சொல்வதனால், உங்களுக்குப் பாதுகாப்பு இருக்கின்றது. உங்கள் மீது வழக்குப் போட முடியாது. இதுதான் உண்மையான நிலை. இனிமேல் இந்தப் பிரச்சினை மீது எதுவும் பேச நான் அனுமதிக்க மாட்டேன். எனவே, உறுப்பினர் கிருஷ்ணசாமி உட்காரலாம். (குறுக்கீடு) நீங்கள் அதைக் கொண்டுபோய் அமைச்சரிடம் காட்டுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்த அறிக்கையை ஏற்காததால், நான் அதைக் கிழிக்கிறேன்.

*(உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி நீதி விசாரணை அறிக்கையை அவையில் நின்றுகொண்டு கிழித்துப் போட்டார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் செய்வது முறையல்ல.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தமிழக அரசு, தமிழக முதல்வர் அவர்கள், நீதியை நிலைநாட்ட வேண்டும். இந்த அறிக்கையை நிராகரித்துவிட்டு, எங்களுடைய மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு புதிய விசாரணையை அல்லது வேறொரு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இந்தப் பிரச்சினையில் எப்படியும் என்னைப் பேச வைத்து விடவேண்டும் என்ற உறுதியிலே வெற்றி பெற்றுவிட்டார் என்றே கருதுகிறேன். போதுமான அளவிற்குத் தாங்களும், சட்டத் துறை அமைச்சர் அவர்களும் விளக்கங்கள் அளித்திருக்கின்றீர்கள். அவர், இந்த அறிக்கையை முழுமையாக நிராகரிக்க வேண்டும் என்று சொன்னார். முடியுமா என்பதை சட்ட ஆலோசகர்களைக் கலந்துதான் தீர்மானிக்க வேண்டுமேயல்லாமல், உடனேயே இங்கே தீர்மானித்து விடமுடியாது. என்ன கருத்துக்களை அவர் இங்கே சொல்ல இருக்கின்றார் என்பது முன்கூட்டியே எனக்குத் தெரிந்திருக்குமேயானால், அதற்கான தயார் நிலையிலே நான் வந்திருக்க முடியும். அவர் சில கருத்துக்களைச் சொன்ன பிறகுதான், அதன் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று யோசிக்கவே வேண்டியிருக்கிறது. இப்பொழுது என்னால் சுலபமாகச் சொல்லக்கூடியது

என்னவென்றால், மரணம் அடைந்தவர்களுக்கு அல்லது உடைமைகளை இழந்தவர்களுக்கு தரக்கூடிய இழப்பீடு, நீதிபதி சொன்னதைவிடக் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கலாம் என்ற அந்தக் கோரிக்கையைத்தான் நான் ஏற்க முடியும். எனவே, இப்போது ஐம்பதாயிரம் ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, மற்றவர்களுக்கும் நீதிபதி சொன்னதைவிட அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதிகமான தொகை, அதாவது 5 இலட்சம் ரூபாய் என்று அவர் கேட்கிறார். அந்த அளவுக்கெல்லாம் கொடுத்து, ஒரு புதிய பழக்கத்தை உண்டாக்க இந்த அரசு தயாராக இல்லை. எனவே, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், இந்த இழப்பீடு எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்கிற ஒரு நியாயமான கோரிக்கையைக் குறிப்பிட்டு, அரசுக்கு மனு செய்வார்களேயானால், உடனடியாக அதை அனுதாபத்தோடு கவனித்து, ஆவன செய்ய முடியும். அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று சொன்ன அந்தக் கருத்திற்கு, நான் இப்போதே உடனடியாகப் பதிலளித்து, அதற்குத் தீர்வு காணமுடியாது. சட்ட ஆலோசகர்களை எல்லாம் கலந்து பேசிய பிறகுதான், அதைப் பற்றிக் கூறமுடியும். எனவே, இத்துடன் இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

### (ஆ) அனுமதி அளிக்காத பிரச்சினையை அவையில் எழுப்புதல்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எதற்கு அனுமதி கொடுத்தேனோ, அதைத்தான் நீங்கள் பேசவேண்டும். நீங்கள் இதுகுறித்து என்னிடம் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். இதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. அதை இப்போது நீங்கள் கேட்கக் கூடாது.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) நாகை தொகுதி வேட்டைக்காரன் இருப்பு ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வு குறித்து திரு. ஜி. நிஜாமுதீன் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார் திரு. ஜி. நிஜாமுதீன்.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகை தொகுதி, கிளையூர் ஒன்றியம் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், வேட்டைக்காரன் இருப்பு ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம்' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

வேட்டைக்காரன் இருப்பு, நாகப்பட்டினம் மாவட்ட கடற்கரை பகுதியில் வேதாரண்யம் செல்லும் வழியில் உள்ளது. கிறிஸ்துவத் தலமான அன்னை வேளாங்கன்னி ஆலயம் அமைந்துள்ள வேளாங்கன்னியும் வேட்டைக்காரன் இருப்புக்கு அருகில் உள்ளது. வேட்டைக்காரன் இருப்பு, வேளாங்கன்னிப் பகுதிக்கு 30 கி.மீ. தொலைவிலுள்ள நாகப்பட்டினம் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து 11 கிலோ வோல்ட் மிகுந்த மின் பாதை மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மிகுந்த தொலைவிலிருந்து மின்சாரம் வழங்கப்படுவதால் இப்பகுதியில் குறைந்த மின் அழுத்தம் நிலவுகிறது. இதைச் சீர்செய்யும் பொருட்டு வேட்டைக்காரன் பகுதியில் ஒரு புதிய 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான திட்டத்தை நாகப்பட்டினம் மின் பகிர்மான வட்டத்திற்கான மின் செலுத்துதல் மற்றும் மின் வழங்குவதற்கான ஐந்தாண்டு (1997-2002) பெருந் திட்டத்தில் சேர்த்து அங்கு புதிய துணை மின் நிலையம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. வாரிய ஒப்புதல் பெற்றபின் வேட்டைக்காரன் இருப்புப் பகுதியில் 1999-2000ஆம் ஆண்டில் புதிய மின் நிலையம் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் 1999-2000ஆம் ஆண்டில் இத்திட்டம் சேர்த்துக்கொள்ளப்படும் என்று கூறியிருக்கிறார்கள். பொதுவாக, வேட்டைக்காரன் இருப்பு, தாளந்திருவாசல், புதுபள்ளி, விழுந்தமாவடி, காமேஷ்வரம், பிரதாபராமபுரம், செருதூர், முதலியப்பன்கண்டி, சடையன்கோட்டகம், கோவில்பத்து,

வானவன்மகாதேவி, வெள்ளபள்ளம், நாலுவேதபதி, கள்ளிமேடு, தாமரைப்புலம், அவரிகாடு மற்றும் தலைஞாயிறு ஒன்றியத்தின் பல பகுதிகளிலும் மற்றும் கிளையூர் ஒன்றியத்தின் பல பகுதிகளிலும் — நாகை, வேதாரண்யம் தொகுதிகள் — மிகவும் குறைந்த மின் அழுத்தம் இருப்பதனால், இரவு நேரங்களிலே அறவே மின் விளக்குகள் எரிவதில்லை. மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, விரைவில் இத்திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள். அதற்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இப்போது, 1999-2000ஆம் ஆண்டில்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய கஷ்டத்தை உணர்ந்து, இந்த 1998-99ஆம் ஆண்டிலேயே துணை மின் நிலையத்தைத் துவக்கிட அரசு மறுபரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்தின் அடிப்படையிலேதான், இந்த அரசு உடனடியாக மின் வாரியத்தோடு தொடர்பு கொண்டு, அந்தப் பகுதியிலே 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தியது. ஏற்கெனவே, இந்த ஆண்டிற்கான திட்டங்கள், கடந்த ஆண்டே முடிவு செய்துவிட்ட காரணத்தினால், இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டு எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும். அப்படி முடியாவிட்டால், நிச்சயமாக அடுத்த ஆண்டு அந்தத் திட்டம் நிறைவேற்றித் தரப்படும்.

## (ஆ) மன்னார்குடி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வு குறித்து திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பார். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரில் செயல்படும் அரசு மருத்துவமனையை புதிய இடத்தில் விரிவுபடுத்தி, 500 படுக்கை வசதியுள்ள மருத்துவமனையாக அமைக்க வேண்டிய அவசியம்' குறித்த அவசரப்



பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சராசரியாக 233 உள்நோயாளிகள் சிகிச்சைபெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 138. இம்மருத்துவமனை வளாகத்தில் போதிய இடவசதி இல்லாததால், எதிர்காலத் தேவையை முன்னிட்டு புதியதாக 15 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலத்தில் முதல்கட்டமாக 150 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டுவதற்கு முடிவு செய்து வரைபடம் மற்றும் மதிப்பீட்டினைத் தயார் செய்து அனுப்பி வைக்கும்படி பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டபடி, தினசரி சராசரியாக 233 உள்நோயாளிகள் அங்கே மருத்துவம் பெற்று வருகிறார்கள். வெளி நோயாளிகளாக சுமார் ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் தினசரி வருகிறார்கள். 138 படுக்கை வசதிகள்தான் உள்ளது என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, உள்நோயாளிகளுக்கே நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்குப் படுக்கை வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, எனது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து, 15 ஏக்கர் நிலத்திலே, 500 படுக்கை வசதியுள்ள மருத்துவமனையை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று திட்டம் முன்னர் தீட்டப்பட்டு, அது நிலுவையிலே இருந்தது; இப்போது, அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே முதற்கட்டமாக 150 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையை உருவாக்குவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது; இது மிகக் குறைவான ஒன்று; இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலேயே இணைத்து, அந்தப் பணியைத் தொடங்குவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, இப்போது இருக்கிற அந்த மருத்துவமனையில் வசதிகள் எல்லாம் குறைவாக இருக்கின்றன. குறிப்பாக,

மின் வசதி, கழிப்பிட வசதி, அதேபோல் ஆம்புலன்ஸ் வசதி இல்லாமல் இருக்கிறது. இவற்றையெல்லாம் சரி செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

*முற்பகல் 10-50*

குறிப்பாக என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் ஜெனரேட்டர் வாங்குவதற்காக சென்ற ஆண்டிலேயே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல, தேவையான அனைத்து வசதிகளையும் செய்வதற்கான முயற்சிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அந்த மருத்துவமனையை நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்க்க வேண்டுமென்று தொடர்ந்து நான் கோரிக்கை வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அதற்கான வாய்ப்பும், சூழ்நிலையும் இதுவரை ஏற்படவில்லை. அந்தக் கூத்தாநல்லூர் மருத்துவமனையைப் பார்த்து அதனுடைய தரத்தை உயர்த்துவதற்கும், அந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்த ஆண்டு திட்டத்திலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மன்னார்குடி சென்றுதான் அந்த நிலைமைகளை எல்லாம் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இந்த அரசுக்கு இல்லை. மன்னார்குடியைப் பற்றி இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். எனவே தான் உறுப்பினருடைய கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டே 150 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அதற்கான வரைபடங்கள் எல்லாம் தயார் செய்து அனுப்ப வேண்டும் என்று ஏற்கெனவே பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரை இந்த அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வரைபடங்கள் வந்தவுடனேயே இந்த ஆண்டே அந்தப் பணிகள் நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அந்த மருத்துவமனையை விரிவாக்குவதற்கு நிதியொதுக்கீடு செய்து உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு



மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) மாநில நூலகக் குழுவிற்குத் தேர்தல்

### (ஆ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்குத் தேர்தல்

### (இ) பெரியார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாநில நூலகக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களும், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆட்சிமன்றப் பேரவைகளுக்கு (Senate) முறையே இரண்டு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்று கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். மேலே குறிப்பிடப்பட்ட குழு மற்றும் ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவையின் வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை *18-5-1998* திங்கட்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிகக வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் *19-5-1998* செவ்வாய்க்கிழமை பிற்பகல் *3-00* மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் *20-5-1998* புதன்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையிலிருந்து வேறுபடுமாயின் *25-5-1998* திங்கட்கிழமை காலை *10-00* மணிக்கும் பிற்பகல் *2-00* மணிக்குமிடையே சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம்**

**(ஆ) கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள்**

**(அ) கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 115,38,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2702, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 'ஏ' பிளாக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 152, திரு. கே. சுப்ப்ராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய •13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1221, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 983, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரில் ஐந்து நீதிமன்றங்கள் வெவ்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதை மாற்றி ஒரே வளாகத்தில் அனைத்து நீதிமன்றங்களையும் ஏற்படுத்திச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1756, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களுக்கு தனித்தனிக் கட்டட வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறும் ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2353, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள இட நெருக்கடியைப் போக்க கூடுதலாகக் கட்டடம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1802, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, "to discuss the need to provide holiday for filing cases till all the pending cases are disposed in various Courts of Tamil Nadu" I move---

I move---

"That the allocation of Rs.115,38,51,000 under Demand No.13 - Administration of Justice be reduced by Rs.100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1673, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய நீதிமன்றக் கட்டடம் ஒன்று கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2622, திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிதாக மன்னார்குடிக்கு அறிவிக்கப்பட்ட சார்பு நீதிமன்றம் உடன் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2465, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் ராசிபுரம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் இந்த ஆண்டே புதியதாக கட்டடம் கட்டிக் கொடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1923, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2207, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விளவங்கோடு வட்டம், குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2150, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிவகெங்கை மாவட்டம் மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 115,38,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 14 – சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14, சிறைச்சாலைகள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 51,76,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2698, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலை வார்டர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 149, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1674, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவலர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளும் சிறைக் காவலர்களுக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1240, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3562, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை கிளைச் சிறைச்சாலையை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 984, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2620, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி கிளைச் சிறைச்சாலையை அடிக்கடி மூடிவிடுவதால் சாதாரண குற்ற வழக்கில் உள்ள ஏழை எளியவர்கள் வெகு தூரம் சென்று பார்க்க இயலாமல்போகும் வாய்ப்பு உள்ளதால் அந்த கிளைச் சிறைச்சாலையை மன்னார்குடியில் தொடர்ந்து இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1930, திரு. ப. கோவிந்தன்

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2205, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு வட்டம், குழித்துறையில் மூடிக்கிடக்கும் கிளைச் சிறைச்சாலையை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1757, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் விசாரணைக் கைதிகளுக்கும், தண்டனைக் குற்றவாளிகளுக்கும் வழங்கப்படும் உணவின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து "விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,76,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1803, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, `to discuss the need to appoint larger number of Jail Supervisors to find out the sanitary and environmental condition and to improve jail life' I move—

"That the allocation of Rs. 51,76,76,000/- under Demand No. 14-Jails be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் இதிலே பேசவிருக்கிறார்கள். அதை மனதில் வைத்துக்கொண்டு உறுப்பினர்கள் தங்கள் உரையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திலே பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பைத் தந்ததற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

நீதிக்கும், நிதிக்கும் எல்லா அத்தியாயங்களிலும் கடும் போர் நடந்து கடைசியில் நிதியே வென்றது என்ற அவலக் குரல் இன்று நாடெங்கிலும் எதிரொலிக்கின்ற நிலையை நம்மால் காண முடிகிறது. நாம் நீதிமன்றத்திற்குச் சென்ற பின்னால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு தண்டனை கிடைக்கும் என்கிற ஒரு நம்பிக்கையோடு காலடி எடுத்து வைத்தாலும்கூட, அந்த நீதி கிடைப்பதற்கான சில சூழல்களை அரசு செய்து கொடுக்க வேண்டியது அதனுடைய கடமையாக இருந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக, வழக்கைத் தொடுத்துவிட்டால் மட்டும் போதாது, அந்த வழக்கை நிரூபிப்பதற்காக சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தவேண்டும். நல்ல அரசு வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலை எல்லாம் சரியாக அமைந்தால்தான் நீதிபதியினுடைய வாயிலிருந்து நமக்கு ஒரு நல்ல உத்தரவு கிடைக்கும். நாம் சாட்சியத்தைக் கொண்டு போய் நிறுத்தாவிட்டால் case not proved என்று சொல்லி உடனடியாக

@ **155** முதல் **234** ஆம் பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



சம்பந்தப்பட்டவரை விடுதலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு நீதிபதி ஆட்படுவார். அப்படிப்பட்ட ஒரு நிலைமையைத் தவிர்க்க வேண்டும் என்று சொன்னால், நீதி கிடைக்கக்கூடிய ஒரு நல்ல சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய தலையாய கடமை என்பதை நாம் உணர்ந்தே தீர வேண்டும்.

குறிப்பாக, கடந்த 5 ஆண்டுக் காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பல துறைகளில் எப்படி எல்லாம் பணம் சூறையாடப்பட்டது, பணம் கையாடல் செய்யப்பட்டது என்பதற்காக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடிந்து, குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதற்காக தனி நீதிமன்றத்தையும் நாம் வைத்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்துகூட இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. நாம் தனி நீதிமன்றம் வைத்துக்கூட இந்த இரண்டு ஆண்டு காலத்திலே அந்த வழக்குகளில் இன்னும் நம்மால் judgement-ஐ விரைவிலே பெற முடிந்ததா என்று பார்த்தால் இல்லையென்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

Special Courtகளை நாம் எதற்காகப் போட்டோம்? விரைவில் தீர்ப்பு கிடைக்கவேண்டும் என்பதற்காகப் போட்டோம். Sessions Court-ஒரு கொலை வழக்கினை எடுக்கிறோம் என்று சொன்னால் குற்றப்பத்திரிகை தயாரித்து charge frame செய்து trial என்று போட்டால் ஒரு வார காலம் அல்லது 10 நாட்களிலே சாட்சிகளை விசாரித்து தீர்ப்பினை கொடுத்து விடுகிறார்கள். உடனடியாக நமக்கும் நீதி கிடைக்கிறது. அதேபோல Special Court என்று நாம் தனியாக வைத்தும்கூட, அந்த வழக்குகளில் முன்னேற்றம் அடைந்து, விசாரணை தொடர்ந்து நடந்து நீதி கிடைக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இங்கே, தமிழகத்திலே எப்படியெல்லாம் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். கிரிமினல் வழக்குகளைப் பார்க்கும் ஒரு வக்கீல் கூட எப்படியெல்லாம் வாய்தா வாங்க வேண்டும் என்பதிலே தோற்றுவிடுவான். அதை விட எப்படி எல்லாம் வாய்தா வாங்க வேண்டும் என்பதில் ஒரு கெட்டிக்காரத் தன்மையைக் கடைபிடித்து இப்போது இரண்டு ஆண்டு காலம் உருண்டு ஓடிவிட்டாலும்கூட இன்னும் அந்த வழக்குகளிலே சரியான முன்னேற்றத்தை நம்மாலே அடைய முடியவில்லை என்று சொன்னால் நீதி இங்கே

நிலைநாட்டப்படுமா என்கிற அச்சம் கூட நமக்கு இருக்கிறது. காரணம், இதற்கு முன்னாலே அம்மையாருக்கு யாரெல்லாம் வக்கீல்களாக ஆஜரானார்களோ அவர்கள் எல்லாம் இப்போது Prosecutor களாக மாறுகிறார்கள். நாடகத்தில் வேண்டுமானால் வேஷத்தைக் கலைத்து விட்டு வேறு வேஷத்தைப் போட்டுக்கொள்ளலாம். ஏற்கெனவே அந்த அம்மையாரை defend செய்யக்கூடிய வழக்குரைஞர்கள் இன்று Prosecutionகளாக வருகிறார்கள் என்று சொன்னால் இப்படிப்பட்ட நிறமாற்றத்தையெல்லாம் எப்படி நம்மாலே ஏற்றுக் கொள்ள முடியும், எப்படி நாம் இந்த நாட்டிலே நீதியை நிலைநாட்ட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. பொதுவாக ஒரு ஆட்சி மாறினால் கூட இருக்கக்கூடிய வழக்குரைஞர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி அவர்களை தயவுசெய்து விலகிக்கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை எப்படியாவது சம்மதிக்க வைத்து பிறகு வேறு வழக்குரைஞர்களை நியமிப்பதுதான் வழக்கம். ஆனால் முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பார்த்தால் வீட்டிற்கு வருகிறவர்களை ஆப்பிள் அல்லது வாழைப் பழத்தைக் கொடுத்து ஆசிர்வாதம் அளிப்பதைப் போல, வீட்டிற்கே வழக்குரைஞர்களை அழைத்து அங்கே appointment orderகளைக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் எப்படி நம்முடைய நாட்டிலே நீதியை நிலைநாட்ட முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. இன்னும் சொல்லப்போனால் அரசியல்வாதிகளுடைய கையிலே இந்த நீதித்துறை கைப்பாவையாக மாறிக் கொண்டிருக்கின்றதோ என்ற ஐயம் எழுகிறது. அவர்கள் ஆட்சியில் இல்லாவிட்டாலும்கூட இங்கே கைப்பாவையாக மாறுகிறது என்று சொன்னால் அங்கே மத்தியிலே அந்த பா.ஜ.க. ஆட்சியிலே ஒரு அமைச்சர் அங்கம் வகிக்கின்ற ஒரு காரணத்தினாலே, சட்டத் துறை அமைச்சர் இவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்ற காரணத்தினாலே இன்றைக்கு 29 மாவட்டங்களுக்கு 29 வழக்குரைஞர்களை மத்திய அரசினுடைய வழக்குரைஞர்களாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுமாதிரி இதுவரை கேள்விப்பட்டதே யில்லை. நான் வழக்குரைஞர் தொழிலை கிட்டத்தட்ட 16 ஆண்டுக்காலம் செய்து விட்டு இப்போது வந்திருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. ஞானசேகரன்:** பிறகு ஒவ்வொரு ஊருக்கும் ஒரு அ.தி.மு.க. வக்கீலைக்கூட நியமிக்கக்கூடிய நிலைமை வந்து விடும். இது என்ன வட்டச் செயலாளர் பதவியா அல்லது கிளைச் செயலாளர் பதவியா?



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய கட்சி சார்பிலே திரு. தாமரைக்கனி பேச இருக்கிறார். திரு. ஞானசேகரன் அவருடைய கருத்தைச் சொல்கிறார். நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லிக்கொள்ளலாம், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் முதலில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் ஒரு clarificationஐக் கேட்கும்போது பேசுகின்ற உறுப்பினர் அதற்குச் சம்மதிக்க வேண்டும். ஞானசேகரன் yield ஆகவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களை உட்காரச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் தலைவர் இருக்கையிலிருந்து, உட்காருங்கள் என்று சொன்னால் உட்கார வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய உரிமையை நான் கேட்கிறேன், அவர் எதுவேண்டுமானாலும் பேசினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மாதிரி ஒழுங்கீனமாக நடந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நீங்கள் உட்காருங்கள். ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது அடிக்கடி எழுந்து நிற்கக்கூடாது, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் எதை வேண்டுமானாலும் பேசினால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி மிரட்டுகிற மாதிரி எல்லாம் பேசக்கூடாது, அவருடைய கருத்தினை அவர் சொல்கிறார்.

உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசும்போது அதற்குப் பதில் சொல்லிக்கொள்ளலாம். முதலில் நீங்கள் ஒரு Clarification-ஐக் கேட்க வேண்டுமானால் அதற்கு அவர் yield ஆக வேண்டும். He is not yielding. உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்று சொல்வார்கள். நான் என்ன தவறு செய்து விட்டேன்? Point of Order ஏதாவது இருந்தால் அதை தைரியமாக சமாளிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) என்ன Point of Order? இதிலே ஒரு Point of Order-ம் கிடையாது. I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் முதலில் not yielding என்று சொன்னீர்கள், பிறகு ஏன் மறுபடியும் சொல்கிறீர்கள், Come to the point

**திரு. சி. ஞானசேகரன்:** இங்கே அ.தி.மு.க.வினுடைய வழக்குரைஞர்களை எல்லாம் வீட்டிற்கு அழைத்து ஒரு Appointment Order-ஐ ஒரு முன்னாள் முதலமைச்சர் கொடுக்கிறார் என்று சொன்னால், தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன், தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே நீதியை நிலைநாட்ட வேண்டியது இந்த அரசினுடைய கடமையும்கூட என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மத்திய அரசினுடைய விவகாரம் என்று சொல்லி நீங்கள் தலையிட முடியாது என்று ஒதுங்கி விடவும் முடியாது. ஆகவே, நீங்கள் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக ஒரு தீர்மானத்தைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே அந்த அம்மையாருக்கு ஆஜரான வக்கீல்கள் எல்லாம் இப்போது Prosecutor களாக அந்த வழக்குகளில் இருந்தால், கொள்ளையடிக்கப்பட்டது சம்பந்தமான அந்த வழக்குகளில் அவர்கள் தரப்பில் யாரெல்லாம் குற்றவாளிகளாக இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் Prosecutor களாக மாறினால் எப்படி நாம் அந்த வழக்குகளை நடத்த முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க 'வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் சிந்தித்துப் பார்த்து, மத்திய அரசு வழக்கறிஞர்களை நியமிக்கின்ற வழக்கத்தை உடனடியாகக் கைவிட்டு, அந்த Appointment Orderகளை எல்லாம் Cancel செய்ய வேண்டுமென்று, நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்தலாம் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, இதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-05

அடுத்தபடியாக, 'Special Court' சற்றுமுன்கூடச் சொன்னேன். முன்னாள் முதல்வர் அவர்கள் இவற்றைத் தன்னுடைய கைப்பாவையாக மாற்ற முயலுகிறார்கள் என்று சொன்னேன். இதைச் சொல்வதற்குக் காரணமே, இப்போது இருக்கக்கூடிய தலைமை நீதிபதியைக்கூட மாற்றுவதற்கான சில முயற்சிகளை டெல்லியிலே செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்தால், அவரை பயமுறுத்திக்கொண்டிருந்தால், எப்படி அவர் நல்ல தீர்ப்புகளை வழங்க முடியும்? அவரை மாற்ற வேண்டுமென்று எங்கெங்கோ போய் என்னென்னமோ செய்து கொண்டிருந்தால் அவர் எப்படி நல்ல தீர்ப்பு கொடுக்க முற்படுவார்? தனி நீதிமன்றம் வைத்ததே செல்லாது என்று சொன்னால் எப்படி? ஏற்கெனவே, கடந்த காலத்தில் தனி நீதிமன்றங்களை வைக்காமலா இருந்து விட்டார்கள்? அவற்றைக் காலம் காலமாக வைத்துக்கொண்டுதான் இருக்கிறோம். தனி நீதிமன்றம் வைத்ததே செல்லாது என்று சொல்லி வழக்கைப் போட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தால், எங்கே தனக்கு Disqualification வந்துவிடுமோ என்று அஞ்சி, அதற்குள்ளாக எப்படியாவது 356-வது பிரிவைப் பயன்படுத்தி, இந்த ஆட்சியைக் கலைத்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள் என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் முறியடிக்க வேண்டுமென்று சொன்னால், நாம் உடனடியாக தனி நீதிமன்றம் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் நல்ல தீர்ப்பு உடனடியாகக் கிடைக்கும். ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள்ளேகூட, சாட்சிகளை எல்லாம் விசாரித்து, தீர்ப்பினைக் கொடுப்பதற்கு இந்த அரசு நல்ல சுற்றுச்சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான், நீதி நிலை நாட்டப்படும் என்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சென்னையில் உச்ச நீதிமன்றத்தினுடைய Bench ஒன்றை அமைக்க வேண்டுமென்று அரசு பல காலமாக வலியுறுத்தி வருகிறது. ஆனால் 1994 ஆம் ஆண்டு, டெல்லியை விட்டு உச்ச நீதிமன்றத்தை வேறு எங்கும் கொண்டுபோக மாட்டோம் என்று உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. அந்தக் கருத்து இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை சென்னையிலே அமைக்க வேண்டியது மிக மிக அவசியம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை

அமைச்சர் அவர்களும் — ஏன், ஒரு தீர்மானத்தையே போட்டுக்கூட, சென்னையிலே உச்சநீதிமன்றத்தினுடைய கிளையை அமைக்க வேண்டுமென்று, இன்று நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கிற பா.ஜ. ஆட்சிக்கு எடுத்துச் சொல்லி — உச்சநீதிமன்றத்தினுடைய கிளையை சென்னையிலே அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்ற வரவு-செலவுக் கூட்டத் தொடரிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மதுரையிலே உயர்நீதிமன்றத்தினுடைய கிளை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதேபோல, இந்த ஆண்டும் நிதிநிலை அறிக்கைக்கான பதிலிலும் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள், உயர்நீதிமன்றத்தினுடைய கிளை வரும், வரும் என்று சொல்லி, மிகவும் ஆர்வத்தோடு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உலகநேரி என்ற இடத்திலே அதற்காக நிலம் கையகப்படுத்தும் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்தினுடைய கிளையை அமைக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று வழக்கறிஞர்கள் பல காலமாகப் போராடி விட்டார்கள். ஏற்கெனவே, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள்கூட மதுரையிலே ஒரு மாநாட்டை நடத்தி, தலைவர் மூப்பனார் அவர்களையும் அழைத்து அந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், உயர்நீதிமன்றம் அமைவதற்கு அந்த இடத்திலே சரியான infrastructure facilities இல்லை என்று சொல்லி, நீதிபதிகளும் அங்கே போவதற்குத் தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நீதிபதிகளிலே பல பேர் கிராமங்களிலே பிறந்தவர்கள் இருக்கிறார்கள். சாதாரணக் குடும்பத்திலே இருந்து வந்தவர்கள் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் எல்லாம் கொஞ்சம் மனம் மாறி, அங்கே இருக்கக்கூடிய மாவட்ட நீதிமன்ற வளாகத்திலேயே இருப்பதற்கு, மக்களுக்கு நீதி உடனடியாகச் சென்றடைய வேண்டும் என்கிற நல்ல நோக்கத்திற்காக, நிச்சயமாக நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள், நீதி பரிபாலனத்திலே அக்கறை உள்ளவர்கள் முன்வர வேண்டும்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை அமைக்க அரசு எல்லா வகையான உதவிகளையும் செய்யத் தயார் என்று அறிவித்து விட்டது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே



குறிப்பிட்டதைப் போல, அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணியும்
நிறைவேறி வருகிறது. இப்போது இருக்கின்ற பிரச்சினை எல்லாம், புதிய
கட்டடம் ஒன்றை அங்கே உருவாக்கி, அங்கே அந்தக் கிளையை
அமைப்பதா அல்லது ஏற்கெனவே இருக்கின்ற பழைய கட்டட
வசதிகளையே தற்காலிகமாகப் பயன்படுத்திக் கொள்வதா என்பதில்தான்
இருக்கிறது. அதனால்தான் இந்தத் தயக்கம் ஏற்பட்டிருக்கிறது.
அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எந்தத் தயக்கமும் இல்லை. இதை
நான் ஏற்கெனவே, மதுரையிலே நடைபெற்ற ஒரு விழாவிலே
குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது உயர்நீதிமன்றத்தின் கையில்தான் இந்தப்
பிரச்சினை இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள்
உயர்நீதிமன்றத்தை அணுகி, இந்த அரசுக்கும் ஒத்தாசையாக அந்தப்
பணியை முடித்தால் நன்றியுடையவர்களாக இருப்போம்.

முற்பகல் 11-10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி.
உடனடியாக அந்த இடத்தில், உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை
அமைப்பதற்கு, அரசு சார்பாக முழு ஒத்துழைப்பு கொடுத்தாகிவிட்டது.
ஆனால் இங்கே நீதித் துறைக்கும், நம்முடைய அரசுக்கும் இடையிலே
எப்படியோ ஒரு இடைவெளி ஏற்பட்டுவிடுகிறது. நாம் நீதிபதிகளிடம்
நேரடியாகச் சென்று பேச முடிவதில்லை. அவர்கள் சார்பாக பதிவாளர்
வருகிறார். அவர்கள் மூலமாகத்தான் பேச வேண்டியிருக்கிறது.
அவர்கள்கூட இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களோடு பேசி மதுரையில்
உடனடியாக உயர்நீதிமன்றத்தின் கிளையை அமைக்க ஏற்பாடு செய்ய
வேண்டும்.

புதிய கட்டடம் நிச்சயமாக கட்டத்தான் போகிறோம். நிலம்
கையகப்படுத்தியிருக்கிறோம். ஆனால் இப்போது கட்டடம் கட்ட
ஆரம்பித்தால்கூட குறைந்தது 2 ஆண்டுகள் ஆகும். அந்த இரண்டு
ஆண்டுகள்வரை, ஒவ்வொரு வரவு-செலவுத் திட்டத்திலும் மதுரையில்
உயர்நீதிமன்றத்தினுடைய கிளை வருகிறது என்று சொல்லிக்கொண்டே
இருந்தால், அது நன்றாக இருக்காது. ஆகவே அரசு செய்யக்கூடிய இந்த
முயற்சிக்கு, நீதித் துறையைச் சேர்ந்த தலைமை நீதிபதி அவர்களும், மற்ற
நீதிபதிகளும் தங்களுடைய இசைவைத் தெரிவித்து, கூடிய விரைவிலே,
இரண்டு மாத காலத்திற்குள், ஏற்கெனவே இருக்கின்ற மாவட்ட நீதிமன்ற
வளாகத்திலே உயர்நீதிமன்றக் கிளையை ஆரம்பிக்க வேண்டுமென்று,
இந்த மாமன்றத்திலே தலைமை நீதிபதி அவர்களையும், மற்ற
நீதிபதிகளையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, நம்முடைய உயர்நீதிமன்றத்தில், வழக்கறிஞர்களுக்கு நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. சரியான கழிப்பிட வசதி அங்கே கிடையாது. வக்கீல்கள் நிறைய இருக்கிறார்கள், வாதிப் பிரதிவாதிகள் நிறைய பேர் வருகிறார்கள். கழிப்பிட வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தால், கழிப்பிட வசதிகளை நிறைய உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, New Law Chamber கட்டியிருக்கிறார்கள். அந்த இடத்திலே Lift இல்லை. அங்கே உடனடியாக ஒரு Lift அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய வழக்குரைஞர்கள், நீதிபதிகள் ஆகியவர்களுக்கு அடிக்கடி heart attack வருகிறது. காரணம் மற்றவர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் அவர்கள் தங்கள் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு, எப்போதுமே கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் heart attack வருகிறது. உயர்நீதிமன்ற வளாகத்திலே மருத்துவ வசதி இல்லை. பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்கு முன்னால், பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே ஒரு 5 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை உடனடியாக வைக்க வேண்டுமென்று வழக்குரைஞர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். அதை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் நிறைய முன்னோடித் திட்டம் (Pilot Scheme) என்று வைத்திருக்கிறோம், இப்படிப்பட்ட முன்னோடித் திட்டத்தை வைத்து, கீழே Munsif Court, Magistrate Court போன்றவற்றில் இருக்கக்கூடிய வழக்குகளைக் குறைத்திருக்கிறோம். ஆனால் உயர்நீதி மன்றத்தில் ஒரு writ தாக்கல் செய்தால், அது முடிவதற்கு குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் ஆகின்றன. இப்போது Civil சம்பந்தப்பட்ட வழக்குகள் 3 இலட்சம் நிலுவையில் இருக்கின்றன. அந்த வழக்குகள் தொடுக்கப்பட்டு, 10 ஆண்டுகள் கழித்துத்தான் நமக்கு நீதி கிடைக்கும் என்று சொன்னால், Justice delayed is justice denied என்றுதான் சொல்வார்கள். ஆகவே காலம் கடந்து நீதி கிடைக்குமென்றால், அந்த நீதி எங்களுக்கு எப்படி உகந்ததாக இருக்க முடியும்? அது உகந்த நீதியாக அமையாது. ஆகவே உயர்நீதி மன்றத்தில் இருக்கக்கூடிய pendency-யைக் குறைக்க வேண்டும் High Court-ல் மொத்தம் 42 நீதிபதிகள் இருக்க வேண்டும். 34 பேர்தான் இருக்கிறார்கள். இன்னும் 8 நீதிபதிகள் போட வேண்டும். உடனடியாக அந்த நீதிபதிகள் பதவிகளையெல்லாம் உயர்நீதிமன்றத்தில் நிரப்ப ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாவட்டங்களில் இருக்கக்கூடிய Pending case-களை disposal செய்வதற்கு pilot scheme வைத்திருக்கிறார்கள். இன்னும் பல மாவட்டங்களுக்கு அந்தத் திட்டம் செல்லாமல் இருக்கிறது. எனவே, எல்லா மாவட்டங்களிலும் இரண்டு மாத காலத்திற்குள் நீதி கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து Sub-Judge களுக்குக் கார் கொடுக்கலாம். Munsif Court களில், சில நேரங்களில் Court Bench Clerk மோட்டார் சைக்கிளில் வருவார். Magistrate லொங்கு லொங்கு என்று நடந்து வருவார், அல்லது டவுன் பஸ்சைப் பிடித்து வருவார். Magistrate க்கு ஒரு மரியாதை இருக்க வேண்டும். பெரிய கோடீஸ்வரராக இருந்தாலும்கூட, அவரைப் பற்றிய தீர்ப்பு சொல்லப் போகிறவர் அந்த Magistrate தான். அவர் நடந்து வருவார், Bench Clerk மோட்டர் சைக்கிளில் வருவார் என்பது ஒரு கொடுமையான ஒன்று. Bench Clerk-க்கு இருக்கக்கூடிய வசதிகள்கூட அந்த நீதிபதிக்கு இல்லாமல் இருப்பது கொடுமையான ஒன்று. எனவே, நம்முடைய அரசு Magistrate களுக்கு, Munsif களுக்கு கார் வழங்காவிட்டாலும், ஒரு புல்லட் அல்லது மோட்டார் சைக்கிள் அல்லது ஒரு ஸ்கூட்டரையாவது வாங்கிக் கொடுங்கள் என்று அரசை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வழக்குரைஞர்களுடைய Welfare Fund வழக்குரைஞர் இறந்துவிட்டால், 5 இலட்ச ரூபாய் அரசு உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் ஒரு அரசாணையைப் பிறப்பித்து—எங்களிடம் நீங்கள் வசூல் செய்து, பிறகு எடுத்துக்கொள்ளுங்கள் — அரசு உடனே கொடுக்க வேண்டும். தற்சமயம் உள்ள விதிப்படி பார்த்தால், அதை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, வழக்குறைஞர் கள் இறந்தால், 5 இலட்ச ரூபாய் உடனடியாக அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, 22 மாவட்டங்களில்தான், மாவட்ட நீதிமன்றங்கள் இருக்கின்றன. புதிய மாவட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். அந்தப் புதிய மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் இல்லை. அந்த 7 மாவட்டங்களிலும்கூட இந்த மாவட்ட நீதிமன்றங்களை உடனடியாக அரசு அமைக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். சில நேரங்களில் Special Courts அமைத்த பிறகு (மணியடிக்கப்பெற்றது)

எங்கள் மாவட்டத்தில் எங்களுக்கு ஒரு bitter experience இருக்கிறது. Sandalwood offence case களில் சீக்கிரம் Judgment வந்துவிடும் என்று கருதி திருப்பத்தூரிலேயே Sandalwood offence Court-ம், அதேபோல சேலத்திலே Sandalwood Offence Court-ஆக 2 தனி நீதிமன்றங்களை வைத்து இருக்கிறோம். ஆனால், அந்த நீதிமன்றங்களிலே வெறும் remand bail-- இவை தவிர வேறு எந்த ஒரு trial நடக்க மாட்டேன் என்கிறது. இதற்குப் பேசாமல் அந்த 2 நீதிமன்றங்களையும் கலைத்துவிட்டு, எந்தெந்த இடங்களில் சந்தனக் கட்டை பிடிக்கப்பட்டதோ, அந்த Jurisdiction-ல் இருக்கக்கூடிய அந்த Magistrate களே நடத்துவார்கள் என்கிற ஒரு நிலையை நீங்கள் உருவாக்கிக் கொடுத்தால்தான், அந்த சந்தனக்கட்டை வழக்குகளை எல்லாம் உடனடியாக அந்த இடத்திலே dispose செய்ய முடியும்; இல்லை என்று சொன்னால், வழக்குகள் கொஞ்சம்கூட முன்னேற்றம் அடையாமல் அப்படியே தேங்கிக் கிடக்கும். ஆகவே, நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், Sandalwood offence cases-க்காக வைத்து இருக்கிற 2 நீதிமன்றங்களை நீங்கள் எடுத்துவிட்டு, அதை அந்தந்த Jurisdiction-லே நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, எங்கு பார்த்தாலும் சாராயம் இருக்கிறது; போலீஸ் எவ்வளவோ நடவடிக்கை எடுத்தாலும்கூட, சாராய வழக்குகள் நிறைய வந்து கொண்டே இருக்கின்றன. சாராயத்தை விற்றுக்கொண்டே இருக்கிறார்கள்; அதைக் காய்ச்சிக்கொண்டே இருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்தச் சட்டத்தில் அந்த offence- ஐ Non-bailable-ஆக, யாராவது சாராயம் வைத்து இருந்தாலும், அதை Non-bailable offence- ஆக மாற்ற வேண்டும். அது bailable offence என்று இருக்கின்ற காரணத்தாலே சாராயத்தை விற்கிறார்கள்: போலீசார் பிடிக்கிறார்கள். கோர்ட்டுக்குப் போகிறார்கள், ஜாமீனில் வந்து விடுகிறார்கள்; மீண்டும் சாராயத்தை விற்க ஆரம்பிக்கிறார்கள்; அமோகமாக விற்கிறார்கள். இப்படிபபட்ட நிலையைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், சாராயக் குற்றங்களை Non-bailable ஜாமீனில் விடக்கூடாத, குற்றமாக ஆக்க நீங்கள் அதற்கு உரிய திருத்தம் கொண்டு வந்து சட்டத்தை மாற்றி அமைத்தால்தான், சாராயத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்ற என்னுடைய கருத்தை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, மதுரை சிறைச்சாலையில்கூட நேற்றிலிருந்து உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். சிறைச்சாலையிலே இருக்கக்கூடியவர்கள் சில வசதிகளைக் கேட்டு போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குச் சரியான குடிநீர் வசதி இல்லை என்கிறார்கள். அங்கு நிறைய பேருக்குக் குளிப்பதற்கான வசதி இல்லை என்கிற ஒரு கோரிக்கையும் இருக்கிறது. மருத்துவவசதி அங்கு போதவில்லை என்கிறார்கள். மதுரையிலே நடந்த லீலாவதி கொலை வழக்கில் இருக்கக்கூடிய குற்றவாளிகள் மட்டும் தனியாகவே சாப்பாடு செய்துகொள்வதற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள் என்றெல்லாம் சொல்லி ஒரு போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். அதேபோல பாளையங்கோட்டை சிறைச்சாலையைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், அங்கே சிறைச்சாலைக்குள்ளே சாதிக் கலவரங்கள் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சிறைச்சாலையிலே இருந்து யாராவது ஒரு accused- ஐ கோர்ட்டுக்கு நாம் escort உடன் அனுப்புகிறபோது, போலீசாரும் அந்த accused-ம் இரண்டு பேருமே குடித்துவிட்டு ஒருவருக்கு ஒருவர் அடித்துக்கொள்கிறார்கள், காயப்படுகிறார்கள் இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் இருக்கின்றன. இவர்களை எல்லாம் பிடித்து, குற்றம் செய்யாமல் இருப்பதற்காக ஜெயிலில் அடைத்து வைத்தால், பிறகு அவர்கள் வெளியே வருகிறபோது, அவர்கள் குடித்துவிட்டு அதனால் இன்னொரு Case உருவாகிக் கொண்டு இருக்கிறது. என்னுடைய வேலூர் சிறையிலே ஒரு ஆயுள் கைதி தப்பிச் சென்றான்; இன்னும் அவனைப் பிடிக்க முடியவில்லை. இப்படி சிறைச்சாலையிலே சரியான நிர்வாகம் இல்லாமல் இருந்து கொண்டிருப்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதுபோன்று கைதிகள் தப்புவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி. ஞானசேகரன்:** ஓரே ஒரு point மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்குமேல் அனுமதிக்க முடியாது. அடுத்து திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைகள் நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளில் ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

இந்தத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, குற்றவாளிகள் சிறையிலே இருக்கும்போதும் சரி, அவர்கள் சிறையிலே இருந்து வெளியே வருகின்ற சந்தர்ப்பத்திலேயும் சரி, அவர்களுடைய மறுவாழ்வுக்காக எடுத்துக்கொள்கின்ற முயற்சி உள்ளபடியே பாராட்டுதலுக்கு உரியதாகும். சிறையிலே இருக்கின்றபோது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகளைத் தொடர்ந்து அதிகப்படுத்தி வருவதையும் நம்மாலே காண முடிகிறது. அதேபோல சிறையை நவீனப்படுத்த வேண்டும் என்ற முறையில், சிறையிலே நூலகம் வைத்து தொலைக்காட்சி, வீடியோ சாதனங்கள் போன்றவை எல்லாம் அங்கே பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதையும் நான் வரவேற்கின்றேன்.

மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையில் இன்னும் அங்கே மருத்துவர்களை மற்றும் மருத்துவ வசதிகளை அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக கோவையிலே இருக்கக்கூடிய மத்திய சிறையில் மருத்துவ வசதி போதாது. அங்கே இருக்கக்கூடிய டாக்டர்களின் எண்ணிக்கையும் மிகமிகக் குறைவு. ஆகவே அங்கே டாக்டர்களை அதிகப்படுத்தி, தேவையான மருந்துகளையும் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவை சிறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகை தந்து அதைப் பார்வையிட்டார்கள். அந்த நேரத்திலே அங்கே இயங்குகின்ற தொழிற்சாலைகளில், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய காவல் துறைக்கு முழுமையாக துணிகள் நெய்து வழங்குகிறார்கள் என்பதைக் காண முடிந்தது. அப்படி நெய்து வழங்கக்கூடிய அந்தச் சிறைக் கைதிகளுக்குத் தரக்கூடிய ஊதியம் மிகமிகக் குறைவு. 6 ரூபாய், 4 ரூபாய், 2 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. நிச்சயமாக அந்தத் தொகை போதாது. அவர்கள் சிறையிலிருந்து வெளியில் வருகிற காலங்களில், ஒரு கணிசமான தொகையைப் பெற்றுக்கொண்டு வெளியில் வந்தார்கள் என்று சொல்கிற அளவுக்கு மூன்று மடங்கு அளவுக்கு அந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி காவலர்களுக்கும் துணிகள் அங்கே நெய்யப்படுகின்றன. அங்கே இருக்கக்கூடிய இயந்திரங்கள் மிகமிகப் பழைய இயந்திரங்கள். அவற்றைப் புதுப்பித்தால் இன்னும்



அதிகமான துணிகளை நெய்யமுடியும். கடந்த ஆண்டு அங்கே 4 கோடி ரூபாய் மதிப்புக்குத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. எனவே அதை அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல் கோவையிலே எப்படி துணிகள் அதிகமாக நெய்வதற்கு வாய்ப்பு உள்ள விசைத்தறிகள் அதிகமாக இருக்கின்றனவோ அதேபோன்ற ஏற்பாட்டை தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய சிறைச்சாலைகள் அனைத்திலும் செய்தால் இன்னும் துணி உற்பத்தி அதிகப்படுத்தப்பட்டு எல்லா அரசு நிறுவனங்களுக்கும் அதை வழங்க முடியும். குறிப்பாகப் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்குகிறோம். அந்தத் துணிகளைக்கூட அங்கே நெய்து கொடுக்க முடியும். சிறைச்சாலைகளில் இருக்கக் கூடியவர்களுக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்க முடியும். எனவே அதையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெண்களுக்குத் தனியாக நீதிமன்றம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மகளிருக்குச் சமநீதி ஏற்படுத்துவதற்காகச் செய்யக்கூடிய முயற்சி; உள்ளபடியே இது வரவேற்கத்தகுந்தது. அதற்கு என்று ஒரு தனி அமைப்பை ஏற்படுத்துவது ஒரு புதிய முறை என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்திலே நிரம்ப மகளிர் பணியாற்றுகிறார்கள். அவர்கள் தங்களுடைய சிறு குழந்தைகளைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதிலும் அல்லது பாதுகாப்பாக வீட்டிலே விட்டுச் செல்வதிலும் பல சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள். எனவே இப்படிப்பட்ட மகளிருடைய குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக என்று, காலையிலிருந்து மாலை வரைக்கும் ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோவையில் ரூ. 10-12 கோடி மதிப்பில் ஒரு கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். போனமுறை அதற்கு நன்றியும் சொல்லப்பட்டது. இருந்தாலும் இன்னும் அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை துவங்கப்பட இருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். கோவைக்கும் அப்படிப்பட்ட உயர்நீதிமன்றக் கிளை தேவை என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே அதையும் அரசு பரிசீலனை செய்து, மாநில அரசு, உச்சநீதிமன்றத்தோடும் உயர்நீதிமன்றத்தோடும் தொடர்பு கொண்டு அதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தனி கோர்ட்டுகள் போடப்பட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க சில வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறப்பான ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனாலும்கூட கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்லாமல், கொலைக்குப் பின்னணியாக இருந்தவர்கள் எல்லாம் கூட கொலையின் விபரங்கள் எல்லாம் தெரிந்தவர்கள்கூட தங்களுடைய பொறுப்புகளை எல்லாம் தட்டிக் கழித்திருக்கிறார்கள் என்று கடந்த காலத்தில் செய்திகள் எல்லாம் வந்தன. குறிப்பாக முன்பு இங்கே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அம்மையார், ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவது பற்றி, அதற்கு நான்கு நாட்களுக்கு முன்பே அவர்களுக்குத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் ராஜீவ் காந்திக்கும் அதைப்பற்றிச் சொல்லவில்லை. அவருடைய கூட்டங்களிலும் இவர் கலந்துகொள்ளவில்லை என்றும் இப்போது செய்திகள் வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அவர்கள் அந்தப் பொதுக் கூட்டங்களில் திட்டமிட்டே கலந்துகொள்ளவில்லை என்ற ஒரு நிலையும் இன்று சொல்லப்படுகிறது. இதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்வதாக யாரும் எண்ணக்கூடாது. இதைச் சொன்னவர் டாக்டர் சுப்ரமணியன் சுவாமி, இதை எங்கே சொன்னார் என்று கேட்டால், ஜெயின் கமிஷன் முன்னாலே சொன்னார். ஜெயின் கமிஷனுக்கு முன்னாலே இப்படிச் சொன்னார் என்று யார் சொன்னார்கள் என்றால், இப்போது மத்தியில் அமைச்சராக இருக்கின்ற ராம் ஜெத்மலானி சொல்கிறார். அவர் சொல்வது, கிட்டத்தட்ட ஒரு கட்டுரையையே எழுதியிருக்கிறார். அது, 1998, ஏப்ரல் 20, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிலே வந்திருக்கிறது. அதை நான் படிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

"Subramanian Swamy called a press conference on 2nd June 1993 and he made the astounding charge that Chief Minister Jayalalitha had been tipped off by the LTTE on the possible assassination of former Prime Minister. He accused her of longstanding links with the LTTE. He claimed that she did not demand a ban on the LTTE while he did. "He" means Subramanian Swamy giving some details he alleged that the tip off information had been passed on to her about four days before the assassination. He claimed that this information had been provided to him by an LTTE informer in London who helped identifying Dhanu, the suicide bomber, that the LTTE had urged Jayalalitha not to campaign with Rajiv



Gandhi in any of the eastern constituencies of the State; that Jayalalitha kept this information to herself and did not pass it on either to Rajiv Gandhi or to him as a Union Law Minister." இப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது.

On January 30th 1994 he told the press that the important LTTE leaders involved in the assassination of Rajiv Gandhi had been to Madras recently and met Jayalalitha என்று ஜெத்மலானி அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, இப்படியொரு சதியைத் தெரிந்தும்கூட வெளியே சொல்லாமல் இருப்பது அந்தச் சதிக்கு உடந்தையாக இருந்ததாகத்தான் அர்த்தம். எனவே இதனைத் தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது ஒரு புதிய முறை இந்த நாட்டிலே பேசப்பட்டு வருகின்றது. அதாவது இப்போது இருக்கக்கூடிய அரசியல் சட்டம் தேவையில்லை, ஒரு புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று. புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்வதற்கு முன்னாலேயே அருண் ஷோரி என்கின்ற ஒரு ஆசிரியர் ஒரு புத்தகத்தை எழுதி, டாக்டர் அம்பேத்கருடைய கருத்துக்களை முழுமையாக மறுக்கின்ற அளவுக்கு அதிலே சொல்லப்பட்டது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டதைப்போல இந்திய அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரையில் 100-க்கு 75 சதவீதம் மற்ற அரசியல் சட்டங்களிலேயிருந்து எடுக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக 1935-வது சட்டத்திலேயிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவைதான். ஆனாலும்கூட, அதிலே, இந்த அரசியல் சட்டத்தை உண்டாக்குவதிலேயிருந்த திறமை என்பது மிகமிகக் குறைவுதான். ஆனாலும்கூட அரசியல் நிர்ணய சபையிலே இந்த அரசியல் சட்டத்தினுடைய ஒவ்வொரு பிரிவையும் ஆய்வு செய்கின்ற நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு டாக்டர் அம்பேத்கர் பதில் சொன்னாரே, அதிலேதான் அவருடைய திறமை பிரதிபலித்தது. ஆனால், அவருக்கு அந்தத் திறமை இல்லை என்கின்ற அளவுக்கு பாரதிய ஜனதா கட்சியினுடைய எழுத்தாளர் அருண் ஷோரி அவர்கள் இன்றைக்கு ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், அதிலே அவருடைய கருத்து என்னவென்று பார்த்தால் இன்றைக்கு மறைமுகமாக, hidden agenda என்கின்ற வகையிலே வந்து கொண்டிருப்பது, எனக்குக் கிடைத்த

தகவலின்படி எதிர் காலத்திலே நீதித் துறையே அழிந்து போகக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. நீதித் துறையிலே என்ன செய்யப் போகிறார்கள் என்றால் ஒரு Supreme Council of Judiciary என்று அமைக்கப்போகிறார்கள். அதிலே 15 உறுப்பினர்கள். அந்த 15 உறுப்பினர்களில் எதிர்காலத்திலே பிரதமருக்குப் பதிலாக ஜனாதிபதி வரப்போகிறார். வரக்கூடிய ஜனாதிபதி யார் என்று கேட்டால் அவர் அந்தக் குழுவுக்குத் தலைவர். மத்திய சட்டத் துறை அமைச்சர் ஒருவர், ஜனாதிபதியால் நியமிக்கப்படக்கூடியவர்கள் 4 பேர்கள், 2 Supreme Court நீதிபதிகள், 2 உயர்நீதிமன்ற நீதிபதிகள், 4 பேர் நாடாளுமன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்படி 15 பேர் இருக்கப் போகிறார்கள். இந்த 15 பேரிலே 10 பேர் கொண்ட ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு அவர்கள்தான் எல்லாம் விசாரிக்கப் போகிறார்கள். நீதிபதிகளை நியமனம் செய்வதும் அவர்கள். நீதிபதிகள் ஏதாவது தவறு செய்தால் அதைத் தலைவருக்கு, அதாவது President-க்குச் சொல்லக்கூடியவர்கள் அவர்கள்தான். மேலும் நீதிபதிகளை நீக்கக் கூடியவர்களும் அவர்கள்தான் என்று சொல்லி ஒரு பெரிய மோசடியை இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நீதித் துறையை முழுமையாக சுதந்திரமாகச் செயல்படாமல் விடுவதற்கு ஒரு பெரிய சூழ்ச்சி நடந்துகொண்டு இருக்கின்றது. எனவே அத்தனை பேரும் இந்த நேரத்தில் அதைக் கடுமையாக எதிர்ப்பதற்குத் தயாராக இருந்து கொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 11-30*

அடுத்தபடியாக, இன்றைக்குப் பார்த்தால் இப்போது இருக்ககூடிய அரசமைப்புச் சட்டம் போதாது, Presidential form of Government தேவை என்கிற அளவிற்குப் பேசப்படுகிறது. ஒரு பத்திரிகையில் சொல்லப்பட்டதைப்போல இன்றைக்கு இருக்ககக்கூடிய Parliamentary system which has taken root in India is more accommodative of and responsive to the diversity of Indian society. At the root of the BJP's advocacy of the Presidential form of Government lies the authoritarian vision of an ``Akhand Bharat" ruled by a single leader என்கின்ற அளவுக்குத்தான் இன்றைக்கு சொல்லப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு அவர்கள் ஜனாதிபதி முறை என்று சொல்வது வேறு ஒன்றும் அல்ல. எப்படி ஜனாதிபதி முறையை ஹிட்லர் 1935-லே கொண்டு வந்தாரோ அதே முறைதான். நாடாளுமன்ற முறைதான் என்று சொல்லி, வாக்குகளைப் பெற்று ஹிட்லர் திடீரென்டு காபினெட் முறை என்று



அறிவித்தார்கள். கேபினெட் முறை என்று சொன்னால், சட்டத்தை மந்திரி சபை முடிவு செய்யும், நாடாளுமன்றத்திற்கு சட்டத்தை முடிவு செய்யக்கூடிய அதிகாரங்கள் கிடையாது. தேர்ந்து எடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு அந்தச் சட்டத்தைப் பற்றி விளக்கம் கேட்க அல்லது தங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு இடமில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலையைக் கொண்டு வருவதற்கு இப்போது இருக்கக்கூடியவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அனைத்து இந்திய மக்களுடைய கடமை என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

அதேநேரத்தில் இங்கே சிலர், திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட வேண்டும் என்று சில காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். 356 என்கிற அந்தப் பிரிவு பற்றி—தமிழ்நாடு பூராவும் அதற்கு பொருள் தெரிகிறதோ தெரியவில்லையோ—எல்லோரும் பேசுகின்ற அளவுக்கு இருக்கிறது. வெறும் 356 என்று அறிவித்துவிட முடியாது. அதற்குமுன் ஒரு Artical இருக்கிறது 355 என்று. இரண்டையும் ஒன்றாகப் படித்தால்தான் விவரம் புரியும். ஆனால் எல்லோரும் 356, 356, 356 என்று சொல்கிறார்கள். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், இங்கே பல மாநிலங்கள் கலைக்கப்பட்டாலும்கூட திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாநிலங்கள் கலைப்புப் பிரச்சினையில் என்றைக்கும் 356 பிரிவை எதிர்த்திருக்கிறது. ஸ்ரீநகரில் நடந்த மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக தெளிவாகச் சொல்லப்பட்டது. 356 பிரிவை எடுக்க வேண்டும் என்று. கல்கத்தாவில் அகில இந்திய மாநாடு, அனைத்துக் கட்சிகளுடைய மாநாட்டிற்கு நம்முடைய தலைவர் சென்றார். அப்போதும் நம்முடைய கருத்து சொல்லப்பட்டது, 1977-ல் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தநேரத்தில், 9 காங்கிரஸ் மாநிலங்களைக் கலைத்தார்கள். அந்த ஜனதா கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கூட்டு உண்டு. இரண்டு பேரும் 'அலைடு பார்ட்டி'தான்; இரண்டு பேரும் முன்னணியிலே இருக்கக்கூடியவர்கள். அப்படியிருந்தும்கூட நம்முடைய தலைவர், 9 காங்கிரஸ் கட்சியினுடைய மாநிலங்களை கலைத்தது தவறு என்று சொல்லி அப்போது அறிக்கை விட்டார்கள். அதேபோல 1980-ல் திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரசும் ஒன்றாக இணைந்து தேர்தலில் நின்றன. மத்தியிலே இந்திரா காந்தி அம்மையார் வந்தார்கள். 1977-ல் ஜனதா செய்த வேலையைப்போல, இந்திரா காந்தியும் 9 மாநிலங்களைக் கலைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அப்போதும் நம்முடைய கருத்து

தெரிவிக்கப்பட்டது; நிச்சயமாக 9 மாநிலங்களைக் கலைக்கக்கூடாது என்றுதான் நாம் அப்போதும் சொன்னோம். ஆக 356 பிரிவைப் பொறுத்தவரையில், நாம் நிச்சயமாக, ஏதோ நம்மைப் பாதுகாப்பதற்காக அந்தப் பிரிவு தேவையில்லை என்று சொல்கிறோம் என்று தயவுசெய்து யாரும் எண்ணக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலையே அதுதான் என்கிற அளவுக்குத்தான் நாம் இன்றைக்கு அதை வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயக ரீதியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடைசியாக நம்முடைய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த ஆண்டு இந்தத் தமிழ் சமுதாயத்திற்காக இன்னும் சொல்லப்போனால், இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக பாடுபட்ட ஒரே ஒரு தலைவர் டாக்டர் கலைஞர். அது அவசர காலச் சட்டமானாலும் சரி, வேறு சந்தர்ப்பங்கள் ஆனாலும் சரி, அப்படிப்பட்ட ஒரு மகத்தான தலைவர், இங்கே உட்கார்ந்து இருக்கிறார் என்ற காரணத்திற்காக மிக மிக சாதாரணமானவர்கள், வெளியிலே பேசுகிறார்கள், அவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட காரணத்திற்காக நம்முடைய தலைவரை மிக சாதாரணமானவர் என்று தயவுசெய்து யாரும் எண்ண வேண்டாம். அவர் எங்களுடைய தலைவர் என்பதற்காகப் பெருமைபட்டு நான் பேசவும் தயாராக இல்லை. ஆனாலும்கூட அவருடைய உழைப்பு, அவருக்கு இருக்கக்கூடிய ஆற்றல், அறிவு, உலகத்திலே இருக்கக்கூடிய நாடுகளெல்லாம் அவரை மதிக்கக்கூடிய தன்மையை எல்லாம் நீங்கள் பார்க்கவேண்டும். அவரது 75-வது ஆண்டு, பவள விழா ஜூன் மாதம் 3-ம் தேதி துவங்குகிறது. அந்தச் சந்தர்ப்பங்களில் வழக்கப்படி நீங்கள் தரக்கூடிய - சிறைச் சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகளுக்கு remission கொடுத்து அதாவது பொது மன்னிப்பு கொடுத்து அவர்களை நீங்கள் விடுதலை செய்யுங்கள். தலைவருடைய பிறந்தநாள் அன்று நீங்கள் கைதிகளுக்கு பொது மன்னிப்பு கொடுத்து அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறை நிருவாகம் குறித்து இந்திய



கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். சிறைச்சாலையைப் பொறுத்தவரையிலும் குற்றவாளிகளை குற்றம் செய்வதற்குரிய நிலையிலிருந்து விடுவிப்பதற்கு, பண்படுத்துகிற ஒரு சீர்த்திருத்த சாலையாகவே காலம் காலமாக சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், குற்றவாளிகளை மேலும் குற்றம் புரியத் தூண்டுவதற்குரிய கல்விக்கூடமாக அது மாறிவிட்டது என்பதைத்தான் நடைமுறை அனுபவம் நமக்கு உணர்த்துகிறது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் குற்றங்களைக் கற்றுக் கொடுப்பதற்குரிய சர்வகலாசாலைகளாக பல சிறைச்சாலைகள் மாறிவிடுகின்றன. நோக்கம் சீர்திருத்துவதாக இருந்தாலும், நடைமுறையில் குற்றத்தை மேலும் கூர்மைப்படுத்துகிற ஒன்றாக மாறிவிட்ட ஒரு விபரீதம் இந்திய சிறைச்சாலைகளிலும், தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகளிலும் இருந்து வருகிறது. இந்த முறைகளை மாற்றுவதற்குப் பொருத்தமான வழிமுறைகளைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புவது—இந்தக் கொள்கைக் குறிப்பிலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது வாடிக்கையான, வழக்கமான குற்றவாளிகள் என்று ஒரு வரையறை சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் குற்றவாளிகளை சீர்த்திருத்துவதற்கான அந்தச் சிறைச்சாலைகளிலேயும் சில பல குற்றங்கள் நடைபெறுகின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கோவை மத்திய சிறைச்சாலைக்கு நீங்கள் போய்ப் பார்ப்பீர்கள் என்று சொன்னால், ஜெயில் manual படி அங்கே மோர் வழங்கப்படவில்லை. சிறுவாணித் தண்ணீரை மோர் என்று வழங்குகிறார்கள். அதேமாதிரிதான் பல சிறைச்சாலைகளிலும் மோசடிகள் நடைபெறுவதைக் கண்டுபிடித்து, இரக்கமற்ற முறையில் தண்டிக்க வேண்டும் என்று நான் மாநில அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கிளைச் சிறைச்சாலைகளிலேயும், மத்திய சிறைச் சாலைகளிலேயும் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிற உணவுகளிலே முறைகேடுகளை நடத்துகிற எந்த அதிகாரிகளையும் மன்னிக்கக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய முறைகேடுகள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட, அனைத்துக் கட்சிக் குழு போட்டு, சிறை வாரியாகச் சென்று, சிறைவாசிகளின் குறைகளைக் கேட்டறிய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். சிறைச்சாலையிலே இருக்கிற, குறிப்பாக ஆயுள்தண்டனைக் குற்றவாளிகள், ஆயுள்தண்டனை பெற்றிருக்கிற அந்தச் சிறைவாசிகள் ஏதோ ஒரு கணப்பொழுதில் ஏற்பட்ட ஆத்திரத்தால் அறிவிழந்து செய்துவிட்ட ஒரு செயல்தான் அந்தக் கொலை. அந்தக் கொலைச் செயலை ஒரேயொரு நொடியில் செய்து முடித்து விட்டு, எந்த மனிதர்களையும் சந்திக்க முடியாமல் வாழ்நாள் முழுவதும் அவர்கள் சிறைச்சாலையின் சுவர்களுக்கு இடையில் சோகம் ததும்ப வாழ்ந்து கொண்டிருப்பது மனித நேய சிந்தனை போற்றப்படுகிற இன்றைய யுகத்திற்குப் பொருத்தமானது அல்ல. எனவே, நான் மாநில அரசை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பவள விழா வருகிறது. அதேபோல் சுதந்தர தினத்தின் பொன் விழா ஆண்டு நிறைவுற இருக்கிறது. புகழ்மிக்க தேசியத் தலைவர் நேதாஜியின் நூற்றாண்டு விழா இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப் புகழ்மிக்க பல அம்சங்கள் இணைந்துள்ள இன்றைய நிலையில், ஆயுள் தண்டனை சிறைவாசிகளை விடுவிப்பதற்குரிய மார்க்கங்களை நாம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில் 8 ஆண்டுகள் ஆயுள் தண்டனை காலத்தை அனுபவித்தவர்களுக்கு விடுதலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் 7 ஆண்டுகள் இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல், தமிழ்நாட்டிலேயும், ஆயுள் தண்டனை சிறைவாசிகளாக, 8 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த அனைவரையும் விடுவிப்பதற்கு ஒரு சிறப்பு ஆணையை இந்த மாநில அரசு, நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களின் 75-வது ஆண்டு, பவள விழா ஆண்டில், வெளியிட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்றத்திலே இருக்கின்றவர்களாலும் சரி, தமிழ்நாட்டில் வாழ்கிற மக்களாலும் சரி சிறைச் சாலைகளுக்குள் பல்லாண்டு காலம் அடைப்பட்டுக் கிடக்கிற ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் மனத்துயரத்தை அளக்க முடியாது. வார்த்தைகளில் சொல்ல முடியாது. துயரத்தில் ஆட்பட்டுக் கிடக்கிற அந்த சிறைவாசிகளை விடுவிப்பதற்கு, 8 ஆண்டுகள் பூர்த்தியான அனைவரையும் விடுவிக்க முதலமைச்சரின் பவள விழா ஆண்டைக் காரணமாக்கி, ஒரு சிறப்பு ஆணையை வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



முற்பகல் 11-40

அதேபோல சிறைச்சாலைக்குள் சிறைவாசிகள் மட்டுமல்ல, சிறைக் காவலர்களும் கைதிகளைப் போலத்தான் இன்றைக்கும் நடத்தப்பட்டு வருகிறார்கள். இன்றைக்கும் அந்த சிறைக் காவலர்களுக்கு, காவல் துறையினர் அல்லது தீயணைப்புத் துறையினருக்கு வழங்கப்படுகிற ஊதிய அளவுகோல்கூட அங்கே வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கும் ரூ.1400 அடிப்படை ஊதியம் என்ற முறையில் கணக்கிட்டு மற்ற காவலர்களைப் போலவே அவர்களும் கருதப்பட்டு, அவர்களுக்குரிய பணம், பதவி உயர்வுகள், பிற பணப் பலன்களைப் பெறுவதற்குரிய உத்தரவாதத்தை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 8 மணி நேர வேலை. மே தினத்தை இந்தியாவிலேயே விடுதலை தினமாக அறிவித்த முதல் மாநில அரசே, தமிழ்நாடுதான். நான் இந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது 8 மணி நேர வேலை என்று அறிவித்து விட்டு, இன்றைக்கும் நடைமுறையில் 8 மணி நேர வேலை வாங்கப்படுவதில்லை. வெறுமனே அதிகாரிகள் அறிக்கைகளில் 8 மணி நேர வேலை இருப்பதுபோல் சில இடங்களில் தகவல் கொடுக்கிறார்கள். ஆகவே 8 மணி நேர வேலையை உத்தரவாதப்படுத்த வேண்டும். சிறைக் காவலர்கள் வீட்டு வசதியை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல சீருடை, இன்னபிற பல விஷயங்களில் நம்முடைய மாநில அரசு சிறைக் காவலர்களுக்கு உரிய வசதிகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் சி.டி. தண்டபாணி அவர்கள் அருமையாகக் குறிப்பிட்டார்கள். சிறைவாசிகள் சிறையில் தண்டனை அனுபவிக்கின்றவர்கள், அந்தத் தண்டனை அனுபவிக்கின்ற சிறைவாசிகளின் உழைப்பைப் பயன்படுத்தி, மிகமிகக் குறைந்த சம்பள அளவைத் தீர்மானிப்பது என்பது எந்த வகையில் நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை. வெள்ளைக்காரன் வெளியேறிவிட்டானே தவிர, வெள்ளைக்காரன் வகுத்த அந்த வழியிலேயே நாம் போய்க் கொண்டிருக்கிற முறைகள் இன்றைக்கும் மாறவில்லை. மனிதர்களை

எப்படி அணுகுவது? மனிதப் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காண்பது என்பதற்கே வெள்ளையன் விட்ட வழியே நல்ல வழி என்று போய்க் கொண்டிருப்பதிலிருந்து நம்மை நாம் விடுவித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

இன்றைக்கும் நம்முடைய சிறைக்குள்ளே இருக்கிறவர்கள் கடுமையாக வேலை செய்தாலும் பைசா கணக்கிலேதான் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது. தயவுசெய்து அதை மாற்றியமைத்து விடுங்கள். மாற்றியமைத்து அவர்கள் வெளியிலே வந்ததற்குப் பின்னால் வேறு ஏதாவது ஒரு வழிமுறையிலே அவர்கள் பிழைத்துக் கொள்வதற்கு உரிய உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு அளிக்கும் வகையில் அந்த உழைப்பிற்கு நாம் நியாயம் வழங்க வேண்டும். சிறைச்சாலையிலே சிறைவாசிகளைச் சுரண்டுகிற முறைக்கு இந்த மாநில அரசு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சிறைத் துறையில் நன்னடத்தைப் பிரிவு என்று இருக்கிறது. இந்த நன்னடத்தைப் பிரிவு என்பது non-institutional treatment— அதாவது குற்றவாளிகளை இரண்டு முறைகளில் நாம் பிரிக்கிறோம். சிறைக்குள் வைத்து அவர்களை treat பண்ணுவது என்பது ஒரு முறை. அவர்களுடைய நன்னடத்தையை மேலும் ஊக்குவித்து, நன்னடத்தைகளைப் பயன்படுத்தி, அவர்களை விடுவிப்பது என்பது பிறிதொரு முறை. இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று எதிர்பட்ட ஒன்று. மாறுபட்ட ஒன்றாள நன்னடத்தைப் பிரிவை சிறைத் துறையிலிருந்து பிரித்து, தனித் துறையாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி தனித் துறையாக்க சிறை சீர்த்திருத்தக் குழு அறிக்கை 1950-51-லேயே பரிந்துரை செய்திருக்கிறது. அதேபோல் தமிழ்நாடு சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு கூட 1974-75 ஆம் ஆண்டுகளில் இதைப் பரிந்துரை செய்திருக்கிறது. தமிழ்நாடு சிறை சீர்த்திருத்தக் குழு அறிக்கையிலேயும் 1978-79 ஆம் ஆண்டிலேயும் இந்தப் பரிந்துரைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லா மட்டங்களிலும் பரிந்துரைகள் சொல்லப்பட்டும், இன்று வரை நன்னடத்தைப் பிரிவு தனியாகப் பிரிக்கப்படவில்லை. அதைப் பிரிக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நீதித் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய ஞானசேகரன் அவர்கள்கூடச் சொன்னார்கள். 'ஒருவர் எவ்வளவு உயர்ந்த இடத்தில்



இருந்தாலும் சட்டம் அவரை விட உயரமானது' என்றே கடந்த முறை உச்ச நீதிமன்றம் சொல்லிற்று. ஆனால் இப்போது அதே உச்ச நீதிமன்றம் என்ன செய்கிறது என்றால், நான்கு மாநிலங்களுடைய தலைமை நீதிபதிகளை transfer செய்கிறது.

*முற்பகல் 11-45*

அதேபோல், இதே தமிழ்நாட்டில் மன்னிக்கமுடியாத குற்றம் புரிந்த, அரசியலைப் பயன்படுத்தி, அதிகாரத்தைப் பயன்படுத்தி, மன்னிக்க முடியாத குற்றம் புரிந்த, சில பெரிய மனிதர்கள் தப்பித்துக்கொள்வதற்கு, அவர்களுக்குத் தொண்டு ஊழியம் புரிந்தவர்களையே, அவர்களுக்கு எதிராக அரசுத் தரப்பில் வாதம் புரிகிற வழக்கறிஞர்களாக நியமித்து இருப்பது என்பது ஒரு அனுமதிக்கக்கூடாத கேலிக் கூத்து. இன்றைக்கு நீதித் துறையில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த முறைகளையெல்லாம் பார்த்தால் ஜனநாயகக் கட்டமைப்பில் மக்களின் விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட ஒன்று என்று எதுவும் இருக்க முடியாது. இத்தகைய நடைமுறைகள் எப்படி சரியாக இருக்கும்? திரு. வி.ஆர். கிருஷ்ணய்யரும், திரு. சின்னப்ப ரெட்டி போன்ற புகழ் மிக்க நீதிபதிகள் தீர்ப்பளித்த அந்த இடத்தில் சில நீதிபதிகள் இருந்துகொண்டு நீதித் துறையின் மீது மக்களுக்கு இருக்கிற நம்பிக்கையில் சில கருப்புப்புள்ளிகளை விழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, நீதி நெறியினுடைய சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டியதுதான். ஆனால், நீதி நெறி சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பது எதற்கு? அரசியல் சாசனக் கட்டமைப்புக்குள்ளே நின்று நீதி பரிபாலன முறை நடைபெற வேண்டும். ஆனால், மத்தியிலே அதிகாரத்திற்கு வந்திருக்கிற பா.ஜ.க. நீதி பரிபாலன முறைகளிலே சீர்த்திருத்தங்களைக் கொண்டு வருவதாகச் சொல்லி இருப்பதன் நோக்கமே R.S.S., B.J.P. போன்ற இந்துத்துவ சிந்தனைகளில் ஊறித் திளைத்திருக்கிற சில தீய சக்திகள் நீதித் துறையில் ஊடுருவதற்கு வழிசெய்வதற்குத்தான். 1976-லே பா.ஜ.க. ஜனதா கட்சி என்ற பெயரில் உள்ளிருந்து கொண்டு அதிகாரத்தைப் பயன்படுத்தி பல இடங்களில் ஊடுருவினார்கள். இன்றைக்கும் அதிகாரத்தில் வந்திருப்பதன் மூலம் அரசியலை, சமூக வாழ்வை Polute செய்வதே இந்த பா.ஜ.க. தான். எனவே, இந்த பா.ஜ.க., நீதித் துறையையும் மாசுப்படுத்துவதற்குரிய முன் அடையாளங்கள் தெரிகின்றன. அவற்றின் விளைவுதான் தமிழ்நாட்டிலும் பிரதிபலிக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள

விரும்புகிறேன். இதுகுறித்தெல்லாம் திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் பல அருமையான ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். நேரம் இல்லை. அதற்குள் நான் இப்பொழுது போக விரும்பவில்லை. ஆனால், இன்றைக்கும் இந்த நீதித் துறையில் இவ்வளவு கேலிக் கூத்து நடைபெறுகிறது என்பதற்கு நான் ஒரு உதாரணத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியனிலே ஒரு Pump Operator இருக்கிறார். அவர் பெயர் ராஜேந்திரன். ராஜேந்திரன் என்ற அவர், தனக்கு குறைந்தபட்ச சம்பள சட்டத்தின்படி சம்பளம் வழங்கவில்லை என்று Labour Court-லே வழக்கு தொடுத்து தனக்கு ஆதரவாக தீர்ப்பைப் பெற்றுவிட்டார். தீர்ப்பைப் பெற்றவர் Labour Department-லே, அதனுடைய செயலாளரிடம் முறையீடு செய்து award-ஐ implement செய்யச் சொல்லி மனு செய்தார். தொழிலாளர் நலத் துறை செயலாளரும் சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டருக்குச் சொல்லி அதை implement செய்யச் சொல்லிவிட்டார்கள். இதற்கிடையில் என்ன நடக்கிறது தெரியுமா? மீண்டும் Government pleader மூலம் Labour Court-ல் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் முறையீடு செய்து இருக்கிறார். நான் இங்கேதான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த ராஜேந்திரனுக்கு minimum wages கொடுக்க வேண்டுமென்று குறைந்தபட்சக் கூலிச் சட்டம் சொல்கிறது. அந்த குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின்படி அவருக்கு minimum wages கொடுக்க வேண்டியது எவ்வளவு தெரியுமா? மாதம் வெறும் 243 ரூபாய். இந்த 243- ரூபாயைக் கொடுக்கவில்லை என்று சொல்லி அவர் arrears claim செய்ய Labour Court-லே போட்டு, நீண்ட வருடங்கள் போராடி தீர்ப்பை வாங்கிவிட்டார். அந்தத் தீர்ப்பைக் கொடுத்தது Labour Court என்ன கொடுத்தது என்றால், சட்டப்படி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி minimum wages கொடுக்கவில்லை என்றால், அந்தத் தொழிலை நடத்துவதற்குரிய சட்ட ரீதியான, தார்மீக ரீதியான அருகதையில்லை; சட்ட ரீதியான, தார்மீக ரீதியான அருகதை அற்ற minimum wages கொடுக்காமல் இயங்க முடியாது என்கின்ற சட்ட நிலை இருக்கின்ற நிலையிலும், ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியக் கமிஷனர் என்ன செய்திருக்கிறார் என்றால் இப்படி Labour Court தீர்ப்புக்கு எதிராக மறுபடியும் government pleader மூலம் Labour Court-ல் மறுபரிசீலனைக்குப் போகிறார் என்பது என்ன நியாயம்? Labour Secretary அரசு கோபுர முத்திரையோடுதான் revenue recovery செய்யச சொல்லி கலெக்டருக்குக் கொடுக்கிறார். கலெக்டர் தாசில்தாருக்கு உடனடியாக revenue recovery செய்க என்று சொல்கிறார். அதே



கோபுர சீல் இருக்கக்கூடிய இன்னொரு Government Officer என்ன செய்கிறார், மறுபரிசீலனை கோருகிறார். அரசாங்கத்தினுடைய கோபுர சீல் சொல்கிறது minimum wages கொடுக்க வேண்டுமென்று, இன்னொரு கோபுர சீல் சொல்கிறது கொடுக்க வேண்டாம் என்று. என்ன கேலிக் கூத்து? சட்டத்தில் என்ன இவ்வளவு ஓட்டைகள்? என்ன முறைகேடான நிர்வாகம்? தொழிலாளருடைய குறைந்தபட்சக் கூலிச் சட்ட உரிமையைப் பறிப்பதற்கு சட்டத்தின் சந்து பொந்துகளைப் பயன்படுத்துகிற, மனிதாபிமானமற்ற, இரக்கமற்ற இந்த முறைகளை எப்படி அனுமதிக்கலாம் என்பதை சட்டத் துறை அமைச்சர் சிந்திக்க வேண்டும். இத்தகைய முறைகேடுகளைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

இன்னொரு விஷயத்தையும் சொல்லி 2 நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். ஜனசக்தி நகர் என்று திருப்பூரிலே ஒரு நகர் இருக்கிறது. நம்முடைய முதலமைச்சருடைய சிறப்புச் செயலாளர் ஏ.எம்.ராமன் அவர்கள் கலெக்டராக இருந்த காலத்தில், அங்குள்ளவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. 200 ஆதிதிராவிட குடும்பங்கள் அங்கே இருக்கிறார்கள். அந்தப் பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து ஒரு தனி நபர் நீதிமன்றத்திற்குப் போகிறார். வழங்கப்பட்ட பட்டா அங்கே stay செய்யப்படுகிறது. அங்கே சாக்கடை வசதிகள் இல்லை. தண்ணீர் வசதிகள் இல்லை. electricity கிடையாது. ஏனென்றால் stay செய்துவிட்டார்கள். Stay vacate செய்யப்படவில்லை. 7,8 வருடங்கள் ஆகிவிட்டன. இன்றையவரைக்கும் அரசுத் துறையில் வக்கீல்கள் இருக்கிறார்கள் அல்லவா, அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்குக்கூட வழியில்லை. 1989 ஆம் ஆண்டு வழக்குதான் இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது 1998 ஆம் ஆண்டுதானே, இன்னும் பல வருடங்கள் ஆகும் என்று சொன்னால் நான் கேட்கிறேன் மாநில அரசு ஒரு Special petition போட வேண்டாமா? அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத் தடையாக இருக்கிற இந்தத் தடையாணை vacate செய்யப்பட வேண்டுமென்று Special petition-ஐ சட்டத் துறை போட வேண்டும், திருப்பூரில் உள்ள வீரபாண்டி ஊராட்சியைச் சார்ந்த ஜனசக்தி நகருக்கு இதைச் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவாக, 10 Labour Court-கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த 10 Labour Court-லே 8 லேபர் கோர்ட்டுகளுக்கு நீதிபதி கிடையாது. Labour Court இருநது என்ன பிரயோசனம்? Labour Court-லே எவ்வளவு வழக்குகள் தேங்கி நிற்கின்றன. இப்படித் தேங்கி நிற்கின்ற அந்த வழக்குகளை dispose செய்வதற்கு Labour Court-க்குரிய வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவதில்லை. அவர்கள் ரிடையர் ஆகி—அதுவும் வயதான 'பை எலக்ஷன்' கேஸ்களாகப் பார்த்துதான் போடுகிறார்கள். அப்படிப் போடுகிறவர்கள் திடீரென்று ரிடையர் ஆகிவிட்டால் அந்த இடத்தினை அப்படியே வருடக் கணக்கில் காலியாக விட்டுவிடுவது. Labour case dispute raise பண்ணினால்கூட பிரச்சினைக்குத் தீர்வே வருவதில்லை. அதனால் சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது எந்த இடத்திலும் Labour Court-களிலே காலி இருக்கக்கூடாது. எல்லா இடங்களிலும் நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். High Court-க்கு writ Petition போடுகிறார்கள், தொழிலாளர்கள் சட்டம் என்ன தெரியுமா? gratuity Act-படி appellate authority Deputy Commissioner of Labour, அவரோடு பிரச்சினை முடிந்துவிட வேண்டும். பணிக்கொடை சட்டப்படி முடிந்துவிடுகிறது என்றாலும் நடைமுறையில் முடிந்து விடுவதில்லை. அதுதான் அரசமைப்பு சாசனத்தில் தனி நபருடைய உரிமை பாதிக்கிறது என்ற சந்தை இவர்களே உருவாக்கி அந்தச் சந்திலே புகுந்து கொண்டு Writ Petition போட்டு விடுகிறார்கள். அதேபோலத்தான் Labour Court தீர்ப்புக்கு எதிராகவும் போய்விடுகிறார்கள். இதற்குதான் மாநில சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, அப்படி writ petition-கள் பல வழக்குகளோடு சேர்ந்து வருடக் கணக்கில் தேங்கி நிற்கின்றன. நிலைமைகள் மாறுவதற்கு தனி Court ஒன்றை உருவாக்கலாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சென்னையில் Labour Court-ல் ஒன்று இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது. நிறுத்தப்பட்ட Labour Court-ஐயும் தொடங்கவேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே வழக்காடி, வாதாடிக் கொண்டிருந்த எனக்கு, இந்தச் சட்டமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும், எங்களின் இனிய தளபதி சென்னை மாநகர மேயர் அவர்களுக்கும், இங்கே இருக்கின்ற மற்றவர்களுக்கும் என்னுடைய



நன்றியைத் தெரிவித்து, சிறைத் துறை, நீதித் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்து சில கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு நீதித் துறையிலே எந்த அளவுக்குத் தலையீடு இருந்தது என்பதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். நான் வெளிப்படையாகவே சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நம்முடைய அரசு பொறுப்பு ஏற்று இரண்டு ஆண்டுக்காலமாகியும் முந்தைய ஆட்சியிலே இருந்த வழக்கறிஞர்கள் பல துறைகளிலே மாற்றப்படவில்லை. அந்த அளவுக்குப் பெருந்தன்மையோடு நிதானமாகச் செயல்படுகின்றது நம்முடைய அரசு. மாநில அரசிலே இருக்கின்ற சில துறைகளுக்கு புதிய வழக்கறிஞர்கள் செல்ல முடியவில்லையே என்ற வருத்தம் இருந்தாலும் நிதானமாக மாற்றுவது நல்ல நிருவாகத்திற்குச் சிறந்தது என்ற காரணத்தால் அதை நாம் எல்லாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஆட்சிப் பொறுப்பு ஏற்று சில நாட்கள் கூட மத்தியிலே ஆகவில்லை. அதற்குள்ளாக மத்திய அரசு அலுவலகங்களிலே உள்ள மத்திய அரசு வழக்கறிஞர்களை உடனடியாக மாற்றி, எனக்கு முன்னால் பேசிய ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, தன்னுடைய வீட்டிலேயே உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் முன்னாள் முதல்வர் எந்த அளவுக்கு நீதித் துறையிலே தலையிடுகிறார் என்பதை நாடு அறிந்துகொண்டிருக்கிறது. காலம் தாழ்ந்த நீதி மறுக்கப்படும் என்று சொன்னார்கள். நிச்சயமாக மறுக்கப்படாது. அவர்களுக்கு வேண்டிய தண்டனை கொடுக்கப்படும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-55

நீதி மன்றங்களிலே வழக்குகளைப் பார்க்கின்றபோது விபத்து வழக்குகளைக் குறிப்பாக நாம் அலசி ஆராய்ந்து பார்த்தால் 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் அனைத்து நீதிமன்றங்களிலும், குறிப்பாகச் சொன்னால் திண்டிவனம் சார்பு நீதிமன்றத்தில் வழக்குகள் தேங்கியிருக்கின்றன. தனையனை இழந்தவர்கள், தந்தையை இழந்தவர்கள், குடும்பத் தலைவரை இழந்தவர்கள் 10 ஆண்டுக் காலமாக நீதி மன்றத்திற்கு நடந்து கொண்டிருந்தால் அவர்களுடைய வாழ்வு என்ன ஆகும்? நடு ஆற்றில் நிற்கிறார்கள்; நடுத்தெருவில் நிற்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு கேள்விக்குறியாக இருக்கிறது. நீதிமன்றத்தில் 10 ஆண்டுக் காலமாக வழக்குகள் முடியவில்லை.

மற்றும் ஒரு வருத்தமான செய்தி, அப்படி 10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வழக்குகள் முடிந்தாலும் அடுத்து மேல் முறையீட்டுக்குச் சென்று அங்கே 5 ஆண்டுகள் ஆகின்றன. 15 ஆண்டுகள் ஒரு வழக்கு நிலுவையில் இருக்குமானால் தனையனை இழந்தவர்கள், தாயை இழந்தவர்கள், தந்தையை இழந்தவர்கள், தலைவனை இழந்தவர்களுடைய நிலை என்னவாகும் என்பதை நம்முடைய அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதில் வேகமாக நல்லதொரு முடிவு எடுக்க முன்வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் நீதிமன்றத்தில் மட்டும் 7 ஆயிரம் விபத்து வழக்குகள் பதிவு ஆகியிருக்கின்றன. அந்த வழக்குகள் இன்னும் நிலுவையில்தான் இருக்கின்றன. 1989 ஆம் ஆண்டு வழக்குகள் பல இன்னும் முடியவில்லை. பல வழக்குகள் தேங்கியிருக்கின்றன. இதற்குக் காரணம் எங்கள் நீதிமன்றத்தில் இருக்கின்ற சார்பு நீதிபதி அவர்களுக்கு அலுவல்கள் நிறையக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குற்றவியல் வழக்குகள், civil வழக்குகள், எல்.ஏ.ஓ.பி. வழக்குகள், appeal வழக்குகள் என பல வழக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த விபத்து வழக்குகள் சற்றேறக்குறைய 7 ஆயிரம் வழக்குகளுக்கு மேலாக நிலுவையில் இருக்கின்றன என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் தந்தை ஒரு வழக்கைப் போடுகிறார் என்றால் அவரால் அந்த வழக்கின் முடிவைப் பார்க்க முடியவில்லை. அடுத்து மகன்தான் அந்த முடிவைப் பார்க்க முடிகிறது என்ற ஒரு சோகமான முடிவு இந்த நாட்டில் நீதித் துறையில் நிலவிக் கொண்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்க வேண்டும். விரைவாக முடிவு எடுக்க வேண்டும், வேகமாக வழக்குகள் நடப்பதற்கு, வழிவகை காண வேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சரோடு கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள் இலட்சக் கணக்கில் fees பெற்றுக் கொண்டு வழக்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அனைத்து வழக்கறிஞர்களும் வளமாக வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது. 25 சதவீத வழக்கறிஞர்கள் ஓரளவுக்கு வளமாக வாழ்கிறார்கள். 75 சதவீத வழக்கறிஞர்கள் நடுத்தரக் குடும்பத்தில் வாழ்கிறார்கள். நடுத்தர



வாழ்க்கையைத்தான் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய அரசு கொடுக்கின்ற அந்த சேம நல நிதியான ஒரு இலட்ச ரூபாயை 5 இலட்ச ரூபாயாக உயர்த்தி அவர்களுடைய வாழ்வில் நீங்கள் ஒளி விளக்கைத் தொடர்ந்து ஏற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நாட்டில் சீட்டு நிதி நிறுவனங்கள் நிறைய பரவி இருக்கின்றன. அங்கே இருக்கின்ற சட்டம் சீட்டு நிதி நிறுவனத்திலே ஒருவர் பணம் கட்டவில்லை என்று சொன்னால் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு Arbitrator என்ற ஒருவரை நியமனம் செய்கிறார்கள். அந்த Arbitrator என்ன செய்கிறார். ஒரு தீர்ப்பைக் கொடுத்து விடுகிறார். அந்த தீர்ப்பை எடுத்துக் கொண்டு நீங்கள் இவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் அந்த நிறுவனத்திற்கு என்று சொல்லுகிறபோது அந்த தீர்ப்பை எடுத்துக் கொண்டு நிறைவேற்றுவதற்கு வேறு வழி இல்லாமல் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. நீதிமன்றத்திற்குச் சென்று அந்த நிறைவேற்றும் மனுவை தாக்கல் செய்து தீர்ப்பு பெற 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் ஆகின்றன. எனவே, அந்த நிதி நிறுவனங்கள், பணத்தை யார் கட்டினார்களோ அவர்களுக்குக் கொடுப்பதற்குக் கால தாமதம் ஆகிறது. எனவே இந்த நேரத்தில் அந்த Arbitrator-க்கே அந்த நிறைவேற்றும் மனுவை பைசல் செய்யும் அதிகாரத்தை தர சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சில நீதிமன்றங்களிலே மின்விசிறி இல்லை, மேசை நாற்காலி வசதி இல்லை, Magistrate-களுக்கு, Munisif-களுக்கு அறை வசதி இல்லை, கழிப்பறை வசதி இல்லை, இப்படிப்பட்ட நிலைகள் இருக்கின்றன. வழக்கறிஞர்களுக்கும், நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகளுக்கும் கழிப்பறைகள் கட்டித் தர வேண்டும், மேசை நாற்காலிகள் அதிகமாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிபதிகள் ஒரு இடத்தில் குடியிருக்கிறார்கள். தனியார் இடத்தில் குடியிருக்கின்றபோது அந்த நீதிபதிக்கு சற்று சங்கடம் ஏற்பட்டு விடுகிறது. எனவே கண்டிப்பாக நீதிபதிகளுக்கு அரசுதான் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்கள் அதில் இருந்தால் யாரும் அவர்களை நெருங்க முடியாது, நீதிபதியை நெருங்கமுடியாத அளவுக்கு, நெருப்பாக இருப்பார்கள். அவர்கள் தனியார் வீட்டில் இருக்கின்றபோது அந்தத் தனியார் நட்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன்மூலம் சில தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, தமிழகத்தில் நீதிபதிகளுக்கு

ஒட்டுமொத்தமாக அரசே வீடு கட்டித் தரவேண்டும். நீதியை நிலைநாட்டிட அப்படிப்பட்ட ஒரு முறையைக் கையாள வேண்டுமென்று இந்த நேரத்தில் வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

திண்டிவனத்திலே இருக்கின்ற சார்பு நீதிமன்றம் தொடங்கி 100 ஆண்டுகள் முடிந்து விட்டன. 100 ஆண்டுகள் வரலாற்றுச் சிறப்புமிக்க நீதிமன்றம். அந்த நீதிமன்றத்திற்கு இன்னும் கட்டடம் இல்லை. நான் கடந்த ஆண்டே சட்டத் துறை அமைச்சரவர்களைக் கேட்டிருக்கிறேன். ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்கு 3.40 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அது processing-ல் இருக்கிறது. அதையும் சட்ட அமைச்சர் பரிசீலனை செய்து வரலாற்றுச் சிறப்பு மிக்க நீதிமன்றம் இருக்கின்ற திண்டிவனத்திற்கு ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள் சங்கங்களிலே நூலகங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த நூலகங்கள் சரியாக நிருவகிக்கப்படவில்லை. காரணம், அரசு அதற்கு நிதி கொடுக்கவில்லை. எனவே, வழக்கறிஞர்கள் சங்கத்தில் இருக்கின்ற நூலகங்களுக்கு நூல்களை வாங்குவதற்கு, சட்டப் புத்தகங்களை வாங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் மானியம் தர வேண்டும். அந்த நூலகம் சிறப்பாகச் செயல்படுவதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எல்.ஏ.ஓ.பி வழக்கு என்று இருக்கிறது. இப்பொழுது நாம் நிலத்தை Backward Classes-துறைக்கு வழங்க எடுக்கிறோம் Adi Dravidar Welfare துறையிலும் எடுக்கிறோம். நிலத்தை எடுக்க Notice கொடுத்தோம் என்றால் உடனே writ போட்டுவிடுகிறார்கள். இந்த நேரத்திலே என்னுடைய தாழ்மையான கருத்து என்னவென்று சொன்னால், writ போடுவது தவறு அல்ல, அவர்கள் மேல்முறையீடு செய்வது தவறு அல்ல, அந்த நிலத்தின் உரிமையாளர்கள் பணத்தை வேண்டுமானாலும் அதிகம் கேட்கலாமே ஒழிய நிலத்தைக் கொடுக்க முடியாது என்று சொல்வதற்கு அங்கே வழிவகையை நாம் ஏற்படுத்தக்கூடாது. எனவே நிலங்களைக் கொடுத்தது கொடுத்ததுதான். ஏழை மக்களுக்காக நம்முடைய அரசு தீட்டுகின்ற திட்டங்கள் நிறைய இருக்கின்றன. நிலத்தைக் கையகப்படுத்தும்போது, வழக்குகளை போடுவது, writ petition போடுவது, திட்டங்களை நிறைவேற்றத் தடையாக இருக்கின்றது. எனவே, அவர்கள் அதிகமாக, கூடுதலாக இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், நிலத்தைக் கொடுத்தது கொடுத்ததுதான் என்ற அந்த நிலையை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் ஏழை மக்களுக்கு இந்தத் திட்டங்கள் போய்ச் சேரும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



சிறைத் துறை நம்முடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னதைப்போல, புண்படுத்துவதாக இருக்கக் கூடாது; உள்ளே செல்லுகின்ற சிறைக் கைதிகளைப் பண்படுத்துகின்ற ஒரு ஆலயமாக, சிறைச்சாலையாக அது அமைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பினைக் கொடுத்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீதி நிருவாகம் சிறைச்சாலைகள் ஆகியவற்றில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீதி நிருவாகம் சிறைச் சாலைகள் மானியக்கோரிக்கைகள் விவாதம் நடக்கிறது. இந்த மாநிலத்தினுடைய அரசுப் பிரதிநிதியாக வழக்கு மன்றங்களில் பணியாற்றும் Government Pleader, Advocate General போன்றவர்கள் இந்த மானியக் கோரிக்கையில் உறுப்பினர்கள் பேசுவதைக் குறிப்பெடுக்க வர வேண்டும். அவர்கள் யாரும் வராதது நல்ல மரபு இல்லை. இதற்கு முன்பு இந்தத் துறையினுடைய அதிகாரிகள் வந்திருந்தார்கள். இப்பொழுது ஒருவரும் வரவில்லை. இது வருந்தத்தக்கது என்று இந்த நேரத்தில் தெரிவித்து, இது நல்ல மரபு அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்டத் துறை செயலாளர் இருக்கிறார்; உயர்நீதிமன்றத்திலிருந்து பதிவாளர் வந்திருக்கிறார். இவர்களே

போதுமானது என்று நாங்கள் கருதுகிறோம். இதுபோக, துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இதற்கு முன்னால் Government Pleader, Advocate-General எல்லாம் வந்திருந்தார்கள். இப்பொழுது வரவில்லை என்றுநான் சொல்கிறேனே தவிர வேறொன்றும் அல்ல. இது ஒரு நல்ல மரபு அல்ல என்று சொல்வதற்காகத்தான் சொல்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில், வக்கீல் குமாஸ்தாக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று ஷேம நல நிதித் திட்டம் ஒன்று வேண்டும். வழக்கறிஞர்களுக்கு ஷேம நல நிதித் திட்டம் மூலம் ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி குமாஸ்தாக்களுக்கும் ஷேம நல நிதித் திட்டம் மூலம் 50 ஆயிரம் அரசு வழங்க வேண்டும். இது சம்பந்தமாக கோப்பு அரசுக்கு வந்துள்ளது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைச் சட்டமாக்கி, அவர்களுக்கும் வழங்க வேண்டுமென இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். வழக்கறிஞர்களுடைய எழுத்தர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு Welfare Fund திட்டம் என்று நமது பக்கத்து மாநிலங்களான கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருக்கின்றது. அங்கு Welfare Fund திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அது தமிழ் நாட்டிலும் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

தமிழ்நாடு அரசு இலஞ்ச ஊழல் ஒழிப்புத் துறையில் ஒரு சட்ட ஆலோசகர், 3 துணை சட்ட ஆலோசகர்கள், 13 ஒழுங்கு நடவடிக்கை வழக்கறிஞர்கள் இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது ஒரு சட்ட ஆலோசகர், ஒரு துணை சட்ட ஆலோசகர் இருக்கிறார்கள். 5 ஒழுங்கு நடவடிக்கை வழக்கறிஞர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் நிரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே Finance Companyகளில் தவறு செய்கிறவர்கள். மோசடி பண்ணுகிறவர்களுக்கு சிறப்பு நீதிமன்றம் அமைக்கபபடும் என்று சொன்னார்கள். இதுவரை அமைக்கவில்லை. அதை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்கள் மோசடி தொடர்பாக தனி



நீதிமன்றம் அமைக்கப்பட்டு, வழக்கறிஞர்கள்கூட நியமிக்கப்பட்டு விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு இது தெரியாமல் இருப்பது பரிதாபத்திற்குரியது, வருந்தத்தக்கது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலை வைத்து நான் சொல்லியிருக்கிறேன், தனி நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இதுகூடத் தெரியவில்லை, பரிதாபத்திற்குரியது என்று சொல்லி, பெரிய இடத்தார், படித்து இருக்கிறார், இப்படிக் கிண்டல், கேலி பண்ணுவது அவ்வளவு நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே ஒரு பிரச்சினையை எடுத்து வைக்கும்போது, அதை முழுமையாகத் தெரிந்துகொண்டு சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னாரே தவிர வேறல்ல. அதற்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பிறகு அவர், மட்டும் உள்நோக்கம் கற்பிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனி நீதிமன்றம் அமைக்கவில்லையென்று சொன்னீர்கள், தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டு வழக்கறிஞர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டுவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார் அவர்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சிறைத் துறை காவலர்களுக்கு 8 மணி நேரம் வேலை வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். இப்போது, மத்திய சிறைச்சாலைகள் இருக்கின்றன. குற்றவாளிகள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறார்கள். எங்கள் பகுதி, மதுரைப் புறநகர் மற்றும் மதுரை, திண்டுக்கல், காமராஜர், நெல்லை இந்தமாதிரி நிறைய மாவட்டங்களுக்கு ஒரு சென்டராக இருக்கிறது. ஆகவே, மத்திய சிறைச்சாலையினுடைய எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும். காமராஜர் மாவட்டத்திற்கு Mini Central Jail என்று சொல்லி, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் மொட்டைமலை அருகிலும், பூவானி அருகிலும் இடம் எல்லாம் பார்த்து, அதாவது வருவாய்த் துறை அதிகாரிகள், சிறைத் துறை அதிகாரிகள் எல்லாம் வந்து இடத்தைப் பார்த்துவிட்டுப் போனார்கள். திடீரென்று இந்த அரசு இந்த Mini Central Jail வேண்டாம் என்று நிறுத்தி வைத்திருக்கிறது. குற்றவாளிகள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கின்ற காரணத்தினால்,

காமராஜர் மாவட்டத்திற்கு மட்டுமல்ல, இந்த Mini Central Jail தமிழ்நாட்டில் அநேக இடங்களில், மாவட்டத்திற்கு ஒன்றாவது நிறுவுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் பகுதியில் நெல்லை மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம், காமராஜர் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் மதத் தீவிரவாதிகள் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி, ஜாதித் தீவிரவாதிகளும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் இரண்டு பேரும் கூட்டு சேர்ந்து **

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் யாரும் குறுக்கிடுவதை விரும்பவில்லை. நான் இவரை ஒன்றும் சொல்லவில்லையே? இவரைச் சொல்லவில்லையே? **

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் எதற்கு எழுந்தேன் என்று அவருக்கு எப்படித் தெரியும்? அதை நீக்குகிறீர்களா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தமாதிரி எல்லாம் கேட்கக்கூடாது. இப்போது நீங்கள் எதற்கு எழுந்தீர்களோ அதைச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு நீக்க வேண்டுமா, இல்லையா என்பதை நான் முடிவு செய்கிறேன். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழிபடுவதும் ஒருவர் மதச் சம்பிரதாயங்களைக் கடைபிடிப்பதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு. ** இந்தவேளையில் தொடர்ச்சியாக, ** கடந்த 4 நாட்களுக்கு முன்புகூட இந்த.....

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, போதும் உட்காருங்கள். திரு. தாமரைக்கனி யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்களாகவே எழுந்து இதற்கு விளக்கம் கொடுத்தீர்கள், பரவாயில்லை, அத்தோடு விட்டுவிடுங்கள். டாக்டர்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கிருஷ்ணசாமி குறிப்பிட்ட, திரு. தாமரைக்கனி அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகள், அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட **

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**திரு. இரா. தாமரைக்கனி:** திரு. அப்துல் லத்தீப், நீங்கள் நல்லவர்தான், உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காரசாரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ** எனவே, தயவு செய்து பொத்தாம் பொதுவாகச் சொல்லாமல், தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் அது ஏற்புடையதாக இருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ** என்று எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். அதுமட்டுமல்லாமல்....

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்று ஆதாரம் இல்லாமல்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப் பொறுங்கள், நானே சொல்லிவிடுகிறேன். திரு. தாமரைக்கனி, நீங்கள் ஒரு குற்றச்சாட்டை எடுத்து வைக்கும்போதே அதற்கான ஆதாரத்தை முன்கூட்டியே பேரவைத் தலைவருக்குக் காட்டிவிட்டுத்தான் சொல்ல வேண்டும். திரு. அப்துல் லத்தீப் எழுந்து கேட்டதற்குப் பிறகு நீங்கள் ** என்று சொல்கிறீர்கள். அதற்கான ஆதாரம் உங்களிடம் இருக்கிறதா? அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறீர்களா?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் இந்தமாதிரி எல்லாம் சொல்லி தப்பிக்க முடியாது. நீங்கள்தான் சொன்னீர்கள், நீங்கள்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப், உட்காருங்கள். நான்தான் சொல்லிவிட்டேனே. திரு. தாமரைக்கனி சொன்னார், அவரே பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டேன். திரு. அப்துல் லத்தீப், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை வாங்கிக் கொடுக்கிறேன். அதை நானே வாங்கிக் கொடுக்கிறேன், இந்த நாட்டு மக்களுக்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எப்போது தருகிறீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்ன செய்தி **. ஆனால், தன்னிடத்தில் ஆதாரம் இல்லை, அதை நான் பெற்றுத் தருகிறேன் என்று சொன்னால், அதுவரையிலேயும் இந்த அவையிலே அந்தக் குறிப்பு இருக்குமானால், ** ஒரு சந்தேகம் இருக்கக்கூடிய ஆதாரத்தைப் பெற்றுவந்து அதற்குப் பிறகு பேசுவதிலே இந்த அவைக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கான ஆதாரத்தை நீங்கள். (குறுக்கீடு)

திரு. தாமரைக்கனி, நான் சொல்லுவதைக் கேளுங்கள். அதற்கான ஆதாரத்தை நீங்கள் கொண்டுவந்து தருகிறேன் என்று சொன்னீர்கள். அதை எப்போது கொண்டுவந்து தருகிறீர்களோ அப்போது எடுத்துக்கொள்ளலாம். அதுவரைக்கும் இப்போது நீங்கள் கூறிய அந்தக் குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலே இடம் பெறாது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. இரா. தாமரைக்கனி:** ஏன் இடம் பெறாது? இதே ** நான் கொடுக்கிறேன் என்றுதானே சொல்கிறேன். எனக்கு time கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி முன்னுக்குப்பின் முரணாகப் பேசக் கூடாது. ** என்று சொல்கிறீர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனிக்கு இங்கே பேசுவதற்கு, எல்லாவிதமான ஆதாரங்களைப் பெற்றுத் தருவதற்கு முழு உரிமை இருக்கிறது. அவருடைய உரிமையை யாரும் இங்கே மறுக்கவில்லை. ஆனால், அவர் நான் பெற்றுத் தருகிறேன், ** என்று வரும். உள்ளபடியே அவரிடத்திலே எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் பேசுவது முறையல்ல. எனவே, இவை அத்தனையையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுவது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அவைக்குறிப்பிலே இடம் பெறாது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்றுதான் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஆயிஷா பற்றிச் சொன்னார்கள். 10 இலட்சம் ரூபாய் குடும்பத்திற்குக் கொடுத்திருக்கிறார், வங்கியிலே இருக்கிறது என்று கூடச் சொன்னார். விசாரணைக்குப் பிறகு அது உண்மையான தகவல் அல்ல என்பதும், தவறான தகவல் என்பதும் நிரூபிக்கப்பட்டது. இப்பொழுதும் அவர் பேசுவது உண்மையான தகவல் என்றால், அந்தத் தகவலை வைத்துக்கொண்டு பேசட்டும். ஆதாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு பேசட்டும். இனி கொடுக்கப்போகிற ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுவது நல்ல மரபல்ல. இந்தச் சபைக்கும் உகந்தது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுசம்பந்தமாக நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன். அவர் கூறிய குற்றச்சாட்டு அவைக்குறிப்பிலே இடம் பெறாது. ஆகவே, தயவுசெய்து இத்தோடு விட்டுவிடுங்கள். நேரம் ஆகிவிட்டது. திரு. அப்துல் லத்தீப், திரு. கிருஷ்ணசாமி இருவரும் உட்காருங்கள். திரு. தாமரைக்கனி நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆயிஷா பற்றிச் சொன்னார்கள். 10 இலட்சம் என்று.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நான் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன். நீங்கள் மானியக் கோரிக்கைக்கு வாருங்கள். அதைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மத்திய சிறையில் குண்டர்கள் தடுப்புச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம், சாராயத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் உள்ள 85 கைதிகள் இன்றைக்குச் சிறையில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் 10 அம்சக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நியாயமான கோரிக்கை மாதிரி தெரிகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்ய வேண்டும். சிறையில் வழங்கப்படும் சாப்பாடு குறைவாக இருக்கிறது. காய்கறிகள் சரியான முறையில் போடவில்லை, வாழைக்காய் மட்டும் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். சிறையில் இருக்கின்ற கைதிகளுக்கு, மருத்துவமனையில் உயிர் காக்கும் மருந்துகள்கூட இல்லையென்று சொல்கிறார்கள். அதற்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டும். கைதிகளை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று அங்குள்ள (Superintandent) அல்லது (D.I.G.) அல்லது (I.G.) இவர்களுக்கு petition கொடுக்கும்போது, அதில் காலதாமதம் ஆகிறது. உடனே கொடுக்கமாட்டேன் என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, மதுரை லீலாவதி கொலை வழக்கில் உள்ளவர்களுக்குத் தனி வீடு கொடுத்து, சகல வசதிகளையும், சாமான்களையும், காய்கறிகளையும் வெளியே வாங்கிக் கொண்டு வரச்சொல்லி அவர்களுக்கு இராஜ மரியாதை கொடுக்கிறார்கள். எங்களுக்கும் வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சரோ, சிறை ஐ.ஜி.யோ உடனே அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லீலாவதி கொலை வழக்கில் இந்த அரசு எந்த அளவுக்கு நேர்மையாக நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், இந்த அரசு நினைத்திருந்தால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் (bail-இல்) வெளியே வருவதற்கு உதவி செய்திருக்க முடியும், அதையும் இந்த அரசு செய்யவில்லை. ஏனென்றால், அந்த வழக்கை C.B.I.-க்கு நாங்கள் அனுப்ப வேண்டுமென்றுகூடக் கேட்டோம்.



இந்த அரசுமீது நம்பிக்கை இருக்கின்ற காரணத்தால், இந்த அரசு எந்த அளவுக்குக் கண்டிப்பாக இருக்க வேண்டுமோ அப்படி இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் சிறைச்சாலையில் தனியாக வீடுகள் வைத்து அவர்களுக்கு உதவிகள் செய்யப்படுகின்றன என்று சொல்கிறார்கள். எந்தச் சிறைச்சாலையிலும் தனியாக வீடுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சிறைக்குச் சென்றிருக்கிறாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் பலமுறை, கடந்த ஆட்சிக் காலத்தில் நாங்கள் சிறைக்குச் சென்றிருக்கிறோம். மிசா கைதியாகக் கூட இருந்திருக்கிறோம். தனிப்பட்ட வீடுகள் எந்தச் சிறைச்சாலையிலும் இல்லை. அப்படி இருக்கும்போது, இப்படிப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்த வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் சிறைக்குச் சென்றேனா இல்லையா என்று கேட்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கிய நேரத்தில், நான் எம்.ஜி.ஆர். கட்சியில் சேர்ந்ததற்காக 23-க்கும் மேற்பட்ட பொய் வழக்குகள் போட்டு, பின்னர் விடுதலை ஆனேன். சமூகவிரோதிமீது போடவேண்டிய குண்டர் சட்டத்தில் அ.தி.மு.க.வில் ஒரு மாவட்டச் செயலாளராக இருந்த என்னைக் கைது செய்தார்கள். இப்பொழுதும் உங்கள் ஆட்சி வந்த பிறகு, Case போட்டிருக்கிறீர்கள். இன்னும் 40-க்கும் மேற்பட்ட பொய் வழக்குகள் உங்கள் ஆட்சியில் போடப்பட்டுள்ளது. எனக்கு மதுரை மத்திய சிறைச்சாலையும் தெரியும், வேலூர் சிறைச்சாலையும் தெரியும்; சென்னை சிறைச்சாலையும் தெரியும். நான் ஜெயிலுக்குப் போகாதவன் அல்ல. உங்களால் பாதிக்கப்பட்டுத்தான் நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்து, எம்.எல்.ஏ.-வாகி, சட்டமன்றக் கட்சித் தலைவராகி இருக்கின்றேனே தவிர, வேறொன்றும் கிடையாது. ஜெயிலுக்கு நீங்கள் மட்டும்தான் போயிருக்கிறீர்களா? உங்களால் பழிவாங்கப்பட்டு நானும்தான் ஜெயிலுக்குப் போயிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போன ஆட்சியிலே சென்னை மத்திய சிறைச்சாலைக்கு எந்த வழக்கிலே போனீர்கள் என்று சொல்ல முடியுமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** போன தடவை என்ன சொன்னீர்கள்?..... (சிரிப்பு) உண்மைக்குப் புறம்பான சில வழக்குகள் இருந்திருக்கும். யாராவது தெரியாத்தனமாகப் Petition கொடுத்திருப்பார்கள். நான் ஜெயிலுக்குப் போனேன். பிறகு நான் நிரபராதி என்று சொல்லி, விடுதலையாகி யிருக்கிறேன். இப்பொழுது என்மீது ஒரு வழக்கும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த அவையிலே நடந்த சம்பவம் தொடர்பாகத்தான். சரி, அதை விட்டுவிடுங்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசும்போதே mood-ஐ மாற்றுகின்றீர்களே, எனக்கு முன்னாலே திரு. சுப்பராயன் அவர்கள் பேசினார்கள். நமது சுதர்சனம் அவர்கள் பேசினார்கள். சரி, ஆயுட் கைதிகள் பத்து ஆண்டுகள் சிறைச்சாலையில் இருக்கின்றார்கள். ஆனால், ஆந்திர அரசு பத்தாண்டுகளாக இருந்தவர்களை மன்னித்து, அதைக் குறைத்து, ஏழாண்டுகளாக மாற்றியிருக்கிறார்கள். 15-8-1997-லே அதற்கான G.O. போட்டிருக்கிறார்கள். அதைப்போல, கேரள அரசு 21-1-1997-லே அதனை எட்டு ஆண்டுகளாக ஆக்கியிருக்கிறார்கள். இப்பொழுது முதலமைச்சர் அவர்களுடைய பிறந்த நாள் வருகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்த நாள் வருகிறது. அன்றையதினம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்தைக் குறைத்து, அவர்களுக்கு மன்னிப்பு கொடுத்து, ஏழாண்டுகளாகவோ, எட்டாண்டுகளாகவோ மாற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அருமை அண்ணன் சாதிக்பாட்சா அவர்கள் சட்டத் துறை அமைச்சராக இருந்தபோது, 1989-90ஆம் ஆண்டு மாவட்டத்தைப் பிரிக்கும்போது, ஸ்ரீவில்லிபுத்தூரில் தலைமை நீதிமன்றம் ஆரம்பிக்கப்படும் என்று 20-2-1990-லே சொன்னார்கள். அதன் அடிப்படையிலே புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஸ்ரீவில்லிப்புத்தூரிலே தலைமை நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே அந்த நீதிமன்றத்திற்கு 12 ஏக்கர் சொச்சம் நிலம் ஒதுக்கப்பட்டது. உங்கள் ஆட்சி வந்த பிறகு, கட்டடம் கட்டுவதற்கு, நீதிபதி, Revenue, P.W.D. அதிகாரிகள் எல்லோரும் ஒன்றுகூடி, அதற்கு எவ்வளவு ரூபாய் ஆகும் என்று Estimate எல்லாம்போட்டு, வரைபடம் போட்டு, அது Home Department-க்கு வந்தது. இதுசம்பந்தமாக



சட்டசபையிலே பேசியிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக்கூட மூன்று, நான்கு தடவை பார்த்திருக்கின்றேன். சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்களையும் நான் பார்த்திருக்கின்றேன். Bar Association-ல் இருந்து வந்து பார்த்தார்கள். போன நிதியாண்டிலே நிதியொதுக்கித் தருவதாக முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். 'சொன்னதைச் செய்வோம்: செய்வதைச் சொல்வோம்' என்ற முதலமைச்சருடைய தாரகமந்திரம் என்ன ஆயிற்று? அதனால், இன்றைக்காவது அதற்காக ஏதாவது நிதியை ஒதுக்குங்கள். (மணியடிக்கப்பெற்றது) குறுக்கீடு இருந்ததே, அதுமட்டுமல்லாமல்,..... தலைவரே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் சேர்த்துத்தான் 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. தாமரைக்கனி:** நமக்குள்ளே ராசியாக இருப்போம். கொஞ்சம் பார்த்துப் பண்ணுங்கள் நீங்கள். வேறு சண்டை சச்சரவுகள் எதுவும் கிடையாது. என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் பேசிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாம் இரண்டு பேரும் எப்பொழுதுமே ராசியாகத்தானே இருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பிறகு என்ன, ** ஆகவே, இந்த நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரில்தான் இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் எல்லாம் ஒப்புதல் கொடுத்திருக்கிறது. ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம் Petition கொடுத்தார்கள். அதெல்லாம் reject ஆகிவிட்டது. ஆகையால், எங்கள் ஊரிலே இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்தை மாற்றக்கூடாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரிடம் நான் ஏற்கெனவே Petition கொடுத்திருக்கின்றேன். அதை மாண்புமிகு சட்ட அமைச்சருக்குப் forward பண்ணி, 'உங்களுடைய கடிதம் கிடைத்தது. Home Department-க்கு அனுப்பியிருக்கின்றேன், Finance Department-க்கு அனுப்பி, உடனே ரூபாயையெல்லாம் கொடுத்து விடுகின்றோம்' என்றெல்லாம் சொன்னா ள். அந்தக் கடிதமெல்லாம் ஏன்னி ம் இருக்கத்தான் செய்கின்றது. இதுவரை ஒன்றுமே கொடுக்கவில்லை. ஆகவே, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி, புரட்சித் தலைவி ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே இந்த Court வந்தது என்றெல்லாம் சொல்லி, நீங்கள் புறக்கணித்துவிடக் கூடாது. எங்கள் ஊரைச் சிறுமைப்படுத்தக் கூடாது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

219097

தருமபுரி மாவட்டத்திற்கும், காஞ்சீபுரம் மாவட்டத்திற்கும் இதுபோன்ற பிரச்சினையை எழுப்ப மாட்டேன் என்கிறீர்கள். Court-ஐ மாற்ற மாட்டேன் என்கிறீர்கள். விருதுநகருக்கென்றே வந்து, சட்ட அமைச்சரே சட்டத்தைக் கெடுக்கிறாரே. வக்கீல்கள் சாலை மறியல் பண்ணுகிறார்கள், பொதுமக்கள் சாலை மறியல் பண்ணுகிறார்கள், கடையடைப்பு நடத்துகிறார்கள். நான் எம்.எல்.ஏ., சாலை மறியல் பண்ணுகிறேன். இப்படி, சட்ட அமைச்சரே சட்டத்தைக் கெடுக்கலாமா? தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டும் அவர் சட்ட அமைச்சராக இருக்க வேண்டும். ஆனால், விருதுநகருக்கு சட்ட அமைச்சராக இருக்கிறார். நாங்களெல்லாம் வேண்டாமா? எங்கள் ஊரைச் சிறுமைப்படுத்தக் கூடாது. ஆகவே, இந்த நிதியாண்டிலே,....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி அவர்கள், அவர்களுடைய தொகுதிக்காக எதை வேண்டுமானாலும் கேட்கலாம். கேட்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அரசினுடைய நிதியாதாரம், உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை இவற்றை மையமாகக் கொண்டு, அரசு முடிவு எடுக்கும். சட்ட அமைச்சரே சட்டத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு எதை ஆதாரமாகக் கொண்டு சொல்கிறார்? எந்த அடிப்படையிலே சொல்கிறார்? எனக்கு அதுதான் புரியவில்லை.

*பிற்பகல் 12-25*

**திரு. இரா. தாமரைக்கனி:** ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்த District Court-ஐ விருதுநகருக்கு மாற்றுவோம் என்று சொன்னார்கள். உடனே, நான் சாலை மறியல் செய்தேன். செய்தவுடனே, எம்.எல்.ஏ., பொதுமக்கள் மத்தியிலே வதந்தியைப் பரப்புகிறார்; கலவரத்தை உண்டுபண்ணுகிறார்; Court-ஐ மாற்ற மாட்டோம் என்று சொல்லி, 'சன் டி.வி.'யிலேயும், பேப்பரிலேயும் அது வந்திருக்கிறது. விருதுநகரிலுள்ள நான்கு பேருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு, எதையாவது ஒன்றைச் செய்வது என்று இருக்கிறீர்கள். அங்கே இருக்கிற விருதுநகர்க்காரர்கள், எங்களுக்கு Courtடும் வேண்டாம், Collector Office-ம் வேண்டாம், S.P. Office-ம் வேண்டாம், வருமானவரி Office-ம் வேண்டாம், D.C.T.O. Office-ம் வேண்டாம், எங்களுக்குப் பெரிய இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இவரேபோய் சட்டம்-ஒழுங்கைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார். அங்கே இருப்பவர்கள் எல்லாம் கடையடைப்பு செய்வது இவையெல்லாம் தேவையா? ஸ்ரீவில்லிப்புத்தூரிலே.....



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி அவர்கள்தான் இதை அரசியலாக்கிக் கொண்டிருக்கிறார். ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருக்கின்ற எந்த நீதிமன்றத்தையும் விருதுநகருக்கு மாற்றுவோம் என்று நான் சொல்லவேயில்லை. விருதுநகர் மாவட்டம் என்பது முன்னாள் காமராஜர் மாவட்டம். அந்த விருதுநகர் மாவட்டத்திற்குத் தலைநகர் விருதுநகர். எனவே, எந்த மாவட்டத்தினுடைய தலைநகருக்கும் ஒரு மாவட்ட நீதிமன்றம் வேண்டும்; அது நல்லது; அது தேவையானது; அதற்கு வழக்கறிஞர்களும், பொதுமக்களும், திரு. தாமரைக்கனி போன்ற அரசியல்வாதிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று பொதுவாகத்தான் நான் சொன்னேனே தவிர, ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருக்கின்ற எந்த நீதிமன்றத்தையும், விருதுநகருக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று நான் சொல்லவேயில்லை. திரு. தாமரைக்கனி அவர்கள்தான் அங்கே அதை ஒரு பிரச்சினையாக்கி, அரசியல் இலாபத்திற்காக பல கிளர்ச்சிகளையெல்லாம் செய்து இருக்கிறார். அரசாங்கம் இந்த அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கெல்லாம் ஒருநாளும் பயப்படாது என்பதை அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பொதுமக்கள் போராட்டம் செய்தால், அதற்கு நான் என்ன செய்வது? எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தலைநகர் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருக்க வேண்டுமென்று சொல்லி, சம்பந்தப்பட்ட Revenue அதிகாரிகள் எல்லாம் அதற்குப் பரிந்துரை செய்து, மல்லி பக்கத்திலே இடம் எல்லாம் பார்த்தார்கள். பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஊராக இருப்பதால், எம்.ஜி.ஆர். அவர்கள், விருதுநகரைத் தலைநகரமாக்கி, District Court மட்டும் 'Law' என்ற அளவிலே இங்கே இருக்கட்டும்; இந்த ஊரிலே எந்தத் தொழிலும் கிடையாது; டீ கடை, வெற்றிலைப் பாக்குக் கடை, பலசரக்குக் கடை இவைதான் இருக்கின்றன; இந்த ஊருக்குச் சிறுமை ஏற்பட்டுவிடக் கூடாது என்று அவர்கள்தான், ஸ்ரீவில்லிப்புத்தூரிலே அதை அமைத்தார்கள். அதனை High Court கூட பரிந்துரை செய்திருக்கிறது. District Court அமைப்பதில் தமிழ்நாட்டிலே, ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு முன்னுரிமைக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. முன்னுரிமைக் கொடுக்காத இடத்திற்கு, Court வராத இடத்திற்கெல்லாம் ரூபாய் ஒதுக்குகிறீர்கள். இதை ஆதாரத்தோடு என்னால் நிரூபிக்க முடியும். வீம்புக்கென்றே எங்கள் ஊரை, எதிர்க்கட்சித் தொகுதி என்று நிதி ஒதுக்காமல் இருக்கிறீர்கள். நான் அதிகமாகப் பேசி இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்மீது கோபம் இருந்தாலும்,

முதலமைச்சருடைய உத்தரவின் பேரிலே, ஏற்கெனவே Promise செய்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள்கூட, Bar-Association உடன் அங்கு வந்து பார்த்து, உடனே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், சட்ட அமைச்சர் அவர்களையும் பார்த்து, நிதி ஒதுக்கீடு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் கண்டிப்பாக நிதி ஒதுக்கி---High Court-இன் பரிந்துரைகூட இருக்கிறது — அந்தப் பரிந்துரையின் பேரில், இந்த நிதியாண்டிலேயே, இந்த மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால், நீங்கள் என் தொகுதிக்கு Partiality காட்டுகிறீர்கள் என்றுதான் அர்த்தம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்று, 50-வது ஆண்டு பொன்விழாவிலே, உலக அரங்கிலே இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இந்தியா நேற்று நடத்திய மூன்று அணுகுண்டு சோதனைகளின் விளைவாக, இன்று உலக அரங்கிலே, நாம் தலைநிமிர்ந்து நிற்கிறோம். அமெரிக்கா போன்ற பெரிய சட்டாம்பிள்ளைத்தனம் படைத்த ஒருசில நாடுகள், அடக்குமுறையைக் கையாள்வோம், தடை விதிப்போம் என்றெல்லாம் மிரட்டி வருகின்றன. இந்த சலசலப்புக்கெல்லாம் பணியாமல், நமது விஞ்ஞானிகள் மிகப்பெரிய மகத்தான சாதனையைப் படைத்திருக்கிறார்கள். அதற்கு முதுகெலும்பாக, விஞ்ஞானி அபுல்கலாம் போன்றவர்களும் இருந்து, அந்த வெற்றியை எய்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு, இந்திய தேசிய லீக் சார்பாகவும், இந்தச் சபையின் சார்பாகவும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்டைக் கடித்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி அவர்கள் பேசுகிறபோது, ** என்று சில சொற்களைப் பயன்படுத்தினார்கள். அவர் எதை நினைத்துக் கொண்டு சொன்னாலும் பரவாயில்லை. இந்த

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இருக்கைக்கு ஒரு பெருமை இருக்கிறது. எனவே, அந்தப் பெருமையைக் காப்பாற்றுகின்ற வகையிலே, அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவையெல்லாம் வேண்டாம். இது பத்திரிகையிலே வேறு மாதிரியாக வரும்.

*பிற்பகல் 12-30*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிக்கின்ற கதையாக இன்று அ.இ.அ.தி.மு.க.-வினரும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களும் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சமீப காலமாக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்கிறார்கள். கடந்த சில மாதங்களாக இந்தத் தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்கிறார்கள். மத்திய அமைச்சர்கள் சிலரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்கிறார்கள். வருமானவரி அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டுமென்கிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதில் என்னய்யா தப்பு!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், வாய்யா, போய்யா என்று ஒருமையில் பேசக்கூடாது. ஒழுங்கீனமாக நடந்துகொள்ளக் கூடாது. இவ்வளவு நேரம் உங்கள் கட்சித் தலைவர் பேசினார். இந்த மாதிரி வரிக்கு வரி நீங்கள் எழுந்து நின்று மறுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். அதற்காக உட்கார்ந்து கொண்டே வாய்யா, போய்யா என்று பேசுவது நல்லதல்ல. அவையின் மரபிற்கேற்ற மாதிரி நடந்து கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது மட்டும் எனக்கு ஒலிபெருக்கி கொடுக்காததற்குக் காரணம் என்ன? (மணியடிக்கப்பெற்றது)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுந்தரம் அவர்கள் பேசுவதற்கு எத்தனையோ முறை வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அவையிலே அவர் ஒருவர்தான் அ.இ.அ.தி.மு.க.-வின் பாதுகாவலர் என்பதைப்போல எதற்கெடுத்தாலும், யார் பேசினாலும் எழுந்து நிற்பது அவ்வளவு நல்லதல்ல. ஏதாவது பிரச்சினை இருந்தால் Point of Order, Point of Clarification என்று கேட்பதில் தவறு இல்லை. ஆனால் எதற்கெடுத்தாலும் எழுந்து நிற்பது, தவறான வார்த்தைகளைப் பயன்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல. எனவே அவர் எழுந்தவுடனே அவையினுடைய துணைத் தலைவர் அனுமதித்தால் அவர் பேசலாம். ஆனால் அதற்காக இந்த அவையின் நடவடிக்கையிலே அதிகமாகக் குறுக்கிடக்கூடாது. அதைத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதற்கெடுத்தாலும் நான் தான் அ.இ.அ.தி.மு.க.-வின் சார்பாகப் பேசுகிறேன் என்று சொல்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரின் நடவடிக்கைக் குறிப்புகளை நீங்கள் எடுத்துப் பார்த்தால் நான் சொல்வது எந்த அளவுக்கு உண்மை என்பது உங்களுக்கும் புரியும். இதை மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவார்கள். அதுமட்டுமல்ல, சில நேரங்களில் சூடான விவாதம் நடைபெறும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் எழுந்து நிற்கின்ற காரணத்தினால் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களும் கொஞ்சம் வேகமாகக் கருத்து சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். எந்த உறுப்பினருக்கும் அவருடைய கருத்தைச் சொல்ல உரிமை இருக்கிறது. ஆனால் தங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் கருத்தைச் சொல்ல வேண்டுமே தவிர, யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் பேசலாம் என்றால் இந்த அவையை நடத்த முடியாது. இதைத்தான் இங்கே நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய கேள்வியே அதுதான். நான் பேசும்போது மட்டும் mike கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் கொடுத்தால்தானே நான் பேச முடியும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அனுமதித்தால்தான் நீங்கள் ஒலிபெருக்கியில் பேச முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதுதான் என்னுடைய கேள்வி. திரு. கே. சுப்பராயன் அவர்கள் எழுந்தால் mike கொடுக்கிறீர்கள். திரு. கிருஷ்ணசாமி அவர்கள் எழுந்தால் mike கொடுக்கிறீர்கள். திரு. சி. ஞானசேகரன் அவர்கள் எழுந்தால் mike கொடுக்கிறீர்கள். நான் பேசும்போது மட்டும் mike கொடுக்க மறுக்கிறீர்கள்? அது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் reasonable-ஆகப் பேசுவதற்கு எழுந்து நின்றால் அனுமதி கொடுக்கலாம். வரிக்கு வரி எழுந்து நின்று எல்லாவற்றையும் மறுக்க வேண்டுமென்றால் அனுமதிக்க முடியாது. உங்கள் ஒருவருக்காக இந்தச் சபையை நடத்த முடியாது, உட்காருங்கள். திரு. ஜி. நிஜாமுதீன் பேசுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்கிறார்கள். வருமான வரி அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என்கிறார்கள். மத்திய அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்கிறார்கள். வழக்கறிஞர்களை மாற்றியமைக்கிறார்கள். இப்படி ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்தவர்கள்..... (மணியடிக்கப்பெற்றது)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்பு இந்தப் பேரவையில் 'கண்டிக்கிறேன்' என்ற வார்த்தையை நான் தவறுதலாகச் சொன்னபோது தாங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு ஆணையிட்டீர்கள். இப்போது 'வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. அதனால் நீக்க வேண்டிய அவசியம் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் பேசுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ரொம்பக் கடிக்காதீர்கள். (சிரிப்பு)

பிற்பகல் 12-35

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இன்று மனிதனைக் கடிக்கின்ற கதையாக தனி Court நீதிபதியை மாற்ற வேண்டும் என்ற ஒரு நிலையை அவர்கள் எடுத்து, நீதிபதியின் மீதே ஒரு களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முன்னாள் முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுடைய பிறந்தநாள் விழாவிலே, நல்லெண்ணத்தின் அடிப்படையில் 3 நீதிபதிகள் கலந்து கொண்டார்கள். அந்த நிகழ்ச்சியை உள்நோக்கம் கற்பிக்கும் நிகழ்ச்சியாக மாற்றி, இன்று யார் யாரையோ மாற்ற வேண்டும், ஆட்சியை மாற்ற வேண்டும் என்று சொன்னவர்கள் அந்த நீதிபதியை மாற்ற வேண்டும், அவரை வாபஸ் பெற வேண்டும் என்று சொல்லி அந்த நீதிபதியிடமே ஒரு மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இதுபோன்ற கேலிக்கூத்துக்கு உரியவர்கள், தாங்கள் செய்த காரியங்களுக்கு மாற்று கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மத மாற்றம் என்ற ஒரு நிகழ்ச்சியை இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். அதை ஏன் கோடிட்டுக் காட்டினார்கள்? அதனுடைய உள்நோக்கம் என்ன என்பதை நான் வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலங்களில், கோவை குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்களில் ** என்று கடந்த காலங்களிலே நாம் பத்திரிகைகள் மூலமாகப் பார்த்திருக்கிறோம். அதைப்பற்றி இந்த அரசு விசாரித்து வருகிறது.

(திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நானே சொல்லுகிறேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லுகிறபோது அதற்கான ஆதாரத்தை என்னிடத்தில் காட்டிவிட்டுப் பேசியிருக்க வேண்டும். பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசக்கூடாது. அவர் சொன்னது அவைக்குறிப்பில் இடம் பெறாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அவர்கள் மக்களைத் திசை திருப்பும் நோக்கில்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நடந்து கொள்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்து மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குள் வருகிறேன்.

நீதித் துறைக்கு என்று, நீதிபதியின் கீழ் அமலாக்கப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். Court Enforcement Wing ஒன்றை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், காவல் துறையினர் நீதித் துறையிடம் குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுத்துவிட்டு, நீதித்துறை இடுகின்ற உத்தரவுகளையும் அவர்களே செய்வது என்பது முறையாக நீதி வழங்குவதாக இருக்காது. மற்ற நாடுகளில் உள்ளது போல நீதிபதியின் கீழ் Enforcement பிரிவு ஒன்றை அவசியம் ஏற்படுத்த வேண்டும். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், காவலர்கள் சிலரை அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று கருணை மனு கொடுக்கும்போது, அதே காவல் துறையைச் சேர்ந்த ஒருவரை விட்டு அதை விசாரிக்கிறார்கள். அவர் சென்று பார்த்துவிட்டு, தன்னுடைய சக காவல் துறையினரைக் காப்பாற்றும் நோக்கத்தோடு அப்படி இல்லை என்ற பதிலைக் கூறிவிடுகிறார்கள். இதுபோன்ற நிகழ்வுகளை மாற்றுவதற்கு நீதித் துறைக்கு என்று தனியாக ஒரு அமலாக்கப்பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். நமது நாட்டு சட்ட திட்டங்களில் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. அந்த ஓட்டைகளை அடைக்கும் வகையில் சட்டங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், காவல் துறை அதிகாரிக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்று சொன்னால், வெள்ளிக்கிழமை மாலை சென்று, அவர்மீது ஏதாவது ஒரு petty case-ஐப் போட்டு, நீதிபதியின் முன் remand செய்கிறார்கள். Cognizable Offence என்று சொல்லி சோதனையிட வேண்டுமென்றால் நீதிபதியின் உத்தரவை முன்கூட்டியே பெற்றிருக்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படிப் பெறாமல் remand செய்வதற்காக ஆஜர்படுத்துகின்றபோது நீதிபதி மறுக்கிறார். நான் remand செய்ய மாட்டேன் என்று மறுக்கிறார். உடனே வெளியே வந்து அந்த நபர் மீது மீண்டும் பிரிவு 75-ன்கீழ் ஒரு case-ஐ சேர்த்து ஆஜர்படுத்துவார்கள். அவ்வாறு ஆஜர்படுத்தும்போது, காவல் துறையினர் ஆஜர்படுத்துவதை மட்டும் ஏற்றுக்கொள்ளும் நீதிபதி அது Bailable case-ஆக இருந்தும், அந்த வழக்கில் ஜாமீன் கேட்டால் மறுத்துவிடுகிறார். சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை முடிந்து திங்கட்கிழமை கோர்ட்டுக்கு வந்து ஜாமீன் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார். காவல் துறையினரின் remand-ஐப் பெற்றுக்கொள்ளும் அதே நீதிபதி, ஜாமீன் கொடுக்கும் வழக்கிலே ஒருவருக்கு ஜாமீன் கொடுக்க மறுப்பது சட்டத்தையே மறுப்பதாகும். காவல் துறை அதிகாரியாக இருந்தாலும்,

வழக்கறிஞராக இருந்தாலும் எந்த நேரத்தில் பணியாற்ற வேண்டி நேர்ந்தாலும் அந்த நேரத்தில் பணியாற்றியே ஆக வேண்டும். ஆகவே, இவற்றை எல்லாம் மாற்றுகின்ற அளவுக்குச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்ட வார்த்தைகளைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசும்போது ஒருமுறை குறிப்பிட்டார்கள். Bill, Act, Law என்ற 3 பதங்கள் ஆங்கிலத்திலே இருக்கின்றன. அவற்றுக்கு முறையான பதங்கள் தமிழிலே இல்லை. சட்டத்திற்கு Law என்றும், Act-க்கு சட்டம் என்றும் குறிப்பிடுகிறோம். Bill-ஐ சட்டமுன்வடிவு என்றும் குறிப்பிடுகிறோம். ஒரே சொல்லில் புரியக்கூடிய 3 வார்த்தைகள் அதிலே இல்லை. இதுபோல் சட்டத்தில் நிறைய வார்த்தைகளில் குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே இவற்றை எல்லாம் கவனத்தில்கொண்டு முறையான சொற்களை, தமிழ்ப் பண்பாட்டுத் துறையின் மூலமாகப் பெற்று அவற்றை அமல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறைச்சாலைகளுக்குச் செல்பவர்கள் பெரும்பாலும் திருந்துவதாக இல்லை. சிறைச்சாலைக்குச் சென்றாலே மேலும் குற்றம் இழைப்பவர்களாகத் திரும்பி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது சிறைச்சாலைகளுக்கு மேலும், மேலும் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது தவறாகும். அடிப்படை வசதிகள் வேண்டும். அதிகமான வசதிகள் இருக்கக் கூடாது. அடிப்படை வசதிகளோடு மனிதாபிமானமிக்கவர்களாக, குற்றச் செயல்களுக்கு அப்பாற்பட்டவர்களாக, சுய சிந்தனையோடு நடப்பவர்களாக அவர்களை மாற்றி அமைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து அதற்குரிய முறையில் செயல்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதுபோல Magistrateகளுக்கும், Munsifகளுக்கும் வாகன வசதி அவசியமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் 'தலைவர் அவர்களே, நிறைய குறுக்கீடு வந்துவிட்டது இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** வாணியம்பாடி தனி வட்டமாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அங்கே அனைத்து அலுவலகங்களும் இருந்தும் உரிமையியல் நீதிமன்றம் இல்லை. ஆகவே, அதனை உடனடியாக அங்கே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரியில் மாவட்ட நீதிமன்றம், மாவட்ட முதல் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட அமர்வு நீதிமன்றம் என்று மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மாவட்டத் தலைநகர் தருமபுரியில் இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தை அமைப்பதற்கு உயர் நீதிமன்றப் பதிவாளரும் மற்றும் உயர்நீதிமன்றமும் ஒப்புதல் அளித்துள்ளது. இன்றைய நிலையில் அரசு, நீதிமன்றத்தை அங்கே அமைக்காமல் உள்ளது. ஆகவே, அங்கே விரைந்து அந்த நீதிமன்றத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகை அமர்வு நீதிமன்ற வளாகத்திலே மிகவும் இட நெருக்கடி அதிகமாக இருக்கின்றது. அதையும் அரசு கவனத்திலே கொண்டு அதனை விரிவுபடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கே வழக்குரைஞர்களுக்கான Chamber ஒன்றையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நாகை கிளைச் சிறைச்சாலை மிகவும் பழமையானது. அங்கு அடிப்படை வசதி இல்லை. ஆகவே, அங்கே அடிப்படை வசதி செய்து தாருங்கள் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கே சென்று கைதிகளைப் பார்ப்பவர்களிடமிருந்து அதிகமாகப் பணம் வசூல் செய்கின்றார்கள். ரூ.50,100 என்று பிடுங்குகிறார்கள். சிறைச்சாலைகளிலே இதுபோன்ற இலஞ்சங்களை ஒழிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நாகையிலே நிரந்தர நுகர்வோர் நீதிமன்றத்தை ஏற்படுத்திட வேண்டுமென்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதே போல, தருமபுரியில் இயங்கும் கிளைச் சிறைச்சாலை 7 செல்கள் கொண்டது. அங்கு 35 பேரை மட்டும்தான் அடைக்க முடியும்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முதலாகச் சட்டப் பல்கலைக் கழகம் ஒன்றை சட்ட மேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கர் பெயரிலே அமைத்து சட்டக் கல்வியை மேலும் தரம் உயர்த்துகின்ற வண்ணமாக, சட்ட அறிவைப் பரப்புகின்ற வண்ணமாக ஒரு நிலையை உருவாக்கித் தந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு உரையாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையினுடைய சிறப்பு அம்சமாக அதனுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கின்ற ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன்.

பெண்களுக்குத் தனியாக நீதித் துறை ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலமாக மகளிர் சம்பந்தமான அனைத்துக் குற்ற வழக்குகளையும், குற்றச்சாட்டுகளையும் தனியாகவே விசாரிக்கக்கூடிய ஒரு வகையினைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே எடுத்துக் காட்டியிருப்பது தமிழகத்திலே இருக்கின்ற மகளிர் எல்லாம் மகிழக்கூடிய அளவிற்கு ஒரு சிறந்த சாதனையாக அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே முதல் பக்கத்திலேயே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முக்கிய நோக்கமே அனைத்துக் குடிமக்களுக்கும் விரைவான நீதியைப் பெற்றுத் தர வேண்டுமென்பதுதான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீதி நிருவாகம் என்பது ஒரு நாட்டினுடைய உறுதியான தூண் என்று ஜார்ஜ் வாஷிங்டன் அவர்கள் கூறிய அந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தி இந்தக் கொள்கைக் குறிப்பு இங்கே சிறப்பாக வெளியிடப்பட்டிருக்கிறது. நான் இந்தக் கொள்கை விளக்க விவாதத்தின் மூலமாக என்னுடைய ஐயப்பாடுகளைத் தெரிவிப்பதோடு, இந்த நாட்டினுடைய நலன்களை எல்லாவகையிலும் நாம் பாதுகாக்க வேண்டும் என்பதற்கான ஆலோசனைகள் சிலவற்றை எடுத்துக்கூறவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் நீதி நிருவாகத்தில் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய வழக்குரைஞர்களுக்கு Advocate Welfare Fund என்ற



ஒன்றின் மூலமாக, வக்காலத்து நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கின்றபோது, அதில் தனியாக ரூ.5-க்கு ஸ்டாம்ப் ஒட்டப்படுகிறது. அதைப்போலவே வழக்குரைஞர்களுக்கு உதவியாக இருக்கின்ற Registered Clerkகளுக்கு நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கின்ற அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு பாதுகாப்பு தருவதற்காக அவர்கள் திடீரென்று மரணம் அடைந்துவிட்டால் அவர்களுடைய பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி Clerk Welfare Fund என்று அந்த குமாஸ்தாக்களுக்காக ரூ.2-க்கான ஒரு ஸ்டாம்பு ஒட்டுவார்களேயானால் அதன் மூலமாக அவர்கள் பலனடைய வசதியாக இருக்கும். அவர்களுக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக அது அமையும். எனவே, அதை நம்முடைய அரசு கவனத்திலே கொண்டு அதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று என்னுடைய ஆவலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-45*

அதுமட்டுமல்ல. மாண்புமிகு தமிழக முதல்வர் நம்முடைய தலைவர் அவர்கள்கூட நேற்றைக்குச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுத்தப்பட்ட நோக்கம், ஏற்படுத்தப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக, தமிழ்ப்பெருங்குடி மக்களால் தவறு செய்தவர்களை, ஊழலில் திளைத்தவர்களை, நாட்டு நிருவாகத்தைச் சீர்கேடு அடையச் செய்தவர்களை, மரபுகளை மரணிக்கச் செய்தவர்களை, எதைப் பற்றியுமே கவலைப்படாமல், தன்னலத்தைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டுக் கொண்டு, தன்னைப் பெருக்கிக் கொண்டு, வசதிகளையும், வாய்ப்புகளையும் பெருக்கிக் கொண்டு, நாட்டைச் சீரழித்தவர்களை உடனடியாகத் தண்டிக்கின்ற விதமாக, நீதிமன்றங்களின் மூலமாக அவர்களுக்குத் தக்க தண்டனை அளிக்க வேண்டும் என்று அந்த உணர்வோடு நமக்கு வாய்ப்பு தரப்பட்டது. ஆனாலும்கூட, நீதி தாமதம் ஆகவில்லை. ஆனால் சில நடைமுறைகள்தான் தாமதம் ஆகின்றன.

நான் பகிரங்கமாக, தெளிவாக இந்த மன்றத்தின் மூலமாக நாட்டு மக்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க வேண்டி இதனைச் சொல்ல விரும்புகிறேன். நீதிமன்றத்திலே அவர்கள்மீது இருக்கின்ற குற்றச்சாட்டுகள், புகார்கள் இவற்றை நேரிடையாகச் சந்தித்து, விசாரணையில் ஈடுபட்டு, வெற்றி பெற்று, நிரபராதியாக வந்தால் நாம் வரவேற்கலாம். நாடு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், நீதிமன்றத்திற்குச் செல்லாது, எப்படியெல்லாம் வழக்கை நடத்த விடாமல் செய்யலாமோ, அதற்கு எத்தனை விதமாக வழிமுறைகள் இருக்கின்றனவோ, சட்டத்தின் சந்து

பொந்துகளில் நுழைவது மட்டுமல்ல, இந்தியாவிலே கேள்விப்படாத வகையிலே, வேடிக்கையும், விசித்திரமும், விநோதமும் நிறைந்த வழக்குகளை இந்த நாடு சந்தித்திருக்கிறது என்று நம்முடைய தலைவர் அவர்கள் ஒரு காலத்தில் சொன்னார்களே, அதைப்போல, ஒரு வழக்கு. அந்த வழக்கிலே, அந்த நீதிபதியிடமே ஒரு மனு சமர்ப்பிக்கப்படுகிறது. என்ன மனு தெரியுமா? 'நீங்கள் என் வழக்கிலே இருந்து விலகிக் கொள்ள வேண்டும்'. யாரிடம், யார் மனு சமர்ப்பிப்பது? அதற்கு என்ன Provision? அதற்கு என்ன விதிமுறைகள்? ஒன்றும் இல்லை. ஆனால், சமர்ப்பிக்கப்பட்டது. அப்படி சமர்ப்பிக்கப்பட்டதற்குப் பிறகு அந்த மனு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இது தேவையில்லாமல் வழக்கை நீட்டிக்கின்ற வேலையில்லையா? அப்படி சமர்ப்பிக்கப்பட்ட அந்த மனு நீதிமன்றத்தாலே நிராகரிக்கப்பட்டது. இனி, மீண்டும் அதன் மீது ஒரு appeal செய்து உயர்நீதிமன்றத்திற்குப் போவார்கள். பிறகு அதன்மீது வேறு விதமாக நடவடிக்கை எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாகக் காலதாமதம் செய்வதற்கு முற்படுவார்கள். இப்படிச் செய்வதற்கு என்ன காரணம்? சட்டபூர்வமாக, நிரந்தரமாகத் தங்களுக்குச் சிறைத் தண்டனை உண்டு என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்ட நிலையில், ஏராளமான Documentary Evidence — ஏராளமான கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள்—இவை அனைத்தும் அங்கே சான்றளிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட இழுவை நிலையை உருவாக்குவது யார்? இதைத்தான், நீதிமன்றத்திலே நீதியை நிலைநாட்ட வேண்டிய நிலையிலே இருக்கிற நாம் இங்கே, எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதற்கெல்லாம் மேலாக ஒரு வேடிக்கை. Transfer Petition போடுவது கூட Higher Authorities இடம் போடவேண்டுமே தவிர, அவரிடமே போடுவதா என்ற கேள்வி எல்லாம் இதிலே மறைந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணத்தைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, A.D.R. எல்லோருக்கும் தெரியும். Alternative Dispute Resolution. அதாவது, மாற்று வழிகளில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுதல். Lok Adalat என்று சொல்லப்படுகிறதே, அதைப்போல. Settled out of Court என்ற முறையில் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதுபோல, Court-க்கு வெளியிலே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டால், வழக்குகள் விரைவாகப் பைசலாகும்.



உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், விபத்து நடைபெறுகிறது. அதற்கான தீர்ப்பாய முறைகளில், மக்கள் நீதிமன்றம் என்று Lok Adalat என்று வருகின்றபோது, இரண்டு தரப்பினரும் உட்கார்ந்து பேசி, உடனடியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு, வழக்குகள் பெருமளவுக்குக் குறைக்கப்படுகின்றன. நீதிபதியின் பளு குறைக்கப்படுகிறது.

நான் குறிப்பிட விரும்புகிறேன், இங்கே நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் இருக்கிறார்கள். அதைப்போல நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர், அண்ணன் பொன்முடி அவர்கள் இருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையிலும், மின்சாரத் துறையிலும் நான் கூட ஒரு வழக்கை நடத்தியிருக்கிறேன். 3½ ஆண்டுகள் வழக்கு நடத்தி, அதற்குப் பிறகு தீர்ப்பு வழங்கப்பட்டது. நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது. ஆனால், இப்போது வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மக்களுக்குப் பலன் கிடைக்கிறது. எனவே, Lok Adalat மூலம் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற முடிவைத் தாங்கள் அறிவித்தால், இரு தரப்பாரும் அமர்ந்து, நீதிபதி முன்னிலையில் பேசித் தீர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

சிறைச்சாலைகள் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களை நான் சொல்லியாக வேண்டும். அது என்னுடைய கடமையாகும். குறிப்பாக, சிறைச்சாலைகளிலே வழங்கப்படுகின்ற பத்திரிகைகள் பற்றிச் சொல்ல வேண்டும். யார் காலத்திலோ, எவர் காலத்திலோ வழங்கப்பட்டது. அந்தப் பத்திரிகைகள் பற்றிய குறிப்பைப் பார்த்தேன். தினமணி, The Hindu, தினத்தந்தி, தினமலர். இந்த நான்கு பத்திரிகைகள்தான் வழங்கப்பட்டு வருகின்றன. இதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், சிறைச்சாலையிலே இருக்கக்கூடிய, தமிழிலே ஆர்வம் உள்ள கைதிகளுக்கு, தமிழ் எழுத்தைப் படித்து எழுந்து நிற்க வேண்டும், விவேகம் பெற வேண்டும், அறிவு வளர்ச்சி பெறவேண்டும், பகுத்தறிவை உய்த்தெழச் செய்ய வேண்டும் என்ற எண்ணங்களைக் கொண்டிருக்கக் கூடியவர்களுக்காக முரசொலி பத்திரிகையைச் சேர்த்துக்கொள்ளுங்கள். அதைப்போல நாட்டு நடப்பை அவ்வப்போது அழகாக அள்ளித் தருகின்ற தினகரன் பத்திரிகையைச் சேர்த்துக் கொள்ளுங்கள். தினகரனையும், முரசொலியையும் நீங்கள் சிறைச்சாலைக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாக எடுத்து வைக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், ஏற்கெனவே நேரம் அதிகமாகிவிட்டது. இன்னொரு உறுப்பினர் பேசி முடித்த பிறகு, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். எனவே சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் பேசும்போது தினகரன், முரசொலி ஆகிய பத்திரிகைகளை, படிப்பதற்காக ஜெயிலில் வழங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஜெயிலில் இருக்கிற அத்தனை பேரும் முரசொலியையும், தினகரனையும் ரொம்ப ஆர்வமாகப் படிக்கின்றார்கள் என்றால், தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என்று கேட்கிறேன்?. வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, உங்கள் உரையை ஒரு நிமிடத்திற்குள் முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நேரம் இல்லை என்று சொல்லுகிறீர்கள். துவக்கத்திலேயே நான் பேசியிருக்க வேண்டும். ஆனாலும்கூட, இந்த நேரத்தில் பேசுகிறபோது, ஒரு நிமிடம் கூடுதலாக அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல விரும்பவில்லை. என்னுடைய நோக்கம் அதுவுமல்ல. இன்றைக்கு சட்டத் துறைகளின் மூலமாக ஒன்றைத் தெளிவுபடுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன். அது என்னுடைய நியாயமான வேண்டுகோள் என்று நான் நினைக்கின்ற காரணத்தால் எடுத்து வைக்க விரும்புகிறேன். Article 356 — 356-வது பிரிவைச் சொல்லிச் சொல்லி இந்த நாட்டிலே பீதியை உண்டாக்குவது அச்சத்தை உண்டாக்குவது. அல்லது நீதி நிருவாகத்தைக் குலைக்கக்கூடிய அளவிற்கு நாட்டிலே அது வரும், இது வரும் என்று செய்திகளைப் பரப்புவதுகூட ஒரு வகையிலே offenceதான். பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய நிலையிலே இருப்பதுகூட ஒரு offence அல்லவா? அதைத் தொடர்ந்து செய்து நல்ல விதமாக, அமைதியாக வாழ்கின்ற இந்த பூமியில், இந்த மாநிலத்தில், தேவையில்லாத குழப்பங்களை உருவாக்குவது நியாயமா? இப்போது 356-வது பிரிவு எந்த



அளவுக்கு சட்டத் துறையின் மூலம் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டுமென்று துணைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுவிட்டார்கள். அதை நினைவில் வைத்து உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கிறேன். குற்றச்சாட்டு சொன்னவர்களே குற்றம் சாட்டப்பட்டது தவறு என்று சரியானது என்று வாதிடுவார்களா என்ற சந்தேகம் நமக்கு எழுகிறது. கொஞ்சம் வெற்றி பெற்றுவிட்டாலே, மரபுகளை மறைத்துவிடுவோம் என்றிருக்கும் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லையே. இதே பேரவையினுடைய ஆசனத்தில், அரியாசனத்தில் யார் யாரோ சென்று அமர்ந்து மரபுகள் வீணடிக்கப்பட்டு விதிகள் எல்லாம் மீறப்பட்டன. இன்றைக்கு ஒரு சிறு வெற்றி கிடைத்த காரணத்தால், மத்திய அரசாங்கத்தினுடைய ஆணைகள் எல்லாம், எந்தவிதமான பதவியும், பொறுப்பும் இல்லாத ஒருவருடைய வீட்டிலிருந்து, எப்படி அரசு ஆணைகள் வழக்கறிஞர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மக்கள் சிந்திக்கிறார்கள், இதற்கெல்லாம் உரிய வகையிலே நாம் முடிவு கண்டாக வேண்டும் என்று.

நான் இங்கே தெளிவாக, இந்தச் சிறைச்சாலைகள், நீதி நிருவாகம் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். வணக்கத்திற்குரிய நம்முடைய மேயர் அன்பு ஸ்டாலின் அவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்தியச் சிறைச்சாலையை புழலேரி பக்கமாகக் கொண்டு செல்வதற்கு ஆயத்தமான முடிவுகள் எடுக்கபபட்டன. கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆனாலும்கூட அது அங்கே போய்ச் சேராத நிலை இருக்கிறது. அரசினுடைய நிலை என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்தில், சிறைச்சாலையில் நாங்கள் கொடுமைப்படுத்தப்பட்டோம் என்ற தவறான கருத்துக்கள் எல்லாம் சொல்லப்பட்டன. அதற்கு என் பதில் — மாண்புமிகு முதல்வர்

அவர்கள் 'சிறைச்சாலையில் 6 மாதக் கடுங்காவல்' என்ற புத்தகத்திலே எழுதினார்கள். இந்த நாட்டுக்காக, மொழிக்காக, அதனுடைய உயர்வுக்காக, பண்பாட்டுக்காக, தியாக தீபமாக ஒளிவிட்ட தமிழக முதல்வர், அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் அரியலூர் கிளைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோது மூச்சு விடுவதற்குக்கூட முடியாமல், அந்த நிலையில் 10 நிமிடத்திற்கு ஒரு முறை, கம்பிகளுக்கு இடையே நாசியை வெளியிலே வைத்து நல்ல காற்றை இழுத்து — அப்படி எல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு உழைத்த ஒரு மாபெரும் தலைவர் — இன்றைய முதல்வர் அவர்கள் — சிறைச்சாலையில் கஷ்டப்பட்டார்கள். அது இலட்சியத்திற்காக, இந்த நாட்டுக்காக, இந்த மண்ணுக்காக, மொழிக்காக, கலாச்சாரத்திற்காக, பண்பாட்டிற்காக. ஆனால் எதற்காகவோ சென்றவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்யப்பட்டனவோ அந்த வசதிகளை எல்லாம் மக்கள் மறந்துவிடக்கூடாது. மீண்டும் அவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதை இங்கே நான் எடுத்து வைக்கிறேன்.

இந்த மாமன்றத்தில் நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் பற்றி சொல்லுகின்ற அதேநேரத்தில் என்னுடைய தொகுதி குறித்து குறிப்பிட விரும்புகின்றேன். கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் அமைக்க இன்னும் முன்னுரிமை கொடுக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. அதன் நிலை குறித்து, அதுபோல இன்றியமையாத பொருள்கள் Essential Commodities Act Court ஒன்று கடலூரிலே அமைக்கப்பட வேண்டிய நிலை குறித்து, அன்புகூர்ந்து நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அதற்கெல்லாம் முன்னுரிமை அளித்து இந்த ஆண்டே அதைப் பெறக்கூடிய அளவில் வாய்ப்பினை உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த மானியங்களின் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கின்ற கருத்துக்களை முழுமையாக வரவேற்று வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முதலாக சட்டப் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



நம்முடைய அரசு 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று கூறுகின்றது. ஆனால் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும்போது ஆங்கிலத்திலே தீர்ப்பை வழங்குகிறார்கள். சாதாரண மக்களுக்கும் புரியக்கூடிய அளவில் தமிழிலேயே தீர்ப்புகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களில் வழக்குகளை எடுத்துக் கொண்டோமேயானால் அதற்கு ஒரு காலவரைமுறை இல்லை. அவை எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் நடக்கலாம்; 6 ஆண்டுகள், 12 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்றெல்லாம் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. ஆகவே, குற்றவியல் நீதிமன்றங்கள் ஆனாலும் சரி; உரிமையியல் நீதிமன்றங்கள் ஆனாலும் சரி, ஒரு வழக்கு அனுமதிக்கப்பட்டால் அந்த நீதிமன்றத்திலே இத்தனை ஆண்டுக் காலத்திற்குள் அந்த வழக்கு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு புதிய சட்டத்திருத்தத்தை நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சில நீதிமன்றங்களிலே வழக்குகளிலே சம்பந்தப்பட்ட வாகனங்களைப் பிடித்து அங்கே நிறுத்துகின்றார்கள். அந்த வாகனங்கள் ஆண்டுக்கணக்கில்—10 ஆண்டுகள், 5 ஆண்டுகள் அங்கே இருந்து துருப் பிடித்து ஒரு ரூபாய்க்குக்கூட பிரயோஜனம் இல்லாத நிலைக்குச் சென்றுவிடுகின்றது. ஆகவே, ஒரு வாகனம், ஒரு வழக்கில், சம்பந்தப்பட்ட நீதி மன்றத்திற்கு வந்து, அந்த வழக்கு முடிந்தபின்தான் அதை வெளியே எடுக்க முடியும் என்ற நிலை வந்தால், அந்த வாகனத்தை, இந்த நாட்டினுடைய சொத்தாகக் கருதி அதை ஏலத்தில் விற்று அந்தப் பணத்தை அரசுக் கணக்கிலே வைத்துக்கொண்டு வழக்கு முடிவடைந்தபின், அது யாருக்குச் சாதகமாக இருக்கின்றதோ, அவர்களுக்கு அதைக் கொடுத்தால் இந்த நாட்டினுடைய சொத்து சேதமாகாமல் இருக்கும் என்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல்லையிலே நீண்ட நெடுங்காலமாக கேட்டுக்கொண்டு இருந்த சட்டக் கல்லூரியை மாண்புமிகு முதல்வர் அவர்களும் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களும் தந்து, அங்கே இளநிலை படிப்புக்காக மாலை நேர வகுப்புகளும் தொடங்கி இருக்கிறார்கள். அதற்கு நன்றி. இன்னும் ஒரு குறை அங்கே இருக்கிறது. முதுநிலை சட்டப் படிப்பிற்கும் அங்கு அனுமதி வழங்க வேண்டும். இந்த ஆண்டே அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைக்கு வரும், வரும் என்று சொல்கின்ற உயர்நீதிமன்றத்தின் கிளையை விரைவிலேயே இந்த ஆண்டிலேயே தொடங்க நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசானது உயர்நீதிமன்றத்தில் இருக்கின்ற அனைத்து நீதிபதிகளுக்கும் சம்பளம் வழங்குகின்றது. அதை எல்லாம் நாம்தான் வழங்குகின்றோம். அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை எல்லாம் செய்து கொடுக்கின்றோம். ஆனால் அவர்களை மத்திய அரசு மாறுதல் செய்யும்போது தமிழக அரசிடமிருந்து எதையுமே கேட்காமல் மாற்றுகின்றது. ஆகவே, அவர்களை மாற்றும்போது இந்த அரசிடமாவது ஒரு வார்த்தை கேட்பதற்காக சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை உயர்நீதிமன்றத்திற்கு வழக்குகள் சம்பந்தமாக காவல் துறை அதிகாரிகள் — உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் போன்றவர்கள் அதிகம் பேர் வருகின்றார்கள். ஆனால் அவர்கள் வந்து தங்குவதற்கு உயர்நீதிமன்றத்தில் அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் தங்குவதற்காக லாட்ஜுகளுக்குச் சென்றால், இடம் கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, உயர்நீதிமன்ற வளாகத்திலே, காவல் துறை அதிகாரிகள் வழக்குகள் சம்பந்தமாக வரும்போது, அவர்கள் தங்குவதற்கு நீங்கள் ஒரு ஏற்பாடு செய்து, புதிய கட்டடங்கள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய இராதாபுரம் தொகுதியில், இராதாபுரம், தாலுகாவின் தலைநகரமாக இருக்கின்றது. அங்கே ஏற்கெனவே இயங்கிக்கொண்டு இருந்த குற்றவியல் நீதிமன்றம் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெறவில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் கூட அந்த இடத்தை வந்து பார்த்தார்கள். அங்கு நீதிமன்றங்கள் நடைபெறுவதற்கான நல்ல அரசு கட்டடம் இருக்கிறது. ஆகவே தாலுகா தலைநகரமான இராதாபுரத்தில் குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்களை இந்த ஆண்டே அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லையிலே இருக்கின்ற இரு கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களை—நீண்டு பரந்து, விரிந்து கிடக்கின்ற நெல்லை மாவட்டத்தில் தென்காசியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஒன்றையும், அதேபோல் தென்பகுதியில் இருக்கின்ற வள்ளியூரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஒன்றையும் அமைத்துத்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-00*

அடுத்ததாக, சிறைத் துறையில், சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு Non-Official Visitorகள் என்று சிலர் போய்ப் பார்ப்பார்கள். அவர்கள் போய் சிறையில் போடப்படுகின்ற சாப்பாடு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்க்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் அப்படிப்பட்ட நடைமுறை இல்லாத காரணத்தால், இப்போது மதுரை போன்ற இடங்களிலுள்ள சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருக்கின்ற நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசு உடனடியாக சிறைச் சாலைகளை Non-Official Visitors பார்க்கிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, திருச்சி, மதுரை, கோவை போன்ற இடங்களில் இருக்கின்ற சரக சிறைத் துறை துணைத் தலைவர்கள் பதவியை நெல்லையிலும் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறையில் இருக்கின்ற சிறைக்கைதிகள் இரவு நேரங்களில் 100 பேர், 200 பேர், 500 பேர் என்று ஒரே செல்லில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்குக் கழிப்பிட வசதி இல்லை. இரவில் 12 மணி நேரம் ஒரே அறையில் இருக்கின்றார்கள். ஆகவே அங்கே நீரடி கழிப்பிட வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைதிகளுக்கான உணவுக்காக இந்த அரசு மிக அதிக அளவில் செலவழிக்கிறது. உதாரணமாக 'பி' பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு அரிசி உணவுக்கு ஒரு நாளைக்கு ரூ.15.67 காசுகள் கொடுக்கிறார்கள். கோதும்ம உணவாக இருந்தால் ஒரு நாளைக்கு ரூ.16.07 காசுகள் கொடுக்கிறார்கள். ஆனால் அதை முறையாக வழங்குவதில்லை. அவர்களுக்குத் தரமான உணவுகள் [illegible]டுக்கப்படவில்லை. அவர்களுக்குத் தரமான உணவு கொடுக்கப்படுகிற வகையில் அரசு அதைக் கண்காணிக்க வேண்டும். அவர்களுக்குத் தரமான உணவு வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் ஜெயிலில் இருந்தபோது மிகப் பெரிய அளவில் கொடுமைப்படுத்தப்பட்டதாக பத்திரிகைகளிலும் வெளியிலும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சென்னை சிறையில் வைத்து சித்திரவதைப்படுத்தினார்கள் என்று கூறினார்கள். சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்ற வ.உ.சி. அவர்கள் சிறையில் செக்கிழுத்தார்களே அதேபோன்று இவர் செக்கிழுத்தாரா? அங்கே அவரை என்னென்ன கொடுமைப்படுத்தினார்கள் என்பதை எல்லாம்

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக இந்த அவையில் தெரிவிக்க வேண்டும். அதோடு அல்-உம்மா இயக்கத் தலைவர் பாட்சாவுக்கு மிக அதிகமாக சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள் என்று உண்மைக்கு மாறான தகவல்களை எல்லாம் சிலர் பத்திரிகைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவருக்கு என்ன சலுகைகள் தரப்பட்டு இருக்கின்றன, இந்த பாட்சாவுக்கு தரப்பட்ட சலுகைகளில் முன்னாள் முதலமைச்சருக்கு என்னென்ன சலுகைகள் மறுக்கப்பட்டுள்ளன. அவரை எப்படியெப்படிக் கொடுமைப்படுத்தினீர்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லையிலுள்ள மத்திய சிறைச்சாலையிலிருந்து கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஆயுதங்கள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. சாதிச் சண்டை வெளியில்தான் நடக்கிறது என்றால், அந்த சிறைச்சாலையிலும் அப்படிப்பட்ட சண்டைகள் நடப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வருகிறது. ஆகவே சிறைச்சாலைகளைக் கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணியில் நீதிமன்றம் தொடங்குவது குறித்து தஞ்சை மாவட்ட நீதிபதி அவர்கள் சென்ற மாதம் கட்டடத்தைத் தேர்வு செய்ய பேராவூரணிக்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே விரைவில் இந்த நிதியாண்டிலேயே பேராவூரணியில் நீதிமன்றம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் நான் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று சொல்வார்கள். என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய வெற்றிக்குப் பின்னால் எந்தப் பெண்ணும் கிடையாது. டாக்டர் கலைஞர்தான் இருக்கிறார் என்பதைப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1967 ஆம் ஆண்டும் 1971 ஆம் ஆண்டும் 1996 ஆம் ஆண்டும் இந்தச் சட்டப் பேரவைக்கு என்னைத் தேர்ந்தெடுத்ததற்கும், நான் சட்ட அமைச்சராக ஆவதற்கும் காரணமாக இருந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். எனவே அவருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து என்னுடைய பதிலுரையை இந்த அவைக்கு இப்போது அளிக்கின்றேன்.



*பிற்பகல் 1-05*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order. அதேமாதிரி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அதற்கு எம்.ஜி.ஆர்.தான் காரணமாக இருந்தார். அதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒழுங்குப் பிரச்சினையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்கள் விரும்புவதைச் சொல்கிறார்கள். நீங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதையும் சேர்த்துச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் 8 மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். சிறைத் துறையைப் பொறுத்த அளவில் 46 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீதி நிருவாகத்தைப் பொறுத்த அளவில் 65 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பல நல்ல, அரிய, உயர்ந்த, சிறந்த வரவேற்கத் தகுந்த கருத்துக்களையெல்லாம் இந்த மாமன்றத்திலே வழங்கியிருக்கிறார்கள்.

சிறைத் துறையைப் பொறுத்த அளவில் அவர்கள் சொன்ன கருத்துகளில் மிகப் பெரும்பான்மையானவை, சிறைத் துறையைச் சீர்திருத்த வேண்டும்; அங்கும் இங்குமாகச் சில தவறுகள் நடக்கின்றன; தரமான உணவுகள் வழங்கப்படவில்லை; 8 மணி நேர வேலைத் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்பன போன்ற கருத்துகளை மையமாக வைத்தே பல உறுப்பினர்கள் பேசினார்கள். அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் புதிதாகத் தங்களுடைய ஊருக்குச் சிறை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

நான் இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாட்டிலே மத்திய சிறைகள் 8 இருக்கின்றன. சிறப்புக் கிளைச் சிறைகள் 3 இருக்கின்றன. மகளிருக்கென்று தனியாக 2 சிறைகள் இருக்கின்றன. கிளைச் சிறைகள் 115 இருக்கின்றன. திறந்த வெளிச் சிறை ஒன்று இருக்கிறது. தோட்டச் சிறை ஒன்றிருக்கிறது. இளைஞர்கள் சீர்திருத்தச் சிறை ஒன்று இருக்கிறது. ஆக 131 சிறைச்சாலைகள் உள்ளன. அவற்றில் இருக்கின்ற மொத்த இடங்கள் 18,000 ஆகும். ஆனால் சிறைக்

கைதிகளாக, விசாரணைக் கைதிகளாக, தண்டனைக் கைதிகளாக இப்போது சிறைக்கூடத்திலே இருப்பவர்கள் 15,378 தான். எனவே சிறை ஒன்றும் நிரம்பி வழியவில்லை. இடம் இல்லாமல் இருக்கவில்லை. எனவேதான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன், நமக்கு சிறைச்சாலை தேவை என்பதைவிட தொழிற்சாலை தேவை, பாடசாலை தேவை, நெடுஞ்சாலை தேவை, இவற்றிற்குத்தான் முன்னுரிமை அளிக்க வேண்டுமே தவிர சிறைச்சாலைதான் முக்கியம் என்ற அடிப்படையில் இருந்துவிடக் கூடாது. ஆனால் சிறைச்சாலைகள் ஒழுங்காகக் கண்காணிக்கப்பட வேண்டும். பாதுகாப்போடு இருக்க வேண்டும். நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும். சிறந்து செயல்பட வேண்டும் என்பதிலே இரண்டுபட்ட கருத்து கிடையாது. ஏனென்று சொன்னால் இன்றையதினம் சிறைச்சாலைகளிலே தீவிரவாதிகளெல்லாம் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்காணிப்பதிலே கவனமாக இருக்கவேண்டும். TADA கைதிகள் இருக்கிறார்கள். National Security சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்களெல்லாம் இருக்கிறார்கள். இன்னும், குண்டர்கள் சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்களெல்லாம் இருக்கிறார்கள். இன்னும் சில இடங்களிலே ஜாதிப் பிரச்சினைகள்கூட சிறைக்குள்ளே தலைதூக்குகிறது என்பதெல்லாம் ஓரளவுக்கு உண்மை. எனவே, புதிய சிறைகளைத் திறப்பதைவிட அவற்றைக் கண்காணிப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய முக்கிய நோக்கம் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அவையிலே நான் தெரிவிக்கும்போது சொன்னேன், நம்முடைய மாநிலத்தில் 15,378 பேர்தான் சிறைச்சாலைகளிலே இருக்கிறார்கள் என்று. நமக்குக் காலையிலும் மாலையிலும் வருகின்ற பத்திரிகைகளைப் படித்துப் பார்த்தால் அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் இருக்கும். வெட்டு, குத்து, சங்கிலிகளை அறுத்தல், தாக்குதல் போன்ற செய்திகளெல்லாம் பரபரப்பாக வரும். நமக்கே தெரியும், நாட்டிலே சட்டம் ஒழுங்கே இல்லையோ, குற்றங்கள் அதிகரித்துவிட்டதோ என்று மலைப்பாக நமக்குத் தோன்றும். ஆனால் வளர்ந்து வருகின்ற நாடுகளிலே குற்றங்கள் எப்படி இருக்கின்றன என்ற கணக்கைப் பார்த்துவிட்டு, நம்முடைய மாநிலத்திலே எப்படி இருக்கிறது என்ற கணக்கையும் பார்த்தால், அப்போதுதான் இந்த மாநிலம் மிகவும் சிறப்பாக, அமைதியாக, நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருக்கிறது என்ற உண்மையை நம்மாலே உணர்ந்துகொள்ள முடியும். உயர்ந்த நாடுகள் பண்புள்ள நாடுகள், வளர்ந்த நாடுகள், தொழிலில்



சிறந்த நாடுகள், சுதந்திரம் மிக்க நாடுகள் என்று கருதப்படுகின்ற நாடுகளில் தமிழ்நாட்டைவிட அதிகமாக சிறைக் கைதிகள் உள்ளேயிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இத்தாலியினுடைய மக்கள் தொகை 5 கோடியே 72 இலட்சம். ஆனால் அங்கே சிறைச்சாலைகளிலே இருக்கின்றவர்கள் எண்ணிக்கை 50,197 ஆகும். ஃபிரான்ஸ் நாட்டினுடைய மக்கள் தொகை 5 கோடியே 80 இலட்சம். அங்கு சிறைச்சாலைகளிலே 1994 ஆம் ஆண்டினுடைய விவரப்படி 52,550 பேர் இருக்கிறார்கள். இங்கிலாந்து—உலகத்திற்கே சுதந்திரத்தைச் சொல்லி தந்த நாடு. உலகத்திற்கே ஜனநாயகத்தைச் சொல்லித் தந்த நாடு. அதனுடைய மக்கட்தொகை 5 கோடியே 90 இலட்சம். அங்கே சிறைச்சாலைகளில் இருப்பவர்கள் 50 ஆயிரம் பேர். ஜெர்மனி, 8 கோடி மக்கட்தொகை கொண்ட நாடு, 1993-ஆம் ஆண்டு விவரப்படி அங்கே சிறைச்சாலைகளில் இருப்பவர்கள் 51,567 ஆகும். ஸ்பெயின் நாடு-வெறும் 88 இலட்சம் மக்களைக் கொண்ட நாடுதான். அந்த நாட்டிலே 33,274 பேர் சிறைகளிலே 1991 விவரப்படி இருக்கிறார்கள். இதற்குப் பிறகு இவர்களெல்லாம் குறைந்து இருப்பார்கள் என்ற வாதத்திற்கே இடமில்லை. இங்கிலாந்து பிரதமராக இருக்கிற டோனி பிளேர், 1995, 1996-ல் ஆற்றிய உரைகள் எல்லாம் அண்மையிலே புத்தகமாக வெளி வந்திருக்கிறது. அதிலே அவர் சொல்கிறார். குற்றங்கள் எல்லாம் 3 மடங்கு அதிகரித்து விட்டன என்று சொல்லி Tough in crime, Tough cause of crime என்றுதான் இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேர், சொல்லியிருக்கிறார். எனவே மேலை நாடுகளில் எல்லாம் 50 ஆயிரம், 52 ஆயிரம், 51 ஆயிரம் என்று இருக்கும்போது, தமிழ்நாட்டில் 15,378 பேர்கள்தான் சிறையிலே இருக்கிறார்கள் என்றால், இந்த நாடுதான் அமைதியான பூமி, இந்த நாடுதான் மகிழ்ச்சியான பூமி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-10

எல்லாக் கைதிகளும் இங்கே ஒழுங்காக நடத்தப்படுகிறார்கள். சிறையிலே இருக்கின்ற சீர்திருத்தங்களைப் பற்றி நான் குறைவாக மதிப்பிடவில்லை. பெருமதிப்பிற்குரிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் குறிப்பிடும்போது, 8 மணி நேர வேலைத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் அவருக்கு மகிழ்ச்சியோடும், பெருமிதத்தோடும் சொல்லிக்கொள்கிறேன். முதன்முதலாக சேலத்தில்தான் இந்த 8 மணி நேர வேலைத் திட்டம் அமலாக்கப்பட்டது. இரண்டாவது

கட்டமாக செல்வி ஜெயலலிதா ஆட்சியில் மதுரையிலும், சென்னையிலும் அந்தத் திட்டம் அமலாக்கப்பட்டது. ஆக 8 சிறைகளில், கடந்த காலத்தில் மூன்றே சிறைக்கூடங்களில்தான் 8 மணி நேர வேலைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மூன்றாவது கட்டமாக திருச்சி, கோவை, வேலூர் மற்றும் கடலூர் ஆகிய 4 மாவட்டங்களில் கடந்த ஆண்டே 8 மணி நேர வேலைத் திட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம். இதற்காக 407 பேரை புதிதாகக் காவலர்களாக வேறு நியமித்தோம். இறுதிக் கட்டமாக இப்போது பாளையங்கோட்டை, புதுக்கோட்டை, பெண்களுக்கான தனிச் சிறை ஆகிய இவற்றிற்கு 8 மணி நேர வேலைத் திட்டத்தை அமலாக்கி, தமிழ்நாட்டிலே எல்லா மத்திய சிறைகளிலும் 8 மணி நேர வேலைத் திட்டத்தை அமலாக்குகிறோம் என்ற வரலாற்றை கலைஞர் அவர்களுடைய அரசு படைக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்காக ஆன செலவுகளை ஒதுக்க நிதித் துறையும் இசைவு தெரிவித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்களும், மற்றவர்களும் பேசும்போது, தேர்தல் நேரத்திலே முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களை நாம் கொடுமைப்படுத்தியதாகவும், அவரைச் சிறையில் மிகவும் வதைத்ததாகவும், வாட்டி வதைத்ததாகவும், எந்த வசதியும் கொடுக்காததாகவும் தேர்தலில் எல்லா இடங்களிலும் சொல்லி, அதன்மூலம் வாக்குகளைப் பெற முயற்சித்தார், அனுதாபத்தை உண்டாக்கினார். நீங்கள் சிறையிலே அப்படி எதாவது செய்தீர்களா, அவர்களுக்குச் சலுகையே காட்டவில்லையா, அவரைக் கொடுமைப்படுத்தினீர்களா என்று இங்கே சில கேள்விகளை எழுப்பினார்கள். நான் இந்த மாமன்றத்திற்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். முன்னாள் முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் 7-12-1996 முதல் 3-1-1997 வரை 28 நாட்கள், வந்த நாளையும், போன நாளையும் கழித்தால் 26 நாட்கள் மத்திய சிறையிலே இருந்தார்கள். இந்த 26 நாட்களுக்குள் அவரைப் பார்ப்பதற்கு பார்வையாளர்கள் 250 பேரை அனுமதித்திருக்கிறோம். என்னென்ன பொருட்கள் எல்லாம் நாங்கள் வழங்க அனுமதித்திருக்கிறோம் என்பதைக் கேட்டால் உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். வாழைப்பழம்-85, ஆப்பிள்-79, பன்-89, பெரிய டவல்-119, நைட்டி-64, சிறிய டவல் 126, கைக்குட்டை-76, கமலா ஆரஞ்சு-144, டர்கி டவல்-61 என்று இன்னும் பல



வழங்கப்பட்டிருக்கின்றன. நமக்கே ஆச்சரியமாக இருக்கிறது. எப்படி இவற்றைப் பயன்படுத்தினார்கள் என்று. அவருடைய சாமார்த்தியத்தை நான் சொல்கிறேன். சிறைச்சாலையை சிங்காரச் சோலையாக ஆக்குவோம் என்று சொல்வார்கள். ஆனால் சிறை அறையையே சிங்காரிக்கக்கூடிய திறமை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு இருந்தது என்பதை நான் அடக்கத்தோடு ஒத்துக்கொள்கிறேன். இந்த அளவுக்கு நாங்கள்...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, Point of order. நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், ஆரஞ்சுப் பழம், கைக்குட்டை, மாற்றுத் துணி என்றெல்லாம் சொன்னார்கள். அது ஒரு நாளைக்கு வழங்கப்பட்டதா? இது அவருக்கு மட்டும்தானா? தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா சிறைக் கைதிகளுக்கும் இப்படி வழங்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுதான் சொன்னேன். அந்த அம்மையார் மேடைக்கு மேடை நாங்கள் கொடுமைப்படுத்தியாகச் சொன்னார். எங்கள் தலைவர் அவர்கள்தான், முதல்வர் அவர்கள்தான், கலைஞர் அவர்கள்தான் கருணை கொண்டு, அவருடைய வீட்டிலே இருந்து சட்டபூர்வமாக இப்படி அனுமதிக்கக்கூடிய பொருட்களைத் தாராளமாகக் கொடுங்கள் என்று சொன்னதன்பேரில், நாங்கள் அந்தச் சலுகைகளை எல்லாம் கொடுத்தோம். ஆனால் அம்மையார் அவர்கள் மேடைக்கு மேடை நாங்கள் ஏதோ கொடுமைப்படுத்தியதாக தேர்தல் நேரத்திலே பிரச்சாரம் செய்தார்கள். அந்தப் பிரசாரம் தவறானது, உண்மைக்கு.....

பிற்பகல் 1-15

**திரு. இரா. தாமரைக்கனி:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலே இருந்து, கைதியாகக் கருதப்பட்டால், எல்லாக் கைதிகளுக்கும் வீட்டிலிருந்து துணி வரத்தான் செய்யும். இதை மிகைப்படுத்தி, ஏதோ சலுகை செய்த மாதிரி பேசுவது என்பது சரியாக வராது.

**மாண்புமிகு திரு. ஆலடி. அருணா:** தலைவர் அவர்களே, நான் ஒன்றும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் விரும்புவார்களானால், ஒவ்வொரு நாளும், அவருக்குக் கொடுத்ததற்கும், பிறகு பெற்றுக்கொண்ட, அழுக்குப் புடவைகளைத் திருப்பிக் கொடுத்ததற்கும், செல்வி ஜெயலலிதாவிடத்திலே

கையொப்பமே வாங்கி வைத்திருக்கிறோம். வேண்டுமானால், மாலையிலே என்னுடைய அலுவலகத்திற்கு வந்து பார்த்துக்கொள்ளலாம். நான் இதை உங்களிடத்திலே காட்டத் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே...

**திரு. இரா. தாமரைக்கனி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன Point of order? நீங்கள் ஒரு Point of order எழுப்பினீர்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சலவைத் தொழிலாளிக்குத்தான் இந்த list கிடைக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த list எப்படிக் கிடைத்தது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது முறையல்ல.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது ஏதோ சலவைத் தொழிலாளியை இழிவுபடுத்துவதுபோல இருக்கிறது. அவர் யாரையோ இழிவுபடுத்துவதாக காலையிலே கிருஷ்ணசாமி எழுந்து ஒரு பிரச்சினையை எழுப்பினார். அது வேறு விஷயம். இப்போது சலவைத் தொழிலாளியையும் இழிவுபடுத்திப் பேசியிருக்கிறார்கள். இது அவைக்குறிப்பிலே இருப்பதுதான் நல்லது. ஏனென்றால், அவரை நாடு உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காக.

**திரு. இரா. தாமரைக்கனி:** இழிவுபடுத்தும் நோக்கத்தோடு பேசவில்லை. list, கணக்கு எடுப்பது வெளுக்கப் போடுகிறவர்கள், இந்த மாதிரி சலவைத் தொழிலாளர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சட்ட அமைச்சர் அவர்கள் கொஞ்சம் இருங்கள். நீங்கள் கேட்ட ஒரு point-க்கு, அந்த அம்மாவிற்கு ஒவ்வொரு நாளும் கொடுக்கப்பட்ட பொருட்களுக்கு அவர்களே கையெழுத்து போட்டுக் கொடுத்து இருக்கிறார்கள், நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வந்து பார்க்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். இனிமேல் சலவைத் தொழிலாளி, Jail Warden என்று பேசுவது—இதுவா பேச்சு? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தொழிலாளியைக் கேவலமாகப் பேசவில்லை. தொழிலாளர்களுடைய திறமையைப் பார்க்கவேண்டுமே தவிர,



தொழிலாளர்களைக் கேவலப்படுத்தக்கூடாது என்பது புரட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்கு இட்ட கட்டளை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே புரட்சித் தலைவர் எங்கே வருகிறார்? நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாதமெல்லாம் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களை சிறைச்சாலையிலே நாங்கள் கொடுமைப்படுத்தவில்லை, நியாயமாக நடத்தினோம், நல்ல சலுகைகளோடு நடத்தினோம். முறையாக நடத்தினோம் என்ற விவரங்கள் நாட்டுக்குத் தெரிய வேண்டும், அவற்றை நாளிதழ்கள் வெளியிட வேண்டும் என்ற அந்த நோக்கத்தோடுதான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறு எந்தக் காரணத்தினாலும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரையில், தி.மு.க. அரசு எவ்வளவு பெரிய வரலாற்றைப் படைத்திருக்கிறது என்பதை இந்த மாமன்றம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில், 1991-லிருந்து 1996 வரை அவர்கள் புதிதாக அனுமதித்த நீதிமன்றங்கள் 46 தான். 5 ஆண்டுகளிலே அவர்கள் அனுமதித்த நீதிமன்றங்கள் வெறும் 46 நீதிமன்றங்கள்தான். கலைஞர் அவர்கள் 4-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று நாளையோடு இரண்டு ஆண்டுகள் ஆகப்போகின்றன. இந்த இரண்டு ஆண்டுக்குள் இந்த அரசு, கடந்த ஆண்டு வரை 74 புதிய நீதிமன்றங்களையும், இந்த ஆண்டு 15 நீதிமன்றங்களையும், ஆக மொத்தம் 89 நீதிமன்றங்களை அனுமதித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ்நாட்டின் வரலாற்றில் 2 ஆண்டுகளில் 89 நீதிமன்றங்களுக்கு அனுமதி அளித்தது என்ற வரலாற்றைப் படைத்தது, டாக்டர் கலைஞர் அவர்கள் அரசுதான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஆண்டுகளில் அவர்கள் சாதிக்காததை நாங்கள் இந்த இரண்டு ஆண்டுக்குள் சாதித்து இருக்கிறோம். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்.' என்பதற்கு இதுதான் ஆதாரமாக விளங்குகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதிமன்றங்களுக்கும், வழக்கறிஞர்களுடைய அறைகளுக்கும் இன்னும் நீதிபதிகளுக்கும் பல்வேறு வசதிகள் எல்லாம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்தக்

கோரிக்கைகள் எல்லாம் நியாயமானவை, தேவையானவை, வரவேற்கத்தக்கவை, பரிசீலிக்கத்தக்கவை என்பதிலே இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை. ஆனால் ஒரு உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. நீதித் துறையிலே இன்றைக்கு இருக்கிற நிலை என்ன? அதனுடைய வருமானம் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நீதித் துறைக்கு செலவாகின்ற பணம் ஏறத்தாழ 120 கோடி ரூபாயாகும். ஆனால், அதற்கு வருமானம் 50 கோடி ரூபாயோ, அல்லது 52 கோடி ரூபாயோதான் வருகிறது. எனவே, இந்த அளவுக்குப் பற்றாக்குறை நிலையை வைத்துக்கொண்டு, எந்த அளவிற்கு நாம் நீதித் துறையில் எதிர்பார்த்த அளவுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

1998-99ஆம் ஆண்டில் நமக்கு நீதித் துறையில் ஆகின்ற செலவு ரூ.128.51 கோடி. நீதித் துறையில் அபராதம், இன்னும் கட்டணங்கள் இவை மூலமாக நமக்குக் கிடைக்கின்ற பணம் ரூ.52.50 கோடிதான். ஆகவே ஏறத்தாழ ரூ.70 கோடிக்கு மேல் பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினாலேதான் நாம் எதிர்பார்த்த அளவிற்கு, நம்முடைய தாமரைக்கனி வேண்டிக்கொண்டதைப் போல, மற்றவர்கள் வேண்டிக்கொண்டதைப்போல நீதிமன்றக் கட்டடங்களை நம்மாலே உடனடியாக அதிகப்படுத்த முடியவில்லை. என்றாலும் படிப்படியாக அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முனைப்போடு செயல்படுகிறோம். இந்த நேரத்தில் நான் வேண்டிக்கொள்வதெல்லாம், இங்கே இருப்பவர்களிடத்திலே வேண்டிக் கொள்வதெல்லாம்—இரண்டு பிரச்சினைகளை நான் இந்த மன்றத்திலே வைக்க ஆசைப்படுகிறேன். ஒன்று இப்போது நீதிமன்றக் கட்டணங்கள் எல்லாம் மிகக் குறைவாக இருக்கின்றன. அந்தக் கட்டணங்கள் எல்லாம் எப்போது நிர்ணயிக்கப்பட்டன என்றால் 1870, 1887, 1955 ஆகிய இந்த ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் ஆகும். 120 ஆண்டுகளாக நாம் இந்தக் கட்டணங்களுக்கு மாற்றங்களையே செய்யவில்லை. இன்றையதினம் உயர்நீதிமன்றத்திலே writ மனு தாக்கல் செய்தால் கட்டணம் ரூ. 100 தான். 1958-லும் ரூ.100 தான், இப்பொழுதும் ரூ.100 தான். மேல் முறையீட்டிற்கு ரூ.100 தான். பல்வகை மனுக்களுக்கு இரண்டே ரூபாய்தான் இன்றைக்கு நாம் கொடுக்கிறோம். அதேபோல மற்ற நீதிமன்றங்களுக்கு 50 காசிலிருந்து வெறும் ரூ.2.50 வரைக்கும்தான் வசூலிக்கப்படுகிறது. இன்றையதினம் இப்படிக் கட்டணங்கள் எல்லாம் மிகக் குறைவாக



இருக்கின்ற காரணத்தினாலேதான் நம்முடைய நீதித் துறையைப் பொறுத்த அளவில் நிதிநிலைமையில் பற்றாக்குறை இருக்கிறது. இதை எப்படிப் போக்குவது? இந்தக் கட்டணங்களை ஓரளவு reasonable-ஆக, உயர்த்துவதற்கு வழக்கறிஞர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். அரசு அதை உடனடியாக இப்போதே அமலாக்கப்போகிறது அல்லது கட்டணத்தை உயர்த்தப்போகிறது என்று நான் சொல்வதாக யாரும் தயவுசெய்து எடுத்துக்கொள்ளாதீர்கள். அந்த அடிப்படையில் நான் இதைச் சொல்லவில்லை. எதைச் சொல்ல விரும்புகிறேன் என்றால், இன்றைக்கு இருக்கின்ற கட்டணங்கள் எல்லாம் சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னாலே நிர்ணயிக்கப்பட்டவை. அதற்குப் பிறகு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு திருத்தம் செய்யப்பட்ட நிலையில் 50 காசு என்பது முக்கால் ரூபாய் அதாவது 75 காசு என்று மாற்றப்பட்டது. அவ்வளவுதான். அதற்குப் பிறகு 1995-ல் சில மாற்றங்கள். அதற்குப் பிறகு எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை. எனவேதான் இந்த மாற்றங்களுக்கு அவர்கள் ஒத்துக்கொண்டால், இந்தப் பணிகளையெல்லாம் மிக வேகமாக முடிக்க முடியும். இரண்டே ஆண்டிற்குள் அந்த அடிப்படைத் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்துவிட முடியும். இது ஒரு நிலையாகும்.

இன்னொரு நிலையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எங்கள் ஊருக்கு சார்பு நீதிமன்றம் வேண்டும்; ஏங்கள் ஊருக்கு மாவட்ட நீதிமன்றம் வேண்டும்; எங்கள் ஊருக்கு Munsif நீதிமன்றம் வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்னவென்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற வருவாய் மாவட்டங்கள், வருவாய் வட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள் இவற்றின் எண்ணிக்கையைப் பார்த்து, அத்தோடு இப்போது நீதிமன்றங்களில் எண்ணிக்கையைப் பார்த்தால், வருவாய்த் துறையின் மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்களைவிட தமிழ்நாட்டில் இருக்கின்ற நீதிமன்றங்கள் அதிகம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்கள் வருவாய் மாவட்டங்கள். ஆனால் நமமிடத்திலே இருக்கின்ற மாவட்ட நீதிமன்றங்கள் 31 ஆகும். புதியதாக 6 மாவட்டங்கள் அமைத்திருக்கிறோம். அந்த மாவட்டங்களிலே நீதிமன்றங்களேயே அமைக்க முடியவில்லை. எனவே இருக்கின்ற நீதிமன்றங்களில் இருந்து மாற்றம் செய்தால், இந்த வேலையை இந்தக் கோரிக்கையை எளிதிலே பூர்த்தி செய்துவிடலாம். அதேபோல் தமிழ்நாட்டில் வருவாய்க் கோட்டங்கள் 72. நம்மிடத்திலே இருக்கின்ற சார்பு நீதிமன்றங்கள் 99. அதாவது கோட்டங்களுடைய

எண்ணிக்கையைவிட சார்பு நீதிமன்றங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் 24 கோட்டங்களில் நமக்குச் சார்பு நீதிமன்றங்களே இல்லை. இந்தக் கோட்டங்களுக்கு எல்லாம் எந்தெந்த நகரங்களில் இரண்டு சார்பு நீதிமன்றங்கள் இருக்கின்றனவோ, அவற்றை மாற்றுவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். அதேபோல் தமிழ்நாட்டில் தாலுகாக்கள் 190. ஆனால் நமக்கு இருக்கின்ற தாலுகா நீதிமன்றங்கள் 401 ஆகும். Magistrate Court, Munsif Court என்று 401 நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆனால் தாலுகாக்கள் 190 தான். இப்போது 45 தாலுகாக்களில் நீதிமன்றங்களே இல்லை. இந்த நீதிமன்றங்களை மாற்றுவதன் மூலம் இந்த வேலைகளையெல்லாம் எளிதாகப் பூர்த்தி செய்துவிடமுடியும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும். எனவே இதை மாற்றும்போதுதான் தாமரைக்கனி போன்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். இதை அரசியல் ஆக்கக்கூடாது.

Decentralisation - நீதித்துறையைப் பரவலாக்க வேண்டும். ஏனென்றால் ஒரு காலத்தில் ஒரே சட்டக் கல்லூரி இருந்தது. இன்றைக்கு அரசு சட்டக் கல்லூரிகள் 5 இருக்கின்றன. தனியார் கல்லூரி ஒன்று இருக்கிறது. மொத்தம் 6 கல்லூரிகள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான மாணவர்கள் சட்டப் பட்டதாரிகளாக வெளியே வருகிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்தந்தப் பகுதிகளிலே பணி செய்ய ஆசைப்படுவார்கள். இதற்காகவே, அவர்கள் தாங்கள் இருக்கின்ற வட்டாரங்களில், நகரங்களில் கோட்டங்களில் நீதிமன்றம் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவது இயற்கை. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியது நம்முடைய தலையாய கடமை. அது பெரிய செலவினங்களைக்கூட உண்டாக்காது. மனம் உண்டானால் மார்க்கம் உண்டு. இதயம் உண்டானால் இடம் உண்டு என்ற அடிப்படையிலே கொஞ்சம் விட்டுக் கொடுக்கின்ற இதயத்தோடு அரசியல்வாதிகளும், வழக்கறிஞர்களும் செயல்படுவார்களேயானால், எல்லா ஊர்களிலும், எல்லா வட்டங்களிலும், எல்லாக் கோட்டங்களிலும், எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நீதிமன்றங்கள் இருக்கின்றன என்ற நிலைமையை நிச்சயமாக உருவாக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-25

இன்னொரு வாதத்தை இங்கே பங்கேற்ற எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள். சில வழக்குகள் முடிய 15 ஆண்டுகள்



ஆகின்றன. சில வழக்குகள் முடிய ஒரு தலைமுறைபோய் அடுத்த தலைமுறை வந்துவிடுகிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நீங்களே எண்ணிப்பார்க்க வேண்டும். நீதிமன்றத்திலே தேங்கிக் கிடக்கிற வழக்குகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் ஒரு அடிப்படை உண்மை தெரியும். நம்முடைய Judicial system-அதாவது நீதி நிருவாக முறையிலே, அடிப்படையிலே ஒரு பெரிய கோளாறு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு மாநிலத்தைப் பொறுத்த அளவில் உயர்நீதிமன்றம்தான் உயர்ந்ததாக இருக்கிறது. இதை உயர் நீதிமன்றம் என்று சொல்கிறோம். அமெரிக்காவில் Supreme Court என்றே சொல்கிறார்கள். Supreme Court of State என்றே சொல்கிறார்கள் சில மாநிலங்களில். நம்முடைய உயர்நீதிமன்றத்தில் இப்போது தேங்கிக் கிடக்கின்ற Civil வழக்குகள் எத்தனை என்றால் 3 இலட்சம் வழக்குகள், ஆனால் சிவில் மற்ற வழக்குகள் அடிமட்ட நீதிமன்றத்தில் Munsif Court-ல் 2 இலட்சத்து 61 ஆயிரம் வழக்குகள்தான் இருக்கின்றன. ஒரு Munsif Court-லே இருக்கிற நிலுவையைவிட உயர்நீதிமன்றத்திலே அதிகமாக இருக்கிறது. அப்படியானால் நம்முடைய முறையிலே எவ்வளவு பலவீனம் இருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள். அதேபோல Criminal வழக்குகளை எடுத்துக்கொண்டால் 22 ஆயிரம் வழக்குகள் இருக்கின்றன. மொத்தத்திலே எடுத்துக் கொண்டோமானால், 27 சதவிகிதம் வழக்குகள் நிலுவையில் உயர்நீதிமன்றத்திலே இருக்கின்றன. அப்படியானால், அடிப்படையிலே சில மாற்றங்களைச் செய்யவேண்டும். அதை மாநில அரசால் மட்டும் செய்துவிட முடியாது. மத்திய அரசும் சேர்ந்து அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்து, அதன் மூலமாகத்தான் இதற்கெல்லாம் தீர்வு காணமுடியுமே தவிர, புதிய நீதிபதிகளைக் கொஞ்சம் அதிகமாக அமர்த்தி விடுவதாலோ, புதிய நீதிமன்றங்களை அமைத்துவிடுவதாலோ நாம் எதிர்பார்க்கிற பயனைத் தந்துவிடும் என்று நாம் எண்ணிவிடக்கூடாது.

நான் இந்த நேரத்திலே சொல்கிறேன், இன்றைக்கு வழக்குகளை விரைவாக முடிக்க வேண்டும், காலதாமதமின்றி முடிக்க வேண்டும் என்பதற்காக நாம் இந்த நீதிமன்றங்களை அமைக்கின்றோம். எந்த நீதிமன்றத்திலாவது ஒழுங்காக வழக்குகள் முடிகிறதா? எதிலாவது நாம் எதிர்பார்த்த அளவுக்கு வழக்குகளை நடத்த முடிகிறதா என்று எண்ணிப் பாருங்கள்? கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களையெல்லாம், கொள்ளைகளையெல்லாம், மோசடிகளை எல்லாம், அதிகார துஷ்பிரயோகங்களை எல்லாம் ஒழுங்காக விசாரித்து, மக்களுக்கு, நாட்டுக்கு, அதன் தொடர்பான உண்மையை விளக்கிச் சொல்ல வேண்டும்

என்பதற்காகத்தான் கூடுதலாக 3 நீதிமன்றங்களை நியமித்தோம். அவற்றில் இப்போது வழக்கு நடத்தப்படுகிறதா? வழக்கிலே நாம் எதிர்பார்த்த அளவுக்கு தீர்ப்பை அதிலே பெற முடிகிறதா? டான்சி வழக்கை எடுத்தால் 74 வாய்தாக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. டான்சி வழக்கைப் பொறுத்தமட்டிலும் முதலில் 3.6.1990-ல் Summons for A1, A5 for the appearances were issued.

3.6.1997 முதல் அந்த வழக்கு ஒவ்வொரு முறையாக அழைக்கப்பட்டு 24.4.1998 வரை ஏறத்தாழ 74 வாய்தாக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. வாய்தா எப்படிக் கேட்கப்பட்டிருக்கிறது? ஒருமுறை கேட்கிறார்கள் வக்கீல் வரவில்லையென்று. இன்னொரு முறை, எல்லாம் ஆங்கிலத்திலே இருக்கிறது, தமிழிலே வேண்டும் என்கிறார்கள். பிறகு தமிழிலே கொடுத்தால் தமிழிலே இருக்கிறது, அது படிக்கும்படியாக இல்லை, கொஞ்சம் legible-ஆக இல்லை, அதை மாற்றித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். பிறகு, நாங்கள் இந்த வழக்கிலே தடையாணை கேட்டு இருக்கிறோம், அந்தத் தடையாணை முடிவுக்கு வந்த பிறகு அதை விசாரிக்கலாம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட யுக்தி எதற்குப் பயன்படுகிறது என்றால் நீதியைச் சந்திக்கப் பயப்படுகிறார்கள் ஊழல் பேர்வழிகள் என்பதற்குத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவர்களுக்கெல்லாம் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் உள்துறை அமைச்சராக இருக்கிறார்....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்த பிறகு நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று ** உள்நோக்கத்தோடு பேசக்கூடாது. அதை அவை அனுமதிக்கவும் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி சொன்ன கருத்துக்கள் அவைக் குறிப்பிலே இடம் பெறாது. (குறுக்கீடு) நான் அந்த வாதத்திலே இறங்கினேன் என்றால் விவகாரம் ஜாஸ்தியாகி விடும், நீங்கள் உட்காருங்கள். நான் இப்பொழுது சொல்கிறேன், நீங்கள் கேட்பதனால் நான் சொல்லுகிறேன் என்று சொன்னால் அது முறையல்ல. அந்தப் பிரச்சினையில் நீங்கள் தலையிடாதீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது ** அவமதிப்பதாக இருக்கிறது. இப்போது சொன்ன வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே மகிழ்ச்சி. ஏனென்றால் இவை விளம்பரத்திற்காகவே சொல்லப்படுகிற கருத்துகள் ஆகும். இதற்கு இடம் அளிக்கக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, நான் பேசினால் மட்டும் விளம்பரமா? அவர்கள் பேசினால் விளம்பரம் கிடையாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** பற்றி இப்படி குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, எல்லா Court-களிலும் எல்லோரும்தான் வாய்தா வாங்குகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வாய்தா வாங்குகிற காரணத்தைச் சொல்கிறார். நீங்கள் வாய்தா வாங்குவது நியாயம் என்று பேசுங்கள், இப்போது உட்காருங்கள். நீங்கள் சத்தம் போட்டுப் பேசுவதால் உங்கள் பேச்சு எடுபடும் என்று நினைக்காதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள்தான் சத்தம் போட்டுப் பேசுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சத்தம் போட்டுப் பேசினால், நான் அதற்கு மேலே பேசுவேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, இப்போது பாரதிய ஜனதா கட்சி 17 கட்சிகளுடைய கூட்டோடு ஆட்சி நடத்துகிறது. அங்கே உள்துறை அமைச்சராக பெருமதிப்பிற்குரிய அத்வானி அவர்கள் இருக்கிறார்கள். அவர் எனக்கு மிகவும் வேண்டியவர். எனக்கும் அவருக்கும் நல்ல தொடர்பு உண்டு. என்னிடத்திலே ஒரு முறை உங்களுக்குப் பிடித்தமான நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்று கேட்டபோது அவருடைய கொள்கையிலிருந்து நான் முற்றிலும் மாறுபட்டு இருந்தாலும், அவருடைய கொள்கையிலே ஒரு சதவிகிதம்கூட எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் ஒரு நல்ல Parliamentarian என்ற முறையில் எனக்கு அத்வானியைத்தான் பிடிக்கும் என்று நான் சொன்னேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, ஏனென்றால் மக்களவையிலும் அவரோடு இருந்திருக்கிறேன், மாநிலங்களவையிலும் அவரோடு இருந்திருக்கிறேன். இது கல்கி பத்திரிகையிலே வெளியாகியது. அதை அங்கே உள்ள அவருடைய கட்சிக்காரர் ஒருவர் மொழிபெயர்த்து அத்வானிக்கு அனுப்பி வைத்தார். அத்வானி அதைப் படித்துவிட்டு எனக்கு நன்றி சொன்னார். அந்த அளவுக்கு அவரோடு நல்ல தொடர்பு இப்போதுகூட நான் வைத்திருப்பவன்நான். நான் அந்த அத்வானியிடத்திலே கொள்கையிலே மாறுபட்டிருந்தாலும் ஒரு விஷயத்திலே அவர் எப்பொழுதும் தெளிவானவர். அவர் மீது ஹவாலா வழக்கு தொடுக்கப்பட்டவுடன் நீதிமன்றத்திலே என்ன சொன்னார்? "என் வழக்கை விரைவிலே முடியுங்கள். முடிக்கிறவரை நான் தேர்தலிலே போட்டி போடமாட்டேன். நான் குற்றவாளியா, நிரபராதியா என்பதை நீதிமன்றம் சொல்லட்டும்" என்று சொல்லி அன்றையதினம் வழக்கைத் தொடுத்து ஹவாலா வழக்கிலே அவர் விடுதலையானார். நான் சொல்கிறேன், இவர்கள் நிரபராதி என்றால், தவறு செய்யவில்லை என்றால், ஊழல் புரியவில்லை என்றால், மோசடி செய்யவில்லை என்றால் ஆயிரக்கணக்கான கோடி பணத்தை சேர்க்கவில்லை என்று சொன்னால் நீதிமன்றத்திலே அவர்கள் தாக்கல் செய்யட்டும். என்னுடைய வழக்குகளை சீக்கிரம் முடியுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் நிரபராதி என்று நிருபிக்கத் தயாராக இருக்கிறேன் என்று மனு தாக்கல் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்களா?

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, High Court என்று இருக்கிறது. அந்த Court-லே Case போட வேண்டியதுதானே? விசாரணைக் கமிஷன் போடவேண்டியதுதானே? **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, நான் வாதத்தை நீடிக்க விரும்பவில்லை. விசாரணைக் கமிஷன் என்பது உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கு முன்னாலே...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தாமரைக்கனி ஒவ்வொன்றையும் வேகமாகப் பேசிவிட்டு கீழே உட்கார்ந்து கண்சிமிட்டிச் சிரிக்கிறார். (சிரிப்பு)

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, சட்டசபைக்கு வந்தால் சிரித்துக்கொண்டேதான் வர வேண்டும். அழுதுகொண்டே வரமுடியுமா? என்ன, தலைவர் அவர்களே இப்படிச் சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் உங்களைப் பாராட்டினார். உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** உண்மையாகச் சொல்லுங்கள். (சிரிப்பு) எல்லோரும் சிரிக்கிறார்கள். நான் மட்டும் சிரிக்கக் கூடாதா? என்ன நியாயம்? என்ன, தலைவர் இப்படி? ஏதாவது ஒரு வகையிலே குற்றம் சாட்டி என்னை மாட்டிவிட வேண்டும் என்று பார்க்கிறீர்கள், (பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, விரைவாக நீதியைப் பெறுவதற்குப் பதில், விரைவாக வழக்கை முடிப்பதற்கு ஒத்துழைப்பதற்கு பதில், விசாரணைக்கே வந்துவிடக்கூடாது என்பதற்கான யுக்திகள் எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மாமன்றத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எந்த யுக்தியைப் பயன்படுத்தினாலும் அதை இந்த அரசு முறியடித்துக் காட்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது என்ன நடக்கிறது என்றால் நீதித் துறையிலே தலையிட்டு எதையாவது செய்ய முடியுமா என்று அவர்கள் முயற்சிக்கிறார்கள். அதனுடைய முதல் கட்டமாகத்தான் அவர்கள் மத்திய அரசிலே ஒரு அணியிலே அங்கம் வகித்தவுடன் அதற்கான இலாக்காக்களை வாங்கிக் கொண்டார்கள். சட்டத் துறையை வாங்கிக்கொண்டார்கள். வங்கியை வாங்கிக் கொண்டார்கள். இன்னும அதிகாரிகளுடைய துறையை வாங்கிக் கொண்டார்கள். தங்களுடைய வழக்குகளிலிருந்து தப்பிப்பதற்காக எடுத்த முதல் நடவடிக்கை இது ஆகும். இரண்டாவது எது என்றால் அவர்களுடைய சட்ட அமைச்சர் மாண்புமிகு மத்திய அமைச்சர் தம்பிதுரையே பகிரங்கமாகப் பேசினார். அவர்களுடைய தலைவி ஜெயலலிதாமீது தொடுக்கப்பட்டிருக்கின்ற வழக்குகளை எல்லாம் நாங்கள் மறுஆய்வு செய்வோம் என்று மத்திய அமைச்சர் சொல்கிறார்.

மாநில அரசுகளால் தொடுக்கப்பட்டிருக்கின்ற வழக்குகளை மறுஆய்வு செய்வதற்கு மத்திய அமைச்சர் திரு. தம்பிதுரைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது; என்ன உரிமை இருக்கிறது? அதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படியானால் அவர்களுடைய உள்ளத்தின் அடித்தளத்திலே எத்தகைய எண்ணங்கள் பிரகாசித்து ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றம் அறிய வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். ஆகவே இதை மறுஆய்வு செய்ய வேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய நோக்கம் புரிகிறது; எண்ணம் புரிகிறது; அவர்களுடைய அடிப்படை நமக்குப் புரிகிறது.

பிற்பகல் 1-35

இப்போது வழக்கறிஞர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். எந்த வழக்கறிஞர்களை? அப்படி வழக்கறிஞர்களை அவர்கள் நியமிப்பதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது. அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அதை நான் குறைவாகக்கூட மதிக்கவில்லை. ஒரு ஆட்சி போய் இன்னொரு ஆட்சி வருகிறபோது வழக்கறிஞர்களை நியமிப்பது என்பது இயற்கை. இது Political Post. நியமிப்பதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது. நான் அதை மறுக்கவில்லை. ஆனால் யாரை நியமிப்பது? நேற்று வரை செல்வி ஜெயலலிதா நிரபராதி; திருமதி சசிகலா நிரபராதி; சுதாகரன் நிரபராதி; பாஸ்கரன் நிரபராதி என்று வாதிட்டவர்கள் இன்று அரசு வழக்கறிஞர்களாக மாறி இவர்கள் குற்றவாளிகள் என்று சொல்வார்களா; இந்த வழக்கை நிரூபிக்க அவர்கள் முன் வருவார்களா? அதனால் தான் விஜயகுமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு Public Litigation Petition போட்டிருக்கிறார். அந்த Public Litigation Petition ரொம்ப அழகாகச் சொல்லியிருக்கிறார்.

"The statement of the Union Law Minister that the appointments have been made as per the rules is not correct since the Advocate appointed are all picked up by the Union Law Minister to subserve the interest of his leader Miss J. Jayalalitha. The appointed Advocates are all interested persons and several of them are counsels for Miss J. Jayalalitha and others in the cases pending before this Hon. Court and other Courts" என்று சொல்லிவிட்டு ரொம்ப அற்புதமாகச் சொல்லியிருக்கிறார்; Overnight the counsels for the accused have become prosecutors. எதிர்தரப்பிலே இருந்தவர்கள் எல்லாம் மறுநாள் அரசு வழக்கறிஞர்களாக மாறி விட்டார்கள் என்று அவர் தாக்கல் செய்த மனுவில் இதையெல்லாம் சொல்லியிருக்கிறார். ஏன் என்றால் இந்த



வழக்கறிஞர்கள் நியமனம் எவ்வளவு தவறானது என்பதை மாண்புமிகு திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் அற்புதமாகச் சொல்லியிருக்கிறார், It is against political ethics என்று. 'அரசியல் நாகரிகத்திற்கு முரணானது, இப்படிச் செய்யக்கூடாது' என்று அவர்களுடைய கூட்டணியில் இடம் பெற்றிருக்கின்ற மத்திய அமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் சொல்லியிருக்கிறார். அவருடைய பேச்சைப் படிக்கும்போது நமக்கேகூட கொஞ்சம் அனுதாபமாக இருக்கிறது. ஆட்சிக்கு வந்து 2 மாதம்தான் ஆகிறது, திரு. வாஜ்பாய் அவர்கள் இந்த ஆட்சியில் ஒரு நாள்கூட தேன்நிலவை அனுபவிக்கவே முடியவில்லை. பாவம் திரு. வாஜ்பாய் - திருமணம் ஆகாதவர், வாழ்க்கையில்தான் தேன்நிலவை அனுபவிக்க முடியவில்லை. அரசியலிலும் அவர் தேன்நிலவை அனுபவிக்கமுடியாதபடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் அவருக்கு நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். மத்தியில் இருக்கின்ற சட்ட அமைச்சர் நீதித் துறையில் குறுக்கிடுகிறார் என்று இந்த மாமன்றத்தில் பகிரங்கமாக நான் குற்றம் சாட்டுகிறேன். அதற்காகத்தான் இந்தக் காரணங்களை எல்லாம் இந்த அவையின் முன்னால் வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனுடைய அடுத்த கட்டம்தான் இந்த நீதிபதிகளுடைய மாற்றம் பற்றிய பிரச்சினை. இந்த அவையில் சில நண்பர்கள் அதையெல்லாம் எழுப்பினார்கள். நான் இந்த நேரத்தில் அதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீதிபதிகள் நியமனம் பற்றி நான் குறிப்பிட ஆசைப்படவில்லை. 3-6-1997, 1-7-1997 ஆகிய தேதிகளில் டெல்லியில் சட்ட அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. நீதிபதிகளுடைய நியமனம் பற்றியும், நீதிபதிகளுடைய மாற்றம் பற்றியும் அந்த மாநாட்டில் பேசப்பட்டது. அந்த மாநாட்டில் பேசியதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

"In most of the democratic countries, judges are appointed either by the Executive Head or by the Legislature. In a few countries, they are elected by the voters. In U.S.A., the appointment of the Judges by the President has to be ratified by the Senate. The United Kingdom which has introduced the 'Integrated Judiciary' in India, neither follows integrated Judiciary system nor adopts the practice of promoting the judges of High Courts. Appointment of Judges are made directly to the High Court, the

Court of Appeal and House of Lords only from the Bar rather than from Lower Courts. The peculiar situation which prevails in Australia is that out of seven Judges to the Supreme Court, two are the Members of the House of Representatives. So, Political personalities are also appointed as judges in Australia. Canada follows the policy of Australia in the matter of appointment of Judges. What I want to emphasize in this conference is that in the appointment of Judges in most of the democratic countries, the right rests only with the Cabinet and Legislature and not with the Judiciary.

Unfortunately, the Supreme Court in 1993 has changed the course of history by giving primacy to the opinion of the Chief Justice of India. The judiciary itself became a Judge of its own case, over-riding the legitimacy of the Cabinet decision."

பிற்பகல் 1-40

இதைத்தான் அந்த மாநாட்டிலே சொன்னேன். சொல்லிவிட்டு, நீதிபதிகளினுடைய மாற்றங்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது சொன்னேன். ....."In this context, I would like to invite the attention of this August Conference that according to the memorandum of procedure drawn up by the Home Ministry, long ago, consultation with the Chief Ministers concerned is necessary before any transfer is made."

உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியை மாற்றுவது என்றால், அதற்கு முதலமைச்சருடைய ஒப்புதலைப் பெற வேண்டும்.

"...This provision does not seem to have been followed by the Centre. Hence, I suggest the very omission of the Article 222 as recommended by the Justice Rajamannar Commission.

Justice Rajamannar Commission which examined the issue of the transfer of Judges, has endorsed the view of the Law Minister of the Government of India in the year 1963."

"In the Law Ministers' Conference, the Law Minister has stated....." 1961-இல் 'Transfer of Judges-ஐப் பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது.

"...We have accepted it as a principle that as far as High Court Judges are concerned, they should not be transferred except by consent. The convention worked without fail during the last 12 years and all transfers



have been made not only with the consent of the transferee, but also in consultation with the Chief Justice of India...." என்று சட்ட அமைச்சரே நாடாளுமன்றத்திலே பேசியிருக்கிறார். இந்த விதிமுறைகளையெல்லாம் காற்றிலே தூக்கி எறிந்து விட்டு, இன்றையதினம் நீதிபதிகளை மாற்றம் செய்வதில் மத்திய அரசு கவனம் செலுத்துகிறது என்று செய்தி வருவதைப் பார்த்து உண்மையிலேயே நாம் அதிர்ச்சி அடைகிறோம் என்பதைத்தான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களும், மற்றவர்களும் பேசும்பொழுது இப்போது 356-வது விதியைக் காட்டி மிரட்டிக் கொண்டு இருக்கிறார்களே, அதனாலே ஏதாவது ஆகிவிடுமா என்றெல்லாம் கேட்டார்கள். நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம்-ஒழுங்கு என்பதன் பேரால் எந்த மாநில அரசையும் கலைக்க முடியாது. சட்டம்-ஒழுங்கு என்பது மாநில subject, மாநிலத்திற்கு உரிய அதிகாரம். இங்கே, சட்டம்-ஒழுங்கு நிர்வகிப்பதிலே கொஞ்சம் குறை இருந்தால் அல்லது சீர்குலைவு இருப்பதாக அவர்கள் கருதினால், நமக்கு உதவ வேண்டுமே தவிர, சட்டமன்றத்தைக் கலைத்து அவர்கள் இங்கே வந்து உட்கார முடியாது. அதற்கான நோக்கத்தோடு சட்டமே வகுக்கப்படவில்லை.

அரசமைப்புச் சட்டத்தின் 355-வது விதி - enabling clause அதாவது, மாநில அரசுக்கு எப்படி நெருக்கடியான நேரத்தில் துணை செய்வது என்பதற்குத்தான் அது அடிப்படையாக இருக்கிறதே தவிர, சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லி, உடனடியாக யாரும் சட்டமன்றத்தைக் கலைக்கக்கூடாது Constitution அடிப்படையில். இதை மீறி செயல்படுவது என்பது இன்னொரு நிலைமை. ஆனால், இதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாநில சட்டமன்றங்களைக் கலைப்பது சம்பந்தமாகக் கடந்த காலத்தில் உச்ச நீதிமன்றம் வழக்குகளை விசாரணைக்கே எடுக்க மறுத்தது. 'It is a Political Issue.' எனவே, 'It is not maintainable.' இதை நாங்கள் விசாரிக்கவே முடியாது என்று உச்ச நீதிமன்றம் சொன்னது. எது வரைக்கும்? இராஜஸ்தான் வழக்கு வரைக்கும். அதற்குப் பிறகு எந்தச் சட்டமன்றமாவது, malafide கெட்ட நோக்கத்தோடு கலைக்கப்படுமானால், அதைப்பற்றி விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று முதன் முதலாக இராஜஸ்தான் வழக்கிலேதான் தீர்ப்புச் சொல்லப்பட்டது. சரித்திரத்தின் திருப்பம் அதுதான் முதலிலே.

ஆனால், அந்தத் திருப்பம் படிப்படியாக மாறி, எஸ்.ஆர். பொம்மை வழக்கிலே என்ன தந்திருக்கிறது என்றால், எந்த மாநில அரசைக் கலைத்தாலும், கலைத்து இரண்டு மாத காலத்திற்குள், அவர்கள் பாராளுமன்றத்தினுடைய ஒப்புதலைப் பெற வேண்டும்; அப்படி ஒப்புதலைப் பெறாவிட்டால் அந்தச் சட்டமன்றம் மீண்டும் செயல்படும் என்று தெளிவாகத் தெரிவித்து விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எஸ்.ஆர். பொம்மையினுடைய வழக்கின் தீர்ப்பை பலயிடங்களிலே நீதிபதிகள் சொல்கிறார்கள். இது நாட்டுக்கு தெரிய வேண்டும்; மற்றும் மாமன்றத்திற்கும் தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

"It is necessary to interpret Clauses (1) and (3) of Article 356 harmoniously since the provisions of Clause (3) are obviously meant to be a check by the Parliament...."—Check—இந்தப்பிரிவே பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தத்தான். "... (Which also consists of members from the concerned States) on the powers of the President under Clause (1), the check would become meaningless and rendered ineffective if the President takes irreversible actions...." மாற்ற முடியாத ஒரு முடிவை எடுத்தாரானால் அது meaningless அது அர்த்தமற்றது என்று சொல்லியிருக்கிறது.

``.....While exercising his powers under Sub-clauses (a), (b) and (c) of Clause (1) of the said Article. The dissolution of the Assembly by exercising the powers of the Governor under Article 174 (2) (b) will be one such irreversible action..."

பிற்பகல் *1-45*

அதாவது கவர்னருடைய தன்னிச்சை அதிகாரத்தின்கீழ் ஒரு சட்டமன்றத்தைக் கலைப்பது என்பது மாற்ற முடியாததாக இருக்கிறது. ``Hence it will have to be held that in no case, the President shall exercise the Governor's power to dissolve the Legislative Assembly till at least both the Houses of Parliament have approved of the Proclamation issued by him under Clasue (1) of the said Article. The dissolution of the Assembly prior to the approval of the Proclamation by the Parliament under Clause (3) of the said Article will be per se invalid." எனவே, பாராளுமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமலே சட்டமன்றம் கலைக்கப்படுமானால் அந்த அதிகாரம் per se invalid அந்தச் சட்டமே செல்லாது, அந்த உத்தரவே செல்லாது, அந்தப் பிரகடனமே செல்லாது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. நாம் ஏன் பயப்பட வேண்டும்? நாம் ஏன் அச்சப்பட வேண்டும்? இது திரு. அத்வானிக்குத் தெரியும். பெருமதிப்பிற்குரிய பிரதமர் வாஜ்பாய்க்குத் தெரியும்.



**திரு. இரா. தாமரைக்கனி:** Point of clarification, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாகிஸ்தான் உளவாளிகள் நிறைய வந்துவிட்டார்கள் என்று *352*-ஐப் பயன்படுத்தி எமர்ஜென்சி கொண்டுவந்து கலைத்துவிட்டால் என்ன செய்வீர்கள்? ஏதாவது ஒரு சட்டத்தைப் பயன்படுத்துகிறோம், அவ்வளவுதான்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *356*-வது பிரிவில் இரண்டு மாதத்திற்குள் பாராளுமன்றத்தினுடைய இரண்டு சபைகளுடைய ஒப்புதலைப் பெற வேண்டுமென்று இருக்கிறது *352*-வது பிரிவில் ஒரு மாதத்திற்குள் இரண்டு அவையினுடைய ஒப்புதலைப் பெற வேண்டுமென்று இருக்கிறது. அதுதான் *352*, Proclamation of Emergency.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட மேதைகள் எல்லாம் தனியாகப் பேசுங்கள். சட்ட அமைச்சர் பதிலுரையை முடிக்கட்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்கள் அவையிலும் மக்களவையிலும் நிச்சயமாக அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கும்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, *352*-வது பிரிவின் கீழ் எந்த நெருக்கடிப் பிரகடனம் கொண்டு வந்தாலும், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். அதையும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். அவர்களுக்கு இருக்கின்றதே இரண்டு பேர் பெரும்பான்மை, அதிலேகூட ஒருவர் வெளியேறிவிட்டார், ஒருவர் மருத்துமனையிலே இருக்கிறார். நான் அந்த அரசாங்கத்தைப் பற்றி விமர்சனம் செய்வது சரியல்ல என்ற காரணத்தினால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் அல்ல. அவர் கருத்தைச் சொல்கிறார். நீங்கள் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஜனநாயகமாக நடக்கிற சட்டமன்றம். அதனால் கருத்துச் சொல்ல அனுமதி கொடுத்துவிட்டேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஆறுதலான வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். அதனால் ஒரு மாதத்திற்கு நிம்மதியாக நீங்கள் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** ஒரு மாதம் அல்ல, நிரந்தரமாக நாங்கள் நிம்மதியாகவே இருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை யாரும் தடுத்துவிட முடியாது. எனவே, 356-ஐக் காட்டி இந்த அரசை மிரட்ட முடியாது. அவர்களுக்குப் பெரும்பான்மை இல்லை. ஆனால், இங்கே எவ்வளவு பெரிய பெரும்பான்மையிருக்கிறது என்பதை நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. 234 பேரில் 228 பேர் இந்த அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த நியாயத்தில், எந்தத் தருமத்தில், எந்தச் சட்டத்தின் அடிப்படையில், இந்தச் சட்டமன்றத்தைக் கலைப்பதற்கு ஒரு அரசாங்கம் முன்வரும்? ஒரு சர்வாதிகார அரசாங்கத்தைத் தவிர வேறு எந்த அரசாங்கமும் அதிலே தலையிடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடிக்கடி குறுக்கிடுவதை நான் அனுமதிக்க முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** 1980-ல் எம்.ஜி.ஆர். ஆட்சியை எப்படிக் கலைத்தீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்கள் அப்போது கேட்டிருக்க வேண்டும், இப்போது உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எம்.ஜி.ஆர். ஆட்சியை எப்படிக் கலைத்தீர்கள்? அப்போது எப்படிச் சட்டம் உட்பட்டது? அந்த மாதிரிதான் இப்போதும்.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தாமரைக்கனி என்னைத் தனியாகச் சந்திக்கலாம். என்னுடைய நண்பர். எம்.ஜி.ஆர். காலத்திலேயிருந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு என்ன, இப்போதுள்ள தீர்ப்புகள் என்ன என்பதையெல்லாம் அவருக்கு நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதற்காக இந்த அவையினுடைய நேரத்தை இப்போது எடுத்து என் வாதத்தை வேறு பக்கம் திசை திருப்ப வேண்டாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மானியக் கோரிக்கையிலே பேசுவதைவிட்டு, இதை எதற்கு அமைச்சர் பேசுகிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வரலாறு புரிந்துகொண்டு, தெரிந்துகொண்டு, தேவையில்லாமல் குறுக்கிடக் கூடாது. இந்த நிலைமை மாறியது பொம்மை வழக்கில். பொம்மை வழக்கில் தீர்ப்பு சொன்னது 1994-ல். அதற்கு பிறகு, எம்.ஜி.ஆர். ஆட்சியை எப்படிக் கலைத்தீர்கள் என்று கேட்டால் எப்படி?

**திரு. இரா. தாமரைக்கனி:** எம்.ஜி.ஆர். ஆட்சியை எப்படிக் கலைத்தீர்கள்? அப்போது majority ஆக இருந்தது அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1994-ல், பொம்மை வழக்குத் தீர்ப்பில் இந்தமாதிரி நீதிமன்றம் தலையிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் அவர் சொல்கிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஜனாதிபதி உத்தரவு போட்ட பிறகு எந்த High Court-ம், Supreme Court-ம் தலையிடவே முடியாது. வைத்தால் வைத்ததுதான். ஜனாதிபதி உத்தரவு போட்டால் போட்டதுதான்.

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தளவில் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறது. நியாயத்தின் அடிப்படையிலும், நிலவரத்தின் அடிப்படையிலும், சட்டத்தின் அடிப்படையிலும், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும் இந்த அரசை எந்தக் கோணத்திலும் கலைக்க முடியாது, இதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது பல மாண்புமிகு உறுப்பினர்கள் நீதிமன்றங்கள் வேண்டும் என்று கேட்டார்கள். அவற்றையெல்லாம் பரிசீலித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்ததில், சில நீதிமன்றங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குடியாத்தம், பொன்னேரி, செய்யாறு, திருவாரூர், சிவகாசி, ஆகிய 5 நகரங்களில் Sub Courtகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அதேபோல், District Munsif-cum-Judicial Magistrate Court பெண்ணாகரத்திற்கு அனுமதித்திருக்கிறார்கள். District Munsif Court உத்திரமேரூருக்கு அனுமதித்திருக்கிறார்கள்.

இதுபோல Scheme அதாவது திட்டத்தில் list of new schemes - மதுராந்தகத்திற்கு ஒரு Sub Court, விருத்தாசலத்திற்கு Judicial Magistrate Court, சாத்தான்குளத்திற்கு Judicial Magistrate Court, இளையான்குடிக்கு Judicial Magistrate Court, நாகப்பட்டினத்திற்கு Judicial Magistrate Court, உசிலம்பட்டிக்கு Judicial Magistrate Court, பூதபாண்டிக்கு Judicial Magistrate Court, மானாமதுரைக்கு Additional District Munsif Court அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதைவிட இன்னொன்றைச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசும்போது வேலூரிலே தொழில் தகராறு நீதிமன்றத்திலே 8 நீதிபதி இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னார். எனக்குக் கிடைத்த தகவல்படி ஒரேயொரு இடம்தான் காலியாக இருக்கிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரிதானா என்பதை மீண்டும் துறையிடத்திலே கேட்டு உண்மையான விவரங்களை அவருக்குத் தெரிவிக்கிறேன்.

அதேபோல், Labour Court, அதுவும் மூடப்படவில்லை என்பதையும் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்டகாலமாக வழக்கறிஞர்களுக்கு, அரசு ஊழியர்களாக இருப்பவர்களுக்குப் போதுமான ஊதியம் தரப்படவில்லை என்று குறையாக இருந்தது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் சொன்னதன் காரணமாக, வழக்கறிஞர்களே வியக்கக்கூடிய அளவிற்கு, நாமே மலைக்கக்கூடிய அளவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுடைய சம்பளத்தை அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள்.



மானியத்தை அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள உயர் நீதிமன்றம் அல்லாத பிற நீதிமன்றங்களுக்கு அரசுத் தரப்பில் பணிபுரியும் குற்றவியல் சட்ட அலுவலர்களுக்கு வழக்குக் கட்டணம் *1984* ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஆஜராகும் வழக்குக்கு நாள் ஒன்றுக்கு கட்டணத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை, எந்த உயர்வும் அளிக்கப்படவில்லை. அந்தக் கட்டண விகிதத்தை சட்ட அலுவலர்கள் நலன் கருதி - வழக்கறிஞர்களுடைய நலன் கருதி - மும்மடங்காக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கு இப்போது ஒரு நாளைக்கு ஒரு வழக்குக்கு *45* ரூபாய் என்று இருப்பதை *135* ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் குற்றவியல், மேல்முறையீடு, சீராய்வு வழக்குகள் இப்படி பல்வேறு மனுக்கள் மற்றும் பிணைய வழக்குகள் ஆகியவற்றுக்கு வழக்குக் கட்டணமாக இதுவரை *30* ரூபாய்தான் வழங்கப்பட்டது, அந்த *30* ரூபாய் இப்போது *90* ரூபாயாக் உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் சட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும், நாள் ஒன்றுக்கு அதிகபட்ச ஊதியம் *120* ரூபாய் என்று இருந்ததை *360* ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுதவிர, உரிமையியல், குற்றவியல் சட்ட அலுவலர்களுக்கு, அதாவது Government Pleaders, Special Government Pleaders, Additional Government Pleaders, Public Prosecutor, Special Public Prosecutor, Additional Public Prosecutor ஆகியோர்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்பட்ட நிலை ஊதியத்தை *3,000* ரூபாயிலிருந்து *12,000* ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோல், அரசுப் பணிபுரியும் சட்ட அலுவலர்களுக்கு—Pleader doing Government work—அதாவது, தாலுகா Courtகளில், மாவட்ட நீதிமன்றங்களிலே பணிபுரிபவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஊதியம் *1,500* ரூபாய். அது *9,000* ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்று சில குறைகளை எல்லாம் சொன்னார்கள். அவற்றையெல்லாம், பரிசீலிப்போம். உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் எல்லாவற்றையும் ஆய்வு செய்து, அவற்றிலே என்ன நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்பதையெல்லாம் தீர சிந்தித்து அவர்களுடன் ஒத்துழைப்போம். அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களுக்கு ஒரு நல்ல தீர்வு, நல்ல முடிவு கிடைக்கும் வகையில் துறை செயல்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே, அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி அன்போடு வேண்டி கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 பேர் விவாதத்தில் பேசியாகிவிட்டது. 20 பேர் Clarification கேட்க வேண்டுமா? நான் ஒருவருக்கு அனுமதித்தால், எல்லோருக்கும் அனுமதி கொடுக்க வேண்டும். கொடுக்க முடியாது. எத்தனை பேர் எழுந்து நிற்கிறீர்கள், நான் அனுமதிக்க முடியாது. அதனால் நான் அனுமதி முடியாது. விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 13-நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13-நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 13ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.115,38,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 14-சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14-சிறைச்சாலைகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன், திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப.கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.51,76,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*143. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 24-10-1997-ஆம் நாளிட்ட 255 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*144.. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).*

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*164. மானியக் கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம் குறித்து கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்).*

*165. மானியக் கோரிக்கை எண் 14 - தமிழ்நாட்டில் சிறைகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ், ஆங்கிலம்).*

1998 மே 12]

## இணைப்பு-I

[60 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண் 13

## நீதி நிருவாகம்

### கொள்கை விளக்கக் குறிப்பு-1998-99

### 1. தமிழ்நாட்டில் நீதித் துறையின் சிறப்பு அம்சங்கள்

### 1. முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய நோக்கம் அனைத்து குடிமக்களுக்கும் விரைவான நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்பதேயாகும். மக்கள் நல அரசின் முதற்கவனம் நாட்டு மக்களின் நலனைக் குறித்ததாகவே இருக்கும். நாடு விடுதலை அடைந்தபின்பு, நீதித்துறை அமைப்பானது முழுமையான வளர்ச்சியடைந்துள்ளது. அதற்குத் தேவையான சட்டப் பாதுகாப்பையும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கி வருகிறது.

"நீதி நிர்வாகமே ஒரு நாட்டின் உறுதியான தூண்" என்று ஜார்ஜ் வாஷிங்டன் கூறியுள்ளதற்கிணங்க, தமிழ்நாடு அரசு குடிமக்களுக்கு விரைவான சமூக, பொருளாதார நீதியை வழங்குவதில் முன்னோடியாக விளங்கி வருகிறது. அடிப்படை வசதியிலும், செயல்பாட்டிலும் நீதித் துறை வளர்ச்சியும் முன்னேற்றமும் காண்பதில் தமிழ்நாடு அரசு முக்கியப் பங்காற்றுகிறது.

நீதித் துறையின் சுதந்திரத் தன்மையைப் பேணுவதில் இந்த அரசு எப்போதுமே முனைப்பாக செயல்பட்டு, அதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கிறது. வழக்குத் தொடர்கின்ற பொதுமக்களுக்கு விரைவான நீதி கிடைக்க வேண்டும் என்ற காரணத்தால் அதற்குத் தேவையான கட்டட வசதி மனித ஆற்றல் மற்றும் பிற அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

[1998 மே 12

## 2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு

நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு வருமாறு:-

புது டில்லியிலுள்ள உச்ச நீதிமன்றம் நமது நாட்டின் உச்சநிலை நீதிமன்றமாகும். அது மாநிலங்களிலுள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ளது.

மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பு வருமாறு:

உயர்நீதி மன்றம், சென்னை

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதி மன்றங்கள் | பெருநகர் மாஜிஸ்ட்ரேட் | செஷன்ஸ் நீதிமன்றங்கள் |
| சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | சார்நிலை நீதிமன்றங்கள் | — | மாவட்டக் கூடுதல் நீதிபதி- நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள். |
| — | மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் | — | நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள். |
| — | மாவட்ட முன்சிப் மற்றும் நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள். | — | — |

மேலே குறிப்பிட்ட நீதிமன்றங்களுடன், பல்வேறு சட்டங்களின் கீழ் பின்வரும் நீதிமன்றங்களும் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன:-

1. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.
2. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.
3. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர்.



1998 மே 12]

4. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை.
5. குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம்.
6. பொருளாதாரக் குற்றங்கள் குறித்த தனி நீதிமன்றங்கள், சென்னை மற்றும் மதுரை.
7. மனித உரிமைகள் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்.
8. "தடா" சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

## 3. தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை விவரங்கள்

தமிழ்நாட்டில் தற்போதுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. செலவின வகைப்பாடு

நீதித் துறைக்கான செலவினங்கள் 'சாட்டியவை' அனுமதிக்கப்பட்டவை என வகைப்படுத்தப்படுகின்றன.

### அ. சாட்டிய செலவினங்கள்

1. உயர் நீதிமன்றம் (உயர் நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்றப் பதிவாளர், அசல், மேல் முறையீட்டுப் பிரிவுகள், மொழி பெயர்ப்பு அச்சிடுதல் துறை, சட்ட நிருபர்கள், பணியாளரமைப்பு, பாண்டிச்சேரி அதிகார வரம்பில் வரும் வழக்குகளை கவனிக்கும் உதவிப் பதிவாளர் மற்றும் பணியாளர்கள்).
2. நொடித்தவர் சொத்தாட்சியரும், அவரின் பணியாளரமைப்பும்.

### ஆ. அனுமதிக்கப்பட்ட செலவினங்கள்

1. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல், செஷன்ஸ் நீதிமன்றங்கள்.
2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.
3. பெருநகரக் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை.

[1998 மே 12

4. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள்.

5. சார்நிலை உரிமையியல் நீதிமன்றங்கள்.

6. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

7. அரசு சட்ட அறிவுரையாளர்களும், ஆலோசகர்களும்.

8. தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் தொழில் நடுவர் மன்றம், சென்னை.

9. ஆசிரியர் மற்றும் பணியாளர்கள், தமிழ் சட்டப் பத்திரிகை பதிப்பகம், சென்னை.

10. குடும்ப விவகார நீதிமன்றங்கள்.

11. மத்திய புலனாய்வுப் பிரிவின் வழக்குகளையும், மனமயக்கும் மற்றும் போதைப் பொருள் குறித்த குற்றங்களையும் விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்.

## 5. உயர் நீதிமன்றம், சென்னை

மாநிலத்தில் உச்சநிலை நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் அமையப் பெற்றுள்ளது. உயர் நீதிமன்றத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட 42 ஆகும். தற்போது உயர் நீதிமன்றம் 36 நீதிபதிகளுடன் இயங்கி வருகிறது. (25 நிரந்தர நீதிபதிகள் 11 கூடுதல் நீதிபதிகள்) உயர் நீதிமன்றம், சிவில் விவகாரங்களில் ரிட் மனுக்களையும், அசல் வழக்குகளையும் விசாரணை செய்யும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல் முறையீட்டு விசாரணை அதிகாரமும் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. அசல் வழக்குகளைப் பொறுத்தவரை, சென்னை மாநகரத்திற்குள் எழும் ரூ.10,000-க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகிறது.

உயர் நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவராகப் பதிவாளர் விளங்குகிறார். அவருக்கு உதவ, கூடுதல் பதிவாளர்கள், மாஸ்டர், துணைப் பதிவாளர்கள், அலுவலக நடுவர், வழக்குகள் தொகுக்கும் தனி அலுவலர், உதவிப் பதிவாளர்கள், சார் உதவிப் பதிவாளர்கள், முதுநிலைக்



1998 மே 12]

கணக்கு அலுவலர் என பல அலுவலர்களும் உள்ளனர். உயர் நீதிமன்றம், பல கிளைகளை உள்ளடக்கியதாகும். இதில் நிருவாகத் துறை, நூலகம், அசல் தரப்புப் பிரிவு, மேல்முறையீட்டுப் பிரிவு, நொடிப்பு வழக்குகள் பிரிவு, நீதிபதிகளுக்கான தனி உதவியாளர்கள் பிரிவு, உச்ச நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் பிரிவு, பாண்டிச்சேரிப் பிரிவு, நீதிமன்ற அலுவலர் பிரிவு, மேல்முறையீட்டு ஆய்வாளர் பிரிவு, ரிட் பிரிவு, மொழிபெயர்ப்பு அச்சிடுதல் துறை, நொடித்தவர் சொத்தாட்சியர் பிரிவு, நகலெடுப்போர் பிரிவு, நடப்புப் பிரிவு, வரவு-செலவு, திட்ட மதிப்பீட்டுப் பிரிவு, பதிவுருக்கள் பிரிவு, ஆகியவை அடங்கும். உயர் நீதிமன்றம் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும், அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் பாண்டிச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

நீதி வழங்குவதுடன், மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.

## 6. தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு

### (i) சென்னைப் பெருநகர்:

*அ. மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை*

18 சார்நிலை நீதிபதிகள் (உதவி நீதிபதிகள்), 15 மாவட்ட நீதிபதிகள் என மொத்தம் 33 நீதிபதிகள் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்றனர். மாவட்ட முன்சீப் பதவித் தரத்திலான (உரிமையியல் நீதிபதி-இளநிலை) ஒரு தனிப் பதிவாளர், மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் பணம் சார்ந்த அதிகார வரம்பு வழக்குகளில் ரூ.10,000,00/- ஆகவும், மேல்முறையீடு வழக்குகளில் ரூ.3,00,000/- ஆகவும் உள்ளது. மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை செஷனஸ் பிரிவிற்கான செஷன்ஸ் நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலான சில நீதிபதிகட்கு குற்றவியல் (திருத்தச்) சட்ட திருத்தத்தின்கீழ்

நடப்பு வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்குரிய அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சில அதிகாரிகள் மீது 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கெனத் தனியாக 3 கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் ரூ.3,18,42,000/- மொத்தச் செலவு ஆகுமென மதிப்பிடப்படுகிறது.

### ஆ. சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும் (உரிமையியல் நீதிபதி-முதுநிலை) மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் (உரிமையியல் நீதிபதி-இளநிலை) ஏழு நீதிபதிகளும் உள்ளனர். நிருவாகப் பொறுப்பிற்கென உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் தனியே ஒரு பதிவாளரும் உள்ளார். இவர், குறிப்பிட்ட சில ஆணைகளை நிறைவேற்றல், மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதி நிருவாகப் பணிகளையும் கவனிக்கிறார். தலைமை நீதிபதியும், இதர நீதிபதிகளும் 1882 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர்.

V ஆம், VI ஆம் நீதிபதிகள், மோட்டார் வாகனங்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் தனிப்பட்ட தீர்ப்பாயங்களாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதிக்கும், II, III, IV ஆம் நீதிபதிகளுக்கும் மோட்டார் வாகனங்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. X முதல் XVI வரை உள்ள நீதிபதிகள் சென்னை மாநகருக்கான வாடகைக் கட்டுப்பாட்டு நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் II முதல் IV, VII மற்றும் VIII ஆகியோருக்கு வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் சிறுவழக்குகள் நீதிமன்றத்திற்கான செலவு ரூ.1,45,87,000/- என



மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய இடங்களிலுள்ள முன்னாள் ஜமீன்தாரி சொத்துக்கள் மற்றும் இனாம் ஒழிப்பு நடுவர் மன்றங்கள் தொடர்புடைய இழப்பீடு பிரித்தளித்தல் மற்றும் பங்கீட்டு நடுவர் மன்றத்திற்கும் ஆகும் செலவு 4,03,000/- ரூபாயும் அடங்கும்.

## (ii) வெளியூர்

### அ. மாவட்ட நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் 22 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. புதிதாகப் பிரிக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களுக்குப் புதிய நீதிமன்றங்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான செஷன்ஸ் நீதிபதிகளாகவும் உள்ளனர். மேலும், தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வாகனங்கள் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்களின்கீழ் நடுவர் மன்றங்களாகவும் செயல்படுகின்றனர். மாவட்ட நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள சார்நிலை, உரிமையியல் நீதிமன்றங்களையும் கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமை நீதித் துறைக் குற்றவியல் நீதிமன்றங்களையும் ஆய்வு செய்கின்றனர். இம்மாவட்ட நீதிமன்றங்கள் ரூ.3,00,000/- வரையான உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைக் கொண்டுள்ளன. மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதி தரத்தில் இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிப்பதற்காகச் சென்னை, தஞ்சாவூர், புதுகோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று வீதம் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் உள்ளன.

### ஆ. சார் நீதிபதி நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி-முதுநிலை)

சார் நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அசல் வழக்கில் பண வகையில் வரம்பு ஏதுமில்லை. அவர்களின் அதிகார வரம்பு, உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. சார் நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராகத் தொடரப்படும், ரூ.30,000/- மதிப்பிற்கு உட்பட்ட மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். சார் நீதிபதிகள், உதவி செஷன்ஸ் நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாகவும் சார்

[1998 மே 12

நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றுக்கு சார் நீதிபதிகளே தலைமை வகிக்கின்றனர்.

### இ. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி-இளநிலை)

மாவட்ட முன்சீப் நீதிபதிகள் தற்பொழுது உரிமையியல் நீதிபதிகள் (இளநிலைப் பிரிவு) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ரூ.30,000 வரையில் மதிப்புள்ள வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், வரையறுத்த அதிகார வரம்பினைக் கொண்டிருக்கிறது. இவை ரூ.20,000 வரையிலான மதிப்புள்ள சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரமும் பெற்றுள்ளன. இந்நீதிபதிகள், அவரவர் பகுதிகளுக்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

### ஈ. மாவட்ட முன்சீப் -நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்

மாநிலத்தில் சில பகுதிகளைச் சேர்ந்த வழக்காடும் மக்கள் அவரவருடைய பகுதிகளில் உரிய உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாமையால், தங்களுடைய உரிமையியல் வழக்குகளுக்குத் தீர்வு காண அவர்தம் பகுதிகளுக்கு அப்பாலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களை நாடுவதில் சில இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களுடைய குறைபாடுகளை நீக்கும்பொருட்டு, உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத இடங்களில் அமைந்துள்ள 43 நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் மாவட்ட முன்சீப் மற்றும் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்நீதிமன்றங்கள் உரிமையியல் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும் விசாரிக்கின்றன.

வெளியூர்களில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், சார் நீதிமன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் தொடர்பாக 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.44,91,87,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### உ. தொழிலாளர் நல நீதி மன்றங்கள்

சென்னையில் மூன்று, மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 10 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் அனைத்து பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது.



1998 மே 12]

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அரசு அனுப்பி வைக்கும் தொழில் தகராறுகளையும், பொது மக்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன.

தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளுக்குச் சுற்றுப் பயணம் சென்று முகாம் நீதிமன்றம் நடத்தித் தொழிலாளர் வழக்குகள் மற்றும் உரிமை கோரிக்கை மனுக்கள்மீது விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர்.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.1,10,07,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## 7. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை ...

**சென்னை மாநகரம்:**

சென்னை மாநகரில், பெருநகரத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், பெருநகரக் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட மொத்தம் 23 பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. XXI-வது மற்றும் XXII-வது பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் இரு நடமாடும் நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்குவர். பெருநகரத் தலைமை மாஜிஸ்டிரேட், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர் ஆவார். பெருநகரக் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட், சார் நீதிபதி பதவித் தரத்தைச் சார்ந்தவர் ஆவார். பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்க மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் பெருநகரக் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் இருவர் உள்ளனர். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள், சார் நீதிபதிகள் பதவி நிலையைச் சார்ந்தவர்கள் ஆவர். ஏனைய அனைத்துப் பெருநகர மாஜிஸ்டிரேட்டுகளும், மாவட்ட முன்சீப் நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் சென்னை நகரில் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட காவல் நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர்.

1998-99 ஆம் ஆண்டில் இம்மாநகரிலுள்ள பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் வகையில் ரூ.2,23,68,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ii) வெளியூர்:**

அ. நீதித் துறைத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்

தற்போது 21 நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களின் நிலை உயர்த்தப்பட்டு கூடுதல் மாவட்ட நீதிபதி - நீதித் துறைத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கூடுதல் மாவட்ட நீதிபதி - நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் அவரவர் மாவட்டத்திலுள்ள சார் குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்வர். இவர்கள், தங்கள் நிருவாகப் பணிகளுடன் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின்கீழ் மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதிகளால் மாற்றப்படும் மேல்முறையீடுகளையும் விசாரணை செய்ய மேற்சொன்ன விதிக் கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள், கூடுதல் செஷன்ஸ் நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர்.

ஆ. நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்

அநேகமாக அனைத்து வட்டங்களிலும் நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 175 நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன.

1998-99 ஆம் ஆண்டு வெளியூர்களில் உள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் வகையில் ரூ.20,88,01,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்

### அ. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:

1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர், பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கென மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் இயங்கி வந்த நான்கு நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களை



கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றங்களாக நிலை உயர்த்தி, கீழ்வருமாறு எல்லைகள் வகுத்து அரசு ஆணையிட்டுள்ளது:-

| நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு |
|---|---|
| (1) IV கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம், மதுரை | (1) மதுரை |
| | (2) திண்டுக்கல் |
| | (3) தேனி |
| | (4) இராமநாதபுரம் |
| | (5) சிவகங்கை |
| | (6) விருதுநகர் |
| (2) II கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம், தஞ்சாவூர் | (1) தஞ்சாவூர் |
| | (2) நாகப்பட்டினம் |
| | (3) திருவாரூர் |
| (3) III கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம், திருநெல்வேலி | (1) திருநெல்வேலி |
| | (2) தூத்துக்குடி |
| | (3) கன்னியாகுமரி |
| (4) IV கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | (1) திருச்சிராப்பள்ளி |
| | (2) கரூர் |
| | (3) பெரம்பலூர் |
| | (4) புதுக்கோட்டை |

எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தொடர்புடைய முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின்கீழ் வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும்.

### ஆ. பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்:

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் மூன்று நீதிமன்றங்கள் உள்ளன.

[1998 மே 12

### இ. சந்தனக்கட்டை கடத்தல் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒன்றும், சேலம் மாவட்டம், சேலத்தில் ஒன்றுமாக சந்தனக்கட்டை கடத்தல் குற்றங்களை விசாரணை செய்ய இரண்டு தனி நீதிமன்றங்கள் உள்ளன.

### ஈ. இரயில்வே நீதிமன்றங்கள்:

இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ், பயணச்சீட்டு இல்லாமல் இரயில் பயணம் செய்தல் முதலிய குற்றங்களை விசாரணை செய்வதற்காக சென்னையில் எழும்பூர் இரயில்வே நிலையத்திலும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்திலும், இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் இருப்பதுடன், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும், இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன. இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை நீதித் துறை செய்து வருகிறது. இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் வசூலித்த அபராதம் நீதித் துறை கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

### உ. நடமாடும் நீதிமன்றங்கள்:

சாலைப் போக்குவரத்துத் தொடர்பான குற்றங்களை விசாரிக்கச் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### ஊ. குடும்ப விவகாரங்களுக்கான நீதிமன்றங்கள்:

இந்தியச் சமுதாயம் என்னும் பெரும் மாளிகைக்குக் குடும்பமே அடித்தளமாக உள்ளது. எனவே, சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் முறையே ஒன்றுமாக மொத்தம் ஆறு குடும்ப நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. குடும்ப நீதிமன்றங்களின் வழக்குரைஞர்களுக்கான வழக்கு விசாரணை ஒன்றிற்குரிய கட்டணத்தை ரூ. 30-லிருந்து ரூ. 100 ஆக அரசு உயர்த்தியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் குடும்ப நீதிமன்றங்களுக்காகும் செலவு ரூ.88,00,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.



1998 மே 12]

### எ. 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்:

நம் நாட்டில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தமிழக அரசு உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தனி நீதிமன்றத்தையும் அமைத்துள்ளது.

### ஏ. மத்தியப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றங்கள்:

இம்மாநிலத்தில், மத்தியப் புலனாய்வு வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென சென்னையில் இரண்டு நீதிமன்றங்கள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நீதிமன்றம் என மொத்தம் 4 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க அரசு அனுமதி அளித்தது. கோயம்புத்தூர் தவிர மற்ற மூன்று இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

மத்தியப் புலனாய்வு வழக்குகளை விசாரணை செய்வதற்கான சிறப்பு நீதிமன்றங்களுக்கு 1998-99 ஆம் ஆண்டில் ஏற்பட உள்ள செலவு ரூ. 35,13,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

### ஐ. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்:

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்ய, மாவட்ட செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்தில் உள்ளவர்களை நீதிபதிகளாகக் கொண்டு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் தற்போது உள்ளன.

### ஒ. போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்கள்.

போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்து நீதி மன்றம் 16-03-1998 முதல் செயல்பட்டு வருகிறது.

[1998 மே 12

### 8. மனித உரிமை நீதிமன்றங்கள்:

மனித உரிமைகள் மீறப்படுவதால் ஏற்படும் வழக்குகளை விரைவாக விசாரிப்பதற்கு வகை செய்யும்பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை (Court of Sessions) மனித உரிமைகள் நீதிமன்றமாக மாநில அரசு குறிப்பிடுவதற்கு 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்தியச் சட்டம் எண் 10/1994) வகை செய்கிறது. மேலும் மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கு அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர்களை (Special Public Prosecutors) மாநில அரசு நியமிக்கவும் அச்சட்டம் வழி வகுக்கிறது.

மேற்கண்ட விதித்துறைக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றத்தின் இசைவுடன் இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கூடுதல் மாவட்ட நீதிபதி-நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகளையும் (Additional District Judges-cum--Chief Judicial Magistrates) சென்னையிலுள்ள இரண்டாவது கூடுதல் செஷன்ஸ் நீதிபதி (II Additional Sessions Judge) மற்றும் உதகமண்டலம் செஷன்ஸ் நீதிபதி (Sessions Judge) ஆகியோரை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக மாநில அரசு குறிப்பிட்டுள்ளது. இந்த நீதிமன்றங்கள் 29-01-96 முதல் செயல்பட்டு வருகின்றன. மனித உரிமைகள் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நடத்துவதற்காக, மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள், அரசு சிறப்பு வழக்கு நடத்துநர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இருப்பினும், சென்னை உயர் நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்த உத்தரவுகளுக்கிணங்க, மனித உரிமை மீறல் வழக்குகளை நீதிமன்றத்தில் நடத்துவதற்காக அரசு குற்றவியல் சிறப்பு வழக்கு நடத்துநர்களை நியமிக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

### 9. சென்னை அரசு தலைமை சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர்:

சென்னையிலுள்ள அரசு தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாகத் துணைத் தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள், அரசுத் தலைமை சொத்தாட்சியர் சட்டம் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வகைப் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள்.



[1998 மே 12]

### 10. தமிழ்நாட்டில் சட்ட அலுவலர்களின் அமைப்பு

நீதிமன்றங்களில் அரசின் வழக்குகளைச் செம்மையாக நடத்தி, அரசின் நலன்களைப் பாதுகாப்பதற்கென சட்ட அலுவலர்கள், குறிப்பிட்ட கால அடிப்படையிலும், காலமுறை ஏற்றச் சம்பளம் பெறும் அரசுப் பணி அடிப்படையிலும் அரசால் நியமிக்கப்படுகின்றனர். அரசால் நியமிக்கப்பட்ட சட்ட அலுவலர்களின் பதவித் தரங்கள் விவரம் வருமாறு:

**சட்ட அலுவலர்கள்**

| சென்னை மாநகரம் | வெளியூர் |
|---|---|
| **மாநில அரசு தலைமை வழக்குரைஞர்** | |
| உரிமையியல் | உரிமையியல் |
| 1. அரசு உரிமையியல் வழக்குரைஞர் | 1. அரசு உரிமையியல் வழக்குரைஞர் |
| 2. அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | 2. அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. அரசு உரிமையியல் தனி வழக்குரைஞர்கள் | 3. அரசுப் பணிகளை ஆற்றும் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் |
| 4. அரசு வழக்குரைஞர்கள் | |
| குற்றவியல் | குற்றவியல் |
| 1. அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் | 1. அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் |
| 2. அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | 2. அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் | 3. அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் |
| 4. மாநகரக் குற்றவியல் வழக்குரைஞர்கள் | 4. அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் |
| 5. அரசு குற்றவியல் சிறப்பு வழககுரைஞர்கள் | நிலை-1 |
| 6. அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் | நிலை-2 |
| நிலை-1 | |
| நிலை-2 | |

வழக்குகளுக்கு தீர்வு காண்பதில் சட்ட அலுவலர்களின் பணி இன்றியமையாதது. அதன் முக்கியத்துவத்தை அனைவரும் அறிவர்.

இச்சட்ட அலுவலர்களில், மாவட்டங்களிலுள்ள நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் மற்றும் சென்னையிலுள்ள பெருநகர தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஆகியவற்றிலுள்ள அரசு உதவி வழக்கு நடத்துனர்களும், கூடுதல் வழக்கு நடத்துனர்கள் மட்டுமே நிரந்தர அரசுப் பணியாளர்கள் ஆவர். எஞ்சிய சட்ட அலுவலர்கள் குறிப்பிட்ட கால அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர்.

புது தில்லி உச்ச நீதிமன்றத்திலுள்ள நமது வழக்குகளைப் பொறுத்தமட்டில் நான்கு வழக்குரைஞர்கள் உள்ளனர்.

**11. தமிழில் வெளிவரும் சட்ட இதழ் :**

'தீர்ப்புத் திரட்டு' எனும் பெயரில் தமிழில் வெளிவரும் சட்ட மாத இதழ் அரசால் வெளியிடப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவு ரூ.13,10,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இதழ் ஒன்றின் விலை ரூ.32 வீதம் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

**11. நிதி ஒதுக்கீடு:**

நீதித் துறை தனது அடிப்படை வசதிகள் மேம்படும் வகையில் மட்டுமின்றி நிதி ஒதுக்கீட்டிலும் பெரும் ஏற்றம் கண்டு வருகிறது. 1988-89 ஆம் ஆண்டில் நீதித் துறைக்கு ரூ.24.48 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 128.51 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பட்டியல், நிதி ஒதுக்கீடு உயர்ந்து வந்துள்ளதைக் காட்டுகிறது.

| ஆண்டு | செலவு | வரவு |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| (1) | (2) | (3) |
| 1988-89 | 24.48 | 18.14 |
| 1989-90 | 29.70 | 28.57 |
| 1990-91 | 37.25 | 26.16 |
| 1991-92 | 40.19 | 25.65 |



| ஆண்டு | | செலவு | வரவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | |
| (1) | | (2) | (3) |
| 1992-93 | | 45.25 | 28.07 |
| 1993-94 | | 56.05 | 32.62 |
| 1994-95 | | 64.93 | 38.34 |
| 1995-96 | | 73.14 | 43.04 |
| 1996-97 | கணக்குகள் | 86.74 | 45.96 |
| 1997-98 | திருத்திய மதிப்பீடு | 102.74 | 48.71 |
| 1998-99 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 128.51 | 52.50 |

**III. நீதிமன்றங்களில் கணினிகளை நிறுவுதல்**

தேசியத் தகவல் தொகுப்பு மையம், உயர் நீதிமன்றத்தில் தேவையான எண்ணிக்கையிலான முனையங்களுடன் கணினித் தொடர்பு ஏற்பாட்டை நிறுவியுள்ளது. இந்த அமைப்பு 1995 முதல் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

புது தில்லியில் உள்ள இந்தியத் திட்டக் குழுவின் தேசியத் தகவல் தொகுப்பு மையம் நாட்டிலுள்ள எல்லா மாவட்ட நீதிமன்றங்களையும் கணினி முனையங்கள் மூலம் தொடர்புபடுத்தும் பணியினை கடுவிரைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தையும் சேர்த்து 23 மாவட்ட நீதிமன்றங்களுக்கு, கணினிகள் மற்றும் முனையங்கள் வழங்கியுள்ளது. அந்த மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்ட . கணினி மையமும் செவ்வனே செயல்பட இந்த அரசு தொலைபேசி மற்றும் அறைகலன்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

**IV. சார்நிலை நீதிமன்றங்களைப் பல்வேறு இடங்களில் அமைத்தல் :**

குறிப்பிட்ட ஒரே இடத்தில் பல்வேறு நீதிமன்றங்கள் செயல்படுவதைத் தவிர்க்கும்பொருட்டும், வழக்காடும் பொதுமக்கள் தற்போது

அமைந்திருக்கும் நீதிமன்றங்களுக்குச் சென்றுவருவதில் காணும் சிரமத்திலிருந்து அவர்களை விடுவிக்கவும் மாவட்டங்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்படுகின்றன.

தற்போது, மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதுபோல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு; சென்னை மாநகர உரிமையியல் சட்டத்தின்கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மாநில சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை அதன் அதிகார வரம்பு மாவட்டம் முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், அதன் அதிகார வரம்பு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக வழக்குரைஞர்கள் சங்கத்திடமிருந்து அல்லது வழக்காடும் பொது மக்களிடமிருந்து வரும் முறையீடுகளை, அரசு உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து தீவிரப் பரிசீலனைக்குப் பிறகு புதிய நீதிமன்றங்களை அமைக்கிறது.

### V. முன்னோடித் திட்டம்:

சார்நிலை நீதிமன்றங்களிலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் நிலுவை மிகப்பெரும் அளவிற்கு, அதாவது 7,50,000 ஆக இருந்ததால், நிலுவையினைக் குறைப்பதற்கும், அவ்வழக்குகளைப் போர்க்கால அடிப்படையில் தீர்வு காண்பதற்காகவும் "முன்னோடித் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தினை உயர்நீதிமன்றம் 17-10-1994 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் ஒரே சமயத்தில் செயலாக்க இயலாது என்பதால், இதனை படிப்படியாக செயலாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



இந்த முன்னோடித் திட்டம் முதற்படியாக 17-10-1994-லிருந்தும் இரண்டாவது படியாக 17-10-1995-லிருந்தும் அறிமுகப்படுத்தப்பட்டது.

முதற்படியாக இந்த முன்னோடித் திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:-

(1) தருமபுரி

(2) நாகப்பட்டினம்

(3) தூத்துக்குடி

(4) விருதுநகர்

(5) புதுக்கோட்டை

(6) சிவகங்கை

(7) நீலகிரி

(8) இராம்நாதபுரம்

இரண்டாவதுபடியாக இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது:-

(1) விழுப்புரம்

(2) கன்னியாகுமரி

(3) திருநெல்வேலி

(4) கடலூர்

(5) ஈரோடு

(6) திருவண்ணாமலை

(7) தஞ்சாவூர்

(8) திண்டுக்கல்

இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டத்தில் இத்திட்டம் முடிவுறும்போது, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்ட வழக்குகள் தவிர, இரண்டு ஆண்டுகளுக்கு

மேற்பட்ட வழக்குகள் எதுவும் நிலுவையில் இருக்கக் கூடாது என்பதுதான் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இரண்டாவது ஆண்டு இறுதியில் முடிவடையும்.

1995-96 ஆம் ஆண்டில், முன்னோடித் திட்டம், முதல் கட்டத்தில் 11 கூடுதல் நீதிமன்றங்களையும், 1996-97 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டம், இரண்டாம் கட்டத்தில் 55 கூடுதல் நீதிமன்றங்களையும் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

எனினும், இரண்டாம் கட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 37 நீதிமன்றங்கள் நீதிபதிகள் இல்லாமையால் அமைக்கப்படவில்லை.

பதினான்கு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும், தேர்வு செய்யப்பட்ட இரண்டு வட்டங்களில், 2½ ஆண்டுக் காலத்திற்குள் வழக்கே இல்லாத வட்டம் (Litigation Free Taluk) என்ற திட்டத்தையும் சென்னை உயர் நீதிமன்றம் 3-7-1995 முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டம் முடிவுறும்போது, ஆறு திங்களுக்கு மேற்பட்ட வழக்கு ஏதும் குறிப்பிடப்பட்டுள்ள வட்டத்தில் நிலுவையில் இருக்கக்கூடாது என்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

## VI. திட்டப்பணியின்கீழ் நீதித் துறைக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்:

1992-93 ஆம் ஆண்டு வரையில் நீதிமன்றக் கட்டடங்கள், நீதித் துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள், வழக்கறிஞர்களுக்கான அறைகள் (Law Chambers) ஆகியவற்றைக் கட்டுவதற்கான செலவினம், திட்டம் சாராப் பணியின் கீழ் (Non-Plan) மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செலவு முழுவதையும் மாநில அரசே செய்து வந்தது. மத்திய அரசு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு ஏற்படும் செலவை மத்திய அரசும், மாநில அரசும் சரிபாதியாகப் பகிர்ந்துக்கொள்வதற்கு ஏற்றுக் கொண்டது. ஆகவே, 1993-94 ஆம் ஆண்டு முதல் மேற்சொன்ன கட்டடப் பணிகளை மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசு அனுமதித்து வருகின்றது. 1993-94 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை ரூ. 37.56 கோடி மொத்த மூலதனச் செலவில் 81 திட்டங்களுக்கு மாநில அரசு அனுமதி அளித்தது. தற்போதைய அரசு 1996 ஆம் ஆண்டில் பதவி ஏற்ற பிறகு, அதாவது இரண்டு ஆண்டுகளுக்குள், ரூ.29.74 கோடி மூலதனச் செலவில் 11 திட்டங்களுக்கு மாநில அரசு அனுமதி



அளித்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் பின்வரும் திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது:-

| தொடர் எண் | திட்டத்தின் விவரம் | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை உயர் நீதிமன்றத்தில் புதிய நீதிபதிகளுக்கு எட்டு கூடுதல் அறைகள் கட்டுதல். | 27.00 |
| 2. | மதுரையில் வழக்கறிஞர்களுக்கான அறைகள் கட்டுதல். | 160.00 |
| 3. | சேலத்தில், இரண்டாம் கட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல். | 393.50 |
| | மொத்தம் .. | ரூ. **580.50** |

திட்டப்பணியின்கீழ் அனுமதியளிக்கப்பட்ட 92 பணிகளில் இதுவரையில் 56 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்நோக்கத்திற்காக, ரூ.15.86 கோடி நிதியுதவியை மத்திய அரசு அளித்துள்ளது.

நீதித் துறைக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்காக, சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளர், அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ள பெருந்திட்டத்தை (Master Plan) அரசு பரிசீலித்து வருகிறது. இப்பெருந்திட்டத்தில், ரூ.5,220.44 இலட்சம் செலவில், நீதிமன்றக் கட்டடங்கள், நீதித் துறை அலுவலர்களுக்கானக் குடியிருப்புகள் மற்றும் வழக்கறிஞர்களுக்கான அறைகள் ஆகியவை கட்டுவதற்காக 35 பணிகளைச் சென்னை உயர் நீதிமன்றம் சேர்த்துள்ளது.

## VII. அரசு வழக்குகள் துறை

தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் பரிந்துரையின்பேரில், அரசு வழக்குகள் இயக்குநரகத்தின் செயல்பாடுகள் குறித்து அரசு ஆய்வு செய்து, அதனை கலைத்துவிட ஆணையிட்டது. தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞரைத் துறைத் தலைவராகக் கொண்டு, தலைமை வழக்கறிஞர், அரசு உரிமையியல் வழக்கறிஞர், குற்றவியல் வழக்கறிஞர் ஆகியோரின் அலுவலகங்களை உள்ளடக்கிய "அரசு வழக்குகள் துறை" என்ற புதிய துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூன்று சட்ட அலுவலர்களும் தனித் தனி பிரிவுகளாக செயல்படுகின்றனர். அரசின் தலைமை வழக்கறிஞர், உரிமையியல் வழக்கறிஞர், குற்றவியல் வழக்கறிஞர்

முறையே தத்தம் பிரிவுகளுக்கான நியமனம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்களாகச் செயல்படுவர். உயர்நீதிமன்ற சட்ட அலுவலர்களை நியமனம் செய்வதைத் தவிர மேற்சொன்ன புதிய துறையானது தலைமைச் செயலகத்தில் உள்ள உள்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. 1997ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் அரசு வழக்குகள் துறை செயல்படத் தொடங்கியுள்ளது. அரசு வழக்குகள் துறைக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 3,25,92,000/- ஆக இருக்கும்.

## VIII. தமிழ்நாடு மாநில சட்டப் பணி அதிகார மன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-A-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு சட்ட உதவிகளை அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனை மன்றம் ஏற்படுத்தப்பட்டது. சட்ட உதவித் திட்டங்களுக்கு சட்டரீதியாக அங்கீகாரம் வழங்குவதற்காக மத்தியச் சட்டம் 54/94-ன்படி திருத்தப்பட்டுள்ளவாறு 1987-ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகார மன்றச் சட்டத்தை மத்திய அரசு அறிவித்தது. மேற்படி சட்டத்தின் III-ஆம் அத்தியாயம் தமிழ்நாட்டிற்கும் கடந்த 6-3-97 முதல் நீட்டிக்கப்பட்டது. இது, மாநில/மாவட்டச் சட்டப்பணி அதிகார மன்றங்கள் மற்றும் வட்டச் சட்டப் பணிக்குழுக்கள் ஆகியவற்றை அமைக்க வகை செய்கிறது. மாநில/மாவட்டச் சட்டப் பணி அதிகார மன்றங்களையும் வட்டச் சட்டப் பணிக்குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. அதன் விளைவாக, தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனை வாரியம் கலைக்கப்பட்டு, அதன் பணியாளர்கள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். தற்போது. 23 மாவட்டச் சட்டப்பணி அதிகார மன்றங்கள், 128 வட்டச் சட்டப் பணிக்குழுக்கள், 45 பெண்களுக்கான ஆலோசனை மையங்கள், 75 சமரச மையங்கள் ஆகியவை பின்வரும் வகையில் செயல்பட்டு வருகின்றன:-

(1) மத்திய சட்டப்பணி அதிகார மன்றத்தின் கொள்கைகள் மற்றும் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துதல்;

(2) சட்டப்பணி வழங்குதல்;

(3) உயர்நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்றம் உட்பட மக்கள் நீதிமன்றம் அமைத்திடல்;



(4) தடுப்பு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சட்ட உதவித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

தமிழ்நாடு சட்ட உதவி வாரியம் பணியாற்றிய கடந்த இருபது ஆண்டுகால அளவில் பல்வேறு வகையான சட்ட உதவித் திட்டங்களை வகுத்துள்ளது. இவையனைத்தும், புதிய அதிகார மன்றத்தின் வரம்பிற்குள் வருகின்றன. மக்கள் நீதிமன்றங்களை அமைக்க, மாநில, மாவட்டச் சட்டப்பணி அதிகார மன்றங்கள்/வட்ட சட்டப் பணிக்குழுக்கள் ஆகியவற்றுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நீதிமன்றம் கீழ்வரும் நேர்வுகளில் தகராறுகள் குறித்து இரு பிரிவினர்களுக்கிடையே சமரசம் செய்தல் அல்லது தீர்வு காணுதல் ஆகிய அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது :

அ. யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக இருக்கும் யாதொரு வழக்கு (அல்லது)

ஆ. மக்கள் நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் முன் எடுத்துச் செல்லப்படாத யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வரும் யாதொரு வழக்கு.

1997-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் மக்கள் நீதிமன்றங்களில் நடத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2724 ஆகும்.

1996 மற்றும் 1997-ஆம் ஆண்டுகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமப் பகுதிகளில், குறித்த காலத்திற்கொருமுறை சட்ட உதவி, சட்டக் கல்வி விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

## IX. சட்டக் கல்வித் துறை

சட்டக் கல்வியின் தரத்தைப் பரந்த அளவில் உயர்த்தும் நோக்கத்துடன், சட்டக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ந்து மேற்கொண்டும் மேம்பாட்டிற்காகப் பணியாற்றி வருகிறது.

சென்னை அரசு சட்டக் கல்லூரி 1891ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரை அரசு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் திருச்சியிலும், கோவையிலும் முறையே ஒவ்வொரு

சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. 1987-88 ஆம் கல்வியாண்டிலிருந்து விண்ணப்பதாரர்கள் சட்டக் கல்வித்துறையால் நடத்தப்படுகின்ற நுழைவுத் தேர்வில் பெறுகின்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுகிறார்கள். நுழைவுத் தேர்வு விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணியும், தேர்வுப் பட்டியல் தயாரிக்கும் பணியும் கணிப்பொறி மயமாக்கப்பட்டு, இப்பணி, அரசு புள்ளி விவரத் தகவல் தொகுப்பு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய முறையானது, தகுதி வாய்ந்த மாணவர்களைத் தேர்வு செய்து, அதன்மூலம் சட்டக் கல்வித் தரத்தினை உயர்த்திடும் நோக்கத்துடன் செய்யப்பட்டதாகும். இந்த முறையானது எதிர்பார்த்த பலனை அளித்துள்ளது. திருநெல்வேலி சட்டக் கல்லூரி தவிர மற்ற நான்கு அரசு சட்டக் கல்லூரிகளிலும் மூன்றாண்டு (முழுநேரம்), மூன்றாண்டு (மாலை நேரம்) மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. திருநெல்வேலி சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு சட்டப் படிப்பு (முழு நேரம்) மற்றும் மூன்றாண்டு (மாலை நேரம்) சட்டப் படிப்பு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இம்மாநிலத்தின் சட்டக்கல்லூரிகளில் மூன்றாண்டு (முழு நேரம்) சட்டப் படிப்பு மூன்றாண்டு (மாலை நேரம்) சட்டப் படிப்பு மூன்றாண்டு (முழு நேரம்) சட்டப்படிப்பு, மூன்றாண்டு (மாலை நேரம்) சட்டப்படிப்பு, ஐந்தாண்டு சட்டப்படிப்பு ஆகிய வகுப்புகளின் சேர்க்கைக்கு சிறந்த விளையாட்டு வீரர்களுக்கென மொத்தம் 16 இடங்களை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

1997-98 ஆம் கல்வியாண்டில் சட்டக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| சட்டக் கல்லூரியின் பெயர். | அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 3301 |
| 2. மதுரை சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1808 |



| (1) | (2) |
|---|---|
| 3. திருச்சி சட்டக் கல்லூரி, திருச்சி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1056 |
| 4. கோவை சட்டக் கல்லூரி, கோவை (இளநிலை சட்டப் படிப்பு) | 1016 |
| 5. திருநெல்வேலி சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை சட்டப் படிப்பு) | 240 |
| மொத்தம் | **7421** |

1997-98 ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு, மூன்றாண்டு (முழு நேரம்) மூன்றாண்டு (மாலை நேரம்) மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு சேர்க்கைக்கு தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களின் பிள்ளைகளுக்கு 1 சதவீத இடத்தினையும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு 1 சதவீத இடத்தினையும் ஒதுக்கீடு செய்து அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

அரசின் பல்வேறு சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி, பாடத்திட்டத்தில் சேராத ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்குவதால், சட்ட மாணவர் பயிற்சி வழக்கு வாதம் (Moot Court) போன்ற செயல்முறைப் பயிற்சிகளிலும் தனிச் சிறப்புடன் விளங்கி வருகின்றனர். டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள், இந்தியாவின் சார்பில் சட்ட மாணவர் பயிற்சி வழக்குவாத சர்வதேசப் போட்டியில் கலந்து கொள்வதற்கு அடுத்தடுத்த பல ஆண்டுகளாகத் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். மாணவர்களின் தகுதியினைக் கருத்தில் கொண்டு, சட்ட மாணவர் பயிற்சி வழக்கு வாதத்திறனறி போட்டியில் கலந்து கொள்வதற்கியலும் வகையில் தமிழக அரசு மாணவர்களுக்கு நிதி உதவியினை வழங்கி உள்ளது.

மாநிலத்தில் அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, 1973-74 ஆம் ஆண்டு முதல் தமிழ் மொழியிலும் சட்டப் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தமிழில் அல்லது ஆங்கிலத்தில் சட்டம் பயில மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தமிழில் சட்டம் பயிலும் மாணவர்களுக்கு ஓராண்டிற்கு ரூ. 180/- பயிற்சியுதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

மாணவர்களின் நலனுக்காக சென்னை, மதுரை மற்றும் திருச்சி சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கித் திட்டம் செயல்படுகிறது.

சட்ட ஆலோசனை தேவைப்படும் ஏழை மற்றும் எளியோர்கள் பயன்பெறும் வகையில் சட்டக் கல்லூரிகளில் இலவசச் சட்ட உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**கட்டடங்கள் :**

திருநெல்வேலி சட்டக் கல்லூரி தவிர, ஏனைய 4 சட்டக் கல்லூரிகள் தற்போது, அரசு கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி சட்டக்கல்லூரி, தற்போது திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி வளாகத்திலுள்ள பொன்னுச்சாமி மாளிகையில் செயல்பட்டு வருகிறது. இதற்காக நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ரூபாய் 177.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மாணவரில்லங்கள் இரண்டு உள்ளன. அவை, அரசு கட்டடத்தில் சென்னையில் உள்ளன. அவை, முறையே 225 மாணவர்களுக்கும், 60 மாணவிகளுக்கும் இடவசதி அளிக்கின்றன. மதுரை சட்டக் கல்லூரியும் அரசு கட்டடங்களில் மாணவரில்லங்கள் இரண்டினைப் பெற்றுள்ளது. அவற்றில் முறையே 30 மாணவர்களுக்கும், 20 மாணவிகளுக்கும் இடவசதி அளிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில், மாணவர்களுக்கு மட்டும் ஒரே ஒரு மாணவரில்லம் உள்ளது. இது 40 மாணவர்களுக்கு இடவசதி அளிக்கிறது.

மேலும் பட்டதாரி இல்லா குடும்பத்தின் முதல் பட்டதாரி மாணவருக்கு மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், வேளாண்மை, பல்மருத்துவம் ஆகிய பட்டப் படிப்புகளில் அவர்களின் கல்விச் செலவு குறித்துத் தற்போது அளிக்கப்படும் சலுகையை சட்டப் படிப்பிற்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது.

1998-99 ஆம் கல்வியாண்டிலிருந்து "கிராமப்புற மாணவர்களுக்குச்" சட்டப் படிப்பிற்கும் 15 சதவீத இட ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

## தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம், சென்னை.

நாட்டின் முதல் சட்டப். பல்கலைக் கழகம் ஒன்றை டாக்டர் அம்பேத்கர் பெயரில் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக, சட்டக்கல்வியின் தரத்தினை உயர்த்துவதும், மக்களிடையே சட்ட அறிவினைப் பரப்புவதுமே இப்பல்கலைக் கழகத்தின் நோக்கம் ஆகும்.



இப்பல்கலைக் கழகம், சட்டக் கல்வியின் வாயிலாக சமுதாய நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் சமத்துவ சமுதாயக் குறிக்கோளை எய்தவும் முயற்சிக்கும்.

சட்ட மாணவர்கள் மற்றும் சட்ட ஆராய்ச்சியாளர்களிடையே சட்ட அறிவுத்திறனை வளர்க்கவும், இதன் மூலம் சமுதாயத்திற்குச் சேவை செய்யும் பொருட்டு வழக்காடும் திறமையை வளர்க்கத் தேவையான சட்ட உதவி நல்கவும், சட்டங்கள் இயற்றுதல் மற்றும் சட்ட சீர்திருத்தங்கள் கொண்டு வருவதற்குத் தேவையான சட்ட நுணுக்க விளக்கங்களை அளிக்கவும் இப்பல்கலைக் கழகம் செயல்படும். தமிழ்நாட்டிலும், தேசிய அளவிலும்கூட சட்டக்கல்வி மாணவர்களுக்கான "பயிற்சி வழக்காடு மன்றங்களை" (Moot Court) இப்பல்கலைக்கழகம் ஏற்படுத்தும். தொலைதூரப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் இருப்பவர்களுக்கு இப்பல்கலைக்கழகம் அடிப்படைச் சட்ட அறிவு புகட்ட தக்க ஏற்பாடுகளைச் செய்யும். அத்துடன், பெண்கள், தொழிலாளர்கள் முதலிய வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் சட்டங்களை எளிய தமிழில் அச்சிட்டு எல்லோரும் அவரவர் துறையில் அறிய வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ள ஏதுவாகத் திட்டமிட்டுசெயல்படும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டக்கல்லூரிகளுக்கும் ஒரே மாதிரியான பாடத் திட்டம் இருக்கும் என்பதோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டக்கல்லூரி மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்வுகள் நடத்தி முடிவுகளை விரைவில் வெளியிட புதிய பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்யும். பல்வேறு சட்டப் பிரிவுகளுக்குச் சட்ட சிறப்பறிவு பெறுவதற்காகக் கொடுக்கப்படும் கல்வி மற்றும் பயிற்சியின் தரம் மேம்படுத்தப்படும். மக்களுக்கு அவற்றின் பலன்கள் ஒட்டுமொத்தமாகச் சென்று அடைந்திட இப்பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்யும்.

பெண்களுக்குத் தனியாக நீதித்துறை ஒன்று ஏற்படுத்தப்படும். இது, மகளிர் தொடர்பான சட்டச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்தும். ஆண்களுக்கு நிகராக, கிராமப்புற மகளிருக்கும் சமுதாயத்தில் சமநீதி பெற வழிகாட்டும் ஆலோசனை மையமாக இது செயல்படும். இச்சட்டப் பல்கலைக்கழகம், சமுதாய மேம்பாடு, தேசிய ஒற்றுமை, சமநீதி, சமத்துவம், சகோதரத்துவ மனப்பான்மை ஆகியவற்றை எய்த தனது திட்டப் பணிகள் மூலம் பாடுபடும். சட்டம் தொடர்பாக இயங்கக்கூடிய எல்லா அமைப்புகளும் (அரசு, நீதித்துறை, அதன் நிருவாகப்

பிரிவு, காவல்துறை, சட்டமன்றம் ஆகியவை) தங்களது சமுதாயப் பொறுப்பினை உணரும் பொருட்டு இப்பல்கலைக்கழகம் ஒருங்கிணைப்பு மையமாகச் செயல்படும்.

## X. குற்றவழக்குத் தொடர்வு இயக்குநர்

இம்மாநிலத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களிலுள்ள சட்ட அலுவலர்கள் மற்றும் குற்ற வழக்குத் தொடர்வு நீதிமன்றத்துடன் இணைந்த அலுவலர்கள் ஆகியோரின் குற்ற வழக்குத் தொடர்வுகளை செவ்விய முறையில் கட்டுப்படுத்தவும் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்து வருவதைக் கண்காணிக்கவும் குற்றவியல் தொடர்வு இயக்ககம் அரசால் மீண்டும் தொடங்கப்பட்டது. காவல்துறைத் தலைவர் நிலையிலுள்ள ஓர் அதிகாரி, குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். உதவி குற்றவழக்குத் தொடர்வு இயக்குநர்கள், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில் பணிபுரியும் கூடுதல் குற்ற வழக்கு நடத்துநர்கள், உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள், நிலை-1 (நிருவாகம்) மற்றும் உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள் நிலை-1 மற்றும் நிலை-2 ஆகியோரது ஒட்டுமொத்த நிருவாக அலுவல்களுக்குக் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். இயக்குநர், திங்கள்தோறும் ஆய்வுக்கூட்டங்களை நடத்தி, மாவட்டங்கள் தோறும் நிலுவையிலுள்ள வழக்குகள், தீர்வு காணப்பட்ட வழக்குகள் குறித்து, குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி, நுண்ணாய்வு செய்து வருகின்றார். குற்ற வழக்குத் தொடர்வு அலுவலர்கள் பணிபுரிவதை நேரிலேயே ஆய்வு செய்ய நீதிமன்றங்களுக்கு அடிக்கடி சென்று பார்வையிடுகிறார். வழக்குகளுக்கு விரைவாகத் தீர்வு காண, சம்பந்தப்பட்ட குற்றவியல் நீதிபதிகளையும், காவல்துறை அலுவலர்களையும் சந்தித்துப் பேசி வருகிறார். இயக்குநர், காவல்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்தி, நிலுவையிலுள்ள வழக்குகளைக் குறைக்கவும் வழக்குகளுக்கு விரைவாகத் தீர்வு காணவும் அவ்வப்போது தேவையான அறிவுரைகள் வழங்கி வழிகாட்டிக் குறிப்புகளைப் பிறப்பிக்கிறார். காவல்துறை இயக்குநரின் அறிவுரைகளின் பேரில் காவல்துறைக் கண்காணிப்பாளர்களும், காவல்துறை ஆணையர்களும் நீதிமன்றத்தில் நடைபெறும் அலுவல் குறித்து, திங்கள்தோறும் குற்றவியல் தொடர்வு இயக்குநருக்கு விவர அறிக்கைகளை அனுப்புகின்றனர். அவர் இவ்விவர அறிக்கைகளை நுண்ணாய்வு செய்து, நீதிமன்றத்தில் பணிகள் மேலும் சிறப்பாக நடைபெற காவல்துறை அலுவலர்களுக்கு, தேவையான வழிகாட்டிக் குறிப்புகளைப் பிறப்பிக்கிறார்.



8 சரகங்களிலுள்ள 11 உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள், மாவட்டங்களில் கூடுதல் மாவட்ட நீதிபதிகள்-நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகரில் தலைமை பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஆகியவற்றுடன் இணைந்த 22 கூடுதல் குற்ற வழக்கு நடத்துநர்கள், உதவி குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் மாவட்டத்திலுள்ள 14 உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள், நிலை-1 (நிருவாகம்) ஆகியோர் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநரின் நேரடி மேற்பார்வையின் கீழ் வருகின்றனர். நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்து நுண்ணாய்வு செய்து, அனைத்து நிலைகளிலும் நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, நீதிமன்றங்களில் உள்ள வழக்கு நிலுவைகளைக் குறைக்க ஆய்வு செய்து, வழிவகைகள் கண்டறிய, சம்பந்தப்பட்ட உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள் நிலை-1 மற்றும் நிலை-2, காவல்துறை ஆணையர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், மாவட்ட வன அலுவலர்கள் (சந்தன மரம் தொடர்பான குற்றங்கள்) ஆகியோருடன் காலமுறை ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. தத்தம் கட்டுப்பாட்டின் கீழுள்ள உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள், நிலை-1 மற்றும் நிலை-2 ஆகியோரின் செயலாக்கத்தைக் கண்காணித்து, அவ்வப்போது தேவையான வழிகாட்டலுக்காக உதவி குற்றத் தொடர்வு இயக்குநர்களும், உதவி குற்ற வழக்கு நடத்துநர்களும், நிலை-1 (நிருவாகம்) நீதிமன்றங்களுக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு நடத்துகின்றனர்.

இத்திட்டத்தினை நிறைவேற்றவும், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநருக்கு உதவி புரியவும், உதவி குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர்கள் என்ற பெயரில், 11 மண்டல சட்ட அலுவலர் பதவிகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பதவிகளில் மூத்த சட்ட அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். இந்த உதவி குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர்கள், மாவட்ட நிலையில் கூட்டங்களை நடத்துகின்றனர். மாவட்டங்களிலுள்ள உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள், நிலை-1 மற்றும் நிலை-2 உட்பட அனைத்து சட்ட அலுவலர்களின் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்கின்றனர். மாவட்டங்களிலுள்ள கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமை நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் மற்றும் சென்னையிலுள்ள தலைமைப் பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஆகியவற்றிலுள்ள 22 உதவி குற்ற வழக்கு நடத்துநர் பதவிகள், கூடுதல் குற்ற வழக்கு நடத்துநர் பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டன.

1997 ஆம் ஆண்டில் 90,824 குற்ற வழக்குகள் தீர்வு செய்யப்பட்டன. காவல்துறையுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு பிடியாணைகளைச் சார்வு செய்ய ஊக்க நடவடிக்கைகள் மேற்கொண்டதன் மூலம் 31-8-96 அன்று 52,082 ஆக இருந்த சார்வு செய்ய வேண்டிய பிடியாணைகள் 31-1-98 அன்று 29,896 ஆகக் குறைக்கப்பட்டுள்ளன. தேவையில்லாமல் நிலுவையிலுள்ள வழக்குகளைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திரும்பப் பெறுவதற்காக 8,000-க்கும் மேலான வழக்குகள் கண்டறியப்பட்டுள்ளன. அதிக சாட்சிகளை விசாரித்து, வழக்குகளை விரைவில் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் சாட்சிகளை விசாரணை செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சட்ட அலுவலர்கள் நிரந்தர அரசுப் பணியாளர்கள் ஆவர்:-

1. குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர்
2. குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்கள்
3. குற்ற வழக்கு கூடுதல் நடத்துநர்கள்
4. குற்ற வழக்கு உதவி நடத்துநர்கள், நிலை-I (நிருவாகம்)
5. குற்ற வழக்கு உதவி நடத்துநர்கள், நிலை-I
6. குற்ற வழக்கு உதவி நடத்துநர்கள், நிலை-2.

நீதிமன்றத்தில் வழக்குகளை நடத்துவதோடு, மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியவர்களுக்கும் மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் சட்ட ஆலோசனை வழங்கி வருகின்றனர். காவல்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, வேளாண்மைத்துறை, ஒழுக்கக் கண்காணிப்பு-ஊழல் தடுப்புத்துறை போன்ற துறைகளின் பல்வேறு பிரிவுகளுக்குக் குற்ற வழக்கு உதவி நடத்துநர்கள், நிலை-I மற்றும் நிலை-2, சட்ட ஆலோசகர்களாக முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

## XI. சட்டத் துறையிலுள்ள (சட்ட) ஆட்சிமொழிப் பிரிவு:

நெறிபடுத்துக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டச் சொற்களஞ்சியத்திற்கு இறுதி வடிவங்கொடுத்து அதனை வெளியிடும் நோக்கத்திற்காகவும் மைய, மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள்,



அச்சட்டங்களின்கீழ் இயற்றப்படும் விதிகள், அறிவிக்கைகள் ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காகவும், அரசினால் அவ்வப்போது ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும் ஏனைய பணிகளை மேற்கொள்வதற்காகவும், மாநில (சட்ட) ஆட்சி மொழி ஆணையமானது, முதன்முதலாக 1965-ஆம் ஆண்டில் நீதியரசர் திரு மா. அனந்தநாராயணன் அவர்களைத் தலைவராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. மேற்சொல்லப்பட்ட ஆணையம் அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டு வந்து, கடைசியாக 1989-ஆம் ஆண்டு திரு மா. சண்முகசுப்பிரமணியன் அவர்களின் தலைமையின்கீழ் மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

பின்னர், 1992-ஆம் ஆண்டு மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையமானது, சட்டத்துறையின் அரசுக் கூடுதல் செயலாளரின் தலைமையில், சட்டத்துறையின் ஒரு பிரிவாக, அரசுத் துறையாக்கப்பட்டு, சட்டத்துறை அரசுச் செயலாளரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின் கீழும், மேற்பார்வையின்கீழும் இயங்கி வருகிறது. பெருமளவில் மொழிபெயர்ப்புத் திறனை வளர்ப்பதற்காகவும், மைய அரசினாலும் ஏனைய சில மாநில அரசுகளாலும் பின்பற்றப்பட்டுவரும் முறையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

ஆட்சிமொழி (சட்டப்) பிரிவானது மத்தியச் சட்டங்களையும், மாநில சட்டங்களையும் தமிழில் மொழி பெயர்த்து வருகின்றது. மத்தியச் சட்டங்கள், மைய அரசிடமிருந்து வரப்பெற்ற முன்னுரிமைப் பட்டியல்களின் அடிப்படையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. இதுவரை ஆட்சி மொழி (சட்டப்) பிரிவானது மைய அரசிடமிருந்து ஐந்து முன்னுரிமைப் பட்டியல்களைப் பெற்றுள்ளது. மேற்சொன்ன பட்டியல்களிலுள்ள மத்தியச் சட்டங்களில் பெரும்பாலானவை மொழிபெயர்க்கப்பட்டு, இறுதி வடிவம் அளிக்கப்பெற்று, பல படிநிலைகளில் ஏற்புபெறும் நிலையில் உள்ளன. முன்னுரிமைப் பட்டியல்களில் காணப்படும் சில மத்தியச் சட்டங்களில் கடைசியாக செய்யப்பட்ட திருத்தங்களையும் சேர்த்து, மீண்டும் மொழிபெயர்க்கப்பட்டு, இறுதி செய்யப்பட்டு அவற்றிற்கு அரசின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. அதேசமயம், பொது முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படும் மாநில சட்டங்கள் சில மொழிபெயர்க்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளன.

ஏற்கெனவே மொழிபெயர்க்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்ட இருபத்து மூன்று மத்தியச் சட்டங்களின் தமிழ்

மொழிபெயர்ப்பின் எட்டு மத்தியச் சட்டங்கள், புத்தக வடிவில் (இருமொழிப் பதிப்பு) (Diglot Edition) வெளியிடப்பட்டுள்ளன. மேலும் அத்தகைய எட்டு மத்தியச் சட்டங்கள் இந்திய அரசிதழில் வெளியிடப்பட்ட பின்பு விரைவில் வெளிவரும் நிலையில் உள்ளன. இதுதவிர, 104 மத்தியச் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பி வைக்க, நீலத்தாளில் (Azurelaid paper) அச்சடிக்கப்படுவதற்காக அரசு மைய அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இருமொழிப் (ஆங்கிலத்திலும், தமிழிலும்) (Diglot Edition) பதிப்பாக அமைக்கப்பட்டுள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட தமிழாக்கத்திற்கு மத்திய, மாநில அரசுகள் ஒப்புதல் அளித்துள்ளன. அது 1991 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டு விற்பனைக்காக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மத்திய மாநில அரசுகளால் ஒப்புதலளிக்கப்பட்ட அறுபத்தி ஆறு (66) மத்தியச் சட்டங்களின் மொழியாக்கம் அச்சகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அரசு மைய அச்சகத்தில் அவை அச்சிடப்பட்டு வருகின்றன. மேலும், 10 மத்தியச் சட்டங்களும் 15 மாநிலச் சட்டங்களும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

## XII. தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆணையம் :

சட்டச் சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தையும், சட்ட விதிகளையும், பிற சட்டங்களையும் காலத்திற்கேற்ற வகையில் புதுப்பிக்க வேண்டிய சமுதாயத் தேவையையும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ஆம் பிரிவின் விதித்துறைகளின் பொருட்செறிவிற்குக் குறையேதும் ஏற்படாமல், மாநிலத்தின் பல்வேறு அங்கங்களுக்கு இடையேயான தொடர்பினையும், செயல் விளைவுகளையும் மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, தமிழ்நாடு அரசு 09-05-1994-ல் மாநிலச் சட்ட ஆணையத்தை அமைத்துள்ளது.

மாநிலச் சட்ட ஆணையம் பின்வரும் நபர்களைக் கொண்டதாகும்:—

1. தலைவர்;
2. இரு முழுநேர உறுப்பினர்கள்;
3. இரு பகுதிநேர உறுப்பினர்கள்;
4. முழுநேர உறுப்பினர்-செயலர் ஒருவர்;



தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆணையம் மாண்புமிகு திரு. நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையில் 28-01-1997 அன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் பரிசீலனை செய்வதும், அவை இன்றைய கால சூழ்நிலைக்கு ஏற்றவையா, இல்லையா என்பது குறித்துக் கருத்துத் தெரிவிப்பதும், தேவையானால், அந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைப்பதும், சட்ட ஆணையத்தின் பணிகளாகும். மேலும், சட்ட ஆணையம் மேற்சொன்ன சட்டங்கள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தின் மற்றும் உயர்நீதிமன்றங்களின் பல்வேறு முடிவுகளுக்கு இணங்க உள்ளனவா என்பது குறித்து ஆராய்ந்து, அந்தந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து அரசுக்கு பின்வருமாறு ஆலோசனை கூறும்:

(1) தற்போது இருந்து வரும் சட்டங்களில் காணப்படும் குறைகளைக் களைவதற்குத் தக்க மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்குமாறும்;

(2) பொருத்தமான, சமுதாய-பொருளாதாரச் சட்டமியற்றும் நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைக்குமாறும்;

(3) பன்மாநில உறவுகளுக்கும், மைய-மாநில உறவுகளுக்குமான வழிவகைகளைக் கூறுமாறும்;

(4) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் குறித்து, செம்மையாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றி கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறும்;

(5) மாநிலச் சட்டங்களுக்கு மட்டும் அல்லாமல், இந்த மாநிலத்திற்குப் பொருந்துகின்ற மத்தியச் சட்டங்களுக்கும் கூட, மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் பற்றிக் கருத்துரைகளைத் தெரிவிக்குமாறும் சட்ட ஆணையமானது கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆணையம் கீழ்க்காணும் ரத்து செய்யப்படாத மத்தியச் சட்டங்கள் குறித்த அறிக்கையை 03-12-1997 அன்று அதன் சுருக்கமான பரிந்துரையுடன் அரசுக்குச் சமர்ப்பித்தது:

[1998 மே 12

(1) தமிழ்நாடு வாடகை மற்றும் தீர்வை விற்பனைகள் சட்டம், 1839 (சட்டம் VII/1839)

(2) தமிழ்நாடு வருவாய் ஆணையர் சட்டம், 1849 (சட்டம் X/1849)

(3) சென்னை மாநகர நிலத்தீர்வை சட்டம், 1851 (சட்டம் XII/1851)

(4) தமிழ்நாடு கட்டாய வேலை வாங்கும் சட்டம், 1858 (சட்டம் I/1858)

(5) தமிழ்நாடு வனம் (செல்லத் தக்கதாக்குதல்) சட்டம் 1882 (சட்டம் XXI/1882)

(6) தமிழ்நாடு, வங்காளம் மற்றும் பம்பாய் குழந்தைகள் (துணை) சட்டம், 1925 (சட்டம் XXXV/1925) மற்றும் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920 (சட்டம் IV/1920)

இப்போது இந்த ஆணையம், பின்வரும் சட்டங்கள் குறித்து பரிசீலித்து, இதன் அறிக்கையைத் தயாரித்து வருகிறது:

(1) தமிழ்நாடு 1837 ஆம் ஆண்டு பொது சொத்துக்கள் பாதுகாப்புச் சட்டம் (சட்டம் XXXVI/1837)

(2) தமிழ்நாடு 1859 ஆம் ஆண்டு மாவட்டக் காவல் சட்டம் (சட்டம் XXIV/1859)

(3) தமிழ்நாடு 1873 ஆம் ஆண்டு சிவில் நீதிமன்றங்கள் சட்டம் (சட்டம் III/1873)

(4) 1892 ஆம் ஆண்டு சென்னை மாநகர் சிவில் நீதிமன்றங்கள் சட்டம் (சட்டம் VII/1892)

## XIII. 1997-98 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட முக்கியத் திட்டங்கள்

(1) திட்டப்பணிகளின் கீழ் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்குக் கூடுதல் அறைகள் கட்ட ரூ. 27.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(2) திட்டப்பணிகளின்கீழ் சேலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், 2-வது கட்டத்தில் கட்ட ரூ. 393.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



1998 மே 12]

(3) திட்டப்பணிகளின்கீழ் மதுரையில் சட்ட வழக்குரைஞர்கள் அறை கட்ட ரூ. 100.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(4) முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சில அரசுப் பணியாளர்கள் மீது 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரிப்பதற்கென்றே ரூ. 47.42 இலட்சம் செலவில் சென்னையில் மூன்று கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(5) சென்னையிலுள்ள 3 கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கு ரூ. 8.06 இலட்சம் செலவில் மிகப் பெரிய ஜெராக்ஸ் சாதனம் வழங்கப்பட்டுள்ளது.

(6) நீதிபதிகளின் பயன்பாட்டிற்காகக் கூடுதல் மின்உயர்த்தி (Lift) ஒன்றினை உயர்நீதிமன்றத்தில் அமைக்க ரூ. 19.90 இலட்சம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(7) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் அறைகளுக்கு குளிர் சாதன வசதிகள் செய்து கொடுக்க ரூ. 11.89 இலட்சம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(8) 19 பழைய சிருந்துகளுக்குப் பதிலாக புதிய சிருந்துகள் வாங்குதல் உட்பட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பயனுக்காக 31 புதிய சிருந்துகளுக்கு ரூ. 93.80 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(9) சென்னை உயர்நீதிமன்றத்திற்கென அமைக்கப்பட்ட குளிர்சாதன நிலையத்தினைப் பராமரித்து வரவும், பழுதுபார்த்துப் புதுப்பிக்கவும் ரூ. 6.36 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(10) சென்னையிலுள்ள 3 கூடுதல் மாநகர் உரிமையியல் நீதிமன்றங்களுக்கு ரூ. 34.00 இலட்சம் மதிப்பில் குளிர்சாதன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(11) மேட்டூரில் துணை நீதிமன்றம் ஒன்றினை ரூ. 18.44 இலட்சம் செலவில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(12) திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றினை ரூ. 17.58 இலட்சம் செலவில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(13) சில மாவட்டங்களில் உடைந்த அறைகலன்களுக்குப் பதிலாக புதிய அறைகலன்களுக்கும், சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்திற்கென இரும்பு பீரோ வாங்கவும், 1997-98 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 100/- இலட்சம் வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பகுதி-2 திட்டத்தின்கீழ் 12 திட்டங்களுக்கு ரூ. 40.98 இலட்சம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(14) நிகரி (fax), போட்டோ நகல் எடுக்கும் இயந்திரம் (photocopier), இயந்திரத் துடைப்பான் (vacuum cleaner), சட்ட நூல்கள் மற்றும் காலமுறை வெளியீடுகள் ஆகியவற்றை உயர்நீதிமன்றத்திற்கென வாங்குவதற்காக ரூ. 22.55 இலட்சம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(15) சென்னையிலுள்ள மாநகர் உரிமையியல் நீதிமன்றம் உள்பட 23 மாவட்ட நீதிமன்றங்களிலுள்ள ஒவ்வொரு கணினி மையத்திற்கும் தொலைபேசி மற்றும் அறைகலன்கள் முதலியவை வாங்க ரூ. 5.20 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(16) வழக்குரைஞர் நல நிதிக்காக ரூ. 5.00 இலட்சம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(17) 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிக்க ரூ. 17.00 இலட்சம் செலவில் ஒரு தனி நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது 19-01-1998 முதல் செயல்படத் தொடங்கியது.

(18) ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாட்சியங்களையும் மற்ற ஆவணங்களையும் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க சென்னை உயர்நீதிமன்றத்திற்கு 100 உதவிப் பிரிவு அலுவலர் பணியிடங்களை ரூ. 20.85 இலட்சம் தொடரும் செலவிலும், ரூ. 1.00 இலட்சம் தொடரா இனச் செலவிலும் ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



## XIV. அரசு நிறைவேற்ற வேண்டிய முக்கியமான குறிக்கோள்கள்

### அ. சென்னையில் உச்சநீதிமன்ற ஆயம் அமைத்தல்

தமிழகத்தில் சென்னையில் இடம் பெறத்தக்க விதத்தில் உச்சநீதிமன்ற ஆயம் ஒன்றை அமைப்பதற்கான இவ்வரசின் வேண்டுகோளைப் பரிசீலித்து இது தொடர்பான முடிவினைத் தெரிவிக்குமாறு 1980 ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. நீண்டகாலக் கடிதத் தொடர்புக்குப் பின்னர் 11-05-94 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் தலைமையில் நடைபெற்ற முழு நீதிமன்றக் கூட்டத்தில் இப்பொருள் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டதாகவும், தென்னிந்தியாவில் சென்னையிலோ அல்லது இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலுமோ, உச்சநீதிமன்ற ஆயம் நிறுவப்படுவதற்கில்லை என ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டதாகவும், 21-09-94 அன்று மைய அரசு தெரிவித்தது.

எனினும், உச்சநீதிமன்ற ஆயத்தைச் சென்னையில் நிறுவவேண்டியதன் உயர் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, தனது முந்தைய நிலையினை மறுபரிசீலனை செய்து சாதகமான முடிவெடுக்கும் விதமாக உச்ச நீதிமன்றத்திடம் இக்கோரிக்கையினை மீண்டும் வலியுறுத்துமாறு 10-10-96 அன்று மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் தலைமையில் நடைபெற்ற முழு நீதிமன்றக் கூட்டத்தில் தில்லிக்கு வெளியே உச்ச நீதிமன்ற ஆயங்கள் அமைப்பது தொடர்பான யோசனைகள் குறித்துப் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுவிட்டதாகத் தற்போது மைய அரசு தகவல் அளித்துள்ளது. சிறிது காலத்திற்குப் பிறகு மைய அரசை மீண்டும் அணுகுவது என இவ்வரசு முடிவெடுத்துள்ளது.

### ஆ. மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைத்தல்

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி முதலிய தென் மாவட்டங்களிலிருந்து வரும் வழக்காடும் மக்களுக்கு நலம் பயக்கும் விதத்தில் மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பதை இவ்வரசு விரைவுபடுத்தியுள்ளது. இதுகுறித்து உயர்நீதிமன்றத்தை கலந்தாலோசித்தபோது, தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை

ஏற்படுத்தித் தரவேண்டும் என்னும் நிபந்தனையுடன் மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பதற்குச் சென்னை உயர்நீதிமன்றம் இசைவளித்தது. இதற்காக, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், உலகனேரி கிராமத்தில் புல எண்கள் 3/2 முதல் 39/1 எஃப் வரையில் உள்ள 75 ஏக்கர் நிலத்தை உயர்நீதிமன்றம் தேர்வு செய்து, 1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டவிதிகளின்கீழ் அந்நிலத்தைக் கையகப்படுத்துமாறு சென்னை உயர்நீதிமன்றம், அரசுக்குப் பரிந்துரைத்தது. 1997 மார்ச்சு திங்களில் உயர்நீதிமன்றம் கேட்டவாறான இந்நில எடுப்புக்கான நிருவாக ஒப்புதலை அரசு வழங்கியது. அதற்கிணங்க, நில எடுப்புச் சட்டம் 4(1) பிரிவின் கீழ் அறிவிக்கைகளை 8-5-1997 அன்று அரசு வெளியிட்டது. இந்நில எடுப்புக்கான விளம்பல் அறிவிக்கைகளை, நில எடுப்புச் சட்டம், பிரிவு 6-ன் கீழ் அரசு வெளியிட்டுள்ளது. மேலும் நில எடுப்புச் செய்வதற்காக நில எடுப்புச் செலவாக ரூ.2,52,39,439/-ஐ அரசு அனுமதித்துள்ளது. இந்நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நில எடுப்பு அலுவலரால் விரைவாக மேற்கொள்ளப்படுகிறது. நிலமனைத்தும் அரசின் பொறுப்பின்கீழ் வந்ததும், மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைக்கத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான பணிகளை அரசு உடனடியாக மேற்கொள்ளும்.

இதற்கிடையில், தென்மாநில மக்களின் நீண்டகாலக் கனவை நினைவாக்கும் வகையில் உடனடியாகச் செயல்வடிவம் கொடுக்கும் விதத்தில் உயர்நீதிமன்ற ஆயத்தினைத் தற்போதைய மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலேயே, போதுமான மேம்பாட்டுப் பணிகளைச் செய்து, தற்காலிகமாகத் தொடங்குவதற்கு அரசு விருப்பம் கொண்டுள்ளது. இதற்கான ஒப்புதல் உயர்நீதிமன்றத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## XV. 1998-99 ஆம் ஆண்டில் புதிதாக மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள்

ஆண்டுதோறும் நீதி நிருவாக மானியக் கோரிக்கையின் கீழ் புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கி வருகிறது. நீதி நிருவாகத் துறைக்கென, உள்துறையின் கீழ் ஆண்டுக்கு ரூ. 167.67 இலட்சம் தொடரும் இனச் செலவிலும், ரூ. 57.60 இலட்சம் தொடரா இனச் செலவிலுமாக 33 புதிய திட்டப்பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளிக்க முடிவு செய்துள்ளது என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இது தவிர, சட்டத்துறையின் கீழ் ரூ. 2.46 இலட்சம் தொடரும் இனச் செலவிலும்



ரூ. 35.00 இலட்சம் தொடரா இனச் செலவிலுமாக ஏழு புதிய திட்டங்களையும் அரசு ஏற்க முடிவு செய்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்ட விபரங்கள் இணைப்பு-3-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## XVI. முடிவுரை

சுருங்கக் கூறின், நீதித்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, நீதித்துறைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, நீதித்துறையின் தனித்துவத்தைப் பேணிக் காப்பதற்கு உரிய சூழல்களை உருவாக்குவதற்கு இவ்வரசு தொடர்ந்து முனைப்புடன் பாடுபடும். நீதி வேண்டி, நீதிமன்றத்திற்கு வரக்கூடிய பொதுமக்களுக்கு நீதி நிருவாகத் துறையின் மீதிருக்கும் நம்பிக்கை சிறிதளவும் குறையாவண்ணம் நீதியின் தரமும் அளவும் எட்டுணையளவும் குன்றாது முழுமையாகக் கிடைக்கச் செய்வதை, நீதி நிருவாகத்துறை தனது குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றும். நீதித்துறையில் எடுக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றப் பணிகள் எப்போதும்போல் தொடர்ந்து சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு இத்துறைக்கு ஒளி சேர்க்கும்.

### இணைப்பு - 1

*(அ) சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களின் பட்டியல்*

| தொடர் எண் (1) | நீதிமன்றங்களின் பெயர் (2) | மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் (3) | துணை நீதிபதி பதவித் தரத்தில் (4) | மாவட்ட முன்சிப் நீதித்துறை மாஜிஸ்டிரேட் பதவித் தரத்தில் (5) |
|---|---|---|---|---|
| 1. | மாநகர் உரிமையியல் நீதிமன்றம் | 15-அ | 18 | 1 |
| 2. | சிறுவழக்குகள் நீதிமன்றம் | 1 | 8 | 8 |
| 3. | பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 3-அ-அ | 6 | 16 |
| 4. | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | .. | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 5. | தொழில் நடுவர் மன்றம் | 1 | .. | .. |
| 6. | இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | .. | .. |
| 7. | என்.டி.பி.எஸ். சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | .. | .. |
| 8. | அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர் | 1 | .. | 1 |
| 9. | தலைமைப் பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதிமன்றம், சென்னை | 1 | .. | .. |
| 10. | இணை பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதிமன்றம், சென்னை | .. | 1 | .. |
| 11. | உதவி பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதிமன்றம், சென்னை | .. | .. | 1 |
| | மொத்தம் | 27 | 33 | 27 |

* VIII ஆம் கூடுதல் நீதிபதி, தனியார் கல்லூரிகள் மேல்முறையீட்டு நடுவர் மன்றமாகவும், IX, X ஆம் கூடுதல் நீதிபதிகள் மத்திய புலனாய்வுத்துறை வழக்குகளுக்கான தனி நீதிபதிகளாகவும் செயல்படுகிறார்கள்.

** பொருளாதாரக் குற்றங்களின் விசாரணைக்கான பெருநகரக் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் இரண்டும் இதில் அடங்கும்.



**(ஆ) மாவட்டங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் தீர்ப்பாயங்கள்**

| | மாவட்ட நீதிபதி பதவித்தரம் | | | | | | | மாவட்ட முன்சீப் பதவித்தரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டங்கள் 1 | மாவட்ட நீதிபதிகள் 2 | கூடுதல் மாவட்ட நீதிபதி - தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள் 3 | தொழிலாளர் நீதிமன்றங்கள் 4 | சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்ட வழக்குகள் 5 | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகள் 6 | மத்திய புலனாய்வுத் துறை வழக்குகள் 7 | துணை நீதிபதிகள் 8 | மாவட்ட முன்சீப்கள் 9 | மாவட்ட முன்சீப் - நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள் 10 | நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள் 11 |
| 1. செங்கல்பட்டு | 1 | 1 | .. | .. | .. | .. | 5 | 8 | 5 | 13 |
| 2. தூத்துக்குடி | 1 | 1 | .. | .. | .. | .. | 2 | 5 | 2 | 5 |
| 3. கோயமுத்தூர் | 2 | 1 | 1 | .. | 1 | .. | 6 | 7 | 4 | 14 |
| 4. தருமபுரி | 2 | 2 | .. | .. | .. | .. | 4* | 3 | 4 | 5 |
| 5. திண்டுக்கல் | 1 | 1 | .. | .. | .. | .. | 5 | 5 | 2 | 5 |
| 6. விருதுநகர் | 1 | 1 | .. | .. | .. | .. | 4 | 3 | 3 | 6 |
| 7. கன்னியாகுமரி | 1 | 1 | .. | .. | .. | .. | 5 | 11 | 1 | 6 |
| 8. மதுரை | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 7** | 7 | 3 | 11 |
| 9. நாகப்பட்டினம் | 1 | 1 | .. | .. | .. | .. | 6 | 9 | .. | 8 |
| 10. நீலகிரி | 1 | .. | .. | .. | .. | .. | 1 | 2 | 3 | 1 |
| 11. வேலூர் | 1 | 1 | 1 | .. | .. | .. | 3 | 8 | 4 | 14 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12. சிவகங்கை | 1 | 1 | .. | .. | .. | .. | 2 | 4 | 2 | 3 |
| 13. ஈரோடு | 2 | 1 | .. | .. | .. | .. | 7 | 10 | 2 | 9 |
| 14. புதுக்கோட்டை | 1 | 1 | .. | .. | 1 | .. | 1 | 3 | 2 | 3 |
| 15. இராமநாதபுரம் | 1 | 1 | .. | .. | .. | .. | 1 | 4 | 3 | 3 |
| 16. சேலம் | 3 | 1 | 1 | .. | 1 | .. | 5 | 10 | 2 | 16 |
| 17. கடலூர் | 1 | 1 | 1 | .. | .. | .. | 7 | 9 | 3 | 7 |
| 18. தஞ்சாவூர் | 1 | 1 | .. | 1 | 1 | .. | 6f | 9 | 2 | 6 |
| 19. திருச்சிராப்பள்ளி | 3 | 1 | 1 | 1 | .. | .. | 7 | 14 | 1 | 17 |
| 20. திருநெல்வேலி | 2 | 1 | 1 | 1 | .. | .. | 6 | 14 | 4 | 9 |
| 21. திருவண்ணாமலை | 1 | 1 | .. | .. | .. | .. | 3 | 9 | 3 | 5 |
| 22. விழுப்புரம் | 1 | 1 | .. | .. | .. | .. | 6 | 15 | 2 | 9 |
| மொத்தம் | 31 | 22 | 7 | 4 | 5 | 1 | 99 | 169 | 57 | 175 |

* தருமபுரி - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித்தரத்தில் 1 கூடுதல் தனி நீதிபதி

** மதுரை - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித்தரத்தில் 1 கூடுதல் தலைமை நீதித்துறை நீதிபதி

f தஞ்சாவூர் - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித்தரத்தில் 1 கூடுதல் தலைமை நீதித்துறை நீதிபதி

குடும்ப நீதிமன்றங்கள் - சென்னையில் மூன்று நீதிமன்றங்களும், மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் தலா ஒரு நீதிமன்றமும் ஆக ஆறு நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நீதிமன்ற நீதிபதிகள் 5 ஆண்டு காலத்திற்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள், முறையான நீதித்துறைப் பணிகளிலிருந்து வராதவர்கள்.



## இணைப்பு - 2

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆலோசனைக் குழுவால் (தற்போது தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் அதிகார மன்றம்) 1996-97 ஆம் ஆண்டுகளில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை**

| தொடர் எண் | விவரம் | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1996 | 1997 |
|---|---|---|---|
| 1. | சட்ட உதவி அளித்து, நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 7,580 | 7,304 |
| 2. | நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படாமல் இணக்கப்பணி மையங்கள், ஓய்வுதிய இணக்கப்பணி மையங்கள், ஆலோசனை மையங்கள் ஆகியவற்றில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 1,128 | 997 |
| 3. | சட்ட ஆலோசனைக்குப் பிறகு முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 617 | 966 |
| 4. | மக்கள் நீதிமன்றங்கள்: | | |
| | மோட்டார் வாகன விபத்து உரிமைக் கோரிக்கை வழக்குகள் | 8,677 | 9,505 |
| | சிவில் வழக்குகள் | 566 | 299 |
| | குடும்பத் தகராறுகள் | 277 | 99 |
| | குற்ற வழக்குகள் | 475 | 316 |
| | மொத்தம் | 19,320 | 19,486 |

1998 மே 12]

## இணைப்பு - 3

### 1998-99 ஆம் நிதியாண்டில் திட்டம் சாரா இனத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்

| தொடர் எண் | திட்டங்கள் குறித்த விவரம் | செலவினம் தொடரும் செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | தொடராச் செலவினம் | 1998-99 ஆம் ஆண்டில் செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | உள்துறை | | | |
| 1. | திருவாரூர் மாவட்டம் திருவாரூரில் துணை நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 16.87 | 3.16 | 17.21 |
| 2. | திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் துணை நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 16.74 | 3.16 | 17.08 |
| 3. | வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் துணை நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 13.74 | 3.16 | 14.61 |
| 4. | காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகத்தில் துணை நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 14.05 | 3.16 | 14.95 |
| 5. | கடலூர் மாவட்டம் விருதாசலத்தில் மேலும் ஒரு நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 8.00 | 3.00 | 10.20 |
| 6. | தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்-குளத்தில் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 8.83 | 2.05 | 9.54 |
| 7. | சிவகங்கை மாவட்டம் இளையான்-குடியில் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 9.12 | 4.38 | 12.07 |
| 8. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் மேலும் ஒரு நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 7.65 | 2.25 | 8.63 |
| 9. | தேனி மாவட்டம் உசிலம்பட்டியில் மேலும் ஒரு நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 9.15 | 3.31 | 11.01 |



1998 மே 12]

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 10. | கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துதல் | 7.78 | 1.50 | 8.02 |
| 11. | சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஒரு கூடுதல் மாவட்ட முன்சீப்-நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் அமைத்தல் | 16.07 | 1.85 | 11.91 |
| 12. | தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் மாவட்ட முன்சீப்-நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் அமைத்தல் | 17.50 | 4.00 | 18.90 |
| 13. | தூத்துக்குடி கூடுதல் மாவட்ட நீதிபதி நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்குக் கூடுதல்பணியாளர்கள் | 3.58 | .. | 2.99 |
| 14. | கோயம்புத்தூர் எட்டாவது நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்குக் கூடுதல் பணியாளர்கள் | 2.21 | 0.32 | 2.05 |
| 15. | தூத்துக்குடி மாவட்டம், பகுதிநேர சொத்தாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு இளநிலை உதவியாளர் பதவிக்கும் ஒரு அலுவலக உதவியாளர் பதவிக்கும் அனுமதி வழங்குதல் | 0.82 | 0.38 | 0.73 |
| 16. | எழும்பூர், பெருநகர தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வழக்குச் சொத்துக்களை சேமித்து வைத்திருக்கும் இடத்தில் கூடுதல் தெருவிளக்குகளுக்கு வகை செய்தல் | .. | 1.17 | 1.17 |
| 17. | நாகர்கோவிலில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தைச் சுற்றியுள்ள சுற்றுச்சுவரை உயர்த்துதல் | .. | 1.87 | 1.87 |
| 18. | சிவகங்கையில் உள்ள மாவட்ட நீதிபதியின் குடியிருப்பில் அலுவலக அறை ஒன்றைக் கட்டுதல் | .. | 2.97 | 2.97 |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 19. | சேலம் மாவட்டம் சங்ககிரியில் உள்ள 1வது, 2வது மாஜிஸ்டிரேட் நீதிமன்றக் கட்டடங்களுக்குச் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் | .. | 0.92 | 0.92 |
| 20. | சென்னை, ஜார்ஜ் டவுன் பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றக் கூடத்திலும், அலுவலக அறையிலும் கூரை மின்விசிறிகளும், எக்ஸாஸ்ட் மின்விசிறிகளும் பொருத்துதல் | .. | 0.36 | 0.36 |
| 21. | திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் உள்ள மாவட்ட முன்சிப் நீதிமன்றத்திலும், கூடுதல் மாவட்ட முன்சிப் நீதிமன்றத்திலும் கூரை மின்விசிறிகளும், குழல் விளக்குகளும் பொருத்துதல் | | | |
| 22. | கோவை மாவட்டம், உடுமலைப் பேட்டையில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கூடுதல் மின்விசிறிகள் ஃப்ளோராசென்ட் மின்விளக்குகள் பொருத்துதல் | .. | 0.25 | 0.25 |
| 23. | சிவகங்கையில் உள்ள சார்பு நீதிமன்றக் கட்டடத்தில் கூடுதல் மின்விசிறிகளும், விளக்குகளும் பொருத்துதல் | .. | 0.31 | 0.31 |
| 24. | தஞ்சாவூரில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் இருக்கும் வழக்கறிஞர் அறையை விரிவுபடுத்துதல் | .. | 1.03 | 1.03 |
| 25. | குற்றத் தொடர்வு தலைமையகத்தில் இணை இயக்குநர் பதவியை ஏற்படுத்துதல் | .. | 2.62 | 2.62 |
| 26. | குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் அனைத்து சட்ட அதிகாரிகளுக்கும் ரோஃப் படி, ரோஃப் பராமரிப்புப் படிகள் வழங்குதல் | 1.72 | 0.48 | 1.92 |
| | | 7.01 | | 0.01 |



| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 27. | குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் நினைவுப் பயிற்சிக்கு வகை செய்தல் | 0.60 | .. | 0.60 |
| 28. | சென்னை, குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் தலைமையிட அலுவலகத்திற்கு அஞ்சல் பணிகளுக்காக ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு ஓட்டுநருக்கு வகை செய்தல் | 0.72 | 0.51 | 1.12 |
| 29. | தற்போதுள்ள 11 வழக்குத் தொடரும் உதவி இயக்குநர்களை துணை இயக்குநர்களாகவும், அரசு உதவி வழக்கு நடத்துநர்களை, நிலை-I (நிருவாகம்), வழக்குத் தொடரும் உதவி இயக்குநர்களாகவும் பதவி நிலை உயர்த்துதல் | 1.59 | .. | 1.32 |
| 30. | குற்ற வழக்குத் துறையில் அனைத்து மாவட்டப் பிரிவுகளிலும் தலைமை யிடங்களிலும் தற்போது உள்ள அலுவலக உதவியாளர் பதவிகளை நிலை உயர்த்துவதன் மூலம் 25 பதிவேடு எழுத்தர் பதவிகளை ஏற்படுத்துதல் | 0.60 | 0.80 | 1.40 |
| 31. | இம்மாநிலத்தில் அரசு உதவி வழக்கு நடத்துநர்களுக்குச் சட்டப் புத்தகங்கள் வாங்குதல் | .. | 2.68 | 2.68 |
| 32. | தற்போதுள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்களுக்கு நிலை-I (நிருவாகம்) தொலைபேசி இணைப்புகள் வழங்குதல் (13 தொலைபேசிகள்) | 3.32 | 1.95 | 5.27 |
| 33. | அரசு வழக்குகள் துறையில் மேசை, நாற்காலிகள் மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்குதல் | .. | 4.00 | 4.00 |
| | **மொத்தம்** | **167.67** | **57.60** | **189.72** |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| **சட்டத் துறை (பொதுக் கல்வி):** | | | | |
| 34. | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் திட்டங்கள் | .. | 10.00 | 10.00 |
| 35. | திருச்சிச் சட்டக் கல்லூரிக்காக மாணவியர் இல்லம் கட்டுதல் | .. | 20.00 | 8.00 |
| 36. | புத்தகப் பயிற்சிக் கருத்தரங்குப் பயிலரங்கள் நடத்துதல் | .. | 1.00 | 1.00 |
| 37. | திருநெல்வேலி சட்டக் கல்லூரிக்காக கூடுதல் பதவிகளை (முழுநேர விரிவுரையாளர் பதவிகள் 2, பகுதிநேர விரிவுரையாளர் பதவிகள் 2) ஏற்படுத்துதல் | 2.46 | .. | 2.00 |
| 38. | 5 அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வழங்குதல் | .. | 2.50 | 2.50 |
| 39. | சட்டக் கல்லூரிகளுக்கான சாதனங்கள் வாங்குதல் | .. | 0.50 | 0.50 |
| 40. | சட்டக் கல்வி இயக்ககத்திற்குப் புகைப்பட நகலெடுக்கும் இயந்திரம் வாங்குதல் | .. | 1.00 | 1.00 |
| | மொத்தம் | **2.46** | **35.00** | **25.00** |



## இணைப்பு - 4

### தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் நிலுவையியாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவர அறிக்கை

| தொடர் எண் | நீதிமன்றம் | சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையாக இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை | | | | | 1997 ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் தொடரப்பட்ட வழக்குகள், முடிவு அடைந்த வழக்குகள், நிலுவையாக உள்ள வழக்குகள் பற்றிய விவரங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | இந்த ஆண்டு தொடரப் பட்ட வழக்குகள் | ஒரு வகை உரிய வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | இந்த ஆண்டு முடிக்கப் பட்டவை | ஆண்டு இறுதியில் நிலுவையாக இருந்தவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| **(அ) உரிமையியல் வழக்குகள்** | | | | | | | | | | |
| 1. | உயர்நீதிமன்றம், சென்னை | 2,34,616 | 2,61,115 | 2,94,800 | 2,75,175 | 2,89,473 | 96,974 | 3,86,447 | 82,161 | 3,04,286 |
| 2. | மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை | 53,780 | 60,513 | 65,223 | 68,960 | 77,551 | 56,759 | 1,34,310 | 56,135 | 78,175 |
| 3. | சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை | 17,407 | 16,279 | 13,480 | 15,490 | 16,391 | 10,988 | 27,379 | 10,962 | 16,417 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 10,860 | 11,950 | 14,327 | 13,904 | 18,760 | 71,272 | 90,032 | 63,139 | 26,893 |
| 5. | மாவட்டக் கூடுதல் நீதிபதி -நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | - | - | - | - | 4,734 | 7,068 | 11,802 | 7,041 | 4,761 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | சார்பு நீதிமன்றங்கள் | 1,16,486 | 1,47,158 | 1,62,648 | 1,54,513 | 1,37,040 | 1,92,056 | 3,29,096 | 1,60,705 | 1,68,391 |
| 7. | மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் | 2,68,235 | 3,23,176 | 3,16,624 | 3,42,115 | 2,67,857 | 3,49,157 | 6,17,014 | 3,55,401 | 2,61,613 |
| | **மொத்தம் (அ)** | **7,01,384** | **8,20,191** | **8,67,102** | **8,70,157** | **8,11,806** | **7,84,274** | **15,96,080** | **7,35,544** | **8,60,536** |
| | **(ஆ) குற்றவியல் வழக்குகள்** | | | | | | | | | |
| 1. | உயர் நீதிமன்றம், சென்னை | 30,179 | 33,042 | 16,014 | 22,206 | 21,177 | 29,773 | 50,950 | 28,617 | 22,333 |
| 2. | செஷன்ஸ் நீதிமன்றங்கள் | 8,865 | 9,529 | 6,969 | 5,889 | 5,502 | 13,009 | 19,111 | 13,419 | 5,692 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 50,506 | 64,054 | 46,332 | 48,073 | 44,737 | 1,89,152 | 2,33,889 | 1,85,432 | 48,457 |
| 4. | மாவட்டக் கூடுதல் நீதிபதி -நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2,37,496 | 2,17,578 | 2,06,309 | 2,05,447 | 1,55,152 | 6,20,044 | 7,75,196 | 6,05,945 | 1,69,251 |
| | **மொத்தம் (ஆ)** | **3,27,046** | **3,24,203** | **2,75,624** | **2,81,615** | **2,26,568** | **8,52,578** | **10,79,146** | **8,33,413** | **2,45,733** |
| | **பெருமொத்தம் (அ)+(ஆ)** | **10,28,430** | **11,44,394** | **11,42,726** | **11,51,772** | **10,38,374** | **16,36,852** | **26,75,226** | **15,68,957** | **11,06,269** |



**இணைப்பு - II**

**[ 60 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]**

## மானியக் கோரிக்கை எண் 14

## சிறைச் சாலைகள்

### கொள்கை விளக்கக் குறிப்பு - 1998-99

### I. முன்னுரை:

குற்றவியல் நீதி நிருவாக அமைப்பு முறையில், சிறைகள், குற்றவாளிகளைச் சீர்திருத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் இறுதி அங்கமாகத் திகழ்கின்றன. காவல் துறை மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவை, குற்றவியல் நீதி, நிருவாக அமைப்பு முறையில் ஏனைய இரு அமைப்புகளாகத் திகழ்கின்றன.

2. இந்த நவீன காலத்தில், சிறைத் துறையின் முக்கிய நோக்கம் என்னவெனில், குற்றவாளிகளைச் சிறையில் அடைத்து மேலும் அவர்கள் குற்றம் இழைப்பதினின்று தடுப்பதோடு மட்டுமல்லாது அவர்களைச் சீர்திருத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து அவர்களின் விடுதலைக்குப் பிறகு சமுதாயத்தில் பயனுள்ள நபர்களாகத் திகழச் செய்வதே ஆகும். இக்குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, பல சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறை அமைப்பு முறைகளில் பல மேம்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. சிறை நிருவாகத்தின் வளர்ச்சியைக் காணும்போது, சிறை மற்றும் சிறைவாசிகளின் நலனுக்காக சிறைகளில் குறிப்பிடத்தக்க வகையிலும் அதிக அளவிலும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது தெரியவருகிறது.

### II. நிறுவன அமைப்பு முறை மற்றும் நிருவாக ஏற்பாடு:

#### அ. சிறைப்பிரிவு:

3. இந்தியக் காவல் துறைப் பணி உயர்நிலை அதிகாரி, சிறைத் துறைத் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக ஒரு தலைமையிடத்து சிறைத் துறை துணைத் தலைவர் மற்றும் நான்கு சரக சிறைத் துறை துணைத் தலைவர்கள் உள்ளனர். இச்சரகங்கள் முறையே சென்னை,

திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோவையில் அமைந்துள்ளன. இவர்கள், தத்தம் சரக எல்லைக்குள் வருகின்ற மத்திய சிறை மற்றும் ஏனைய நிறுவனங்கள்மீது அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். மத்தியச் சிறைச்சாலை ஒவ்வொன்றும் ஒரு கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்குகிறது. இவருக்கு உதவியாக, நிருவாக, மருத்துவ, தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் பலர் பணிபுரிகின்றனர்.

4. சிறைத் துறையின் நிருவாக அமைப்பு பற்றிய விவரம் இந்தக் குறிப்பில் உள்ள இணைப்பில் வருகின்ற அமைப்பு அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சிறை நிருவாகம், சிறைத் துறையிடம் நிலை பெற்றுள்ளது. இது பின்வரும் நிறுவனங்களின் அமைப்பு முறை, கட்டுப்பாடு, நிருவாகம் ஆகிய பணிகளையும் கவனித்து வருகிறது;

| | | |
|---|---|---|
| (i) | மத்தியச் சிறைகள் | 8 |
| (ii) | பெண்களுக்கான தனிச் சிறைகள் | 2 |
| (iii) | தனிக் கிளைச் சிறைகள் | 5 |
| (iv) | கிளைச் சிறைகள் | 115 |
| (v) | திறந்தவெளிச் சிறை | 1 |
| (vi) | சேலம், மத்தியச்சிறையுடன் இணைக்கப்பட்ட பண்ணைச் சிறை | 1 |
| (vii) | சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை | 1 |

## ஆ. நன்னடத்தைப் பிரிவு:

5. நன்னடத்தைப் பிரிவு, சிறைத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. இது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. எனினும் இவர், சிறைத் துறைத் தலைவரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின்கீழ் அவர் கட்டளைகளுக்கு உட்பட்டுச் செயல்படுகிறார். ஒரு மண்டல நன்னடத்தை அலுவலருடன் இப்பிரிவில் இயங்கும் ஓர் ஆராய்ச்சிப் பிரிவு, நன்னடத்தைப் பிரிவின் ஓர் அங்கமாகும். 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

6. இப்பிரிவில் 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களும், 96 நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர். அவர்கள்,



குற்றவாளிகளின் நடைமுறைப் பழக்கங்கள் மற்றும் அவர்கள் வாழும் இடத்தின் சுற்றுச் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்கின்றனர். தண்டனைக் காலத்திற்கு முன்னரே பிணையில் விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள் அல்லது இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி உரிமத்தில் அல்லது இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, கண்காணிப்பு இல்லங்கள் முதலியவற்றிலிருந்து விடுதலை செய்யப்படும் குற்றவாளிகள் ஆகியோரது நடைமுறைப் பழக்கவழக்கங்கள் பற்றி நீதிமன்றங்களுக்குத் தெரிவிப்பதும் அவற்றைக் கண்காணிப்பதும் இப்பிரிவின் முக்கிய பணி ஆகும். விடுதலை செய்யப்பட்ட கைதிகள், மறுவாழ்வினைத் தொடங்க நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நிதியுதவி பெறவும் இந்த நன்னடத்தை அலுவலர்கள் உதவி செய்கின்றனர். இந்த நன்னடத்தை அலுவலர்களின் பணியை, மண்டல நன்னடத்தை அலுவலர்கள் கண்காணிக்கின்றனர்.

## இ. பணியாளர்களும் செலவினங்களும்:

7. சிறைத் துறையின் பல்வேறு வகைப் பணியாளர் தொகுதி அமைப்பில் 3739 அலுவலர்களும், பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். மேலும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் குழுமம் மூலம் சிறைக் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 470 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

8. சிறைத் துறையின் 1993-94 ஆம் ஆண்டிலிருந்து செலவு குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1993-94 | 2,304.61 |
| 1994-95 | 3,171.10 |
| 1995-96 | 3,655.93 |
| 1996-97 | 3,496.39 |
| 1997-98 | 4,527.89 |
| 1998-99 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 4,955.00 |

9. உள்துறையின் 6-2-1997 ஆம் நாளிட்ட 184 ஆம் எண் அரசாணைக்கிணங்க தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பணி மகளிருக்கான தினக்கூலி ரூ.15 இல் இருந்து ரூ.40-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## III. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல்:

10. புதுடில்லி மத்திய அரசு உள் துறை விவகாரங்கள் அமைச்சகம்., 1993 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு, சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் (நிலை II) திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு மாநிலத்திற்கு, மத்திய அரசால் ஏற்பளிக்கப்பட்ட திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.450.00 இலட்சம். இத்திட்டத்தின் கீழ், இது தொடர்பில் மத்திய அரசின் பங்கு ரூ.272.75 இலட்சமாகும். பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான செலவில் மத்திய அரசால் 75 சதவீதம் உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய 25 சதவீதம், மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். சிறைச்சாலைக் கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்து புதுப்பிப்பதற்காகவும், மருத்துவ மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் மத்திய அரசு 50 சதவீத உதவித்தொகையை வழங்கியுள்ளது. எஞ்சிய 50 சதவீதம், மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

11. உள் துறையின் 23-5-1997 ஆம் நாளிட்ட 775 ஆம் எண். அரசாணையின்படி சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் சிறைவாசிகளுக்கென தனியாக வார்டு ஒன்றைக் கட்டுவதற்காக ரூபாய் 20.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. மத்திய அரசு, சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்தை ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக் கால அளவில் (அதாவது 1997-2002 கால அளவில்) நீட்டித்துள்ளது.

(அ) 1997-98 ஆம் ஆண்டில் சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக மத்திய அரசு 60.00 இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. ரூ.100.00 இலட்சம் செலவு அடங்கிய திட்டங்களை மாநில அரசு, மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. மத்திய அரசின் பங்கு, ரூ.63.00 இலட்சமாகவும், மாநில அரசின் பங்கு ரூ.37.00 இலட்சமாகவும் இருக்கும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் (1997-2002) மத்திய சிறை மற்றும் கிளைச் சிறைகளை நவீனப்படுத்துவதற்காக மொத்தம் ரூ.2511.04 இலட்சம் செலவுள்ள திட்டங்கள் இந்தியத் திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்புவதற்காக மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.



(ஆ) 1996 - 2000 ஆம் ஆண்டுகளுக்கான சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துவது தொடர்பாக தேவையான செயற்குறிப்புகள், 10-வது நிதி ஆணையத்தின்கீழ் மொத்தம் 747.00 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அதிகாரக் குழு ஒப்புதல் அளித்த பின்னர், மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மத்திய அரசின் அமைச்சகங்களுக்கிடையேயான அதிகாரக்குழுவின் இசைவு பெற்ற பின்னர் மேற்சொன்ன செயற்குறிப்புகளுக்கு பத்தாவது நிதி ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டங்களின் சுருக்கம் கீழ்வருமாறு:

(i) பழுதுபார்த்தலும் புதுப்பித்தலும் (1997-98) : ரூ.116.75 இலட்சம்

(ii) மருத்துவ வசதிகள் (1997-98) : ரூ.70.00 இலட்சம்

## IV. திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோவை மத்தியச் சிறைகளில் தீவிரப் பாதுகாப்பான அடைப்புகள் அமைத்தல்:

13. பிற மாநிலங்களைச் சேர்ந்த ஆபத்தான சிறைவாசிகள் மற்றும் தீவிரவாதிகளுக்காக தீவிரப் பாதுகாப்பு அடைப்புகள் அமைக்கும் பொருட்டு முழு உதவித் தொகையின் அடிப்படையில் ரூ.155.14 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோவை மத்தியச் சிறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை ரூ.135 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## V. 1998-99 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள்:

14. சிறைத்துறைக்கென 1998-99 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிட்டுள்ள புதிய திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது:

| வ.எண் | பணிகளின் விவரம். | மொத்த செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | வேலூர் மத்தியச் சிறையில் பணியாளர் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் | 5.42 |
| 2. | திருச்சிராப்பள்ளி, மத்தியச் சிறையில் பாதுகாப்புப் பணிகளுக்காக (இரவுநேர கோபுர பொறுப்பு அலுவலர்) ஓர் உதவி சிறை அலுவலரை நியமித்தல் | 0.46 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 3. | திருச்சிராப்பள்ளி, மத்தியச் சிறையில் பாதுகாப்புப் பணிகளுக்காக இரண்டு துணைச் சிறை அலுவலர் பதவிகளை உருவாக்குதல் | 1.21 |
| 4. | திருச்சிராப்பள்ளி, மத்தியச் சிறையில் உதவியாளர்கள், பதவிகள் இரண்டை உருவாக்குதல், (தண்டனை குறைப்பு, கிளைச் சிறை பிரிவு) | 0.91 |
| 5. | 20 துப்புரவுப் பணியாளர்கள் பதவிகள் உருவாக்குதல் | 6.58 |
| 6. | அனைத்து மத்தியச் சிறைகளிலும் உள்ள பதிவுரு அறைகளுக்காக 10 இளநிலை உதவியாளர்கள் பதவிகளை உருவாக்குதல் | 4.35 |
| 7. | இரவு நேரப் பாதுகாப்பிற்காக வேலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், பாளையங்கோட்டை, கடலூர் மத்தியச் சிறை ஒவ்வொன்றிற்கும் ஒன்று என்ற வீதத்தில் 5 உதவிச் சிறை அலுவலர் பதவிகளை உருவாக்குதல் | 2.75 |
| 8. | கோயம்புத்தூர் மத்தியச் சிறையில், உற்பத்திப் பிரிவில் 9 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் நீளவாக்கு உலர வைக்கும் கருவி வாங்குதல் | 10.80 |
| 9. | கடலூர் மத்தியச் சிறையில் உள்ள 5 கண்காணிப்புக் கோபுரங்களில் நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்தல் | 3.00 |
| 10. | கடலூர் மத்தியச் சிறையில் 'அ' பிளாக்கில் உள்ள வார்டர் குடியிருப்புகளில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் | 2.00 |
| 11. | கடலூர் மத்தியச் சிறையில் உள்ள 'ஆ' பிளாக்கில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் | 2.00 |
| 12. | கடலூர் மத்தியச் சிறையில் துப்பரவுப் பணிகள், சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் குடிநீர் வழங்கல் ஏற்பாடுகள் | 3.80 |
| 13. | கடலூர் மத்தியச் சிறையில் உள்ள வார்டர் குடியிருப்புகளுக்கு மின்னிணைப்பு வசதிகள் | 5.60 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 14. | சேலம் மத்தியச் சிறையில் குவாரண்டின் பிளாக்கில் உள்ள அறைகளுக்கு வெளியே கம்பி வேலி அமைத்தல் | 3.12 |
| 15. | மதுரை மத்தியச் சிறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் கிளைச் சிறைக் கட்டடங்களில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் | 2.90 |
| 16. | மதுரை மத்தியச் சிறையில் நீரடிக் கழிப்பிட வசதிகளுடன் கூடிய வார்டர்கள் ஓய்வு அறை கட்டுதல் | 1.90 |
| 17. | புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியில் ஆழ்துளைக் கிணறு, பம்புசெட் மற்றும் பம்பு அறை ஏற்படுத்துதல் | 0.91 |

## VI. மனித ஆற்றல் பயிற்சி, வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்பு:

### (அ) சிறைக் காவலர்கள் பயிற்சி மையம், வேலூர்:

15. இப்பயிற்சிப் பள்ளி இரண்டாம் நிலைக் காவலர்கள் 100 பேருக்கு பயிற்சி அளிக்கும் திறன் கொண்டது. இப்பயிற்சிக் காலம் 6 மாதங்களாகும். உடற்பயிற்சி, ஒழுக்கம், சிறை நிருவாகக் கோட்பாடு, சீர்திருத்த நடைமுறை போன்ற பல்வேறு தன்மைகளில் பயிற்சி கற்றுத்தரப்படுகிறது. இது தவிர, 25 முதல் நிலை சிறைக் காவலர்களுக்கும் 4 முதல் நிலை தலைமைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு புத்தாக்கம் நினைவுகூற பயிற்சியளிக்கப்படுகிறது. சிறைவாசிகளைச் சீர்திருத்த, நவீன அணுகு முறையை இப்பயிற்சி வலியுறுத்துகிறது. சிறைகளை நவீனப்படுத்தும் மைய அரசின் திட்டத்தின்கீழ், பயிற்சிப் பொருட்கள், நூலகம், தொலைக்காட்சி, வீடியோ, வீடியோ கேசட், வாகனம் போன்ற வசதிகளை செய்து கொடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதவிர பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம், குடியிருப்பு போன்ற உள் அமைப்பு வசதிகளைச் செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இனங்களுக்காகும் மொத்தச் செலவு ரூ.96 இலட்சமாக இருக்கும். தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், போராளிகள் மற்றும் பயங்கர சிறைவாசிகளைச் சிறையில் அடைப்பதைக் கருத்திற்கொண்டு, பயிற்றுநர்களுக்கு ஏ-கே 47, 7.62 மி.மீ. எஸ்.எல்.ஆர்., பிளாஸ்டிக் சிறு குண்டுடன் கூடிய ரியாட்கன், ஸ்டென்கன், கை எறி

குண்டுகள், பிஸ்டல் முதலிய நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறைகளைப் பயிற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறைகளுக்கு, அவசர காலத்தில் நிலைமைகளை சமாளிக்கும் வகையில் நவீன ஆயுதங்கள் வழங்கப்படும். சிறைப் பணியாளர்கள் சிறைப் பணியில் சேருவதற்கு முன்னதாக இரண்டு வாரத்திற்கு, முன்பயிற்சி சிறைத் துறைக் கண்காணிப்பாளர்களால் கொடுக்கப்படுகின்றது. உள் துறையின் 23-1-1998 ஆம் நாளிட்ட 79 ஆம் எண் அரசாணையின்படி வேலூரிலுள்ள சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளியில் உள்ள பயிற்சி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிப் படித் தொகையானது அவர்களுடைய அடிப்படை சம்பளத்தில் 15 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

**(ஆ) வேலூர் குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம்**

16. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த சீர்திருத்த அதிகாரிகளுக்கு, 1979 ஆம் ஆண்டு முதல் இம்முன்மாதிரி பள்ளியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர்திருத்த மற்றும் அது சம்பந்தப்பட்ட நிருவாகத்தில் பணியாற்றும் சிறைப் பிரிவு, நன்னடத்தைப் பிரிவு, சீர்திருத்தப் பள்ளி அது சம்பந்தப்பட்ட நிலையங்களின் அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதே இதன் நோக்கமாகும். குற்றங்களைத் தடுத்தல், குற்றவாளிகளை நடத்தும் முறை ஆகியவை பற்றி பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. குற்றவாளிகளை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கும் சமுதாயத்தில் மறுவாழ்வு பெறுவதற்கும் இம்மையம் தயார் செய்கிறது. குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளஞ்சிறார் குற்றங்கள், நன்னடத்தை, சமூகப் பிரச்சினை வேலை, சட்டம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகள் சமீப காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மத்தியச் சிறை உதவிச் சிறை அலுவலர் முதல் கூடுதல் கண்காணிப்பாளர் வரையில் உள்ளவர்களுக்கும் இவர்களுக்கு நிகரான பதவிகளில், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 300 அதிகாரிகள் இப்பயிற்சி பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தின் தொடரின, தொடராயினச் செலவுகளை 4 தென் மாநிலங்கள் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. ஒரு ஆராய்ச்சி மேம்பாட்டின் பிரிவு ரூ.68.92 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, ஆராய்ச்சி மேற்கொண்டு சிறை மற்றும் சீர்திருத்தம் குறித்த தகவல்களைச் சேகரித்து ஆய்வு செய்கிறது.



**(இ) சிறைத் துறை நற்பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்குதல்:**

17. 1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் சிறைத் துறையில் சீரிய பணிபுரிபவர்களுக்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இத் துறைப் பணியாளர்கள் நேர்மை, வாய்மை, கடமையுணர்வு, திறமை, உயரிய ஒழுக்கம், தியாக உணர்வு ஆகியவற்றுடன் பணிபுரிவதை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் நாளன்று தெரிந்தெடுக்கப்பட்ட 20 சிறைக் காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இப்பதக்கத்தை வழங்குகிறார். இப்பதக்கம் பெற்ற முதல்நிலை சிறைக் காவலர்கள் மாதமொன்றுக்கு ரூ.50 என்ற நிர்ணயித்த வீதத்திலும், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மாதமொன்றுக்கு ரூ.40 என்ற நிர்ணயித்த வீதத்திலும் தொகை பெறத் தகுதி உடையவர்கள்.

**ஈ. கருணைத் தொகை வழங்குதல்:**

18. பணியிலிருக்கும்போது இறந்துவிடும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும், நிரந்தரமாக ஏலாமையுற்றவர்கள், செயல் திறனற்ற சிறைத் துறைப் பணியாளர்கள் ஆகியோருக்குக் கீழ்க்காணும் அளவில் கருணைத் தொகை வழங்குமாறு அரசு, உள் துறையின் 4-12-1997 ஆம் நாளிட்ட 1762 ஆம் எண் அரசாணையில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதாவது:

| | |
|---|---|
| i) பணியிலிருக்கும்போது இறந்தவர்களுக்கு | ரூ.2,00,000 |
| ii) நிரந்தரமாக ஏலாமையுற்றவர்களுக்கு | ரூ.50,000 |
| iii) கடுமையான காயமுற்றவர்களுக்கு | ரூ.10,000 |
| iv) சிறிய அளவில் காயமுற்றவர்களுக்கு | ரூ.5,000 |

**VII. தனித்தன்மையுடைய நிறுவனங்கள்:**

**(அ) திறந்தவெளிச் சிறை:**

19. தற்போது இம்மாநிலத்தில் கோவை மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரில் திறந்தவெளிச் சிறை ஒன்று உள்ளது. இதில் நூறு சிறைவாசிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. சிறைகளில் உள்ள நெருக்கடியைத் தவிர்த்தலும், சிறைவாசிகளுக்கு நவீன வேளாண்மை

முறையில் பயிற்சி அளிப்பதும் இதன் நோக்கமாகும். இது அவர்களின் மறுவாழ்விற்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதற்காக உதவி வேளாண்மை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### (ஆ) சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை:

20. (i) சீர்திருத்தப் பள்ளியில் 16 முதல் 23 வரை வயதுடைய வளரிளமையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்குப் பின்வரும் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. தச்சு வேலை
2. கருமார் வேலை
3. புத்தகம் கட்டுதல்
4. தையல் வேலை
5. வேளாண்மை
6. கட்டுமான வேலை
7. சலவைத் தொழில்
8. பினாயில் தயாரித்தல்
9. கூர் நாடா தயாரித்தல்
10. வாத்தியம் இசைத்தல்
11. சமையல் போன்ற வீட்டு வேலை

(ii) விடுதலையான பின்னர் வேலையில் சேர இயலும் வகையில் சிறைவாசிகளுக்குச் சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளியில் உள்ள துயிற் கூடங்களில் ஒன்று வளரிளம் பருவத்தினருக்குரிய மையமாக மாற்றப்பட்டுள்ளது.

(iii) மாணவர்கள் 23 வயது வரையில் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். 1894-ம் ஆண்டு சிறைகள் சட்டத்தின்கீழ் சீர்திருத்தப் பள்ளியின் துயிற்கூடம் சிறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விடுதலைக்குப் பின்னர் தொழிற்கருவிகள், கறவை மாடுகள் வாங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் கடன் சுலபத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.



(iv) தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு பரிந்துரைத்தபடி சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 25 பேர்களுக்கு 15 நாட்களுக்கு ஆண்டு முகாம் நடத்தப்படுகிறது.

(v) புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த வளரிளம் பருவ வயதுடைய சிறைவாசிகளுக்கு ஊட்டச்சத்து வழங்கும் பொருட்டு, அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் அளவை 370 கிராமிலிருந்து 470 கிராமாக உயர்த்தி, உள் துறையின் 22-5-1997 ஆம் நாளிட்ட 4(D) 18 ஆம் எண் அரசாணையில், அரசு, ஆணை பிறப்பித்துள்ளது.

### (இ) புழலில் அமையவிருக்கும் நவீன சிறைச்சாலை:

21. சென்னை, மத்தியச் சிறையில் அதிக அளவில் கைதிகள் அடைக்கப்படுவதைக் குறைப்பதற்காக புழல் கிராமத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது. முதல் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக ரூ.320.97 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணிகள் யாவும் முடிவடைந்து விட்டன. சிறை நிருவாகத்தினை நவீனப்படுத்தும் மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ.79.48 இலட்சத்திற்கான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

22. புழல் சிறை வளாகத்தை சிறைத் துறையிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் இலங்கை அகதிகள் புழல் சிறையில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இதனால் பொதுப் பணித்துறையினரால் சில பணிகள் செய்ய இயலாததால் இச்சிறையினை சிறைத் துறையிடம் ஒப்படைக்க இயலவில்லை. எனவே, இலங்கை அகதிகளை அங்கிருந்து அகற்றி அருகிலுள்ள காவலாங்கரை கிராமத்தில், வருவாய்த் துறை மற்றும் சிறைத் துறை அதிகாரிகளால் தேர்வு செய்யப்பட்ட 3 ஏக்கர் நிலத்தில் தங்க வைக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 210 அகதி குடும்பங்களுக்கு வீட்டுவசதி அளிக்க 210 குடிசைகள் கட்டுவதற்காக ரூ.10.71 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. குடிசைகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு, 24-9-1997 ஆம் நாளிலிருந்து இலங்கை அகதிகள் மாற்றப்பட்டனர். ரூ.122.31 இலட்சம் செலவில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்கானச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இச்சிறை முதலில் தண்டனைக் குற்றவாளிகளுடன் இயங்கத் தொடங்கும். விசாரணைக் கைதிகள் சென்னை மத்தியச் சிறையிலேயே தொடர்ந்து வைக்கப்படுவர்.

## VIII. சிறைச்சாலைகளின் கொள்திறனும் சிறைவாசிகளின் வகைகளும்:

### (அ) சிறைகளில் இடவசதி:

23. எல்லா சிறைச்சாலைகளிலும் (கிளைச் சிறைகளைச் சேர்த்து) உள்ள அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 18,228 ஆகும். தற்போது பதிவு செய்யாத இலங்கை அகதிகள் இரண்டு கிளைச்சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர். அவை வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. பூவிருந்தவல்லியில் உள்ள கிளைச் சிறை பெருமளவு செலவில் சிறப்புச் சிறையாக மாற்றப்பட்டுள்ளது. அதில் முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட விசாரணைக் கைதிகளை அடைத்து வைக்கப் பயன்படுத்தப்பட்டது.

### (ஆ) சிறையில் வைப்பதை தனிப்படுத்த சிறைகளின் வகைகள்:

24. ஒரு திங்களுக்கு மேலாக தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். ரிமாண்டு மற்றும் விசாரணைக் கைதிகளும் ஒரு மாதத்துக்குக் குறைவாக சிறைத்தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த சிறைவாசிகள் இளங்குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். பெண் சிறைவாசிகள் ஆண் சிறைவாசிகளிடமிருந்து தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே வழக்கமாகக் கொண்ட சிறைவாசிகள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். பெண் சிறை அதிகாரிகளால் முழுமையாக நிர்வகிக்கப்படும் பெண் சிறைவாசிகளுக்கென உள்ள வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி பெண்கள் தனிச்சிறைகளில் ஒரு மாதத்திற்கு மேலாக சிறைத்தண்டனை பெற்ற பெண் சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டையில் உள்ள சீர்திருத்தப் பள்ளி இளம் குற்றவாளிகளை காவல் வைப்பதற்காக உள்ளது. மனநோய் வாய்ப்பட்ட குற்றவாளிகள் மற்றும் மன ஊனமுள்ள குற்றவாளிகள் சென்னை அரசினர் மன நலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

### (இ) சிறைவாசிகளின் வகைப்பாடு:

25. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் 'ஏ' மற்றும் 'பி' என இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றனர். ரிமாண்டு மற்றும் விசாரணைக்



கைதிகளுக்கு சிறப்பு வகுப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. குற்றவாளி ஒருவருக்கு 'ஏ' வகுப்பு சிறைவாசி என்ற வகைப்பாடு தற்காலிகமாக நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. அது அச்சிறைவாசியின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத்தரம், நடத்தை மற்றும் முன் வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் அரசால் உறுதி செய்யப்படுகிறது. சிறைவாசியின் சமூகத்தகுதி, கல்வி, வாழ்க்கைத்தரம் மற்றும் உயர்தர வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் 'ஏ' வகுப்பு பெறத் தகுதியுடையவர்கள். முற்றிலும் நாகரிகமற்ற (அ) நன்னடத்தை அற்ற முறையில் குற்றத்தை செய்ததற்காகத் தண்டிக்கப்படும் எவருக்கும் 'ஏ' வகுப்பினைப் பெறத் தகுதியில்லை. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றம் புரிந்ததற்காகத் தண்டிக்கப்படும் சிறைவாசிகளும் 'ஏ' வகுப்பைப் பெற தகுதியற்றவர்கள் ஆகிறார்கள். 'ஏ' வகுப்பைச் சேராத சிறைவாசிகள் 'பி' வகுப்பு சிறைவாசிகள் வகைப்பாட்டில் அடங்குவர்.

## IX. சிறைகளில் செய்து தரப்பட்டுள்ள ஒட்டு மொத்த வசதிகள் மற்றும் சலுகைகள்:

26. சிறைவாசிகளை தடுப்புக்காவலில் வைக்கவும், விசாரணை தொடங்குவதற்கு முன்னரோ அல்லது தண்டனை அளிக்கப்பட்ட பின்னரோ குற்றவாளிகளாகக் கருதப்படும் நபர்களையும் அனுமதித்து சிறைவாசிகளாகத் தங்க வைக்கவும் உரிய இடம் சிறைச்சாலையாகும். சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் பல்வேறு வசதிகள் மற்றும் சலுகைகள் பற்றிய விவரங்கள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) உணவு

27. முன்னர் பொதுவாக சிறை வாழ்க்கை என்பது சிறைவாசிகளுக்கு தரமற்ற உணவு வழங்கப்பட்டு துயருக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்ட நிலையாகும். அவர்களைக் கடின வேலைகளில் ஈடுபடுத்தும் நிலையும் இருந்தது. தற்போதைய நிலை வேறுபட்டதாகும். தற்போது சிறைவாசிகளுக்கு நல்ல உணவு வழங்கப்படுகிறது.

28. 'ஏ' வகுப்பு சிறைவாசிகளுக்குக் கொடுக்கப்படும் பல்வேறு வகை உணவு, அவற்றிற்கான செலவு ஆகியவைப் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | நாள் ஒன்றுக்கு சிறைவாசி ஒருவருக்குச் செலவு |
|---|---|
| (1) சைவ உணவருந்தும் சிறை வாசி ஒருவருக்கு-வேலை செய்பவர் | ரூ.30.81 |
| (2) சைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு-வேலை செய்யாதவர் | ரூ.30.05 |
| (3) அசைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு-வேலை செய்பவர் | ரூ.34.52 |
| (4) அசைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு-வேலை செய்யாதவர் | ரூ.27.24 |

29. 'பி' வகுப்பு சிறைவாசிகள், சாதாரண ரிமாண்டு கைதிகள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்கு உணவு வழங்குவதற்காகும் செலவு பற்றிய விவரம் வருமாறு:-

| | அரிசி உணவு | கோதுமை உணவு |
|---|---|---|
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாத ஒருவருக்கு நாளொன்றுக்கு | ரூ.15.67 | ரூ.16.07 |

30. பாலூட்டும் பெண் சிறைவாசிகளுக்கு சிறப்பு உணவாக 1/2 லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுடன் தங்கும் ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் கிளாஸ்கோ, அமுல் போன்ற குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

31. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்கள் மற்றும் பிஸ்கட், கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற ஊட்டச்சத்து வாய்ந்த உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அனுமதியளிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டும் வழங்கப்படுகிறது. எனினும், சில சிறப்பு நேர்வுகளில் சிறைவாசிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க மருத்துவ அலுவலர் அனுமதிக்கலாம்.

32. பொங்கல் மற்றும் சுதந்திர தினம் ஆகிய நாட்களில் ஒவ்வொரு சிறைவாசிக்கும் ரூ 5/- கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.



33. உள்துறையின் 7-7-1997 ஆம் நாளிட்ட 1000 ஆம் எண்ணுள்ள அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின்படி விசாரணைக்காக, நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகின்ற வயது வந்த மற்றும் இளங்குற்றவாளிகளான விசாரணைக் கைதிகளுக்கு, வழங்கப்படுகின்ற உணவுப்படி, 'ஏ' வகுப்பு சிறைவாசிகளைப் பொறுத்த வரையில் ரூ.4-இல் இருந்து ரூ. 15-ஆகவும், 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ. 2-இல் இருந்து ரூ. 10-ஆகவும் உயர்த்தப்பட்டு உள்ளது.

## (ஆ) உடையும் படுக்கையும்:

34. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் சொந்தப்படுக்கையைப் பயன்படுத்தவும், சிறை உடையை அணிய வேண்டிய வேலை நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'ஏ' வகுப்பு சிறைவாசிகள், அவர்களின் உறவினர்களை நேர்காணலின்போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். ஆனால், 'பி' வகுப்பு சிறைவாசிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும். பெண் சிறைவாசிகளுக்கு இரண்டு துண்டுகளும், மூன்று ஜோடி வழக்கமான உடைகளும் வழங்கப்படுகிறது. ஆயுள் தண்டனை பெண் சிறைவாசிகளுக்கு கருஞ்சிவப்பு நிறப்புடவையும், பிற பெண்களுக்கு நீலநிறப் புடவையும் வழங்கப்படுகிறது.

## (இ) பிற வசதிகள் மற்றும் பயன்கள்:

35. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைவாசி ஒவ்வொருவருக்கும் மாதமொருமுறை 30 கிராம் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு சீகைக்காய்த்தூளும், சலவைசோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைவாசிகளுக்குச் சுத்தம் செய்வதற்கு கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்பு சிறைவாசிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

36. 'பி' வகுப்பு சிறைவாசிகள் தங்களுடைய துணிகளை சிறையிலுள்ள சலவையகத்தில் அவர்களது சொந்தச் செலவில் சலவை செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

37. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் இரும்பு அறைக்கலன்கள், சாப்பாட்டுப் பாத்திரங்கள், கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தாங்களே சமையல் செய்து கொள்ளலாம். புகையிலை பயன்படுத்தவும், சொந்தமாகச் சமைக்கவும், சாப்பாட்டுப் பாத்திரங்களை பயன்படுத்தவும் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனை பெற்ற சிறைவாசிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்து இரவுக் காவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

38. சிறைவாசிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக அனைத்து மத்தியச் சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளியிலும் முடிதிருத்துநர்கள் உள்ளனர்.

**(ஈ) மருத்துவ சுகாதார வசதிகள்:**

39. சிறை அதிகாரிகள் சிறைவாசிகளின் நல்வாழ்வு, வசதிகள் மற்றும் சுற்றுப்புற நலன் ஆகியவற்றைக் கவனித்து கொள்கின்றனர். அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச்சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும், மருத்துவமனைகள் உள்ளன. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும், ஒன்று அல்லது இரண்டு மருந்தாளுநரும் இரண்டு அல்லது மூன்று செவிலி உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசுச் செலவில் தேவைப்படுகின்ற சிறைவாசிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் சிறைவாசிகளுக்குப் பல் நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்தியச்சிறையில் தொழுநோய் சிறைவாசிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு தொழுநோயாளிகளுக்கான கட்டடத்தில் சிகிச்சை அளிக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்கு உடல் இயக்கப்பயிற்சி மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத சிறைவாசிகள், மனநோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உளநோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அரசு, தற்போது ஒவ்வொரு மத்திய சிறைக்கும் நோயுற்ற சிறைவாசிகளை அரசினர் தலைமையிட மருத்துவமனைக்கு அல்லது மருத்துவக் கல்லூரி மருத்தவமனைக்கு எடுத்துச் செல்ல ஒரு நோயாளர் ஊர்தி வழங்கி உள்ளது.



40. அனைத்து மத்திய சிறைகள், சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறை, வேலூர் ஆகியவற்றில் ஆய்வகம் மற்றும் ஈ.சி.ஜி. சாதனம் ஆகியவை சிறைவாசிகளின் நலனுக்காக வகை செய்யப்பட்டுள்ளன.

41. துப்புரவு ஏற்பாட்டைப் பொறுத்தவரையில், அனைத்து மத்தியச் சிறைகளிலும், தனிக்கிளைச் சிறைகள் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**(உ) தகவல் தொடர்பு வசதிகள்:**

**(i) நேர்காணல் மற்றும் கடிதங்கள் :**

42. அனைத்து சிறைவாசிகளும் வாரம் ஒரு முறை கடிதம் பெறுவதற்கும், எழுதுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரே சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**(ii) செய்தித்தாள்களும், குறித்த கால வெளியீடுகளும்:**

43. நான்கு சுவர்களுக்கப்பால் என்ன நிகழ்கிறது என்ற நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்வதற்காக சிறைவாசிகளுக்கு நாளிதழ்களும் குறித்த கால வெளியீடுகளும் அரசு செலவில் இலவசமாக 40 சிறைவாசிகளுக்கு ஒரு செய்தித் தாள் என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் செய்தித்தாள்களாவன:

1. தினமணி
2. தினத்தந்தி
3. தினமலர்
4. இந்து

ஒவ்வொரு மத்தியச் சிறைக்கும் இரண்டு இந்து நாளிதழ்கள் வழங்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட குறித்த கால வெளியீடுகள் 100 சிறைவாசிகளுக்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

44. சிறைவாசிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். கல்வி மற்றும் இலக்கியத் திறன் கொண்ட நல்ல தரமான புத்தகங்கள்

சிறைவாசிகள் படிப்பதற்காக சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட புத்தகங்கள் உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்து பெறப்பட்டு சிறைவாசிகளுக்குப் படிப்பதற்காக வழங்கப்படுகின்றன. பயனுள்ள தரமான புத்தகங்களின் பட்டியலை சிறைக் கண்காணிப்பாளர் தயாரிக்கிறார். அப்புத்தகங்கள் உள்ளூர் நூலகத்திலிருந்து பெறப்பட்டு சிறைவாசிகளுக்குப் படிப்பதற்கு வழங்கப்படுகின்றன.

### (ஊ) பொழுதுபோக்கு வசதிகள்:

*45.* சிறைவாசிகளுக்கு விளையாட்டு மற்றும் தொலைக்காட்சி போன்ற பொழுதுபோக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், தியான முறை மற்றும் யோகா வசதிகளும் உள்ளன. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகள் கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச்சிறையில் பெண் சிறைவாசிகள் வளைப்பந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும் மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் சிறைவாசிகளுக்குக் கற்பிக்கப்படுகிறது. சென்னை மத்திய சிறையிலுள்ள சிறைவாசிகளுக்கு சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தற்போது, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறை, வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூர் ஆகிய சிறைகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

### (எ) கல்வி வசதிகள்:

*46.* சிறைவாசிகளின் கல்வித் தேவைகள் சிறைத் துறை நிருவாகத்தினரால் நன்கு கவனித்துக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் சிறைவாசிகளுக்குக் கல்வி புகட்டப்படுகிறது. முதியோர் கல்வி புகட்டுவதற்கான் மற்றும் பயிற்சிக்கான பொருட்கள் மாநில வள ஆதார நிறுவனம் மூலமாக சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறையில் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக்கண்காணிப்பாளர்கள் வெளியிலுள்ள கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்து சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடுகள் செய்கிறார்கள். பல்வேறு முதுநிலை



பட்டப்படிப்பு மற்றும் பி.ஜி.எல்., பி.எல்., பி.எட்., போன்ற வாழ்க்கைத் தொழிற்படிப்புகளை அஞ்சல்வழிக் கல்வி மூலம் பயில சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளுள் ஒருவர் பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ளார் என்பது மனநிறைவளிக்கும் செய்தியாக உள்ளது. இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக்கட்டணம் குறித்த செலவு, இதர இடைநிகழ் செலவு ஆகிய செலவுகள் முழுவதும் அரசு ஏற்றுக் கொள்கிறது. தேர்வில் தேர்ச்சி பெறாத சிறைவாசிகள் மூன்று முறை மீண்டும் அரசு செலவில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகள் தேர்வு எழுதச் செல்லும்பொழுது, பிறரது கவனத்தைத் தவிர்க்கும் பொருட்டு சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களைக் காவல்காத்து அழைத்துச் செல்லும் வழித்துணைக் காவலர்களும் சாதாரண உடை அணிந்து செல்கின்றனர். தற்போது 8 சிறைவாசிகள் உயர் கல்வி கற்கின்றனர். நீதி மற்றும் மதம் சம்பந்தமாக சொற்பொழிவுகள் என்ற பெயரால் மதமாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில் மதம், நீதிநெறி வகையான சொற்பொழிவுகள் விருப்பப்படும் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

### (ஏ) சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல் மற்றும் விடுப்பு வசதிகள்:

*47.* (i) மூன்று ஆண்டு ஆரம்ப சிறைத்தண்டனை அனுபவித்துள்ள சிறைவாசிகளுக்கு முதலில் ஒரு மாத சாதாரண விடுப்பு சிறைத் துறைத் துணைத் தலைவரால் அளிக்கப்படுகிறது. தனி நேர்வுகளில், இந்த விதியினைத் தளர்த்தி காப்பு விடுப்பில் செல்ல அரசு அனுமதி அளிக்கிறது. இன்னும் 3 ஆண்டுகாலம் மட்டும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய சிறைவாசிகளுக்கு, அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின் வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒருமாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

(ii) இவ்விடுப்புடன் நன்னடத்தையுள்ள சிறைவாசிகள் தங்களுடைய உறவினர்கள் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து விட்டாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், அவர்களுடைய நெருங்கிய உறவினர்களின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும் சிறைக்கண்காணிப்பாளரால் அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால

விடுப்பு, ஓர் ஆண்டில் நான்கு முறையாக 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டது.

### (ஐ) தண்டனைக் குறைப்பு மற்றும் அரசால் வழங்கப்படும் சிறப்பு தண்டனைக் குறைப்பு

48. (i) சிறைவாசிகளின் மிக முக்கியமான தனி உரிமையாக இருப்பது சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் தண்டனைக் குறைப்பு ஆகும். பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகள் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்காக இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், சாதாரண வகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. இவ்விதிகளின்கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்புடன், சிறைப்பணிகளுக்காக அதாவது, ஞாயிறு அன்றும் ஏனைய சிறை விடுமுறை நாட்களில் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்வோராகவும் பணியாற்றும் சிறைவாசிகளுக்கு ஒரு காலாண்டிற்கு 3 நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. தண்டனை சிறைவாசி, காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு பெறுகிறார்கள். சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைப் பேணிவரும் சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும் சிறந்த நற்பணிக்காக சிறப்புத் தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் சிறைத்துறைத் தலைவரால் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகள் அதிகபட்சமாக ஓராண்டுகால சிறப்புத் தண்டனைக் குறைப்பு பெறுகிறார்கள். மேலும், இரத்ததானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரே சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை அடைந்த சிறைவாசிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஒவ்வொரு சிறையிலுள்ள ஆலோசனைக் குழு பரிசீலனை செய்கிறது. சிறைவாசியின் கடந்த காலக் குறிப்பையும், உள்ளூர் அதிகாரிகளின், அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து அச்சிறைவாசியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறைத்தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க, அரசு பரிசீலிக்க இக்குழு தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.



(ii) குற்றவியல் நடைமுறை விதி தொகுப்பு 433-ஏ பிரிவின்படி ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகள் (அதாவது 18-12-1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தண்டனை அடைந்தவர்கள்) 14 ஆண்டுகாலம் தண்டனை அனுபவித்த பின்பே முன்விடுதலைக்காகப் பரிசீலனை செய்யப்படுகிறார்கள்.

(iii) இருப்பினும், 18-12-1989-க்கு முன் ஆயுள் தண்டனை பெற்ற கடும்நோயுற்ற சிறைவாசிகளை மருத்துவக் காரணங்களை முன்னிட்டு முன்விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில், மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

(iv) நடைமுறையிலுள்ள விதிகளுக்கிணங்க கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த சிறைவாசிகளின் நேர்வுகள், முன்விடுதலைக்காகப் பரிசீலிக்கப்படக்கூடாது :

**(அ)** கற்பழிப்பு, பொய்க் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள் மற்றும் பயங்கரவாதக் குற்றவாளிகள் மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள் மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவுகள் 224, 376, 396 முதல் 400 வரை 402, 467, 471, 472, 474, 489ஏ, 489பி மற்றும் 489டி ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.

**(ஆ)** பொருளாதாரக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், பொருட்களைப் பதுக்கி வைத்தல், கள்ளக் கடத்தல் மற்றும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

**(இ)** இலஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டம், மேலும் பரத்தமை தடைச் சட்டம், மருத்துவச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

**(ஈ)** புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில், தண்டனைக் காலம் முடியும்முன் விடுதலை செய்யும் முறை (விடுதலை அல்லது நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல்) செயலில் உள்ளது. 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15-ம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவின்படி வெளியூர்களாயிருந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நன்னடத்தை அலுவலர்களுக்கும், சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில், தலைமை

[1998 மே 12

நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப்பள்ளிக் கண்காணிப்பாளர் நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற தொழிற்பயிற்சி குறித்த விவரங்களையும் உரிய விசாரணை செய்து, அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள இளம் குற்றவாளிகள் பற்றி சிறைத்துறைத் தலைவர் பரிசீலித்து, பிறகு ஆணை வெளியிடுகிறார்.

(ஐ) இவ்வரசால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு:

49. இவ்வரசு மனித நேயத்தின் பேரிலும், நல்லெண்ணத்தின் பேரிலும் இந்தியாவின் 50-வது ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பு வழங்கியது. இதன் மூலம் 608 ஆயுள் சிறைவாசிகள் / குறுகிய கால, நீண்ட காலத் தண்டனை சிறைவாசிகள் 15-8-1997 அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

**(ஓ) சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவி வழங்குதல்:**

50. தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் கழகம் விசாரணை சிறைவாசிகளுக்கும், தண்டனை சிறைவாசிகளுக்கும் இலவசச் சட்ட உதவி வழங்கி வருகிறது. சிறைவாசிகளுக்கு இலவசச் சட்ட உதவி அளிப்பதற்காக இக்குழு பணி வழக்குரைஞர்களை அனைத்து சிறைகளுக்கும் அனுப்பி வருகிறது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் கழகத்தின் உதவியால், பெருமளவில் சிறைவாசிகள் பயன் பெறுகின்றனர்.

**(ஔ) சிறையில் புகார்ப் பெட்டிகள் வைத்தல்:**

51. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டும், அவர்களிடமிருந்து புகார்களைப் பெறும் பொருட்டும அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும் மூன்று புகார் பெட்டிகளும், வேலூரில் மகளிருக்கான தனிச்சிறைச்சாலையில் இரண்டு புகார்ப் பெட்டிகளும் உலோக முத்திரையிட்டு மூடி வைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு எழுதுபொருட்களும் கொடுக்கப்படுகின்றன. சிறை அதிகாரிகள் ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய முதல்பணி நாளன்று இந்தப் புகார்ப் பெட்டிகளைக் கொண்டு வந்து சம்பந்தப்பட்ட மாவட்ட



1998 மே 12]

அமர்வு நீதிபதியிடம் அளிப்பர். அவர் அப்பெட்டிகளைத் திறந்து அவற்றிலுள்ள புகார் மனு ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து, சிறை அதிகாரிகளால் அல்லது அரசால் அல்லது சிறைத்துறைத் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவற்றின் பகுதி நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பார். சிறைவாசிகள் கொடுக்கும் புகார் மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**(க) சிறைகளைப் பார்வையிட சிறைப் பார்வையாளர்களுக்கு வசதி அளித்தல்:**

52. அலுவலர்சார் சிறைப் பார்வையாளர்களால், சிறைச்சாலைகள் ஆய்வு செய்ய வேண்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தேவையில்லை. இந்த ஏற்பாடானது சிறைச்சாலைகளில் ஏற்படும் முறைகேடுகளை, அச்சுறுத்தி கட்டுப்படுத்துவதாக அமைகின்றது. மாஜிஸ்டிரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள் மற்றும் ஏனையத் துறைகளிலிருந்து அரசு சார்புள்ள பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதுதவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாக, சமூகப் பணியாளர்கள், அறிவியலாளர்கள், உளநோய் மருத்துவர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும், அலுவல் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்தும்விதம், சிறைகளை நிர்வகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியன சிறைகளில் உரியவாறு செயல்படுத்தப்படுகின்றனவா என்று அவர்கள் கண்டறிகின்றனர். மேலும், அவர்கள் சிறைகளைப் பார்வையிட்டு சிறைவாசிகளைச் சந்தித்து குறைகளையும் கேட்கின்றனர். சிறைப் பார்வையாளரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

**(கா) சிறைவாசிகளுக்கான நலப்பணிகள்:**

53. சிறைவாசிகளின் நலனுக்காக எட்டு மத்தியச் சிறைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு நல அலுவலர் வீதமும், வேலூரில் உள்ள பெண்கள் தனிச் சிறை மற்றும் புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியில் ஒவ்வொரு நல அலுவலர் வீதமும் உள்ளனர். இந்த நல அலுவலர்கள், சிறையின் நடைமுறை விதிகளுக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்து வருகின்றனர். அவர்களுடைய உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகின்றனர்.

மேலும், தனிப்பட்ட முறையில் மேல்முறையீடு செய்ய வசதி இல்லாத சிறைவாசிகளுக்கு மேல்முறையீடு செய்யவும் உதவி செய்கின்றனர்.

54. பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக வேலூர் மகளிர் தனிச்சிறையில் குழந்தைகள் காப்பகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன், அவர்களைச் சரியான முறையில் வைத்துப் பராமரிக்க எவரும் முன்வராவிட்டால், சென்னையில் உள்ள பாலமந்திர் மருத்துவமனைக்கும், மதுரை காந்தி கிராமத்திலுள்ள சிறுவர் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர். தற்போது தாம்பரத்திலுள்ள எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் சிவானந்தா அனாதை இல்லத்தில் சிறைவாசிகளின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்பாட்டுக் குழு சிறைவாசிகளின் நன்மைக்காக சிறைவளாகத்திற்குள் கால முறைப்படி வெளியில் உள்ளவர்களைக் கொண்டு பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வதோடு திரைப்படமும் காட்டுகிறது. அனைத்து மத்திய சிறைகளிலும் திரைப்படம் காட்டும் கருவி உள்ளது.

55. மத்தியச் சிறைகள் அனைத்திலும், சிறைவாசிகளுக்காக சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும் பணிக்கொடை ஈட்ட இயலும் சிறைவாசிகளும், அனைத்து மத்தியச் சிறைகளிலுமுள்ள இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 'ஏ' வகுப்பு சிறைவாசிகள், தனிவகுப்பு விசாரணை மற்றும் விசாரணையை எதிர் நோக்கியுள்ள சிறைவாசிகள், தனி வகுப்பு, தடுப்புக் காவல் சிறைவாசிகள் ஆகியோர் சிறை தேநீர் விடுதியிலிருந்து காபி, டீ, பன், பிஸ்கெட் மற்றும் இதரப் பொருட்கள் வாங்கும் பொருட்டு அனுமதி அளிக்கப்பட்ட தொகையின் உச்சவரம்பினை ரூ.45-இல் இருந்து ரூ. 75 ஆகவும், 'பி' வகுபபு சிறைவாசிகள், சாதாரண விசாரணை சிறைவாசிகள் மற்றும் விசாரணையை எதிர்நோக்கியுள்ள சிறைவாசிகள் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்ட தொகையின் உச்சவரம்பினை ரூ. 30-இல் இருந்து ரூ.45 ஆகவும் அக்டோபர் 1996 முதல் உயர்வு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.



56. மரண தண்டனை சிறைவாசிகளைக் காணவரும் அவருடைய நெருங்கிய உறவினர்களுக்குப் போக்குவரத்துச் செலவினை அளிப்பதற்கு அனைத்து மத்திய சிறை கண்காணிப்பாளர்களுக்கும், சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை, பெண்கள் தனிச் சிறைச்சாலை, வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி கண்காணிப்பாளர்களுக்கும் அரசு அதிகாரமளித்துள்ளது. இச்சலுகை தந்தை, தாய், மனைவி, கணவன், மகன், மகள், சகோதரன், சகோதரி போன்ற சிறைவாசியின் ஐந்து நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பயணச் செலவு இம்மாநிலத்திற்குள் சாலை வழியாக அல்லது புகைவண்டி மூலம் குறுகிய வழித்தடத்தில் குறைந்தபட்ச வகுப்பில் பயணம் செய்வதற்கு மட்டும் வழங்கப்படும். இச்சலுகை பல்வேறு சிறைகளில் மரண தண்டனை குற்றவாளிகளின் நெருங்கிய உறவினர்கள், அவர்களை மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் சென்று பார்ப்பதற்காக அரசால் அனுமதிக்கப்படுகிறது.

### (கி) தியானப் பயிற்சி மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள்:

57. வேலூர் மத்திய சிறை மற்றும் வேலூர் பெண்கள் தனிச்சிறை ஆகியவை மாதிரிச் சிறைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் இவ்வாண்டு துவக்கப்பட்டுள்ளன.

(1) விபாசன தியானப் பயிற்சி முறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விபாசன மையங்களில் பயிற்சி பெற்ற நபர்கள் இந்த வகுப்புகளை நடத்துகின்றனர்.

(2) இராஜயோகப் பயிற்சி, பிரஜபிதா பிரம்மகுமாரி பயிற்சி நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படுகிறது.

(3) மனோதத்துவ வல்லுநர் மூலம் போதைப் பொருள் அடிமைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

(4) சிறைவாசிகளுக்கு முதியோர் கல்வி அறிவு புகட்டும் பணியினை அறிவொளி இயக்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

### (கீ) விடுதலை அடைந்த சிறைவாசிகளுக்குப் புதுவாழ்வு அமைப்புப் பணிகள்:

#### (i) தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம்:

58. தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. விடுதலையாகும் சிறைவாசிகளுக்கு

அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்து கொடுத்து, அவர்கள் புதுவாழ்வைத் தொடங்க உதவுவதே இதன் முக்கிய நோக்கமாகும். தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளங்குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிபவர்களாக மாறுவதைத் தடுக்கும் நோக்குடன் விடுதலை செய்யப்பட்டவர்கள் சிறுதொழில் நடத்தவும், கருவிகள், தேநீர் கெட்டில், தையல் எந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் பண உதவி வழங்குகிறது. மேலும், இரயில் பேருந்து கட்டணமும் வழங்குகிறது. தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும், வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ளவும், சட்ட உதவி அளிப்பதற்கும், முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும் கடன் வழங்குவதோடு ஆடைகள், மூக்குக் கண்ணாடிகள் போன்றவற்றையும் விடுதலையான சிறைவாசிகளுக்கு வழங்குகிறது. அரசு இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு உதவி மானியமாக, ரூ.18,000 வழங்குகிறது.

**(ii) விடுதலையாகும் சிறைவாசிகளுக்கு நிதியுதவி:**

59. சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகளுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு 1994-95 ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கீடு தொகையை அரசு ரூபாய் 1 லட்சத்திலிருந்து ரூபாய் 10 லட்சமாக உயர்த்தி உள்ளது. தற்போது இந்தத் தொகையைச் சிறைவாசிகளுக்கு, எவ்வாறு பயன்தரத்தக்க முறையில் வழங்கலாம் என்பதற்கான திருத்த வரைமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் பயனுக்காக இத்தொகை செலவிடப்படும்.

## X. சிறையில் உள்ள தொழிற்கூடங்களிலும், தொழில்களிலும் சிறைவாசிகளைப் பயன்படுத்துதல்

60. சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன், அவர்களுக்குச் சிறையிலுள்ள தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகின்றது. கடுந்தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகள், காவல் வைப்பிலுள்ள விருப்பப்படும் விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் இந்த சிறைகளிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்வதோடு அதற்கான ஊதியமும் பெறுகின்றனர். இவ்வாறு செய்வதால் சிறைவாசிகள் விடுதலை அடைந்த பின்பு தாங்களே தங்களது புதுவாழ்வினை அமைத்துக்கொள்ள அவர்களுக்கு இப்பயிற்சி உதவியாக இருக்கும். சிறைகளில் கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு வேலைகள் என சிறைவாசிகளுக்கு மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி வேலை கொடுக்கப்படுகிறது. சிறைவாசிகள் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் தச்சு வேலை, தையல்



வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் தயாரித்தல், சோப்பு தயாரித்தல் மற்றும் பினாயில் தயாரித்தல் ஆகிய தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. நவீன வேளாண்மை முறைகள், பால்பண்ணை ஆகிய தொழில்களிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு சிறை சீர்திருத்தக்குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில், எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் உள்ள சிறைவாசிகளுக்குக் கீழ்க்காணும் எளிய தொழிற் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. செங்கல் கட்டுமானத் தொழில். | .. | மத்திய சிறை, வேலூர். |
| 2. குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல் | .. | மத்திய சிறை மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, பாளையங்கோட்டை. |
| 3. எளிய மின் இணைப்புப்பயிற்சி | .. | மத்திய சிறை, சென்னை, கடலூர் மற்றும் சீர்திருத்தப்பள்ளி புதுக்கோட்டை. |
| 4. வண்ணம் பூசுதல் விளம்பரப்பலகை எழுதுதல் | .. | மத்திய சிறை, கோயம்புத்தூர். |

கோயம்புத்தூர் மத்திய சிறையில், நெசவுப் பிரிவு மற்றும் சாயப் பிரிவு அடங்கிய சிறைவாசிகளால் நடத்தப்படும் துணி நூல் ஆலை ஒன்று உள்ளது. இந்த சிறைத் தொழில் பிரிவுகளில் சுமார் 5 இலட்சம் சிறைவாசிகள் வரை வருடந்தோறும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அரசு சிறைத் துறையை "பணித்துறையாக" அறிவித்துள்ளது. எனவே சிறை தொழில் பிரிவுகளில் செய்யப்பட்டு பல்வேறு அரசுத் துறைகளுக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கு தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இதனால் இந்த சிறைத் தொழிற்கூடங்களில் தயாரிக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்தும் துறைகளிடமிருந்து தேவைப்பட்டியல்களை சிறைத் துறை அதிக அளவில் பெறுகிறது. இதனால் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. சிறைத் தொழிற் பிரிவுகளின் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் ரூ.4 கோடி ஆகும்.

61. வேலூர் பெண்கள் தனிச் சிறையிலுள்ள இருபது பெண் சிறைவாசிகளுக்கு ஒவ்வோராண்டும் வேலூர் நேருயுவகேந்திரா பயிற்சி ஆசிரியர்கள் மூலம் தையல் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அத்தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்கள், அரசினர் தொழில் நுட்பத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். ஓராண்டில் சராசரியாக 1,000 சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

62. அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் மற்றும் வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி பெண்கள் தனிச் சிறைகளிலும் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. சிறையிலுள்ள தொழிற்பிரிவுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. சிறைவாசிகள் தங்கள் தொழில் திறமைக்கேற்ப இத்திட்டத்தின்கீழ் பெறும் ஊதிய வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | தேர்ச்சி பெற்றவர் | ரூ.6,00 |
| 2. | ஓரளவு தேர்ச்சி பெற்றவர் | ரூ.4,00 |
| 3. | தேர்ச்சி பெறாதவர் | ரூ.2,00 |

இவ்வூதியம் ஈட்டும் திட்டம் சிறைவாசிகள் பொருளீட்டவும் தங்களால் சேமிக்கப்பட்ட இந்த பணத்தினை விடுதலைக்கு பின்னர் பிற்கால வாழ்க்கைக்குப் பயன்படுத்த உதவும்.

## XI. முடிவுரை:


63. மேலேயுள்ள பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் இருந்து சிறை நிருவாகம் நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் இம்மாநில சிறை நிருவாகத்தை நவீனப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது தெளிவாகும். வரும் ஆண்டுகளில் இந்நிறுவனங்கள் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் கீழ் மைய அரசிடம் இருந்து பெறப்படும் சிறைகள் மேம்பாட்டுக்கான மானியத்தைக் கொண்டு மேலும் வலுப்படுத்தப்படும். சிறைவாசிகள் மறுவாழ்வுக்கும், சீர்திருத்தத்திற்கும் முக்கியத்துவம் அளித்து அவர்கள் விடுதலை அடைந்த பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நபர்களாகவும், சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாகவும் வாழும் பொருட்டு அவர்களைச் சீர்திருத்தி சமுதாயத்தோடு இயல்பாக இணைந்து நல்வாழ்வினைத் தொடங்க ஊக்கமளிப்பதுமே இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் நோக்கமாகும்.



## இணைப்பு

**(இனம் 11-ஐக் காண்க)**

**சிறைத்துறையின் நிர்வாக அமைப்பு வரைபடம்**




01. சிறைத்துறையின் தலைவர்

02. சிறைத்துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்)

03. சிறைத்துறைத் துணைத் தலைவர், சென்னை சரகம்

04. சிறைத்துறைத் துணைத் தலைவர், திருச்சிராப்பள்ளி சரகம்

05. சிறைத்துறைத் துணைத் தலைவர், கோவை சரகம்

06. சிறைத்துறைத் துணைத் தலைவர், மதுரை சரகம்

07. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்.

08. மத்திய சிறை, சென்னை, கிளைச்சிறைகள், செங்கற்பட்
காஞ்சிபுரம், ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல், சென்னை மற்ற

மத்திய சிறை, வேலூர், மகளிர் தனிச்சிறை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட கிளைச்சிறைகள் சிறைக் காவலர் பயிற்சி பள்ளி, வேலூர்.

09. தலைமையக அலுவலகம்.

10. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி, தனிக்கிளைச்சிறை, திருச்சிராப்பள்ளி, பெண்கள் தனிச் சிறை, திருச்சிராப்பள்ளி, கிளைச் சிறைகள், திருச்சிராப்பள்ளி/ கடலூர் மத்திய சிறை / கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட கிளைச் சிறைகள் / புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி/ தஞ்சாவூர்/ நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கிளைச் சிறைகள்.

11. மத்திய சிறை, கோவை/ திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூர்/ தனிக்கிளைச்சிறை, கோவை, கோவை, பெரியார் மற்றும் நீலகிரி மாவட்ட கிளைச் சிறைகள், மத்திய சிறை, சேலம், தனிக் கிளைச் சிறை, சேலம், சேலம், நாமக்கல் மற்றும் தர்மபுரி மாவட்ட கிளைச் சிறைகள்.

12. மத்திய சிறை மதுரை, மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்ட கிளைச் சிறைகள், மத்திய சிறை, பாளையங்கோட்டை, தனிக்கிளைச் சிறை, கொக்கிரக்குளம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கிளைச் சிறைகள்.

13. மண்டல நன்னடத்தை அலுவலர்கள்

14. நிருவாகம்

15. கணக்குகள் மற்றும் தணிக்கை

16. சிறைத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர்

17. கணக்கு அலுவலர்.

18. நன்னடத்தை அலுவலர்கள்.

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

D
N98/521
2/9017